புஸ்தகம் 4.
Vol. IV.

சித்தார்த்தி வரு ஆனிமீ, JUNE 19

ஜனோபகாரி.

162065

28 MAR 1919

ஜனோபகாரி.

(THE JANOPAKARI).

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 4. Vol. IV. | காளயுக்தி ஞூ தை மீ", JANUARY 1919. | சஞ்சிகை 1. No. 1.

The Sugarcane Industry in India.

இந்தியாவில் சர்க்கரைக் கைத்தொழில்.

கரும்புப் பயிரானது இந்தியாவில் ஏராளமாகச் செய்யப்படுகின்றது. இதற்குக்காரணம், சீதோஷ்ணஸ்திதி இதற்கு ஒத்திருப்பதேயாகும். இது ஏறக்குறைய ஒரு வருஷத்துப் பயிர்; பத்துமாதங்களுக்குக் குறையாமல் அறுவடையாவதில்லை. முதன்முதல் நடுவதானது பிப்பிரவரி, மார்ச்சுமாதங்களில் செய்யப்படுகின்றது. இந்தியாவில் கொஞ்சம்பாகங்களைத்தவிர, மற்றவிடங்களிலெல்லாம் இப்பயிருக்குத் தண்ணீர்பாய்ச்சப்படுகின்றது.

இந்தியாவில் சர்க்கரைக்கைத்தொழிலானது ஆதிகாலந்தொட்டு வழக்கத்தில் இருந்துவருகின்றது. உலகத்தில் சர்க்கரைசெய்யும்தேசங்களுக்கெல்லாம் இந்தியா முதன்மையாகவிருந்தது. உலகமுழுவதற்கும் 1894-ம்வருஷம் முதல் 1901-ம் வருஷம் வரையில் 7, 618, 820 டன்கள் வரைக்கும் கரும்புச்சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இந்த அளவில் இந்தியாவில் மாத்திரம் உற்பத்தியானது 3,600,000 டன்களாகும். இது மொத்தத்துக்கு ஏறக்குறைய பேர்பாதியாகின்றது.

1901-2-ம் வருஷத்தில் உலகமுழுவதுக்கும் 8,341,000 டன்கள் கரும்புச்சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இதில் 3,250,000 டன்கள்வரையில் இந்தியாவிலேயே செய்யப்பட்டிருக்கின்றது.

நமது தேசத்தில் கரும்புப்பயிர் செய்வதானது நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. 1903—4-ம் வருஷத்தில் இந்தக் கரும்புப்பயிர் செய்யப்பட்டதன் விஸ்தீர்ணம் 3,600 சதுரமைல். இது இதற்கு முந்திய வருஷங்களைவிடக் குறைவே. பம்பாய் மாகாணத்திலும், மற்றும் மாகாணங்களிலும் நீர்ப்பாசனத்திற்குரிய வசதிகள் குறைவுபடவே, அவ்விடங்களிலெல்லாம் இப்பயிர் குறைந்துபோயிற்று.

இந்தியாவிலிருந்து ஏராளமான சர்க்கரை முன்பு அன்னியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. ஆனால், நாளுக்கு நாள் அந்த ஏற்றுமதியானது குறைந்துவிட்டது. இதற்குக்காரணம், இந்தியாவில்

162065

...டுச்சர்க்கரையின் இறக்குமதியே ...கும். 1882-83-ம் வருஷம் முதற் கொண்டு 1892-93-ம் வருஷம் வரையில் சராசரி 1,145,685 அந்தர்கள் வீதம் இந்தியாவிலிருந்து சர்க்கரையானது ஏற்றுமதியாய்க்கொண்டிருந்தது. ஆனால், 1892-93-ம் வருஷம் முதல் 1902-3-ம் வருஷத்திற்குள் இந்த ஏற்றுமதியானது 733,654 அந்தர்களுக்கு இறங்கிவிட்டது. இன்னும், 1903-4-ம் வருஷத்தில் 212,543 அந்தர்களுக்குக் குறைந்துவிட்டது. இதற்குப்பிறகும ஏற்பட்ட கணக்குகளைக் கவனிப்போமாயின், 1906-7-ம் வருஷத்தில் 187,789 அந்தர்களுக்கும், 1912-13-ம் வருஷத்தில் 320,150 அந்தர்களுக்கும் குறைந்துபோயிற்றென்பது நன்கு புலப்படும்.

மேற்கூறியபடி ஏற்றுமதியான சர்க்கரையின் மதிப்பை இங்குக் கவனிப்போம். 1903-4-ம் வருஷத்தில் 60,431 பவுன்களும், 1906-7-ம் வருஷத்தில் 71,340 பவுன்களும், 1912-13-ம் வருஷத்தில் 169,780 பவுன்களும் மதிப்புள்ள சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதியானது குறைவுபட இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது: வரவர இந்தியாவில்சர்க்கரையின் தேவையானது முன்னைவிட அதிகரித்துவிட்டது. ஆகவே, இங்கு உற்பத்தியாகும் சர்க்கரை இவ்விடத்திற்கே போதுமானதாயிருக்கின்றது. இரண்டாவது: ஜாவா முதலான தீவுகளில் சர்க்கரைத்தொழில் ஏராளமாக ஏற்பட்டுவிட்டதனால், இந்தியாவின் சர்க்கரை அதோடு போட்டிபோட முடியவில்லை. இவ்விரண்டு காரணங்களினாலேயே, முக்கியமாக இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதியானது குறையத்தலைப்பட்டதென்று கூறலாம்.

இன்னொரு விஷயமும் இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும். கரும்புப்பயிர் செய்வதில் போதுமானவளவு கவனம் செலுத்தப்படுவதில்லை. இந்தப்பயிர் நாளுக்குநாள் அதிகப்பட்டாலொழிய, சர்க்கரைத்தொழில்முன்னேற்றமடைவதற்கு வழியில்லை. நமது தேசத்தில் சாதாரண ஜனங்கள் சர்க்கரையைவிட வெல்லத்தையே அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஆகவே, இங்குப் பயிர்செய்யப்படும் கரும்பால் பெரும்பாகம் வெல்லம் செய்வதற்கே உபயோகப்படுகின்றது. கரும்பிலிருந்து வெல்லம் செய்வது எளிது, இதை எல்லோரும் கஷ்டமின்றிச் செய்துவிடலாம். ஆனால், கருப்பஞ்சாற்றைச் சர்க்கரையாகச் செய்வது சாதாரண காரியமன்று. இதற்கான தொழிற்சாலைகள் முதன்முதல் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு ஏராளமான முதல்தேவை. சாதாரணமான வியவசாயிகள் இக்காரியத்தைச் செய்யமுடியாது. இதற்குப் பலர் ஒன்றுசேரவேண்டும். ஒருமுறை இத்தொழிலை ஆரம்பித்துவிட்டால், அது எப்போதும் நீடித்து நடந்துவரவேண்டும். மத்தியில் நிறுத்தினால், நஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆகையால், இப்படிப்பட்ட விஷயங்களை இந்திய முதலாளிகளும் கவர்ன்மெண்டாரும் சேர்ந்து கவனித்தால், நன்மையுண்டாகுமென்பதை இங்குக் குறிப்பிடுவோம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரையானது இறக்குமதி செய்யப்படுவதைக்காட்டிலும் கொஞ்சம் அதிக விலையுள்ளதாயிருந்தாலும், நல்ல தித்திப்பையுடையது. ஆனால், ஜனங்கள் குறைந்தவிலையைக் கவனித்து, அன்னியநாட்டுச் சர்க்கரையையே வாங்க விரும்புகிறார்கள். இதனால் அதன் இறக்குமதி நாளுக்குநாள் அதிகப்பட்டுக்கொண்டேவருகின்றது. 1903—4-ம் வருஷத்தில் அன்னியநாடுகளினின்று 6,333,843 அந்தர்கள் எடையுள்ள சர்க்கரை இறக்குமதியாயிருக்கின்றது. ஆனால்,

3L
3m2 ... N1614

1912—1913-ம் வருஷத்திற்குள் இது 15,443,063 அந்தர்களுக்கு ஏறிவிட்டது. கீழே குறிக்கப்படும் கணக்கில் அந்தந்த வருஷங்களில் எவ்வளவு மதிப்புள்ள சர்க்கரை இறக்குமதியாயுள்ளதென்பது விளங்கும்.

வருஷம்.	மதிப்புப் பவுன்கள்.
1903—4	3,957,183
1906—7	5,828,791
1912—13	9,516,172

மேலே குறித்த கணக்கைக் கவனித்தால், வரவர இறக்குமதியின் மதிப்பானது அதிகப்பட்டுக்கொண்டே வந்துள்ளதென்பது புலப்படும். இது இந்தியாவில் இறக்குமதியாகும் வஸ்துக்களில் மூன்றாவதாக நிற்கின்றது. இந்தியாவில் இறக்குமதிசெய்யப்படும் சர்க்கரை முக்கியமாக மொரீஷஸ், ஜாவா, ஆஸ்டிரியா, யுனைடெட்கிங்டம், ஸ்ட்ரெயிட் ஸெடில்மெண்ட்ஸ், சைனா முதலான நாடுகளினின்றே வந்துகொண்டிருந்தது. 1912—13-ம் வருஷத்தில் ஜாவாவிலிருந்து 6,294,535 பவுன்கள் மதிப்புள்ள சர்க்கரையும், மொரீஷஸிலிருந்து 2,148,819 பவுன்கள் மதிப்புள்ள சர்க்கரையும் இறக்குமதியாயிருக்கின்றது.

நமது தேசத்தில் சர்க்கரைத்தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமானால், அதுசம்பந்தமான சில முக்கிய விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். கரும்புப்பயிர் செய்யப்படும் விஸ்தீர்ணம் அதிகப்படுத்தப்படவேண்டும். பயிர்செய்யப்படும் வகையில் புராதன முறைகளைக் கையாளவேண்டும். ஆலைகள் நன்கு சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். சாதாரணமாகப் பலவிடங்களிலும் மர ஆலைகளே யிருப்பதை நாம் காண்கிறோம். அவற்றால் கரும்பிலிருந்து சாறு முழுதும் பிழியப்படுவதில்லை; 100-க்கு 25 முதல் 30-க்குமேல் சாறு வெளியாவது கஷ்டம். இவ்வாறு மர ஆலைகளைக்கொண்டு கரும்பிலிருந்து சாறு பிழிவது எவ்வளவு நஷ்டமென்பதை நாம் கவனிக்கவேண்டும். ஜாவா முதலான இடங்களில் 100-க்கு 85 வீதம் கரும்பிலிருந்து சாறு பிழியப்படுகின்றது. ஆகையால், இப்போது கையாளப்பட்டுவரும் மர ஆலைகள் முற்றும் ஒழிக்கப்படவேண்டும். இந்திய முதலாளிகள் பெரிய தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க முன்வரவேண்டும். இவ்விஷயங்களில் கவர்ன்மெண்டாரும் கலந்துகொண்டு தக்கது செய்துவரவேண்டும். மேற்கூறிய விஷயங்கள் நன்கு கவனிக்கப்படுமாயின், அன்னியநாட்டு இறக்குமதியை ஒருவாறு தடுக்கலாமென்பதை நாம் உறுதியாய்க் கூறலாம்.

Great Men.

BY MR. T. R. RAJAGOPALAN.

சீரியர்.

"எப்பிறப் பாயினு மெமாப் பொருவதற்கு
இக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண்
நிற்றலுங் கூடப் பெறின்."

"The proper study of mankind is man."
"Men are helpful through the intellect and the affections."

சீரியர் எவர்? அவர்களால் இவ்வுலகினர்க்கு உண்டாகும் நன்மைகள் எவை? கவிகள், தத்வக்ஞர்கள், பிரகுருதி சாஸ்திரிகள், மதத்தினர் முதலானவர்களுக்குள் உள்ள சம்பந்தா சம்பந்தங்கள் யாவை? இவ்வியாசத்தில் விடுக்கப் புகுந்த விஷயங்கள் இவைகளேயாகும்.

பெரும் பெரும் பண்டிகைகளை நாம் எக்காரணம்பற்றிக் கொண்டாடிவருகிறோம்? அன்னபானாதிகளைத் துறந்து, மலை-கடல்-காடு-பள்ளத்தாக்குகளைக் கடந்து புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லுதலால் உண்டாகும் உபயோகம் என்ன? பெரியோர்களுடைய பிறப்பு, இறப்பு, அல்லது அவர்கள் நற்செயல்கள் செய்யத்தொடங்கியதைத் தெரிவிக்கும் நாட்களே பண்டிகைதினங்கள். அவர்கள் தம் வாணாளைச் செலுத்திவந்த இடங்களே புண்ணிய பூமிகளாகும்.

நெஞ்சமாகிய வயலில், தெய்வபக்தியாகிய விதையை விதைத்து, பக்குவமாகிய நீர் பாய்ச்சி விஷயங்களாகிய மாடுகள் மேயாது சாந்தமென்ற வேலியினால்காத்து, பொய்-வஞ்சகம்-ஆணவம்-காமமாகிய காட்டை எரித்து அழித்து, உண்மை-நேர்மை-தூய்மை-ஊக்கம்-உழைப்பு-கல்வியறிவுகளடங்கிய எருவிட்டு, பரமஞானமாகிய பயிர் தழைத்து, கருணையாகிய கதிர்தோன்றி, முத்தியாகிய முழுப்பலன் வாய்ப்பெற்றவர்களே சான்றோர். இவர்களே மாந்தரின் மேல்வரிச்சட்டங்கள்; தர்மிஷ்டர்களின் நண்பர்கள்; துராத்மாக்களின் ஆசிரியர்கள்; அறத்தின் உறைவிடங்கள்; கடவுளின் அவதாரங்கள்; அஞ்ஞானமென்ற காரிருளாற் சூழப்பட்ட இப்பாழுலகை ஞானமாகிய ஜோதியைப் பரப்பிப் பிரகாசிக்கச் செய்யும் உன்னத தீபஸ்தம்பங்கள்; மெய்யறம், மெய்யறிவு என்பவைகளை அறியாது, துன்பத்திலாழ்ந்து தத்தளித்து மூர்ச்சித்து விழாநிற்கும் புன்மாக்களுக்கு நன்மார்க்கத்தைக் காட்டி இவ்வாழ்க்கைக் கடலைத் தாண்டிப்போக உதவிபுரியும் மரக்கலங்கள். சீதோஷ்ணம், சுகதுக்கம், லாபநஷ்டம், பெருமை சிறுமையாகிய ஈரலைகளால் தாக்கி மோதப்பட்டு வருந்தி வாடும் மன்பதைகளை, தமக்கு வழியில் உண்டாகும் இடையூறு-இடுக்கண்களைக் களைந்து, ஏனையோரின் க்ஷேமத்தையே முன்னிட்டு உழைத்து நல்வழிப்படுத்துபவர்கள் அம்மகான்களே; கொலை-களவு-கட்காமக்குரோதாதிகள் நிறைந்து ஓர் பெரும் பாலைவனம்போல் தோன்றும் இக்கொடிய உலகை இன்பம்-தர்மம்-வித்தை-இன்னுமிவைபோன்ற இதர நன்மைகளால் நிரப்பி, ஓர் நேர்த்தியான உத்யானவனமாக மாற்றுபவர்கள் அர்த்தபுருஷர்களே; மடி-பிடிகளின் தாயாகிய அவிவேகத்தை அடித்துத் துரத்தி, பொருட்செல்வம், கல்விச்செல்வங்களை நாடெங்கும் பரப்பும் போராறுகளாம் அம்மேன்மக்கள். இப்பூவுலகின் இருப்பிற்கும், வளர்ச்சிக்கும் எவ்வாறு எரிமலைகளும்-பூகம்பங்களும்-வெந்நீர் ஊற்றுக்களும் அவசியமானவையோ, அங்ஙனமே மானிடராசியின் முதிர்ச்சிக்கும், அறிவின் விசாலத்திற்கும், தர்மாதிகளின் நிலைப்பிற்கும் அப்பெரியோர்கள் இன்றியமையாதவர்கள்.

மானிடராசியை ஓர் இனிய செடிக்கு ஒப்பிடலாம். விண்ணுலகினின்று விழும் ஜீவான்மாவே தெண்ணீராகும்: குணங்களே வேர்கள்; மனிதர்களே இலைகள்; கவிகளே பார்ப்பவர் மனஹிருதயங்களைப் பரிசுத்தப்படுத்தி இன்புறச்செய்யும் துல்லிய மலர்களாவார்கள்; மகஸ்தர்களே மனிதர்களை நல்வழியிலழுத்தி, உயர்ப்பித்து இனித்திருக்கச் செய்யும் செங்கனிகள்; விதைகளே தத்வ ஞானிகளும், மோக்கம்-அல்லது முக்திக்குக் காரணமுமாகும்.

சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியதாய், கற்பனை நிறைந்ததாய், ஓசையின்பம் பயப்பதாய், விழுமியபொருள் தருவதாய், படிப்பவர்க்கு இனிமை உண்டாக்குவதுமான பாடல், அல்லது செய்யுள்களை வெளிப்படுத்துபவரே கவிஞரென அழைக்கப்படுபவர்கள்.

அலர்ந்து மலரும் புஷ்பங்கள், அரை விநாடியில்பிறந்து இறக்கும் சிறு பூச்சி, புழுக்

கள், ஆகாயத்தில் தொங்கி நிற்கும் அண்டகோளங்கள், சூரியனைவிடப் பன்மடங்கு பெரிதாகவுள்ள நக்ஷத்திரங்கள், அகாதவெளியில் உலாவிவரும் தூமகேதுக்கள், நாலாபக்கங்களிலும் அக்கினிக் குழம்பைக்கக்கி நாசஞ்செய்யும் எரிமலைகள், பூமியை அதிரச்செய்யும் பூகம்பங்கள், கானல்நீர், வானவில், வால்நக்ஷத்திரங்கள், இன்னுமிவைபோன்ற ஏனைய இயற்கை அற்புதங்களின் ஆரம்பம், தோற்றம், வளர்க்கை, முடிவு, உபயோகங்களைப் பற்றி விரித்துக் கூறி, நம்முடைய ஐம்புலன்களையும் மனத்தையும் தெளிவித்துத் திடப்படுத்தி, இவ்வுலக வாழ்க்கையை இனிது நடாத்த உதவுபவர்களே பிரகிருதி சாஸ்திரிகள்.

அண்டபிண்ட அகில சராசரங்களையும் படைத்துக்காத்து அழிக்கின்ற காரணக் கடவுள் ஒருவன் உண்டென அநுமான உபமான ஆகம பிரமாணங்களால் நிச்சயமாக நம்பி, நாவார வாழ்த்தி, முடியார வணங்கி, பெரியோரைப் பேணி வறியர்க்கு இரங்கி உதவிபுரிந்து, அறநெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென வற்புறுத்துபவர்களே மகஸ்தர்கள்.

த்வைதத் தோற்றமாகிய அஞ்ஞானம் நீங்கியபின் இச்சரீரத்துடன் கொஞ்சகாலம் வசிக்கவேண்டிய நிலைமையே ஜீவன் முக்தி என்பது. ஜீவன் முக்தர்கள் இவ்வுலகினருடன் கூடி வாழ்ந்தாலும், கஷ்டநஷ்டங்களையும், இன்பசுகங்களையும் அபிமானமின்றி நோக்கியிருப்பார்கள்; அநாத்ம விஷயங்களில் சங்கற்ப விகற்பங்களற்றிருப்பார்கள்; சராசரங்களில் தம்மையும், தம்மை சராசரங்களிலும் கண்டு அனைத்தையும் தாமாகக் கரைத்து விஷயபோகங்களை சுவாத்மாநந்தமாகக் கொண்டு சின்மாத்திரமாயிருப்பார்கள்; முத்தாபவெப்பமற்று, விதிநிஷேதம், தூஷணை பூஷணை, மானவமானமின்றி, முக்குற்றங்களும் ஒழிந்தவராயிருப்பார்கள்; இவ்வுலகம், உலகாதிகளின் தன்மையைக்கண்டு மயங்கார். இத்தகையர்கள் வைராக்கியம், ஈசுரபக்தி, ஜீவகாருண்யம், முதலான நற்குணங்களை நிரம்பப்பெற்றவர்கள்; யாவர்க்கும் எப்பொழுதும் நன்மையே செய்யும் இயல்புடையவர்கள். கிருபை, பொறுமை, தூய்மை, வாய்மை, ஆயாசமின்மை, விடாமுயற்சி, தயாளத்வம், நிராசையாகியவைகளின் மாண்பையும், அவைகளை மாந்தர்கள் அறிந்து கிரமப்படி நடத்தற்குரிய மார்க்கங்களையும் தெளிவாகவும் பூரணமாகவும் போதிப்பவர்களே தத்வஞானிகளெனவும், அறிவோர்களெனவும் அழைக்கப்பட்டுவருபவர்கள்.

துராத்மாக்களை யடக்கி, புஜபல பராக்கிரமசாலிகள் நிறைந்த சேனைகளைத் திரட்டி, கொடுங்கோலரசர்களை வென்று, குடிகளை நல்வழியிற் புகுத்துப் பாதுகாத்து, வெற்றிக்கொடியை நாட்டி, அடக்கம்-தூய்மை-பெருந்தன்மை-கல்வி-அன்பு-ஈகை யாகிய கம்பிகளையுடைய அறம் என்ற தெய்வக் குடையை மேல் உயர்த்தி நிறுத்தி, அதன் நிழல் எங்கும் பரவி யாவரையும் குளிர்ப்பித்துச் சுகித்திருக்கச் செய்பவர்களே அரசர்களாவார்கள்.

மேலும், இப்பிரபஞ்சம், பிரபஞ்சாதிகளைப்பற்றி நாடகம் கதைகள் ரூபமாகவும் பற்பலர் வெளிப்படுத்தி வருகிறார்கள். அரிய பெரிய உண்மை விஷயங்களை அவர்கள் தம் மனப்போக்கின்படி வெவ்வேறு விதங்களில் தெரிவித்து வந்தபோதிலும், அவர்களுடைய உள்ளக் கருத்து, அதாவது அவர்கள் போதிக்கப் புகுந்த விஷயங்களெல்லாம் ஒரேமுடிவையுடையன. யாதெனில், இப்பிரபஞ்சாதிகளையெல்லாம் சகலரும் செம்மையாக அறிந்து, இம்மைப் போகங்களைப்பெற்று, மறுமைப் பலன்களையும் அடைந்து க்ஷேமித்திருக்கவேண்டுமென்பதே.

இன்னமும், மானிடரின் அகப்புறச்சக்தி களைத் தெளிவாக விளக்கும் உரையாணியாகி னூர்கள் அப்பேரறிவாளர்கள். இரவி, அம்புலி, அலைகடல், உன்னத பர்வதங்கள், விசால நதிகள், இன்னுமிவைபோன்ற அற்புதங்களைப்போல், அப்பெரியோர்கள் நம்மை நல்வழியிற் றிருப்பி சுசீலர்களாகச் செய்வதுடன், கடவுளின் இருப்பையும், மாகூதிமையையும், வல்லமையையும், கருணையையும் வலியுறுத்திவருகிறார்கள். இம்மெய்ம்மையர்களின் ஜீவ சரிதத்தையும், சித்தாந்தங்களையும் ஐயந்திரிபற நாம் படித்தறிதல் சர்வோத்கிருஷ்டமானது என்ற உண்மையை நாம் இங்கு எடுத்துரைக்க வேண்டுமோ?

அம்மகாத்மாக்களின் ஜீவசரிதங்களை நாம் பழுதற ஆராய்ந்தறிவோமாயின், அவர்களுடைய வீரதீரமும், வைராக்கியமும், விசுவாசமும், நற்சொல்-சிந்தனை-செயற்களும் கூடிப் பொலிவுடன் விளங்குவதைக் காணலாம். இவ்வுலகாதிகள் நிலைகுலைந்த போதிலும், கோடிக்கணக்கான இடர்கள், பெருமழைபோல் தாரைதாரையாய் அவர்கள்மேல் வீழ்ந்து, அவர்களை மேற்செல்லாது தடுத்தாலும், கொடுங்கோலரசரின் சிறைச்சாலை-தேசநீக்கம்-சிரச்சேதம் முதலான அகோர தண்டனைகளால் வாதிக்கப்பட்டபோதிலும், இவைகளை அம்மேன்மக்கள் அசட்டை செய்து, அத்துன்பங்கள் பெருகப்பெருக அவர்களுடைய உற்சாகமும்-தைரியமும்-நம்பிக்கையும் மேன்மேல் வளர்ந்து, அவர்கள் தாமமைக்கொண்ட காரியங்களை நெகிழவிடாது அவைகளை நிறைவேற்றுவதிலேயே தம் மனத்தைச் செலுத்தி, உழைத்து, இறுதியில் வெற்றி பெறுவதை நாம் அறியலாம். சிலுவையிலறையுண்டிறந்த ஏசுநாதரும், அக்னிக்கோயிலில் ஆராதித்துக் கொண்டிருக்கையில் கொலைசெய்யப்பட்டு உயிர் துறந்த ஸாரதுஷ்ட்ர ஸ்பீடமாவும், விரோதிகளின் துவேஷத்தினால் நாடுநாடாய்த் திரிந்து காலத்தைக்கழித்த மகமத் நபியும், கன்பூஷஸும் (Confucius), கசடர்களால் விஷமிடப்பட்டு மாய்ந்த மிகப்பெரிய தத்வ ஞானியாகிய ஸாக்ரெடிஸும், நூதன விஷயங்களைக் கற்பித்ததற்காக எரிக்கப்பட்ட ஸாவொனரோலாவும் (Savonarola) கியார்டனோ ப்ரூனோவும் (Giordano Bruno) இன்னுமனேக மகான்களும் மேற்கூறியவற்றிற்குத் தக்க சான்றுவார்கள். ராஜ்யங்கள் தோன்றி யழியலாம்; நாகரிகம் வளர்ந்து பெருகி மறையலாம்; நானாவித ஜாதிகள் இப்பூவுலகில் உதித்து, நாளடைவில் தாழ்மையுற்று மடியலாம்; அளவளாவி வியாபித்து நிற்கும் வானமும் சுருண்டுபோகலாம்; ஆனால், இப்பெரியோரின் எண்ணங்களும், காரியங்களும் ஒருபொழுதும் அழிவடையா.

டி. ஆர். ராஜகோபாலன்.

Land Marks of Ramayana in Tamil Sornets.

BY MR. V. SUBBA IYER.

ஸ்ரீ ராமாயணத் தனிப்பாசுரங்கள்.

தற்சிறப்புப் பாயிரம்.

நேரிசை யாசிரியப்பா.

ஆனை முகத்தோ னடியிணை பரவிக்
கானக் குறமகள் கணவனை வணங்கி
வான்மீ கிசொல்லும் வளத்தை வியந்து
மேன்மையாய்க் கம்பன் விளம்பிய கதையின்
செம்பொருள் தெரிக்க நினைந்து, மேலும்
வெந்திற லரக்கரை வென்ற வீர
ரகுபதி சரிதையை ரம்யமாய்க் கேழ்க்க,
வெகுபலம் வாய்ந்த வனும னுதியர்
சொல்லிய பொருளைத் தொல்புவி புணர
நெல்லையம் பதிக்கு நேற்மேற் கானு
சோமா தேவிவாழ் வேங்கட ராமன்
ஆரண மோது மருமறை வேதியன்

தந்தசுப் பையன் றானும்
இந்த வுலகினி லோதுவ னெளிதே.

நூல்.

ஸ்ரீராமாவதாரம்.

நேரிசை யாசிரியப்பா.

ஸ்ரீ அயோத்தியைச் சிறக்கப் புரந்த
தராதி தசரதன் றனக்குத் தகுமாண்
மக்கட் பேறிலா மனஞ்சலிப் புற்றுத்
தக்க பெயருடன் றகுமுறை வேணடப்
புத்ரகா மேஷ்டி பொலிவாய்ச் செய்திடில்

வித்தையு மொழுக்கமும் வீரமும் வாய்ந்த
புத்திரர் பிறப்பது பொருந்தும்' என்று
சொன்னதும் மன்னவன் சுபகா லொன்றில்
அன்னது செய்திட வகில நாதனும்
நாராணன் கோசலை வயிற்றிற் புகுந்து

பன்னிரு மாதம் பதிந்தங் கிருந்த
பின்பு சைத்திரப் பிறைவளர் பக்கம்
ஒன்பதாம் நாளி லுலகிடை
வந்தன னிக்குள மக்களுய்ந் திடவே.

(2) தாடகை வதம்.

நிலைமண்டில வாசிரியப்பா

அந்தக் குழவியை யறிவுளோர் கண்டு
விந்தை யிதுவென மேன்மையாய்ப் பேசி,
'உலகுள பேர்க ளிவனு ளுவகை
பலகா லெய்துவ ராகையாற் பாலனை
ராம னென்றே யழைப்பது தகுதி'

என்றதும் மன்னவ னெழின்முக மலர்ந்து
நன்றென வப்பெய ரிட்டன னுளில்;
பிள்ளையின் பிராயம் பதினா றாகுமுன்
விசுவா மித்திரன் விரைந்தவ ணணுகி
அசுரர் தம்மையு மழித்திட வேண்ட

அன்னவ னடிவழி யிளையவ னோடு
திண்ணமாய்ச் சென்றனன் விருடியின்[
[வேள்வியைக்.
கண்ணிமை போன்ற காவல் புரிகையில்
மூன்வரு மாக்கியை முடித்தன னன்றே.

(3) அகல்யாசாபவிமோசனம்.

நிலைமண்டில வாசிரியப்பா

தாடகை தன்னைத் தடிந்தது கண்டக்
காடகத் திருந்த முனிவரர் களித்து
'ராமா! ரகுகுல ஸோமா! தத்பரர்
தாமா! உன்னால் யாகஞ் சரிவர
நடாத்துவம்' என்று நனிமுகங் கொண்டு

விடாதல் வேள்வியை முடித்தனர் பின்பச்
செம்மலு மிளையோ னுடனே சேர்ந்து
தம்பதி யடைய நினைந்திடுந் தருணஞ்
சனகன் றனது மகளாஞ் சீதையின்
வதுவை முடிக்க மதித்தது கேட்டுக்

குருவுடன் மிதிலையைக் கோரி நடந்து
வரும்வழி சிலையுருக் கொண்ட வகலியை
மேலொரு பாதத் தூளி வீழ்ந்ததுஞ்
சீல முளவொரு பெண்ணா யினளே

(4) விசுவாமித்திரன் ராமனைப்புகழ்தல்.

நேரிசை யாசிரியப்பா.

கண்டதும் விசுவா மித்திரன் கழறுவான்:—
'பண்டோர் நாளிற் புரந்தரன் பண்ணிய
பாவத் தொழிலாற் பாவைகல் லானள்;
நீவரு வழித்தூள் பட்டதுஞ் சாபம்
அகன்றதா லன்னவட் பதியுடன் சேர்ப்பாம்.

ஐயனே! யுன்றன்னைத்திற மரக்கியின்
போரிற் கண்டு புளக மடைந்தேன்,
இங்கோ வுன்ற னிளந்தளிர்த் தாளின்
வெங்கலி யகற்றும் வண்மையைக் கண்டேன்.
பஞ்சாக் கரத்தின் மகரப் பண்பினை

வெஞ்சம ரிடையே மிகுத்துக் காட்டினாய்;
அட்டாக் கரத்தின் ரகாரத் தழகை
விட்டக லாததை விளக்கவோ
இத்தொழில் செய்தனை? ராமா!' என்றே

(5) மிதிலையை யடைதல்.

நேரிசை யாசிரியப்பா.

மிதிலை நோக்கிப் போம்வழி யெல்லாம்
'இதுகல், ராமா! ஏட்டிப் போநீ;
காலடி பட்ட கற்க ளெல்லாங்
கன்னிய ராகுமோ வென்பதென் கலக்கம்!'
என்று முனிவர னேளனஞ் செய்ய

சென்று சேர்ந்தனர் சனகன் பதியை
அங்கவர் கண்ட வரசர் தொகுதியை
இங்கெடுத் தோத வியலா துணர்மின்,
சோழன் சேரன் செம்மலாம் பாண்டியன்
வீர மிகுந்த விராடன் விதர்ப்பன்

மச்சன் முதலிய மன்ன ரநேகர்
இச்சையா யிருந்தனர் சீதையை மணக்க.
அங்கவர் கூடிய வவைநடுச்
செங்கண் மாலுஞ் சென்றிருந் தனனே.

(6) சிவதனுசு.

நேரிசை யாசிரியப்பா.

அரசர் கூடிய வவைநடுச் சனகன்
பரிசனர் பலபெயர் கொணர்ந்தவோர் வில்லை
வைத்து மன்னரை நோக்கிச் சொல்லுவான்:
'இத்தனு விமய கிரிவள ரத்தன்
தந்ததா மிதனைத் தாங்க வேண்டுமால்

இந்த வுலகோ ராயா யிரவர்
வேண்டு மென்பது விளங்கு முமக்கே
இதுதனை யோர்நா ளிளங்கொடி சானகி
தனது சிறிதாங் கரங்கொடு தள்ளிய
செயலைக் கண்டேனுஞ் செய்தனஞ் சபதம் :—

ஆகையால் வில்லை யங்கையி லேந்திப்
பண்பாய் நாணைப் பூட்டும் பலவான்
தோகையைக் கொண்டு சுகித்திடல்
ஆகு மென்பதை யறிந்திடும்' என்றே.

(7) சிவதனுசின் வலிமை.

நிலைமண்டில வாசிரியப்பா.

சொல்லையுங் கேட்டனர் வில்லையுங் கண்டனர்
வல்லவ ரெனவரு மன்னவர் யாவரும் ;
அவரிற் சிலபெய ரக்கண மெழுந்து
தவறிது வென்று தம்முள் நினைந்து
சனகனை நோக்கித் தங்குரல் நடுங்க

'உனது மகளின் வதுவை கண்டிட
வந்தன மல்லது மனங்கொள வன்று'
என்றங் கிருந்தனர் வேறு சிலரோ
வில்லை யசைக்கவும் முடியா தவராய்
வீழ்ந்தனர் தரையில் மற்றுஞ் சிலபெயர்

அசைத்தவ ரங்க மழிந்து நின்றனர்
இவையெலாங் கண்ட சனக னிடிந்தே
'இல்லையோ வீரர்கள் மன்ன ரெழினலஞ்
சொல்லுமின்' என்று துடித்துநின் றனனே.

(S) தனுர்ப்பங்கம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

சனக னவ்விதஞ் சாற்றிய மாற்றந்
தனது காதில் வீழ்ந்ததும் ராகவன்
விசுவா மித்திரன் முகந்தனை நோக்க
முனிவ னெழுந்து முன்பே நின்ற
சனகனைப் பார்த்துத் 'தாரணி மன்ன!

வீர மிகுந்த தசரத வேந்தின்
தீரம் வாய்ந்த மகனுஞ் செம்மல்
வில்லை வளைத்திட விடையுள தோ?' வெனச்
சொல்லவே, தோன்றலும் 'ஆகுக' என்றான்
குருவைப் பணிந்துடன் குலமக னெழுந்தே

ஒருகை கொண்டவ் வில்லை யுயர்த்திக்
காலா லொருதலை மிதித்து ஞாண்டனை
மறுகை யாலே பூட்டிக் குணத்தொனி
செய்திடச் சிவவில் லிற்றுவீழ்ந் ததுவே.

(9) ஜனகனும் விஸ்வாமித்திரனும் ராமனைப்புகழ்தல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

கண்டதுஞ் சனகன் களித்துமுன் வந்து
'பண்டுள வீரம் பாலித் தாய்நீ'
என்று ராமனை யேத்திப் பேச,
விசுவா மித்திரன் விரைந்தரு கடைந்து
தசரதப் பேற்றைத் தழுவிக் கொண்டுதன்

கண்ணீர் சொரிந்து கரங்களை வருடி
'அண்ணலே! அங்கிரு தலங்களி லுன்றன்
கையுங் காலுந் தனித்தனி யாகச்
செய்த வேலைகள் சிறக்கக் கண்டேன்,
இங்கோ, அன்னவை யிரண்டுஞ் சேர்ந்து

மங்களம் விளைக்க மனமகிழ் வெய்தினேன்
தம்பதி யேக நினைந்த விருவரும்
தம்பதி யோடு தனிநகர் களிக்க
ஏகுமின்' என்று, சனகனை நோக்கவே ;

(10) சீதா கல்யாணம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

மன்னவ னிருடியின் மலரடி வணங்கிச்
'சொன்னது போலச் சோதிவா யெந்தன்
மகளிர் நான்கு பெயரையுந் தசரதன்
மகார்க்குக் கொடுக்க மதித்துளேன்' [என்னவே
அயோத்தி மாநகர்க் காள்களை யனுப்பிச்

சுபசோ பனமுஞ் சொல்ல விடுத்தனர்
தசரதன் பரதன் சத்துருக் கினனெனும்
இசையுள பெயர்க ளியைந்து வந்ததும்
பூவுல குள்ளோர் புகழ்ந்து பணியத்
தேவரு மலர்மழை மகிழ்ந்து சொரியத்

துந்துபி முழங்கச் சுபநா ளொன்றில்
சானகி யோடவள் தங்கை மார்களும்
ரகுபதி யோடவன் தம்பி மார்களைத்
தகுமென வடையத் தாரணி களித்ததே.

பாலகாண்டம் முற்றுப்பெற்றது.

N.B.—The right of publishing these sonnets in book form is reserved by the author. Editors of other Journals may publish them provided they send 2 copies of the issue in which they appear to V. Subba Aiyar, Seetharama Mudali Street, Vellore.

Why Mouth and Teeth should be kept clean?

வாயையும் பற்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டியதேன்?

எந்த இடத்தில் ஈரமும், உஷ்ணமும் கலந்திருக்கிறதோ, அந்த இடத்தில் நமக்கு விரோதிகளான அதிநுண்ணிய அங்குரசிலிகள் உண்டாகின்றன என்கிற உண்மையை நம்முன்னோர்கள் நன்குணர்ந்தவர்களாகையால், உஷ்ணமும் ஈரமும் சதா நம்வாயிலிருப்பதைப் பற்றி, அதிகாலையிலெழுந்து மலஜலத்தைப் பிரித்து உடனே பல்துலக்கவேண்டுமென்ற விதியை அவர்கள் ஏற்படுத்தினதோடு, பற்களைத் துலக்கும் விதத்தையும் கூறி யிருக்கின்றனர்.

ஆனால், இவ்விதியானது எம்மட்டும் அநுஷ்டிக்கப்படுகின்றது? சிலர் படுக்கையை விட்டு எழுந்ததும் மலஜலத்தைக் காலக்கிரமத்தில் கழிக்காமலும், வாயையும் முகத்தையும் சரிவரக்கழுவாமலும், வேலையே பெரிதென்று மதித்துக் காலை 8 அல்லது 9 மணி வரையில் தங்கள் ஜீவனார்த்தமான காரியங்களைக் கவனிக்கின்றனர். பிறகு மிகுந்த அவசரத்துடன் காலைக்கடன்களை முடித்து, நன்றாக அழுக்கு நீங்கும்படி ஸ்நானம் செய்யாமலும், ஆகாரத்தைச் சரிவர உமிழ்நீருடன் கலந்துண்ணாமலும் அவசரத்தில் விழுங்கிவிட்டு வெளியே போகின்றனர்.

மேற்கூறிய பழக்கங்களை ஜனநெருக்கம், வியாபாரப்பெருக்கம், கைத்தொழில்சாலைகள், கோர்ட்டுகள் முதலியன உள்ள இடங்களில் நாம் காணலாம். அப்பழக்கங்களை யுடையவர்களுக்குப் பற்பல வியாதிகள் உண்டாவது சகஜம்.

இன்னும் சிலர், காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும், 'பெட் காபி' என்று பல் துலக்காமல் வாயைமட்டும் கழுவி அருந்துகின்றனர்.

கல், சாம்பல், அழுக்கு நிறைந்த மண் முதலியனவற்றைக்கொண்டு சிலர் பற்களைத் துலக்குகிறார்கள். அவ்விதம் செய்வதனால், பற்களினிடையிலிருக்கும் அழுக்காகிய ஓர்வித சுண்ணாம்பு நீங்காமலிருப்பதோடு, பற்களுக்குப் பளபளப்பையும் கெட்டியையும் கொடுப்பதான ஓர்வித மேற்பூச்சும் தேய்ந்து போகின்றது. இதனால் பல்வலி, பல்லில் ரத்தம் வருதல், பல்லசைவு முதலிய உபாதைகளும் உண்டாகின்றன.

இனி, பற்களையும் வாயையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதற்கான விதிகளைக் கூறுவோம்.

காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும், முதன்முதல் மலஜலத்தைக் கழித்துவிட்டுப் பற்களைத் துலக்கவேண்டும். சற்று விருவிருப்பும், துவர்ப்பும் கலந்துள்ள சுத்தமான பற்பொடிகளைக்கொண்டு பற்களைச் சுத்தம்செய்வது உத்தமம். கீழே குறிக்கப்படும் பற்பொடிகளைத் தயார் செய்து உபயோகித்தால், பற்கள் முத்துக்களைப்போல பிரகாசிப்பதுடன், பற்களைச் சார்ந்த வியாதிகளும் நீங்கும்.

பற்பொடிசெய்யும் முறை.	பலம்.
விதைநீக்கி வறுத்திடித்த கடுக்காத்தூள்.	1
விதைநீக்கி வறுத்திடித்த பொன்னுங் கொட்டைத்தூள்	1
விதைநீக்கி வறுத்திடித்த சீக்காய்த் தூள்	1
வறுத்திடித்த மிளகு தூள் ...	1
சுக்குத்தூள்	1
லவுங்கத்தூள்	1
ஏலரிசித்தூள் ...	½
அக்கிராகாரத்தூள்	1
வெள்ளைக்குங்கிலியத்தூள்	1
இந்துப்பு	1
நெல்லி மரக்கட்டையைச் சுட்டுக் கருக்கிய தூள்	5

இவைகள் யாவையும் ஒன்றுய்க் கலந்து சீசாவில் வைத்துக்கொள்ளவும். பல்நோயுள்ளவர்கள் காலை மாலை இந்தப் பொடியினல் பற்களைத் துலக்கி வெந்நீரில் வாயைக் கொப்பளிக்கவும். இந்தப் பொடியை பல்நோய் இல்லாதவர்களும் பிரதி தினமும் உபயோகிக்கலாம். பற்களைப்பற்றிய எவ்வித ரோகமும் கிட்ட அணுகாது

மற்ருருமுறை.	பலம்.
நெல்லிமரக்கட்டையின் கரித்தூள் ...	1
சுத்தமான தேன்	1

இவற்றைச் சேர்த்துக்குழைத்து வைத்துக்கொண்டு, வேண்டியபோது எடுத்துப்பல் துலக்கினால், பற்கள் நன்கு சுத்தமடையும்.

(2) ஆகாரமாயிருந்தாலும், வேறு எந்த பதார்த்தமாயிருந்தாலும், சாப்பிடுவதற்கு முன்னும் பிறகும் வாயையும், கைகளையும் சுத்தமாய்க் கழுவவேண்டும்.

(3) வாயைச் சுத்தம் செய்ய உபயோகிக்கும் ஜலமானது, உள்ளுக்குச் சாப்பிடும் ஜலம் எவ்வளவு சுத்தமாயிருக்குமோ அவ்வளவு சுத்தமாயிருக்கவேண்டும்.

(4) கக்கூஸ் முதலிய கெட்ட காற்றுள்ள இடங்களில் போசுவதாவது, மற்றெவ்வித காரியத்தைச் செய்யவாவது கூடாது.

(5) சொட்டாவி விடும்போது வாயைக் கைக்குட்டையினலாவது, மேலங்கவஸ்திரத்தினலாவது மூடிக்கொள்ளவேண்டும்.

(6) நகத்தைக்கடித்தல், பென்சில் பேனு முதலியனவற்றைக் காரணமின்றி வாயில் வைத்துக்கொள்ளுதல், தபால் பில்லைகளை ஒட்டுவதற்காக அவற்றை நாக்கில் தடவுதல், கைவிரலை நாக்கில் தடவிப் புஸ்தகத்தின் ஏடுகளைப் புரட்டுதல் முதலிய கெட்ட பழக்கங்களை முற்றும் நிறுத்தல் வேண்டும்.

(7) அளவுக்கு மிஞ்சி காரம், புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கைப்பு, சூடு முதலியவைகள் பற்களின் நுண்ணிய வேர்களாகிய நரம்புகளைப் பலவீனப்படுத்துவதனல், அவற்றை நீக்குதல் உத்தமம்.

(8) மிகவும் கடினமான பதார்த்தங்களைக் கடித்தல் கூடாது.

மேற்கூறிய விதிகளை நாம் அனுஸரிப்போமாயின், தொத்து வியாதிகளை தேகத்தில் அணுகவொட்டாமல் பாதுகாத்துக்கொள்வதோடு, தேக ஸௌக்கியத்திற்கு இன்றியமையாதவையான வாயையும் பற்களையும் காப்பாற்றிக்கொள்ளலாம்.—சுதேசமித்திரனில் பண்டிட் கே. எஸ். பொன்னம்பலம்.

Sir Jagadish Chander Bose.

By Mr. N. R. Kedari Rao, M.A., L.T.

ஸர் ஜகதீச சந்திர போஸ்.

ஸர் ஜகதீச சந்திர ஸ்போஸின் பெருமையையும் அவருடைய ஒப்புயர்வற்ற புத்தியின் சிறப்பையும் விளக்குவதற்கு, அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சாஸ்திர மாளிகையை (Bose Research Institute) த் திறக்கும்போது அவர் செய்த உபந்நியாசமே பெருஞ்சான்றுகும். ஆகவே, அதன் சாராம்சத்தை இங்கு அவர் வாய்மொழியாகவே கூறுவோம்.

இந்திய சரித்திரத்திலேயே வெகு மங்கலகரமான அந்நாளில், பெரியோர் பலரும் கூடியிருக்கும் மஹாஸபையில், எல்லோருடைய மனமும் மகிழும்படி இவர் பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளினர்.

"இக்கலாசாலையை எனது ஜனன பூமியான இவ்விந்தியாதேசத்துக்கு நான் இன்று அர்ப்பணம் செய்கிறேன். ஆயினும், இது வெறும் கலாசாலைமாத்திரமன்று; எங்கும் நிறைந்தது; ஸர்வ பரிபூரணநந்த ஜோதிஸ்வரூபமாய் விளங்கும் ஜகதீசனுக்கு வழிபாடு செய்யும் கோயில்களுள் ஒன்று. அவர் மஹாத்மத்தைக்கூற நம்மாலியலாது; எக்காலத்திலும் இருப்பவர்; எவ்விடத்திலும் இருப்பவர்; எல்லாம் உணர்ந்தவர். உலகம் உற்பத்தியான நாள்முதல் இன்றுவரையிலும் உள்ள பெரியோர்கள் செய்திருக்கும் ஆராய்ச்சிகளால் நமக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களெல்லாம், அவர் அறிவின்முன் சூரியனுக்குமுன் பிடித்த மினுமினுப்பூச்சியாகும். அப்படியிருந்தும், மற்றப் பிராணிகளுக்கும் மனிதனுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில்: மற்றப் பிராணிகள் தமக்குத் தெரிந்தவற்றைக்கொண்டு திருப்தியடைகின்றன. மனிதனே, ஒவ்வொருநாளும் தான் பல புதிய விஷயங்களை அறியவேண்டுமென்ற ஆசையால், கொஞ்சம் தன் அறிவை அதிகரித்துக் கொள்ளுகிறான். இவ்விதம் தினந்தோறும் தன் அறிவை விருத்திசெய்ய வேண்டுமென்ப



ஸர் ஜகதீச சந்திர போஸ்.

தையே ஒருவன் பிரதானமாய் நினைத்து, ஊக்கத்துடன் உழைத்து வருவானுனல், அவனுக்கு எவ்வித கஷ்டமும் உண்டாகாது. எப்படிப்பட்ட இடையூறு வரினும், அவன் அதைச் சுலபமாய் மேற்கொண்டு தன் எண்ணத்தை நிறைவேறச்செய்வான். இந்த உண்மையானது நமது மனதிற்குத் தெளிவாய்த் தெரியவேண்டியே, இக்கலாசாலையை இங்கு நான் அர்ப்பணம் செய்கிறேன்.

"இன்றைக்கு முப்பத்திரண்டு வருஷங்களுக்குமுன்னால் சாஸ்திர (Science) உபாத்தியாயராக நான் அமர்ந்தேன். அந்நாளில் இந்தியர்களுக்கு சாஸ்திரப் (Science) பயிற்சி அதிகமாயில்லை. தவிரவும், இந்தியர்களுக்குத் தத்வசாஸ்திரத்தில் அபிமானமேயொழிய, சாஸ்திரத்தில் அவ்வளவு ஊக்கம் இல்லையென்றே மேனாட்டார் எண்ணியிருந்தார்கள். நமது ஜனனபூமியாகிய இந்தியாவுக்கே இது ஒரு வசைமொழியென்றும், அதை நீக்குவதற்கு என்னால் எவ்வளவு முயற்சிக்க இயலுமோ அவ்வளவும் செய்துவிடவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்துகொண்டு, அதனால் எத்தகைய கஷ்டம் வரினும், எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வதென்றே சபதம் செய்துகொண்டேன்.

"இப்படிப்பட்ட மனவுறுதியால், கொஞ்சம் நாட்களுக்கெல்லாம் லார்ட் கெல்வின் (Lord Kelvin) ராலே (Rayleigh) முதலானவர்களுக்குப் புலப்படாத விஷயங்கள் பலவும் எனக்கு எளிதில் புலப்பட்டன. இவற்றைக் கண்ட இங்கிலாந்தில் பிரதான சாஸ்திர சங்கமாகிய "ராயல் சொஸைடி" யார், தம்மிடம் கல்வி யபிவிருத்திக்காக பார்லிமெண்டாரால் கொடுக்கப்பெற்ற தொகையின் ஒரு பாகத்தை எனக்குப் பரிசளித்தும், நான் கண்டுபிடித்த புதுமைகளைப் பிரசுரம் செய்தும் என்னைக் கௌரவப்படுத்தினார்கள்.

"அது முதற்கொண்டு என் மனம் கிளர்ச்சியுற்று நவீன விஷயங்களிற் புக ஆரம்பித்தது. சேதனவர்க்கத்திற்கும் அசேதனவர்க்கத்திற்குமுள்ள வித்தியாசங்களை ஆராயப்புகுந்தபோது, பல அபூர்வமான விஷயங்கள் எனக்குத் தென்பட்டன. ஆயினும், மற்ற சாஸ்திர ஞானிகள் நான் சொன்னவற்றைச் சரியென்று ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களுடைய ஆக்ஷேபணைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லி, ஐரோப்பியர்களாயினும் சரி, மற்று எவர்களாயினும் சரி நாம் உண்மையையே நாடவேண்டுமென்றும், என்னால் கண்டு பிடிக்கப்பட்டவைகள் உண்மையானவையா இல்லையா என்பதை மாத்திரம் கவனிக்கவேண்டுமேயன்றி, மற்றெவ்விதத்தாலும் மதிப்பது சரியன்றென்றும் அவர்க்கு வற்புறுத்துவது மிகவும் சிரமமாகவேயிருந்தது.

போஸினுடைய சாஸ்திர மாளிகை.

"ஆயினும், 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது மூதோர் வசன மன்றோ? அவ்விதமே நானும் வெகுநாள் வரையில் பொறுத்திருந்ததனால்தான் கடைசியில் எனக்குக் கீர்த்தி கிடைத்தது.

"இக்காலத்தில் மேனாட்டு நாகரிகமே சிறந்தது என்று சாதாரண ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆதலின், ஒவ்வொருவனும் பணம் சம்பாதிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றான். எவ்விஷயத்தை எடுத்தாலும் சரி, அது தன் செல்வத்தை விருத்தி செய்யுமாவென்பதே அவனுடைய முதல் யோசனை.

"ஒவ்வொருவரும் வயிறுநிரம்ப உண்டு உடுத்து சுகமாயிருப்பது நலமே. ஆயினும், உண்பதுவும் உடுப்பதுவுமே நமது வாழ்க்கையின் பிரயோஜனமாகுமா? இதைவிட இன்னும் பன்மடங்கு முக்கியமான விஷயங்களைப் பற்றிக் கொஞ்சமாவது நாம் கவனிக்கவேண்டாமா? ஒவ்வொருவனும் மற்றவர்களோடு போட்டி போடுவதைப்பார்க்கிலும், அவர்களோடு கூடி வாழ்ந்து இன்புறுவது சிறந்த தன்றோ?

ஸ்ரீ ஜகதீச சந்திர போஸின் பிரசங்கம்.

"அப்படிப் பலரோடும் கூடிவாழ்வதே சிறந்தது என்று நமது ரிஷிகள் ஆதிகாலந் தொட்டு முறையிட்டு வருகின்றார்கள். பொருளைக் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதைப் பார்க்கிலும், பிறருக்குக் கொடுப்பதே மேன்மையானது என்று பலவிதமாயும் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். 'இயல்வது கரவேல்' 'ஈவது விலக்கேல்' என்பனவெல்லாம் ஔவையாரின் வாக்கன்றோ?

"ஆதலின், நாம் மேனாட்டாரைப் போல் பொருளைக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தாலும், நமது வேத சாஸ்திர உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கிறபடி உதாரகுணத்தோடு பிறர்க்குத் தாராளமாய்க் கொடுக்க வேண்டுமேயன்றி, எல்லாவற்றையும் நாமே கைப்பற்றக்கூடாது.

"ஆனால், மேனாடுகளில் கல்வியை விற்று வருகிறார்கள். அபூர்வமான ஒரு ஔஷதத்தை ஒருவன் கண்டுபிடித்துவிட்டால், அதை உடனே அவன், 'Patent' செய்துவிடுகிறான். அதாவது, அதே ஔஷதத்தை வேறு எவரும் செய்யக்கூடாது என்பதே. அப்படி வேறு யாராவது செய்துவிட்டால், அவன் தண்டனைக்குட்படுத்தப்படுவான். இவ்விதமே ஒருவன் ஒரு விஷயத்தைத் தன் புஸ்தகத்தில் எழுதிவிட்டால், அதே விஷயத்தை மற்றொருவன் வெளியிடக்கூடாது. அப்படிச் செய்தால், காபிரைட் என்ற சட்டத்தின்படி தண்டனைக்குள்ளாவான்.

"இப்படிப்பட்ட நிபந்தனைகளெல்லாம் நம்மிடத்தில் இல்லை. கல்வி எல்லோருக்கும் உபயோகமாயிருக்கும் பொருட்டு இக்கலாசாலையில் கண்டுபிடிக்கப்படும் விஷயங்கள் எல்லாவற்றையும் எவரும் ஒருவிதமான பயமுமின்றி எடுத்தாளலாம். என்னுடைய ஆன்றோரது கொள்கையின்படி நான் கல்வியைத் தானம் செய்பவனேயன்றி விற்பவனல்லன்.

"இப்படிப் பலருக்கும் உபயோகமாகும்படி ஆராய்ச்சிசெய்வதென்றால், அது எளிதானகாரியமன்று. ஆராய்ச்சி செய்யும் வழியை என்னுடன் இருக்கும் பத்துப் பன்னிரண்டு சிஷ்யர்களுக்கும் நான் இதுவரையில் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். ஆயினும், சாஸ்திர ஆராய்ச்சி முறைகள் இத்தேசமெங்கும் பரவவேண்டுமானால், இக்கலாசாலையில் பயிலும் சிஷ்யர்கள் அதிகரிக்கப்படவேண்டும். அநேகம் சிஷ்யர்களை வைத்துக்கொண்டு, அவர்களுக்குப்போதுமான சௌகரியங்கள் செய்து கொடுத்து, அவர்களைச்சரிவரப் பயிற்சி செய்வதென்றால் ஏராளமான திரவியம் வேண்டும்.

"இக்காரியம் கைகூடுவதற்கு என் ஆஸ்தி முழுவதையும் நான் அர்ப்பணம் செய்துவிட்டேன். தவிரவும், என்னுடன் எப்பொழுதுமிருந்து, எனது சுகதுக்கங்களைத் தனதாகப் பாராட்டிவரும் என் பெண்மணியும், தனது ஆஸ்தியை இக்கைங்கரியத்துக்காக நியமனம் செய்திருக்கின்றாள். மற்றவர்களுள், பம்பாய் நகரத்து வர்த்தகப்பிரபுக்களில் இருவர் லக்ஷக்கணக்காய் உதவி செய்திருக்கிறார்கள். இன்னும், பொது ஜனங்களில் ஏழைகளும், பணக்காரர்களும் தம்மாலியன்றவாறு உதவ முன்வந்திருக்கின்றனர். பம்பாய் ராஜதானியில் வாசிக்கும் பெண்பிள்ளைகளில் சிலர், தாம் சேகரித்த தொகையை யனுப்பி, 'நமது ஜனன பூமியின் வழிபாட்டுக்காக இதை உபயோகிக்கவேண்டும்' என்று எழுதியிருக்கிறார்கள். இமயமலை அடிவாரத்தில் சஞ்சரிக்கும் பிரயாணி ஒருவர்கூட, இவ்விஷயம் பயன்படவேண்டுமென்று மங்களவாழ்த்து எழுதியிருக்கிறார். இவ்விதம் எனக்குப் பலவாறு உதவி புரிந்திருக்கும் நண்பர்களெல்லோருக்கும் வந்தனம்! வந்தனம்!!

"சாதாரணமாய் மேனாட்டார் சாஸ்திர ஆராய்ச்சிசெய்வதில், ஒவ்வொரு சாஸ்திரமும் வெவ்வேறென்றே எண்ணியிருக்கிறார்கள். இந்தியாவிலோ எல்லாசாஸ்திரங்களும் ஒன்று என்பதுதான் நமது கொள்கை. ஆகவே, இச்சாஸ்திரங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக ஏதாவது விஷயமுண்டாவென்று நான் யோசித்துக்கொண்டிருந்தேன். அதைப்பற்றியே என் கவனத்தைச்செலுத்தினதனால், ஸ்தாவரஜங்கமங்களுக்குள் அதிகம் வித்தியாசமில்லையென்றும், நமது ஞாபகசக்தியை நமது எண்ணப்படி அதிகரிக்கவோ குறைக்கவோ முடியுமென்றும், நம்மிருகண்களுள் ஒன்று உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும்போது மற்றொன்று சற்று இளைப்பாறுகின்றதென்றும், ஒரு நிமிஷத்துக்குள்ளாக ஒரு செடி எவ்வளவு வளருகிறதென்றும், செடிகள் நேராய் வளரும்போது கொடிகள்மாத்திரம் ஏன் வளைந்துவிடுகின்றனவென்றும் நான் அறியலானேன்.

"சற்று ஆலோசனை செய்து பார்க்கின், இவ்வுலகத்திலுள்ள வஸ்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதமாகக் காணப்படவில்லையா? இப்படி நாம் கண்ணால் காணக்கூடிய செடி, கொடி, மரம், மட்டை முதலிய வஸ்துக்கள் நிலைநிற்பனவா, அல்லது அவைகளால் நமக்குண்டாகும் சந்தோஷம், உற்சாகம் அல்லது சோகம் முதலிய உணர்ச்சிகள் நிலைநிற்பனவா வென்பதை யாரே நிச்சயமாய்ச் சொல்லுவர்.

"முன்னொருகாலத்தில் பெண்மணி ஒருத்தியை ஏராளமான செல்வம் வேண்டுமாவென்று கேட்டதற்கு அவள், 'செல்வம் சாவு என்ற வேதனையினின்று நீக்கவல்லதோ?' என்று கேட்டாள். அம்மாதிரி சாவு அல்லது அழிவு என்பது இல்லாமலிருக்க முடியுமாவென்பதே நெடுநாட்களாக நமது இந்தியர்களின் கருத்தாயிருக்கின்றது. இக்காரணம் பற்றியே கிரீஸ் என்ன, ரோம் என்ன, பேபிலன் என்ன, ஈஜிப்ட் என்ன இத்தேசங்களெ

ல்லாம் சில நாட்கள் வரையில் செழித்தோங்கினும், பின்பு க்ஷீணதசையை யடைந்து, இப்போது இருந்த இடம் தெரியாமல் போயிருக்கின்றன. ஆனால், நமது இந்தியாமாத்திரம் அனாதிகாலந்தொட்டு இன்றுவரை யாதொரு சேதமுமின்றிச் சுகித்திருக்கின்றது.

டார்ஜிலிங்கில் போஸின் ஆராய்ச்சிச்சாலை.

"ஆகையால், உண்மையான செல்வம் என்றால் கைப்பொருளைப் பார்க்கிலும் மெய்ப்பொருளாகிய உயர்ந்த யோசனையும் மேலான புத்தியுமேயாகும். ஆதலின், அப்படிப்பட்ட செல்வத்தையளிக்குமாறு இக்கலாசாலையை நான் ஸ்தாபிக்கலானேன்."

இவ்விதம் சிறப்புவாய்ந்த பிரசங்கம் செய்யப்பட்டபின், இந்தியக் கவிசிரோமணியாகிய ரவீந்திரநாத் தாகோர் என்பவர் ஆசி பாட, ஸர்வமங்களமான சுபமுகூர்த்தத்தில் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்தாபித்து இரண்டு மாதங்களுக்குள்ளாகவே அதற்குப் பத்து லக்ஷத்து எழுபதினாயிரம் ரூபாய் வரையில் சேர்ந்துவிட்டது. இந்தியக் கவர்ன்மெண்டாரும் இக்கலாசாலையில் வாசிக்கும் ஆறு மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுப்பதாய் வாக்களித்தார்கள். கல்கத்தா கார்பொரேஷனிலும், இக்கட்டடத்திற்கு எவ்வித வரியும் வாங்குவதில்லை யென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆயினும், இந்தியாமுழுவதற்கும் பயன்படும்படியாய் ஏற்பாடு செய்து, இக்கலாசாலையைச் சரிவர நடத்திவர, இன்னும் குறைந்தது முப்பது லக்ஷம் ரூபாய் வேண்டும். நமது ராஜாக்களும், ஜமீன்தாரர்களும், வர்த்தகப் பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும் ஏகோபித்து முயற்சிசெய்தால், இக்காரியம் வெகு சீக்கிரத்தில் நிறைவேறுமென்பதில் ஐயமில்லை

இக்கலாசாலை 1917-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ந் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஒரு வருஷத்திற்குள்ளேயே இதனால் நாம் அடைந்திருக்கும் பலன் இவ்வளவவ்வளவன்று. இவ்விஷயத்தைப்பற்றி அடுத்த வியாசத்தில் எழுதுவோம்.

என். ஆர். கேதாரிராவ், எம்.ஏ., எல்டி.

The Lost will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

காணாமற்போன மரணசாஸனம்.

(331-ம் பக்கத் தொடர்ச்சி.)

சில மாதங்களுக்கெல்லாம் சாம்பசிவய்யருக்கு உடம்பு அஸௌக்கியமேற்பட்டது. அவரால் வயல்களைச் சுற்றிப் பார்க்கமுடியவில்லை. அவர் மனைவி அவருக்குப் பலவிதங்களிலும் புத்திமதி சொல்லி, பண்ணையைப்பார்க்கும் வேலையை வேறொருவரிடம் மாற்றச் செய்தாள். சாம்பசிவய்யர் தனது சகோதரியின் ஸொத்தைச் சாப்பிடவேண்டுமென்று எண்ணங்கொண்டவரல்லர். தனது மருமகன் பெரியவனாகி, தன் ஸொத்துக்களைக் கவனிக்கும் திறமை வந்தவுடன், அவன் வசம் எல்லாவற்றையும் ஒப்புவித்துவிடவேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார். அவருக்கு ஸந்ததி இல்லாததனால், தனக்கென்று ஸொத்து சேர்க்க எண்ணமில்லை. தனக்குப் பிள்ளைக்குட்டிகள் கிடையாதென்று ஒரு தக்க ஜோஸ்யர் சொன்னதனால், அதை நம்பித் தனது மருமகனுக்கு ஸொத்துச் சேர்ப்பதிலேயே கண்ணாயிருந்தார். இக்காரணம் பற்றியே அந்த ஸொத்துக்களை வேறு ஒருவரையும் கவனிக்கவிடாமல், எல்லாவற்றையும் தாமே பார்த்து வந்தார். இப்போது தனது மனைவியின் வற்புறுத்தலின்மேல், அந்தவேலைக்காக வேறு ஒரு மனுஷ்யனைத்தேட ஆரம்பித்தார். ஆனால், சீக்கிரம் ஒருவரும் கிடைக்கவில்லை. இப்படியிருக்க, கேசவய்யர் என்பவர் சாம்பசிவய்யரைப் பார்க்கவந்தார். இவருக்கும் சாம்பசிவய்யருக்கும் வெகுநாள் பரிச்சயமாம். கேசவய்யர் உத்தியோகம் பார்க்காத இலாகாக்களே கிடையாவென்று சொல்லலாம். சமையல் இலாகா, பக்ஷணக்கடை இலாகா முதற்கொண்டு ஸர்வே, போலீஸ், ரெஜிஸ்ட்ரேஷன் முதலிய பலவற்றிலும் இவர் வேலை பார்த்திருக்கிறார். ஒவ்வொன்றிலும் சிற்சில மாஸங்கள்தான் வேலை பார்ப்பார். கூடியமட்டும் ஸ்வேச்சையாயிருக்கப் பிரயத்தனப்படுவாராம். இதனாலேயே அவர் அதிகாரிகளுடன் மனஸ்தாபப்பட்டுத்தாமே வேலையை விட்டுவிடுவாராம். அவர் பழைய காலத்து மிடில் ஸ்கூலில் வாசித்தவர். அவருக்குத் தப்பும் தவறுமாய், ஆனால் வேகமாயும் தைரியமாயும், இங்கிலீஷ் பேசத்தெரியும்; தமிழ்ப் பாடல்களைச் சுத்தமாயும் ராகத்துடனும் பாடுவார். தாயுமானவர் பட்டணத்துப் பிள்ளை இவர்களின் பாடல்களும், சிவவாக்கியம் திருமந்திரம் முதலிய சித்தர் பாடல்களும் அவருக்கு நன்றாய்வரும். அவற்றை வைத்துக்கொண்டு அவர் கிராமங்களில் தடபுடல் செய்வார். அவர் சொல்லுவனவற்றை அனைவரும் நம்புவார்கள். யாராவது விஷயமறிந்தவர்கள் வந்துவிட்டால், அவருடைய பேச்செல்லாம் அடங்கிவிடும். தான் ஸம்பாதிப்பதையெல்லாம், நாடகத்திற்கும், வேசிக்கும், இன்னும் பலவழிகளிலும் போய்விடும்; வீட்டுவிஷயங்களைக் கொஞ்சமேனும் கவனிப்பது கிடையாது. பூர்விக ஸொத்துக்களையெல்லாம் கண்டபடி விரயம்செய்துவிட்டார்.

கேசவய்யர் சாம்பசிவய்யர் வீட்டுக்கு வரும்போது சாயந்திரம் 4-மணியிருக்கும். சாம்பசிவய்யர் உள்ளே கூடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். கேசவய்யர் வந்ததும், அவரை உபசரித்து க்ஷேமசமாசாரங்களை விசாரித்தார்.

“எல்லாம் ஸௌக்கியந்தான். தங்கள் கிருபை இருக்குமட்டும் எனக்கு விசாரமேயில்லை” என்றார் கேசவய்யர்.

பிறகு சாம்பசிவய்யர் தமது மனைவியைக் கொஞ்சம் பக்ஷணமும் தீர்த்தமும் கொண்டுவரும்படி ஆஞ்ஞாபித்தார். உடனே கொஞ்சம் பக்ஷணமும் தீர்த்தமும் கொண்டுவந்து வைக்கப்பட்டது. கேசவய்யர் தமது கையைச் சற்று அலம்பிக்கொண்டு பக்ஷணத்தைத் தின்றவாறே பேசலானார்.

“ஊரில் எல்லாரும் ஸௌக்கியம்தானே.”

“ஆம் ஸௌக்கியந்தான். நீங்கள் இப்போது எங்கிருக்கிறீர்கள்?”

“இப்போது எங்கேயும் இல்லை. சும்மாய்த்தானிருக்கிறேன். மதுரையில் எனக்குத் தெரிந்த ஒரு வக்கீல் இருக்கிறார். அவரைப்போய்ப்பார்க்கலாமென்றிருக்கிறேன். இப்போது எனக்குச் சற்றுப்பணமுடை. இருநூறு ரூபாய் வேண்டியிருக்கிறது. சந்துக்கடை நாராயணன் செட்டியாரிடம் கேட்டிருக்கிறேன். அவன் சீட்டின்பேரில் கொடுப்பதாகச் சொல்லுகிறான். அது எனக்கு இஷ்டமில்லை. வட்டி எவ்வளவானாலும் சரி, வெள்ளைக்கடனாக வாங்கவேண்டுமேதவிர, சொத்தை அடமானம் வைக்கலாமா. நான் என்ன கொடுக்க முடியாதவனா? என் பந்துக்களிலேயே ஒருவரைக்கேட்டிருக்கிறேன்; கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். ஆனால், பணம் எனக்கு இப்போதே வேண்டும். எவரிடமாவது வாங்கிக் கொடுத்தால், இன்னும் ஒரு மாசத்திற்குள் பணம் வந்துவிடும்; கடனை அடைத்துவிடலாம். இங்கு எவரிடமாவது பணம் கிடைக்குமா?”

“இங்கு யாரிடத்தில் பணம் கிடைக்கும். எனக்கு இந்த ஊர் புதிது. எதற்கும் இவர்களை நான் ஒன்றும் கேட்பதில்லை. நாம் கௌரவமாய் இருக்கவேண்டுமல்லவா! மேலும், எனக்குப்பணம் எதற்கு?”

“நீங்கள் எங்கேயாவது ஒரு இருநூறு ரூபாய் பார்த்துக்கொடுத்தால் தேவலை.”

இதன் பிறகு இருவரும் ரஹஸ்யமாய்ப்பேசலானார்கள். இந்த சம்பாஷணை சீதையம்மாள் காதில் சரியாய் விழவில்லை. இவ்விதம் அரைமணி பேசலானார்கள். பின்பு சாம்பசிவய்யர், “இன்னொரு விஷயம் உங்களைக்கேட்கவேண்டியிருக்கிறது. இப்போது அவள் குடித்தனத்தை மேற்பார்வை பார்க்க என்னால் முடியவில்லை. எனக்கு உடம்பு அசதியாயிருக்கிறது. இதனால் வயல்களைச் சுற்றமுடிவதில்லை. யாராவது தக்க மனுஷ்யன் கிடைத்தால், பண்ணை ஏஜெண்டாக வைத்துக்கொள்ளலாமென்று உத்தேசம்.”

“யார் மனுஷ்யாள் இருக்கிறார்கள். யாராவது இருந்தால், பார்த்துச்சொல்லுகிறேன். இந்த ஊரிலேயே யாரையாவது பார்க்கிறதுதானே?”

“இந்த ஊர்க்காரர்களுள் தகுதியானவர்கள் ஒருவருமில்லை. அவர்களுடன் ஸஹவாஸமே நான் வைத்துக்கொள்ளுகிறதில்லை. நீங்கள் மதுரைக்கு இப்பொழுதே அவசரமாய்ப் போகவேண்டுமோ?”

“இல்லை, அப்படிப்பட்ட அவசரம் ஒன்றுமில்லை. எங்கே போய் ஏதாவது வேலை பார்த்துக்கொள்ளலாமென்று உத்தேசம்.”

“நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். எனக்கு இன்னும் நாலைந்து மாதங்களில் உடம்பு சரியாய் விடும். நீங்கள் இங்கிருந்துகொண்டு பண்ணை வேலைகளைக் கவனித்து வாருங்கள். அதற்குள் வேறு யாரையாவது ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்குச் சம்பளம் கொடுப்பதாயிருந்தால், அது உங்களுடைய யோக்யதைக்குத் தகுந்ததாயிருக்க வேண்டும். அதெல்லாம் வேண்டாம். வருஷத்துக்கு 30 கலம் நெல்லும் செலவுக்கு ரூபா 100-ம் எடுத்துக்கொள்ளுங்கள். இப்படி ஆறுமாதங்களிருந்தால், பிறகு பார்த்துக்கொள்வோம்.

கேசவய்யர் முதலில் இதற்குச் சம்மதப்படாதவர் போலிருந்தார். தாம் ஆறு மாசத்துக்காக குடித்தனத்தை அலையவைப்பது கஷ்டமென்றார். சாப்பாட்டைப்பற்றிக் கஷ்டப்படவேண்டாமென்றும், வித்யாஸமில்லாமல் தமது வீட்டிலாவது அல்லது தமது தங்கை வீட்டிலாவது சாப்பிடலாமென்றும் சாம்பசிவய்யர் தெரிவித்தார். புருஷர்கள் ஒருவருமில்லாத அந்த வீட்டில் சாப்பிடுவதற்குக் கேசவய்யர் ஆக்ஷேபனை சொல்லவே, சமையல் செய்ய ஆள் போடுவதாயும், கணக்கர் நாராயணவாத்தியார் அந்த வீட்டிலேயேயிருப்பதாகவும், அதனால் தாராளமாய் அவ்விடத்துக்குப்போகலாமென்றும் சாம்பசிவய்யர் சமாதானம் சொன்னார். இதன்மேல் கேசவய்யர் சம்மதித்துவிட்டார். அவருக்கு அன்றிரவு விருந்து நடந்தது. சாம்பசிவய்யரும், கேசவய்யரும் சாப்பிட்டானபிறகு சேஷி வீடு சென்று அவளுக்கு இந்த ஏற்பாட்டைத் தெரிவித்தார்கள். அவளிடமே 200 ரூபாய் கடனாகவும், 50 ரூபாய் அட்வான்ஸாகவும் வாங்கிக்கொண்டு வந்தார்கள். கேசவய்யர் பணத்தை வாங்கிக்கொண்டு, ஊருக்குப்போய் நாலைந்து தினங்களில் திரும்பிவருவதாகச் சொல்லிப் போய்விட்டார்.

கேசவய்யர் தமது வாக்குப்படியே நாலைந்து தினங்களில், கலியாணபுரம் வந்து சேஷியம்மாளின் ஏஜெண்டாக வேலை பார்த்து வந்தார். அநுமேனு அம்மாளின் வீட்டில் ஒருவரும் இல்லையாதலால், கேசவய்யர் அவள் வீட்டில் தங்கியிருந்தார். முதலில் கேசவய்யர் சேஷி வீட்டில் அதிக தாராளமாக இருக்கவில்லை. நாராயண வாத்தியார் அங்கிருக்கும்போதுதான் அவர் அங்குத் தங்கியிருப்பார். மற்றவேளைகளில், அவ்வீட்டுத் திண்ணையிலாவது, அல்லது அநுமேனு அம்மாளின் வீட்டி

னுள்ள தமது அறையிலாவது இருப்பார். இதர வேளைகளில் வயல்களைச் சுற்றுவதும் ஊர்ஜனங்களுடன் பேசிக்கொண்டிருப்பதுமாயிருப்பார்.

நாராயண வாத்தியாருடன் கேசவய்யர் அடிக்கடி வேதாந்தம் பேசியும், பாட்டுக்களைப்பாடியும் காலங்கழிப்பதுண்டு. முதலில் அவர் மெதுவான குரலில்தான் பாடிவந்தார். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல சேஷி வீடு ஸங்கீதக்கூடமாயிற்று.

அவர் முதலில் சேஷியுடன் பேசுவதே கிடையாது. சேஷி சாம்பசிவய்யர் மூலமாகத்தான் எல்லா உத்திரவுகளையுந் தெரிவித்து வந்தாள். அதுவும் சிலநாட்களுக்கெல்லாம் மாறிவிட்டது. கொஞ்சங் கொஞ்சமாக மரியாதைகள் குறைந்துபோய் சேஷியும் கேசவய்யரும் தாராளமாய்ப் பேசலானார்கள்.

கேசவய்யருடைய வேதாந்தப்பயிற்சியாலும் பாட்டுக்கள் பாடும் திறமையாலும் சேஷி அவரிடம் அதிக மதிப்புக்கொண்டாள். நாராயண வாத்தியார் முன்னிலையில் அவள், கேசவய்யரிடம் சிவவாக்கியம், திருமந்திரம் முதலிய புஸ்தகங்களைப் படிக்கலானாள். இப்படி இருவரும் வரவர தாராளமாய்ப் பேசுவதும் சிரிப்பதுமாயிருந்தார்கள். சாம்பசிவய்யரைக் கேசவய்யராவது சேஷியாவது ஒன்றுக்கும் யோசனை கேட்பதில்லை. கேசவய்யருடைய பூர்வீகவிருத்தாந்தங்கள் சாம்பசிவய்யருக்குத்தெரியாததனால், அவர் கேசவய்யரை முற்றிலும் நம்பியிருந்தார். ஊரார் சேஷியினிடம் வைத்திருந்தமரியாதையெல்லாம் விடுத்து, அவளுடைய நடத்தையைப்பற்றிக் கண்டும் காணாததுமாய்த் தூற்றிவந்தது அவளுக்காவது சாம்பசிவய்யருக்காவது தெரியாது.

எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.

Tamarind Tree.

By Pandit V. Subramania Iyer.

புளியமரம்.

புளியமரமானது அதன் விதையை நட்டுத்தான் உண்டாக்கப்படவேண்டும். இது எல்லாவிதமான நிலங்களிலும் பயிராகும். தென்னிந்தியாவில் புளியமரம் இல்லாத ஊர்களே கிடையா. ஆற்றங்கரையோரங்களிலும், குளக்கரையோரங்களிலும், வண்டிப்பாதைகளின் ஓரங்களிலும் இம்மரமானது ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது. இதிலிருந்து வருஷவாரியில் ஏராளமான ஊதியம் கிடைக்கின்றது.

விதைபோட்டுப் பயிராக்கும் விதம்.

ஆடிமாதம் போன்ற மழைகாலங்களில் புளியம் விதைகளைப்போட்டு, பந்தோபஸ்தாய் வேலியடைத்து, தண்ணீர் ஊற்றிவரவேண்டும். சுமார் நான்கு வருஷங்களுக்குள் மரமானது வளர்ந்து சொற்பமாகப் பலன்கொடுக்க ஆரம்பிக்கும். பிறகு நாட்கள் செல்லச்செல்ல மாகுல் அதிகப்படும். புளியமரமானது 100 வருஷகாலம்வரையில் கிப்புங்களையுமாக வளர்ந்து ஜீவித்திருக்கும். சித்திரை, வைகாசி மாதங்களில் இது பூக்க ஆரம்பித்து, மாசி மாதத்திற்குள் பழங்கள் கிடைக்கும்; பழுத்த பழங்கள் பூமியில் உதிர ஆரம்பிக்கும். இப்படி வைகாசிமாதம் வரையில் நமக்குப் பழங்கள் கிடைத்துக்கொண்டிருக்கும். அந்தக்காலத்திலும், மரத்தில் இலைகள் உதிர்ந்து தளிர்த்துப் பூத்துப் பிஞ்சுவிடும். பலன் கொடுக்காமல் இம்மரம் ஒரு நாழிகைகூட வீண்போது போக்காததனால், 'புளியமரத்துக்குப் பிறந்தகம் கிடையாது' என்ற பழமொழியும் வழங்குவதுண்டு.

அறுவடைசெய்து சேகரிக்கும் விதம்.

சாதாரணமாய்க் காற்றில் இம்மரத்தின் பழங்கள் கொட்டுண்டபடியே யிருக்குமாதலால், அடிக்கடி சொந்தக்காரர்கள் பழங்களைப் பொறுக்கிச் சேகரித்தபடியே யிருப்பார்கள். கீழே விழாதபழங்களை அவர்கள் மரத்தின் மேலேறிக்கிளைகளை உலுக்கிச்சேகரிப்பார்கள்.

அப்படியும் விழாதபழங்களை துறட்டுக்கோலினால் பறித்துச்சேகரிப்பார்கள். அறுவடையான பழங்களைக் காயவைத்து ஓடுநீக்கிச் சுளைகளை வேறுபடுத்தவேண்டும்; பிறகு காயவைத்துக்கொட்டைகளை நீக்கிவிட்டால், உபயோகத்திற்குத் தயாராகின்றது.

புளியின் உபயோகம்.

தென்னாட்டவர்கள் ஆகாரத்திற்குத்தேவையான குழம்பு முதலியவைகளிலும், இன்னும் மற்ற பதார்த்தங்களிலும் புளியை உபயோகிக்கிறார்கள். புளியைக்கொண்டு பக்குவம் செய்யப்படும் அன்னமானது தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யப்பட்டு, அதை அடியார்கள் மிகப்பிரியமாக உண்பார்கள். பாத்திரங்கள் சுத்தி செய்வதில், புளியந்தழைமுதற்கொண்டு பழம் கோது முதலியனவெல்லாம் உபயோகப்படுகின்றன. நல்ல சாமான்களைச்சேர்த்து அன்னத்திற்கென்று பக்குவமாய்க்காய்ச்சப்பட்ட புளியைப் பந்தோபஸ்தாய் வைத்திருந்து உபயோகிக்கக் கெடுதலடைவதில்லை. புளியம்பிஞ்சுகளைச் சேகரித்து, கடுகு, உளுத்தம்பருப்பு, பெருங்காயம், வெந்தயம், மிளகாய், எண்ணெய் இவைகளைக்கொண்டு பக்குவப்படுத்தி வருஷப்பண்டமாக உபயோகிக்கப்படுகின்கின்றது. நெல்லூர் முதலான தேசங்களில் இதைத் தொகையல் என்று சொல்லுவார்கள்; அன்னத்துடன் கலந்து ஆகாரமாக உட்கொள்ளுகிறார்கள்.

புளிரசம்.

புளியினால் தென்னாட்டவர்கள் பருப்புக் கட்டுடன் கூடிய தெளிவான ரஸத்தைச் செய்து சாப்பாட்டுடன் உபயோகப்படுத்துகிறார்கள். சிலர் புளியங்காய்களை நசுக்கிப் போட்டு ஒருவித தெளிவான ரஸத்தை வைத்துச்சாப்பாட்டில் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் புளியம் இலைகளையும் ரஸஞ்செய்ய உபயோகிக்கிறார்கள்.

புளியம் பூ.

புளியம்பூ துவர்ப்பும், புளிப்பும் கலந்தது. மரத்தில் காற்றினால் அடிபட்டுக் கொட்டுண்டு போகும் பூ எதற்கும் உபயோகமாவதில்லை. புளியம்பூ இலைகள் முதலியன கீழே விழுந்துபோனவைகளையெல்லாம் சேகரித்துச் செங்கல் சூளைக்கு உபயோகிக்கிறார்கள்.

புளியமரம் அதிக உஷ்ணமானது. ஆகவே அதன் நிழலும் தங்கியிருப்பதற்குத் தேகத்திற்கு ஒத்ததாகாது என்று வைத்திய சாஸ்திரங்கூறும். புளியம் பூ பூக்கும் காலத்தில், அப்பூவிலுள்ள தேனை அருந்தப்போகும் ஈக்கள், கொசுக்கள், வண்டுகள் முதலியன அவற்றிலுள்ள உஷ்ணத்தை மனிதர்களின் கண்களில் கொண்டுசேர்க்க, அக்காலத்தில் மனிதசமூஹத்தினர்கள் கண்நோய் முதலியனவற்றால் கஷ்டப்படுகின்றனர்.

மரத்தின் உபயோகம்.

புளியமரத்தின் அடிப்பாகம் குந்தாணி, உரல் முதலியன செய்வதற்கு உபயோகப்படுகின்றது. அடுப்புக்கும் நல்ல விறகாகும். அதிகம் வயதான மரத்தின் நடுவே சோதித்துப்பார்த்தால், சில சமயங்களில், கருநிறம் கொண்ட கனமுள்ள பாகம் அபூர்வமாய்க் கிடைக்கும். இதைக்கொண்டு தச்சர்கள் உளிப்பிடி, கொட்டாப்புளி முதலான சாமான்களைச்செய்துகொள்வார்கள். இந்த மரத்தைக்கொண்டு நல்ல உலக்கைகளும் செய்யப்படுவதுண்டு.

ஏழைகள் புளியம்கொட்டைகளை ஜலத்தில் ஊறப்போட்டு, வறுத்துத் தோலைப் போக்கி உண்பதுண்டு. மாடுகளுக்கும் இவ்விதைகள் ஆகாரமாக வைக்கப்படுகின்றன. இவற்றை ஊறப்போட்டு அறைத்துக் காய்ச்சி, ஒட்டும் பசையாகவும் உபயோகிப்பதுமுண்டு.

பண்டித் வி. சுப்பிரமணிய ஐயர்.

The Diamond Ring.

By Mr. S. Narasimhachariar, B.A., B.L.

வைர மோதிரம்.

(மார்கழி மாதத்துச் சஞ்சிகையின் 338-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டு நிமிஷகாலம்வரை பாண்டுரங்கர் பதில் ஒன்றும் சொல்லாமலிருந்தார். அந்த இரண்டு நிமிஷமும் அம்பலவாணனுக்கு இரண்டு வருஷங்களாய்த் தோற்றின. பிறகு அவர் பேசலானார்.

"அம்பலம்! நீ கூறிய விஷயத்தை நான் இப்போது யோசித்தது மாத்திரமல்ல; இதற்கு முன்னரே பலதடவைகளிலும் உன்னைப்பற்றிச் சிந்தித்திருக்கிறேன். உன்மீது எனக்கு எவ்வளவு பிரியம் உண்டென்பதை நான் கூறாமலேயறிவாய். ஸௌந்தரமும் உன்மீது மிகுந்த காதல்கொண்டிருக்கிறாளென்பதை நான் இரண்டொரு காரணங்களால் அறிந்துகொண்டேன்.

"காதல் இருவர் கருத்தொத்து மாறின்றி
ஆதரவு பட்டதே இன்பம்"

என்று பெரியோரும் கூறியிருக்கிறார்களல்லவா? உங்களிருவருக்கும் பரஸ்பரம் அன்பு மிகுந்திருக்கையில் அதைத்தடுக்க என்மனம் எப்படி ஒப்பும்? உன் இஷ்டப்படியே ஆகுக. வேங்கடாஜலபதி கடாக்ஷிப்பாராக. ஆனால் ஒன்றுமாத்திரம் நான் உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உன் தகப்பனுக்கும் எனக்கும் சிறிது மனஸ்தாபம் உண்டென்பது உனக்குத் தெரியுமல்லவா? அந்தமனஸ்தாபமானது சீக்கிரத்திலேயே மாறி, எங்களுக்குள் முன்போலவே ஸ்நேகம் உண்டாகுமென்று எனக்குத் தோன்றுகிறது. அது நேரும் வரையில், இன்று நடந்த விஷயங்களை உன் தந்தையிடம் சொல்லவேண்டியதில்லை. பிறகு நானே இவற்றைப் பிரஸ்தாபித்துக் கொள்கிறேன்" என்றார்.

அம்பலவாணனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இவ்வளவு மேன்மைக்குணமுடைய மகானின் சம்பந்தம்கிடைத்ததேயென்று மிகவும் குதூஹலமடைந்தான். ஆயினும், தான் வீட்டுக்குத் திரும்புமுன் ஸௌந்தரவல்லியை ஒருமுறை நேரில் கண்டு, இரண்டொரு வார்த்தைகளாயினும் பேசினாலொழிய, தன்னுள்ள அவா தணியாதென்று சற்றே ஏக்கமுற்றான்.

நிற்க, ஜன்னலின்வழியே ஸௌந்தரவல்லி ஏதோ நிமித்தத்தால் எட்டிப்பார்த்தாள் என்று முன்னம் கூறினோமல்லவா. திடீரென்று அவள் தன் காதலனைக்கண்ட சந்தோஷத்தாலும், நாணத்தாலும் பிரமித்து, நிற்கமாட்டாது சுவரின்மேல் சாய்ந்தாள். அப்பொழுது பாண்டுரங்கர் அம்பலவாணனின் தேகசௌக்கியம் சீர்கெட்டிருப்பதைப்பற்றி அவனைக்கேட்டதையும், அதற்கு அவன் பதில் அளித்ததையும் ஸௌந்தரவல்லி அவ்விடத்திலேயே நின்று கேட்டுக்கொண்டிருந்தாள். இந்த சம்பாஷணையைக் கேட்ட அவளுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஸர்வேசுவரன் தனக்குக்காட்டிய கருணையை மெச்சியவாறே தனதறைக்குச்சென்றாள்.

அந்த சமயத்தில் பாண்டுரங்கரும் அம்பலவாணனை அவ்விடமே ஒருநிமிஷம் இருக்கச்சொல்லி, உள்ளே சென்று, நடந்த விருத்தாந்தங்களைத் தன் புதல்வியிடம் சொல்லி, "ஸௌந்தரவல்லி! நான் செய்தது உன் கருத்துக்கிசைந்ததுதானே. உன்னுடைய மனோபீஷ்டத்தை இரண்டொரு குறிப்பால் நான் உணர்ந்தேன். அதுமுதல் நான் உன்னை அம்பலவாணனுக்கென்றே உத்தேசித்தேன். குணத்திலும், கல்வியிலும், குலத்திலும் அவன் உனக்குத் தகுந்தவனே. கடவுள் உங்களிருவரையும் ஆசீர்வதிப்பாராக. உன் கருத்தைத்தெரிவிப்பாய்" என்று கூறினார்.

ஸௌந்தரவல்லி, "என் அருமை தந்தையே! புதிதாக உங்களிடம் நான் சொல்வதற்கு என்ன இருக்கின்றது? நான் உங்களைக் கேட்குமுன்னமேயே, என் உள்ளக்கருத்தை உணர்ந்து எனக்கு வேண்டுவனவற்றையெல்லாம் செய்து வருகிறீர்கள். அதற்குப்பதிலாக நான் எவ்வளவு அன்பும் பக்தியும் தங்களிடம் கொண்டிருந்தாலும், அவை தாங்கள் என்மீது வைத்திருக்கும் அன்பிற்கு ஒருபோதும் நிகராகாது. தங்களுக்கு எது விருப்பமோ அதுவே எனக்குக் கட்டளையென்று நான் எண்ணியிருக்கிறேன்" என்றாள்.

பிறகு பாண்டுரங்கர் அம்பலவாணனிடம் வந்து உட்கார்ந்து, ஸௌந்தரத்தைச் சந்தன தாம்பூலம் கொண்டுவந்து வைக்கும்படி சொன்னார்.

சுந்தரவல்லி தன் காதலனைப் பின்னும் ஒருமுறை கண்ணாரக்காணலாம் என்ற ஆசையும் ஸந்தோஷமும் மனதை முன்னே தள்ள, அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்ற நாற்குணத்தில் இரண்டாவதான நாணம் மனதைப் பின்னிழுக்க, தட்டைக் கையிலெடுத்துக்கொண்டு தரையைப்பார்த்தவண்ணமே மெள்ள நடந்து, அவாவின் மிகுதியால் காதலனைக் கடைக்கண்ணால் ஒருவாறு நோக்கி, பொங்கினமகிழ்ச்சியினால் புன்னகைசெய்துகொண்டே பாண்டுரங்கர் முன்வந்து தட்டைக்கீழே வைத்து, அவர் உத்திரவுபடி தாம்பூலத்தை அவருக்கும் அம்பலவாணனுக்கும் மடித்துக் கொடுத்துவிட்டு விரைந்து உள்ளே சென்றாள். பிறகு இருவரும் தாம்பூலமருந்தி, கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, பாண்டுரங்கர் வேறு காரியமாக வெளியே போய்வர அம்பலவாணனிடம் உத்திரவுபெற்றுச் சென்றார்.

அம்பலவாணனுக்கு ஸௌந்தரவல்லியை மீண்டும் ஒருமுறை பார்க்காமல் வீட்டுக்குத் திரும்ப இஷ்டமில்லை. மனது பதைத்தது; சற்றுநேரம் ஆலோசித்தான்; மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு ஸௌந்தரவல்லியைக்காண உள்ளே சென்றான். ஸௌந்தரவல்லி தன்னந்தனியே உள்ளே ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தாள். அம்பலவாணன் வருவதைக்கண்ட அவள், உடனே எழுந்து நாணம் மேலிட்டுத் தலைகுனிந்தாள். அம்பலவாணன் அவள் அருகிற்சென்று, அவளுடைய இருகரங்களையும்பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டு, மேலொன்றும் சொல்லவாயெழாதவனாய்க் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தான். பிறகு ஏதோ மெதுவாய்ப்பேசினான். மெல்லியகுரலில் மறுமொழிபகர்ந்தாள் அம்மாதும். அவர்கள் என்னபேசிக்கொண்டார்கள் என்பதை அறிவது அஸாத்தியமென்றே சொல்லவேண்டும். ஏனெனில், அவர்கள் பேசியது ஒருவருக்கும் கேட்கத்தகுந்ததாக இருக்கவில்லை. ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம்: அம்பலவாணன் தான் புறப்படுவதற்கு முன் தன் கைவிரலில் ஜ்வலித்துக்கொண்டிருந்த வைர மோதிரத்தைக் கழற்றி, அதை ஸௌந்தரவல்லியின் மெல்லியவிரலில் அணிந்து, அக்கரத்தில் அம்மோதிரம் ஜ்வலிக்கும் அழகைக்காணவோ அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டோ, அவளுடைய கரங்களை மறுபடியும் தம்கண்களில் ஒற்றிக்கொண்டு அவ்விடத்தினின்றும்புறப்பட்டு வீட்டுக்குத்திரும்பினான்.

நிற்க, அம்பலவாணனுக்கு அத்தை மகன் ஒருவன் உண்டென்றும், அவன் மாசிலாமணி என்ற பெயரையுடையவனென்றும் முன்பு கூறியிருக்கிறோம். அன்றியும், மாமன் மகன் மேல் அவனுக்கு மிகுந்த பொறாமையுண்டென்றும் கூறியிருக்கிறோம்.

அன்று சாயங்காலம் சுமார் 4-மணிக்கு வீட்டைவிட்டுப்போன அம்பலவாணன் இரவு 7-மணியடித்தும் திரும்பி வராததனால், சொக்கநாதர் மாசிலாமணியை யழைத்து,

கோயிலுக்குப்போக நேரமாகின்றதென்றும், அம்பலவாணனை, உடனே தேடியழைத்துவர வேண்டுமென்றும் சொல்லியனுப்பினர்.

மாமன்மகனைத் தேடப்புறப்பட்ட மாசிலாமணி, அந்தத்தெருவைக்கடந்து கொஞ்சதூரம் போவதற்குள் அம்பலவாணனைக்கண்டான்.

"இவ்வளவு நாழிகை வரையிலும் இவன் எங்குச்சென்றிருந்தான்? இரவு ஏழு மணி ஆகியும் இந்தத்தெருவில் இவனுக்கு என்ன வேலை? இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. இதை எப்படியாவது கண்டறியவேண்டும்" என்று மாசிலாமணி தனக்குள்ளே யோசித்துக்கொண்டு அம்பலவாணன் அருகே சென்றான். ஆனால், அம்பலவாணன் இவன் வருகையைக்கவனிக்கவில்லை.

மாசிலாமணி அம்பலவாணன் அருகே சென்றதும், "என்ன அம்பலம்! எங்குச்சென்றிருந்தாய் இவ்வளவுகாலம்? ஸ்வாமி தரிசன வேளையாய்விட்டது. எல்லோரும் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

தான் சென்றவிடத்தை இவனிடம் சொல்ல அம்பலவாணனுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. மேலும், இவனுடைய நடவடிக்கைகள் அவனுக்குப் பிடிப்பதில்லை. ஆகவே, உண்மையை இவனிடம் சொன்னால் கஷ்டங்கள் நேரிடுமென்று எண்ணி,

"எங்குமில்லை. சாயங்காலவேளையில் இந்த மலையின்மீது காக்ஷி வெகு விநோதமாயிருந்தது. ஆகாயம் நிஷ்களங்கமாய் விளங்கிற்று. இங்குமங்கும் சிற்சில மேகங்கள் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. செவ்வானத்தின் அழகு மனதிற்கு வெகு ரம்யமாக இருந்தது.

"தினகரன் கரம்திகழ் கமண்டலம்
பணிகொள் செக்கர்தம் படமதாகவே
இனியவர்தனைக் கெறியும் வேலைசேர்
புனிதர் ஒத்ததப் புன்கண் மலையே."

என்று பெரியோர் வர்ணித்துள்ளபடியே தோன்றிற்று அந்திச் செவ்வானம். நெடுந்தூரம்வரை குன்றுகளின்மேல் பச்சென மரங்கள் செழித்திருப்பதையும், பள்ளத்தாக்குகள் பாதாளலோகம்போலப் பார்க்கப் பார்க்கப் பயங்கரமாயிருப்பதையும், தென்றல் மரங்களின்மீது உராய்ந்து, மலையின்மீது புஷ்பித்த மலர்களின் மணத்தை வாரிவந்து நமதருகில் வீசுவதையும், இங்குமங்கும் குரங்குகள் தம்குட்டிகளை மடியில் தாங்கி உய்யென ஓடுவதையும் கண்டு, இந்தக் காக்ஷியை முற்றிலும் அனுபவிக்கவேண்டுமென்றெண்ணி, இதோதெரிகின்றதே இந்தக்குன்றைக்கடந்து ஒருமைல்தூரம் சென்றேன். அங்கே ரத்னகம்பளம் விரித்தாற்போன்று அடர்ந்து வளர்ந்திருந்த புற்றரையின்மேல் சற்றுநேரம் உட்கார்ந்திருந்தேன். பிறகு, சூரியன் அஸ்தமிப்பதைக்கண்டு வீடு திரும்பப் புறப்பட்டேன். அதற்குள் நீயும் என்னைத்தேடி வந்தாய்" என்றான்.

இந்தப்பதிலில் மாசிலாமணிக்குக்கொஞ்சமும் நம்பிக்கையில்லை. ஏனெனில், மலையின்மேல் நடந்து சென்றவனுக்கு மார்பில் சந்தனம் எப்படி கிடைத்தது. வாய் தாம்பூலத்தால் சிவந்ததெப்படி என்று யோசிக்கலானான்; அம்பலவாணனை ஏற இறங்கப்பார்த்தான். அவன் மனதிற்குத் திடீரென்று ஓர் எண்ணம் உதித்தது. அன்று மத்தியானம் அம்பலவாணன் தனது கைவிரலில் அணிந்திருந்த வைர மோதிரம் இப்போது காணப்படவில்லை. உடனே மாசிலாமணி,

"அம்பலம்! மத்தியானம் நீ மாமாவினுடைய வைரமோதிரத்தை அணிந்திருந்தாயே; அது எங்கே?" என்று கேட்டான்.

'மோதிரம் எங்கே' என்றவினா தன் செவியில் நுழைந்ததும், அம்பலம் திடுக்கிட்டு ஸ்தம்பம்போல் நின்றான். ஆயினும், ஒரு விநாடிக்குள் சமாளித்துக்கொண்டு,

"மணி! நான் மோதிரத்தைக் கையில் இட்டுக்கொண்டிருந்தது உண்மையே. ஆனால் இன்று சாயங்காலம் வெளியேபோகும்போது அதைக்கழற்றிப் பெட்டிக்குள் வைத்துவிட்டேன். நீ இப்போது திடீரென்று அதைப் பற்றிக்கேட்கவே, எனக்குக்கொஞ்சம் கலக்கமுண்டாயிற்று" என்று சொல்லி நகைத்தான்.

இது நிஜமல்லவென்று மாசிலாமணி அறிந்துகொண்டான். ஆயினும் தனது எண்ணங்களை வெளியிடக்கூடாதென்று எண்ணி,

"ஆமப்பா! உன்பலமெங்கே! என்பலமெங்கே! இன்று காலை மலையேறிவந்ததனால் ஒரு அடி தூரமும் என்னால் இப்போது நடக்க முடியவில்லை. ஆனால் நீயோ, மலையேறிவந்தது போதாதென்று எண்ணி ஸாயங்காலமும் நாலுமைல்தூரம் நடந்திருக்கிறாய். உனக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது பார்" என்றுகூறி, மெல்லிய பெருமூச்செறிந்து, மறுக்ஷணத்தில் ஹீ! ஹீ! என்று சிரித்தான்.

இவ்விதம் பேசிக்கொண்டே அவ்விருவரும் வீடுசேர்ந்தார்கள். பிறகு அனைவரும் கோயிலுக்குச்சென்று வந்து, உணவருந்தி, அயர்ந்துறங்கினர். அம்பலவாணனுக்கு மட்டும் எளிதில் தூக்கம்பிடிக்கவில்லை. அன்று மாலை தனக்குநேரிட்ட ஸம்பவங்களை ஒவ்வொன்றாய் நினைத்து மனமகிழ்ச்சிகொண்டான். நடந்தவிருத்தாந்தங்கள் ஒன்றையும் விடாமல் தன் ஈசனிடம் சொல்லி, ஸௌந்தரவல்லியையும் தன்னையும் ஆசீர்வதிக்கும்படி வேண்டினான்.

பொழுதுவிடிந்தது. எல்லோரும் தத்தம் காலைக்கடன்களை முடிக்க ஆரம்பித்தனர். மாசிலாமணியோ சிந்தைமிகுந்து, முதல்நாள் அம்பலவாணன் போன இடங்களையும், அவன் கையிலிருந்த மோதிரம்போன காரணத்தையும் எவ்விதத்திலாவது கண்டுபிடிக்கவேண்டுமென்று எண்ணி, அதற்கான வழிகளைத் தேடலானான்.

மணி ஏழிருக்கும். அம்பலவாணனை முதல்நாள்மாலை தான் சந்தித்த இடம்போய்ச் சேர்ந்து, அங்கிருந்து எங்குச்செல்வதென்று யோசித்து நின்றான் மாசிலாமணி. இந்த சமயத்தில், அவ்விடம்வந்த ஒரு நாட்டுப்புறத்தான், அவனைக்கண்டதும் விரைந்தோடிவந்து,

"சாமி! தண்டம்! வாங்க! எப்பவந்தங்க?" என்றான்.

அவன் இன்னானென்று மாசிலாமணிக்குப் புலப்படவில்லை. ஆயினும், தனதறியாமையை வெளிக்காட்டக்கூடாதென்று உறுதிகொண்டு,

"ஆசீர்வாதமப்பா! உன்னைப்பார்த்ததில் வெகு சந்தோஷம். நீ க்ஷேமமா?" என்றான்.

"தங்க தயவுலெ சவுக்கியமாயிருக்கிறேங்க. எங்க எசமானேத்து இங்கே வந்தாங்கல்லவா. அவுங்க அல்லாரோடேயுங்கூட நானு வந்தெ."

"ஓஹோ! அப்படியா! ஆமாம். நானும் நேற்று உன் எசமானனைப்பார்த்தேன். அவர் மட்டும் வதிருக்கிறாரா அல்லது வேறுயாராவதுகூட வந்திருக்கிறார்களா?"

"அவர்மட்டுமல்ல சாமி. அவுங்க அல்லாரும் வந்திருக்காங்க."

"அவர்கள் யார்தெரியுமா?"

"அவுங்க மனுஷாரு, அவுங்க பொண் ஸௌந்தரவல்லி அல்லாம் வந்திருக்காங்க."

பெண் சுந்தரவல்லி என்றுசொன்னதும், வந்திருக்கிறவர் பாண்டுரங்கர் என்றுதெரிந்துகொண்டான் மாசிலாமணி. ஆனால், மோதிரம் வரலாறுமட்டும் புலப்படவில்லை. மீண்டும் அவன் அந்த நாட்டுப்புறத்தானோடு பேசலானான்.

"அடே உன்பெயரென்ன? அதை நான் மறந்துவிட்டேன்."

"ராமனுங்க. தங்கவே அடிமெ எத்தனையோ பேருங்கொ. அத்தினிபேர்லெ எம்பேரு என்னமாநெனப்பு இருக்கப்போவுதுங்க."

"அடே ராமா! நீ நல்லயோக்கியன். இந்தா. இதை வெற்றிலைப்பாக்குவாங்கவைத்துக்கொள்" என்றுசொல்லி ஒரு வெள்ளிநாணயத்தை எறிந்தான்.

கீழேவிழுந்த நாணயத்தை எடுத்துக்கொண்டு ராமன் புன்சிரிப்புடன், "சாமி! தங்க அடிமெ எப்பவுங்காத்துகிணு இருக்கென். நேற்று சாயந்திரம் தங்க மாமாபுள்ளே இருக்கிறாரே அவர் எங்கஜெமா, வீட்டுக்கு வந்தாங்கோ. அப்போ தாங்ககூட வந்திருப்பேங்கனு எண்ணி தேடித்தேடிப் பார்த்தெங்க. தங்களெகாணும். தருமராஜானு அல்லாருங் கொண்டாடற தங்க மாமாபுள்ளெகி அடிமெ தெரியாது. ஆகச்செ, அவங்ககிட்டெ நான் போகலெங்க. அவுருவீட்டெபிருந்துபோகச்செ பார்த்தா கும்பிடுபோடலாமென்று எண்ணியிருந்தெ. ஆனா, அவரு வீட்டெவிடச்செ நல்லா இருட்டிப்போச்சு. அவருங்கூட வேகமாபோனாரு. அத்தாலெ நானுங்கிட்டபோகலெங்க ஆனா............"

"நல்லது நான்போய் வருகிறேன். எனக்கு நேரமாகிறது."

"நல்லது சாமி. தண்டம்."

மாசிலாமணி தான் எண்ணிய காரியம் கைகூடிற்றென்று சந்தோஷமுற்று வீட்டுக்குத் திரும்பினான். வேலைக்காரன் ராமன் தன்னிடம் சொன்னவற்றையும், பாண்டுரங்கபூபதி அவ்வூருக்கு வந்திருப்பதையும், அம்பலவாணன் அவரில்லத்திற்குச்சென்றிருந்ததையும், அவன் அங்கே வெகுநேரம் தங்கியிருந்ததையும், பிறகு அவன் சந்தனம் பூசின மார்புடன் வெளியே வந்ததையும், அவன் விரலில் மோதிரம் இல்லாமலிருந்ததையும், அதைப்பற்றி அவனைக்கேட்டபோது அவன் திடுக்கிட்டுப் பிரம்மித்ததையும், மலைமேல் உல்லாசமாக உலாவச்சென்றேனென்று பொய்யுரைத்ததையும் ஆகிய எல்லா விஷயங்களையும் யோசித்துப்பார்த்ததில், மாசிலாமணிக்கு உண்மை விளங்கிவிட்டது. கோபத்தால் பற்களை நெறநெற வென்று கடித்தான்.

"ஸௌந்தரவல்லியைப் பார்ப்பதற்கென்றே அம்பலவாணன் சென்றான்போலும். அப்படியானால் அவன் கையில் மோதிரம் இல்லாதிருந்ததற்குக்காரணமென்ன? ஒருக்கால் அது எங்கேயாகிலும் கழன்றுவிழுந்துவிட்டதோ? அல்ல அல்ல. ஏனென்றால், அதைப்பற்றி நான் அவனுக்கு ஞாபகமூட்டியபோது, அவன் முதலில் ஒருவாறு ப்ரம்மித்தானாயினும், பிறகு அதைப்பற்றிக்கொஞ்சமேனும் கவலைப்படவில்லையே. ஆகையால், அவன் அதை இழந்தவனல்ல. ஒருகால் யாருக்காவது கொடுத்துவிட்டானோ? அப்படியாகில், யாருக்குக்கொடுத்திருக்கலாம். பாண்டுரங்கருக்கு இம்மோதிரத்தால் ஆவதொன்றுமில்லை பிறகு யாரிடம் கொடுத்திருக்கலாம்?...... சரிதான். தெரிந்துவிட்டது. அந்தச்சிறுக்கி ஸௌந்தரவல்லிக்குத்தான் கொடுத்திருக்க வேண்டும். இவனும் மூன்றுமணி நேரத்துக்கு மேல் அங்குத்தங்கியிருந்திருக்கிறான். சரிதான். பயல் அம்பலவாணன், தான் ஸௌந்தரவல்லியை மணக்க விரும்பினதைப் பாண்டுரங்கரிடம் சொன்னான்போலிருக்கிறது; அவரும் சம்மதித்தார்போலும். இவனும் தன் மோதிரத்தைஅந்தச்சிறுக்கிக்குக்கொடுத்தான் போலும். பயலே! ஆகட்டும் பார்க்கிறேன் ஒருகை. தொலைந்தான் அம்பலவாணன். இந்த சமாசாரத்தை வெளியிடாமலே, கண்பன்போல நடந்து, இந்த மோதிரத்தையே மூலகாரணமாக்கி, அம்பலவாணனுக்கும் என் மாமாவுக்கும் பெரிய மனஸ்தாபத்தை உண்டாக்காவிட்டால் நான் புருஷனல்ல, என் முகத்திலிருப்பது மீசையல்ல. பார்ப்போமடா அம்பலவாணா! இந்த மோதிரத்தின் வரலாற்றை மறந்தாயோ? 'நடை குலுக்கி முகமினுக்கும்' போதே, அவள் பேரிலுண்டான மோகத்தால் புத்தியைமுற்றும் பறிகொடுத்துவிட்டாய். பலேபேஷ்! மோதிரத்தின்பெருமையை எண்ணினாயில்லை. இந்த மோதிரம் கிடைத்தவிதம் தெரியாதா உனக்கு? மாமாவினுடைய முப்பாட்டனார் இதைத் தனது புத்திரனுக்குக்கொடுத்துப்போனர், 'அப்பா! இது விலையுயர்ந்த வைரம். இந்தக்கல் ஸ்வாமி கடாக்ஷத்தால், வயலில் ஒரு புற்றினருகே எனக்குக் கிடைத்தது. இது மிகவும் சிறப்புவாய்ந்தது. எக்காரணத்தை முன்னிட்டும் இதை நீ விற்காதே. இது நம்முடைய வம்சத்திலேயே இருக்கவேண்டும். இதைக் கையில் அணிந்திருந்தால், நினைத்தகாரியம் கைகூடும். இந்த அருமையான பொருள் நமக்குக்கிடைத்ததற்காக, நாம் நன்றி செலுத்தும்பொருட்டு, நமது ஊரில் திருக்கோயில் கொண்டருளும் ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தி சித்திரை மாசத்துச் சுக்லபக்ஷ நவமியன்று நாகவாகனத்தின்மீது வீதிவலம் வரும்போது, அவர் திருக்கரத்திலே இம்மோதிரத்தைஇட்டு, அந்த அற்புதக்காக்ஷியைத் தரிசித்துவா' என்று சொன்னாரல்லவா. அதன்படி இன்றளவும் நடந்துவருகின்றது. இதை காதலென்னும் ஆனந்த சாகரத்தில் மூழ்கின நீ முற்றும் மறந்தாய். மிகுந்த சந்தோஷம். ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு இன்னும் இரண்டு மாதங்களில் உத்ஸவம் வருகின்றது. அதுவரையில் நான் சும்மாயிருந்து, அந்தசமயத்தில் திடீரென்று மாமாவுக்கு இந்த மோதிரத்தைக்குறித்து ஞாபகமூட்டி, அப்போது அம்பலவாணன் விழிக்கும்போது, நேற்று நடந்த காதல் கோலாஹலத்தை விஸ்தாரமாய் எடுத்துரைப்பேனாகில், பிள்ளையின்மீது மாமாவுக்குப் பொறுக்கவொண்ணாத கோபம் வரும். அந்தக்கோபத்தை நான் பின்னும் அதிகப்படுத்தி, தகப்பனுக்கும் பிள்ளைக்கும் தீராப்பகையை மூட்டி, அம்பலவாணனை வீட்டைவிட்டோடச்செய்கிறேன் பார். பயலே! என் கைக்குள் அகப்பட்டுக்கொண்டாய்! தப்பித்துக்கொள் பார்ப்போம். ஏ ஸௌந்தரவல்லி! உன் மதிப்புக்கு நான் அருகனல்லனென்று எண்ணினாயல்லவா? பார் இப்போது உன் காதர்கணவன் படும்பாட்டை" என்று தனக்குள் வீரங்கூறிக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தான்.

எஸ். நரசிம்மாசாரியார், பி.ஏ., பி.எல்.

Viveka on the Relationship of Men to God.

BY MR K. V. PANCHANADA IYER.

விவேகனது மாத்ரு புத்ர பாவம்.

குழந்தைதன் தாயின் மடியில் விளையாடிக்கொண்டிருக்கிறது. அதனுடைய முகவிலாஸமானது மிகவும் ரம்யமாகவிருக்கிறது. அது தனக்குச் சமானமானவர் யாரும் இல்லையென்னும் எண்ணத்துடன், புன்சிரிப்போடு தாயின் முகத்தை எறிட்டுப் பார்த்தவண்ணம் இருக்கிறது. குழந்தையின் முகவிலாஸத்தை நோக்கித் தாயும் புன்சிரிப்புக்கொண்டிருக்கிறாள்.

ஹேப்ரபோ! அண்டசராசரங்களுக்குள்ளிருக்கும் ஜீவர்கள் யாவும் தங்களுடைய குழந்தைகள் அன்றோ? அச்சீவர்கள் தங்கள் தயவிற்குப் பாத்ரராய்த் தங்களுடைய மடியில் குழந்தை பாவனையாய்ப்பள்ளிகொண்டு, தங்களுடைய கருணைநிறைந்துள்ள முகவிலாஸத்தைப்பார்த்து அகம்பூரித்து இருக்கும்படியான நிலைமையை நோக்கின், அது அவர்களுக்குப்பேரானந்த நிலைமையன்றோ? அதுவே அவர்களுக்குச் சமாதியன்றோ? ஹே கருணைக்கடலே! அத்தகையதோர் நிலையை நான் அடைவது தகாதோ? அடைவதற்கு நான் பாத்ரனல்லனோ?

குழந்தை தாயினுடைய முகத்தையே நோக்கிக்கொண்டவண்ணம் தூக்கமயக்கத்துடனிருக்கிறது. கண்ணைச் சிறிதுசிறிதே மூடித்திறப்பதும் மறுபடியும் மூடித்திறப்பதுமாய் இருக்கிறது. தாயோ, குழந்தையின் நிலைமையை நோக்கி மந்தஹாஸம் செய்தவண்ணம் இருக்கிறாள். அந்தோ! என்ன பரிதாபம்! இந்தக் குழந்தைக்கு ஏன் தூக்கமயக்கம் ஏற்படவேண்டும்? தாயினுடைய முகத்தையே பார்த்தவண்ணம் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கிக் கிடந்த குழந்தையானது இப்பொழுது அந்நிலையிலிருந்து கொஞ்சங்கொஞ்சமாய் விலகுகிறதே! ஏ குழந்தாய்! நீ ஏன் தூக்கமயக்கங்கொண்டாய்? நீ முற்றிலும் விழித்துக்கொண்டிருத்தல் ஆகாதோ? அந்தோ! தாயானவள் குழந்தையைக் கீழே தூங்கவிட்டு அதை விலகப்பார்க்கிறாள். அதைக் குழந்தையும் அறிந்துவிட்டது. தாயினுடைய மடியில் இருந்து அவளுடைய சிறிது கதகதப்பான ஹஸ்தத்தினுடைய அணைப்பு நீங்கவும், அண்டையிலுள்ள குளிர்காற்றானது குழந்தைமீது வீச ஆரம்பித்தது. குழந்தை அரைதூக்கமாயிருக்கவே விழித்துக்கொண்டது; அழ ஆரம்பித்தது. தாயினது மடியிலிருந்து தரையில் கிடத்தப்பட அதற்குச் சம்மதமிருக்குமா? ஆகவே, தன்னுடைய அசம்மதத்தை வெளியிடுவதற்கு மற்றொருவழியும் தோன்றாமல், அழுதவண்ணம் தாயினது மடியைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டது. தாய் என் செய்வாள் பாபம்! குழந்தையின் அசம்மதத்தையறிந்து கொண்டாள். மறுபடியும் கீழேயுட்கார்ந்து குழந்தையைத் தன் மடியில் கொண்டாள். கண்ணே, முத்தே என் கற்பகமே, கண்வளராய் என்று தன் மிருதுவான தொனியால் தாலாட்டல் பாடிக்கொண்டு, குழந்தையின் உச்சியைக் குழையமோந்து முத்தமிட்டாள். குழந்தை சற்றுமுன் அழுதுகொண்டிருந்ததனால், அதன் கண்களிலிருந்து நீர் முத்தைப்போல பிரவகித்துத் தாடையில் வழிந்திருந்தது. ஆனால், அதி சீக்கிரத்தில் தாயினுடைய கருணை நிறைந்த பார்வைக்குப் பாத்ரமாய்விடவே, தனது கஷ்டத்தைக் குழந்தை முற்றிலும் மறந்து விட்டது. குழந்தையினது பிரியக்கூடாத விருப்பத்தினால் தாயினது வஞ்சகமான நினைவுமாற, அவள் குழந்தையை முன்னிலும் பதின்மடங்கு அதிகமான ப்ரீதியுடன் தன் மார்போடணைத்து முத்தமிட்டவுடனே, அக்குழந்தைக்குண்டான சந்தோஷத்தை என்னென்று சொல்வேன். அது தாயினது முகத்தையே எறிட்டுப்பார்த்துச் சிரித்தவண்ணமாயிருந்தது. தாயும் புன்னகை கொண்டாள்.

ஆனால், மறுபடியும் குழந்தைக்குத் தூக்கமயக்கம் வந்துவிட்டது. இப்பொழுதுவந்த தூக்கமே நல்ல தூக்கம். தாயானவள் குழந்தையினது அணைப்பிலிருந்த கையை நீக்கினாள்; அதைத்தூக்கி எடுத்தாள்; துணியைத் தரையில் பரப்பி அதில் குழந்தையைவிட்டாள்; குழந்தையைச் சிறிது போர்த்தாள்; பிறகு குனிந்து அதற்கு ஓர் முத்தங்கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். ஏ குழந்தாய்! தூங்கிவிட்டனையே. நீ விழித்துக்கொண்டிருந்தால் உன்னுடைய தாயினது மடியை விட்டுப் பிரிவதற்கு ஆசைப்படமாட்டாயே! அவளும் அழஅழ உன்னைவிட்டுப் பிரியமாட்டாளே! இந்தப் பாழுந்தூக்கமன்றோ உன்னை உன் தாயினின்றும் விலகச் செய்தது. ஆனால் இப்பொழுது உனக்குக் குறையொன்றும் இல்லை. நீ விழித்துக்கொண்டபின் உன் குறை உனக்குத் தெரியும். அப்பொழுது வருத்தப்படுவாயே.

ஹே தீனபந்து! நானும் தங்களுடைய மடியில் பேரின்பத்தையனுபவித்துக் கொண்டு ஒரு காலம் இருந்திருப்பேனே. அப்படியே இருந்திருக்கக்கூடாதோ? நானும் சிறிது தூங்கிவிட்டேனோ? தூங்கும் சமயம் பார்த்து என்னைத் தரையாகிற இந்தப் பாழ்பூமியின் கண் கிடத்திவிட்டனையோ? ஐயகோ! நான் ஏன் தூங்கினேன்? உன்னுடைய கருணையே வடிவமாயுள்ள முகத்தினுடைய அழகைப் பார்த்துப் பார்த்து, அதனால் சித்தம்பிரமித்து மயக்கம்கொண்டு தூங்கிவிட்டேனோ? ஏ ப்ரபோ! நீ என்னைக் கீழேவிடுவதற்குப்பிரயத்தனப்படும்போது நான் விழித்துக்கொள்ளலாகாதோ? என்னை நல்ல தூக்கத்தில் விட்டுவிட்டனையோ? இது உனக்கு அழகோ? இது தர்மமாகுமோ? என்னை வைத்திருப்பது உனக்கு ஓர் பெரிய கருமமோ? அல்லது நான் தூக்கமயக்கங்கொண்டது உனக்குவெறுப்பையுண்டாக்கியதோ? ஹேமாத்ரு பூதேச்வரா! எனது தூக்கம் கர்ப்பவாஸமாயிருக்கப்பெற்ற பத்து மாதத் தூக்கமோ? என் போகத் தாயினது சரீரந்தான் எனது சயனக்கிரகமோ. ஏ கடவுளே! என்ன அறிவீனத்தால் நான் தூக்கம்கொண்டேன்! நான் இழந்தேனே! மறுபடியும் உன்னை எப்பொழுது காண்பேன்?

குழந்தையோ நன்றாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறது. விழித்துக்கொண்டால் அழுமே! அப்பொழுது என்செய்வது என்று யோசித்துக் கடைக்குச் சென்று கொஞ்சம் கற்கண்டு வாங்கிக்கொண்டு வந்தேன். நான் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தை விழித்துக்கொண்டது. விழித்த சிறிதுபொழுது இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தது. நானும் அதைப்பார்த்தவண்ணமாய் இருந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் அது தன் தாயை நினைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தது. உடனே நான் அதை எனது முரட்டுக்கையால் எடுத்து என் மடியில் வைத்துக்கொண்டேன். சிறிது காலம் அது என்னையே (தன்) தாயாய் மதித்திருந்தது; ஆதலால் அழவில்லை. ஆனால், நான் தாயல்லவென்றும், ஏமாற்றுகிறேனென்றும் பிறகு தெரிந்துகொண்டு, என்னைவிட்டு விலகப் பிரயத்தனப்பட்டது. நான் அதை யடக்க முயன்றேன்; பயன்படவில்லை; வீரிட்டு அழத் தொடங்கியது. உடனே இதுதான் தக்க சமயம் என்று என் கையில் வைத்திருந்த கற்கண்டுக் கட்டியை அதற்குக் காட்டினேன். கற்கண்டு என்பது ருசியுள்ள ஓர் பதார்த்தம் என்று தெரிந்துகொள்ளாத குழந்தை, அதைக் கண்டு தன் அழுகையை நிறுத்துமா? கற்கண்டைப் பார்த்தவுடனே அது அக்குழந்தைக்குத் தித்திக்குமா. ஆகவே, அது முன்போல் அழுதுகொண்டே யிருந்தது. நான் உண்மையை அறிந்து அக்கற்கண்டு கட்டியை அதனது நாவில் தடவினேன். குழந்தையும் அதன் ருசியை நன்றாய் அறிந்தது; அழுகையும் ஓய்ந்தது; கற்கண்டை என் கையிலிருந்து வாங்கிக்கொண்டது; அதைத் தன் கையாலேயே வாயில்வைத்துக்கொண்டது; சந்தோஷமடைந்தது. குழந்தையை நானும் பிறகு கீழேவிட்டேன்; அழவில்லை. அது கற்கண்டினிடமே தன் மனதைச் செலுத்தி, அதையே ஆனந்தத்தை விளக்கும் பொருளாக நினைத்துக்கொண்டிருந்துவிட்டது.

ஹே சச்சிதானந்த ரூபமே! யானும் கருப்பையிலிருந்து விழித்துக்கொண்டேனோ? பூமியில் பிறந்தேனோ? பிறந்து உ[illegible]

ஆற்றாமல் அழுதேனே? எனது அழுதலைச் சகியாமல் எனது (யோவி) த் தாய்தந்தையர் சுற்றத்தார் முதலியவர்கள் என்னை ஆறுதல் செய்தார்களோ? நான் அவர்களையே ஸர்வ சுகத்தையும் கொடுக்கக்கூடிய தங்களைப்போல் எண்ணி மயங்கிவிட்டேனே? மயங்கியபின், மயக்கத்தினின்று அவர்களின் நடையுடை பாவனைகளினுடைய வேறுபாட்டால் அவர்கள் நீயல்லவென்று தெரிந்துகொண்டு உன்னையடைய வருந்தினேனே? அப்பொழுது உன் மாயாகற்பிதமாயுள்ள இந்தப்பிரபஞ்சச் சிற்றின்பமானது எனக்குக் கற்கண்டாக ஏற்பட்டதோ? அதுவேதான் நித்தியசுகமென்று நினைத்துவிட்டேனே? ஹே கடவுளே! உன்னை முற்றிலும் மறந்துவிட்டேனே! கெட்டேனே! அழிந்தேனே! எனக்கு உண்மைப்பொருளைப் போதித்து இப்பாசபந்தத்தினின்று விலக்கி ஆள்வது உனக்குத்தர்மமன்றோ?

குழந்தையின் அழுகுரலானது என்னை என் சிந்திப்பிலிருந்து எழுப்பியது; குழந்தையையணுகினேன். குழந்தை அழுவதன் காரணமென்னவென்று அறிந்தேன். அதன் கையில் என்னால் முன் கொடுக்கப்பட்டிருந்த கற்கண்டுக் கட்டியைக்காணவில்லை. காலம் செல்லச்செல்லக் கல்லுங்கரையும் என்று சொல்லுவார்களே. ஒருகால் கற்கண்டு கொஞ்சங்கொஞ்சமாகக் கரைந்துவிட்டதோ? அல்லது சமீபத்தில் விளையாடிக்கொண்டிருந்த துஷ்ட குழந்தை யாதாயினும் இக்குழந்தையின் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டதோ? அல்லது தேனும் தெவிட்டும் என்பார்களே, அதுபோல் கற்கண்டினிடத்தில் ஓர்வித தெவிட்டல் குழந்தைக்கு உண்டானதனால் அதனுடைய ருசியைவெறுத்து அதை எறிந்துவிட்டதோ! தெரியவில்லை.

குழந்தையோ 'ஒரே' பிடிவாதத்துடன் அழுதவண்ணமாயிருந்தது. பிறகு நான் எவ்வளவோ 'வஸ்துக்களை' (தின்பண்டங்களை) அதன்முன் வைத்தும், அதன் அழுகை ஓயவில்லை. ஆகவே, நான் செய்யும் பிரயத்தினங்களெல்லாம் வீண் என்றும், குழந்தை ஒரே சித்தத்துடன் தாயைக்கோருகிறது என்றும், தீர்மானம் செய்துகொண்டு, அதுவிஷயத்தைத் தாய்க்குச் சொல்லியனுப்பினேன். குழந்தையானது தன்னை நினைத்து அழுதுகொண்டிருக்கிறதென்பதைக் கேள்வியுற்ற தாயானவள், தான் அப்போது கவனித்துக்கொண்டிருந்த காரியத்தைக் குறையாகவே விட்டுவிட்டு, உடனே வேகமாய் ஓடிவந்து, நீடித்தும் வீரிட்டும் அழுவதனால் சரீரம் ஓய்ந்து அழுவதற்கும் சக்தியற்றிருந்த குழந்தையை உடனே வாரியெடுத்துத் தன்மார்போடு அணைத்துக்கொண்டாள். குழந்தையும் தனது தாயை அடைந்தது.

ஹே பரமாத்மா! உலகத்தில் ஜீவர்கள் அடையவேண்டிய வஸ்து தாயாகிய நீயேயன்றோ? அங்ஙனம் அவர்கள் உன்னை அடைவதற்கு ப்ரதிகூலமாய் அவர்கள் முன்னிற்பது குழந்தைக்குக் கற்கண்டு நின்றதுபோலத் தன, தான்ய, ஸம்பத்து, ஸந்தானம், குடும்பம் முதலியனவன்றோ. அவைகளையேயன்றோ கோரத்தகுந்த வஸ்துக்களாகவும், பிறவின் பலனாகவும் நினைத்துக்கொண்டு தங்கள் உண்மைப்பொருளாகிய உன்னை முற்றிலும்மறந்துவிடுகிறார்கள்! ஆனால், அங்கும் உன்னுடைய கருணை நிலைதான் வெளிப்படுகிறது. குழந்தையினிடம் இருந்த கற்கண்டு மறைந்ததுபோலவே, ஒருகாலத்தில் இவ்வஸ்துக்கள் யாவும் மறைந்துவிடுமேயன்றோ. ஒருவரிடத்துள்ள பொருள்களிடத்தில் ஒருவனுக்குப்பாசம் உண்டானதென்றால், அது எதுவரையும் நிலைத்திருக்கும்? அந்தப்பொருளை அனுபவிக்க அனுபவிக்கக் கொஞ்சமாகக் குறைந்துவிடுமன்றோ. அங்ஙனம் குறையாவிடினும், அப்பொருள் ஒரேகாலத்தில் ஏயாற்றப்பட்டு நம்மிடமிருந்து விலகிவிடுதல் கூடுமே

யன்றோ? அங்ஙனம் பொருள் கொஞ்சங்கொஞ்சமாய்க்குறைவதனாலும், நம்மிடமுள்ள பொருள்கள் மற்றவர்களால் அபகரித்துக் கொள்ளப்படுவதனாலும் அப்பொருள்களிடமும் நமக்கு வெறுப்புண்டாதல் நியாயமேயன்றோ? மற்றும், அளவற்ற திரவியம் ஒருவனுக்கு இருத்தல் கூடுமோ? அங்ஙனம் ஏற்பட்டுள்ள பொருளானது அவனது வாழ்நாள் முழுவதும் குறையாமலும், இதரமானவர்களால் அபகரிக்கப்படாமலும் இருத்தல் கூடுமோ? அப்பொழுது அப்பொருளிடத்து எங்ஙனம் வெறுப்புண்டாவது என்று யோசிப்போம்.

நாம் முன் கூறிய மாதிரியே தேனுந் தெவிட்டுமேயன்றோ? உலக இன்பங்கள் யாவும் அனுபவிக்க அனுபவிக்க நாளடைவில் வெறுப்பைத் தருமேயன்றோ? ஆகவே, இம்மூன்று விதங்களினாலும் ஜீவர்களுக்கு உலக விஷயாதிகளிடத்தில் நாளடைவில் வெறுப்பு உண்டாகிறது. விருப்பானது வெறுப்பிற்கு மாறுதலேயன்றோ? உலகத்தில் ஒருவனுக்கு ஒரு வஸ்துவினிடத்தில் வெறுப்புண்டான காலத்தில், அதைவிட்டு அவன் முற்றிலும் விலக இஷ்டப் படுவானன்றோ? விருப்பத்தைக்கொடுப்பதாக நினைத்து அடையும் பொருள்கள் யாவும் நாளடைவில் வெறுப்பைத்தருமாயின், அன்னவன் விரும்பத்தக்க பொருள் உலகத்தில் யாதுளது. உலகத்தில் காணப்படும் பொருள்கள் யாவும் வெறுப்பைத்தருவனவேயாய், நாளடைவில் அனுபவத்தால் அறிந்துகொள்ளும் ஜீவர்கள், இவ்வுலகவாழ்க்கையையே முற்றிலும் வெறுத்துவிடுவார்களேயன்றோ? அங்ஙனம் அவர்கள் உலகத்தையும் உலகத்தாரையும் உலகவாழ்க்கையையும் வெறுத்துவிடும் காலத்தில், அவர்கள் விரும்பக்கூடிய வஸ்து (ஏதெய்வமே) நீயேயன்றோ? (அவர்களுடைய உலக வெறுப்புக்குக் காரணம் அவர்களின் அனுபவஞானமன்றோ?) அவர்களுடைய உலகவெறுப்பே வைராக்யமன்றோ? அவர்கள் பிறகு உன்னையடைய விரும்புவதற்குக்காரணம், அவர்களுடைய அனுபவஞானம் முதிர்ந்த உண்மை ஞானமன்றோ? பிறகு அவர்கள் உன்னை யடைவதற்கு உனக்குக் காணிக்கையாகக் கொடுப்பது அவர்களுடைய பக்தியேயன்றோ? ஹே தெய்வமே! அதுவன்றோ அனன்யபக்தியென்று பகவத்கீதை, முதலிய ஆத்மபோத கீதங்களால் கொள்ளப்படுவது? அங்ஙனம் ஜீவர்கள் பக்திப்பெருக்கால் பலகாலம் முறையிட்டு வருந்தத் தாயானவள் குழந்தை தன்னையே நினைந்து அழுவதை நினைத்து அதைச்சகியாமல் எங்ஙனம் விரைந்து வந்து அதை அடைவளோ, அங்ஙனம் தாங்கள் அருள்நிறைந்திருக்கும் தங்களுடைய நித்யானந்த ஸுக ஹேதுவாயுள்ள திவ்விய சரீரத்துடன் அவர்களையடைந்து, அவர்களைப் பிரகிருதி சம்பந்தமாயுள்ள நிலையிலிருந்து முக்தராக்கி ஆட்கொள்வீரன்றோ?

கே. வி. பஞ்சநத ஐயர்.

The Ladies' Section.

ஸ்திரீகள் பத்தி.

தாய்மார்கள் கவனிக்கவேண்டியவைகள்.

(1) தாய்மார்கள் எப்போதும் தங்களுக்கானாலும்சரி, தங்கள் குழந்தைகளுக்கானாலும் சரி வியாதி வந்தபிறகு அதற்குச் சிகித்ஸை செய்வதைப்பார்க்கிலும், அது வரவொட்டாமலிருக்கும்படி தடுக்கப்பார்ப்பதே சிறந்ததாகும்.

(2) குழந்தையின் தேகசௌக்கியமானது தாயினுடைய சௌக்கியத்தைப் பொறுத்திருக்கின்றது. ஆகையால், தாய்மார்கள் தங்கள்

தேகசௌக்கியத்தை நல்ல நிலைமையில் வைத்திருப்பது அவசியமாகும்.

(3) தாய்ப்பாலே சிசுவுக்குச் சிறந்த உணவாகும்.

(4) குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தில் தாய்மார்கள் அதிநுட்பமாகத் தங்கள் கவனத்தைச் செலுத்தி, அவைகள் அடிக்கடி வியாதிபடாவண்ணம் கவனித்துவரவேண்டும்.

குழந்தைகளுக்கு உணவளிப்பதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

(1) குழந்தைகளுக்கு ஏற்ற உணவு தாய்ப்பாலேயென்று நாம் முன்பு கூறியிருக்கிறோம். அதுவே குழந்தைகளுக்குத் தேவையான போஷணையைக் கொடுக்கக்கூடியதா யிருக்கின்றது. இப்பாலை உண்ணும் குழந்தைகள் அதிகமாக நோய்க்கு ஆளாவதில்லை.

(2) குழந்தை பிறந்து சுமார் 10 மாதங்கள்வரை, அநேகமாய்த் தாய்ப்பாலே கொடுக்கப்பட்டு வரவேண்டும். அப்போதுதான் அது நன்கு புஷ்டியுடனிருக்கும்.

(3) குழந்தைக்குத் தாய்ப்பால் புகட்டுவதனால் இன்னொரு அநுகூலமுமுண்டு. குழந்தையானது தாயினிடமிருந்து பால் சாப்பிட்டுவர, தாய்க்குப் பால் விருத்தியாகின்றது.

(4) குழந்தைக்குப் போதுமானவளவு பால் தாயினிடத்தில் ஏற்படாவிட்டால், வியாதியில்லாத பசுவினிடமிருந்து கறக்கப்படும் பாலை உபயோகப்படுத்தலாம்.

(5) குழந்தைக்குப்பால் கொடுக்கும் தாயினுடைய மனமானது எப்போதும் சமாதானத்துடன் இருக்கவேண்டும்; வீணுக்கவலை கொள்ளுதல் கூடாது. தன்னுடைய சக்திக்கு மிஞ்சி வேலைசெய்யவும் கூடாது; காலாகாலத்தில் உணவெடுத்துக்கொள்ளவேண்டும்.

(6) தாய்மார்கள் க்ஷயரோகம்போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டுக் கொண்டிருந்தால், அப்போது அவர்கள் தம் குழந்தைகளுக்குப் பால் கொடாமலிருப்பது உத்தமம். அப்படி கொடுத்தால், இவ்வியாதிநள் அவற்றிற்கும் தொடரக்கூடும்.

(7) குழந்தைகளுக்கு உஷ்ணகாலங்களில் தாகமுண்டாவதால், பால் கொடுக்கும் நேரங்களுக்கு இடையில் கொதிக்கவைத்த வெந்நீரைக் குளிரவைத்துக்கொஞ்சம் கொடுக்கலாம்.

(8) தாய்மார்கள் குழந்தைகளுக்கு ஒரே ஸ்தனத்தில் பால்கொடுப்பது கூடாது; இரண்டிலும் உண்ணும்படி செய்யவேண்டும்.

குழந்தைகளுக்குக் கைப்பால் புகட்டுவது.

குழந்தை பிறந்தவுடன் தாய்க்குப்பால் ஏற்படாவிட்டால், அப்போது கைப்பாலை உபயோகிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், தாய்ப்பாலினால் வளரும் குழந்தைகளுக்கும் கைப்பாலினால் வளரும் குழந்தைகளுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. தாய்ப்பால் உண்டு வளரும் குழந்தைகள் நன்கு புஷ்டியுடன் இருக்கின்றன; வியாதிகள் அதிகம் அணுகுவதில்லை. கைப்பால் புகட்டப்படும் குழந்தைகளோ, மேற்கூறியவற்றைப்போல் அவ்வளவு திடமாயிருப்பதில்லை; வியாதிபற்றினால் சீக்கிரம் விடுவதில்லை. ஆகவே, குழந்தைகளுக்கு எப்போதும் மிருகங்களின் பாலைக்காட்டிலும் தாய்ப்பாலே இயற்கையான உணவென்பதை இங்குக் கூறத்தேவையில்லை. அப்படித்தாய்ப்பால் இல்லாவிடின், பசுவின்பாலைப் பக்குவப்படுத்தி உபயோகிக்கவேண்டும். பால் கறக்கப்படும் மாடானது வியாதியற்றிருக்கவேண்டும். கெடுதலான ஆகாரங்களை அது உண்ணுதல் கூடாது. ஏனெனில், அவற்றின் சத்துப் பாலில்தோன்றி, அப்பால் புகட்டப்படும் குழந்தைகளுக்குக் கெடுதல்கள் உண்டாகக்கூடும். ஆகவே, பால் கறக்கப்படும் பசுவை எப்போதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். பால் கறப்பதற்கு முன்னால், அதன் முலைக்காம்புகளை வெந்நீரினால் கழுவி கொஞ்சம் வெண்ணெயைத் தடவவேண்டும்.

Books and Reviews.

புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

புஸ்தக வரவு.

இந்தியாவும் சுய ஆட்சியும்: சென்னை கணேஷ் கம்பெனியார் பிரசுரித்தது. விலை ரூபாய் 1—8—0.

சபாபதி: ராவ் சாஹேப் ப. சம்பந்த முதலியார் இயற்றியது. விலை அணா 8.

வடிவேலன் அந்தாதி அல்லது கந்தபுராணக் கருப்பொருள்: சென்னை (135, தேவராஜ முதலி தெருவு) வி. என். சாமராவ் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 4.

அன்பின் வெற்றி: சென்னை (135, தேவராஜ முதலி தெருவு) வி. என். சாமராவ் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 3.

எதிரொலியின் சாபம்: சென்னை (135, தேவராஜ முதலி தெருவு) வி. என். சாமராவ் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது.

மேற்கண்ட புஸ்தகங்களின் மதிப்புரை அடுத்த சஞ்சிகையில் வெளியாகும். புஸ்தகங்கள் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, 135, தேவராஜ முதலி தெருவு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

The Boys' Section

சிறுவர் பத்தி.

கல்வியின் பெருமை.

சிறுவர்களே!

கடல்சூழ்ந்த இந்நிலவுலகில் "அரிதரிது மானிடராலரிது" என்று நம்முன்னோர் கூறிய வண்ணம், மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஈகை, இரக்கம், பொறுமை, சத்தியம், பக்தி, விசுவாசம், வைராக்கியம் ஆகிய இவை போன்ற பல நற்குணங்களையுடைவராயிருத்தல் வேண்டும்.

மேற்கண்ட குணங்களை அறிந்து, அவ்வழிநடந்து சிறப்புறுவதற்குக் "கல்வி" யே காரணமாதலால், நீங்கள் கல்வியை அவமதியாது அதை வருந்திக் கற்றல்வேண்டும். அவ்விதம் கல்வியைக் கற்பதிலும், அறிவை வளர்த்து நல்லொழுக்க வழியில் மதியைச்செலுத்தும் நூல்களையே மாசறக்கற்கவேண்டும்.

சிறுவர்களே! கல்வியின் பெருமையைப் பற்றி இன்னும் உங்களுக்குச் சொல்லுகிறேன். கல்வியைக் கற்றவர்களே கண்ணுடையவர்களென்றும், கல்லாதவர்கள் குருடர்களென்றும் நம் ஆன்றோர் கூறியிருப்பதை நீங்கள் கவனியுங்கள். அதுவுமல்லாமலும், கல்வியென்னும் அமிர்தத்தைப் பருகாதவர்கள், மானிடராய்ப் பிறந்தும் அவர்கள் மிருகங்களுக்கு ஒப்பாவரன்றோ.

வித்வான் எங்கும் பூசிக்கப்படுகின்றார். அவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. ஆகவே, கல்வியை வருந்திக்கற்றவர்க்கு எத்தகைய குறைவுமில்லை யன்றோ! சிறுவர்களே! இக்காரணம்பற்றியன்றோ நமது தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனாரும் தமது குறளில், கல்வியை வருந்திக் கற்றவர்க்கு எல்லாம் உண்டென திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்.

தலைகீழ் ராஜ்யம்.

தலைகீழ் ராஜ்யத்தில் நியாயபுரம் என்னும் நகரை அரசகுமாரன் ஒருவன் ஆண்டுவந்தான். அவன் இயற்கையில் நல்ல குணமுடையவன். தன்னுடைய நகரத்தை நன்கு பரிபாலித்துக் கீர்த்தி யடையவேண்டுமென்று அவனுக்கு ஆசை. ஆனால் அவனிடம் ஒருகெட்டகுணம் இருந்தது. அதுதான் சோம்பேறித்தனம். தான் அரசனானதனால் தனக்கு எல்லோரும் கீழ்ப்படியவேண்டுமென்று அவன் எண்ணி

னன். தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்தாலல்லவோ," ஜனங்கள் அவனுடன் மரியாதையாய் நடந்து கொள்ளுவார்கள். அரசகுமாரன் தன்னுடைய சோம்பேரித் தனத்தால் வேலைகளைச் சரியாய்ச் செய்வது கிடையாது; காலையில் எட்டுமணிக்குத் தான் எழுந்திருப்பது வழக்கம். அதன்பிறகு ஸ்நானம் முதலியனவற்றை முடித்துக்கொண்டு ஆலோசனை சபைக்குவர பதினொரு மணியாகும். இதற்குள் ஆலோசனைசபை உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் பத்து மணிக்கேவந்து காத்துக்கொண்டிருப்பார்கள். அரசகுமாரன் வெகு அவசரமாய் வந்து, காரியங்களைச் சரியாய்க் கவனிக்காமல், அரைமணியில் எல்லாவற்றையும் முடித்துவிடவேண்டுமென்று தன் பிரதான மந்திரிகளுக்குஉத்தரவிடுவான்; முக்கியமான விஷயங்களையெல்லாம் சரியாய்க் கவனிப்பது கிடையாது.

அரசகுமாரன் இப்படிச் செய்வதானது மந்திரிகளுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. அவர்கள் எவ்வளவு சொல்லியும், அரசகுமாரன் கேட்கவில்லை. இது வரவர இன்னும் கேடாயிற்று. அரசகுமாரன் பத்துமணிக்கே படுக்கையைவிட்டு எழுந்திருக்க ஆரம்பித்தான். ஆலோசனை சபையில் மந்திரிகள் காத்துக்கொண்டிருக்கிறார்களென்று ஒருவரும் அ[illegible]ய்ச் சொல்லக்கூடாது. [illegible] அரசனல்லவா? அவர்கள் காத்திருக்கட்டுமே" என்பான். பிறகு ஆலோசனை சபைக்குவர மணிஇரண்டாகும். அவஸர அவஸரமாய் வர வேண்டியிருப்பதனால், உடை, கத்தி, புஸ்தகங்கள், கிரீடம் முதலியனவற்றை ஸரிவர தரித்துக்கொள்ள நேரமிருப்பதில்லை. இன்னும் கொஞ்ச நாளானபிறகு, அரசகுமாரனுக்குப் படுக்கையை விட்டெழுந்து ஸ்நானம் செய்வதற்கே மணி இரண்டாயிற்று. ஆதலால், தன் மந்திரிகளைத் தானிருக்கும் அறைக்கே வரும்படி சொல்லியனுப்பினான். அவர்கள் வந்ததும், நல்ல ஆடை ஒன்றும் உடுத்திக்கொள்ளாமல் ராஜ்யவிஷயங்களை இரண்டொரு வார்த்தைகளால் முடித்துவிட்டு, அவர்களை அனுப்பிவிட்டான். இப்படிக் கொஞ்சகாலம் நடந்தது.

(இன்னும் வரும்.)

Kalathathan.

By Mr. N. S. Subramaniam.

காலதத்தன்.

I

காலதத்தன் கண்கள் கலங்கின; கோபத்தால் உதடு துடித்தது; வெட்கத்தால் உடல் குறுகிற்று. மூன்றாவது தடவையும் தான் தோல்வியடைந்தபோதிலும், அது மனதிற்கு அவ்வளவு வருத்தத்தை உண்டாக்கவில்லை. தோற்றதும், அருகிலிருந்தவர்கள் கைகொட்டி நகைத்தபோது அவன் மனம் இருந்த நிலைமை கடவுளுக்குத்தான் தெரியும்.

"அம்பெய்வது கைப்பழக்கம். இயற்கையாயுள்ள சூரத்வும் அதில் வெளியாவதில்லை. நீ ஆண்பிள்ளையானால் அதோ இருக்கிற செங்குத்தான பாறையின்மீது என்னுடன் ஏறு. நான் போகிற இடத்திற்கு நீ வந்துவிட்டால்....."

"காலதத்த! அதிகமாய்ப் பேசுவானேன். நான் அதற்குத் தயார்" என்றான் பிரதாபன்.

எதிர்பாராத இந்த பயங்கரமான பந்தயம் அருகிலிருந்தவர்களின் மனதைப் பிரமிக்கச் செய்தது. பாறை மிகவும் செங்குத்தானது; அநேக இடங்களில் வழுவழுப்பானது. நடப்பதற்கு மிகவும் அபாயகரமானது. அந்த ஒட்டுப்பாறையிலிருந்து மேலே பார்த்தால், கண்ணுக்கு எட்டியமட்டும் செங்குத்தான பாறையும், கீழே பாதாள பரியந்தம் வாயைத்திறந்து கொண்டிருக்கும் பள்ளமும் தெரியும். மனத்தினால் கூட நினைக்கக்கூடாத இந்த அடாத காரியத்தைச் செய்யத்துணிந்த பாதகன் காலதத்தன், அசூயையினால் இளவரசு பிரதாபனைக் கொல்லவெண்ணினானோ?

அருகிலிருந்தவர்கள் தடுப்பதற்குமுன் காலதத்தன் பிரதாபன் இருவரும் பாறையின் அடிவாரத்தையடைந்துவிட்டார்கள். இளவரசின் முகத்திலிருந்த கோபக்குறியைக் கண்டவுடன், பின்தொடர்ந்து வந்தவர்கள் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள். பாறையின் மீது காலதத்தன் முன்னும் பிரதாபன் பின்னுமாக வேகமாய் ஏறினார்கள். வெள்ளாடு தாவியோடுவதுபோல இருவரும் களைக்காமல் தாவிச்சென்றார்கள். பிரதாபனைப் பயங்கரமானதும் அபாயகரமானதுமான இடங்களுக்கு இழுத்தடிக்கவேண்டுமென்று எண்ணிய காலதத்தன், ஒரு குறுக்குவழியாகத் திரும்பினான். அது ஒரு ஒட்டுப்பாறை. பாதை முதல் கொஞ்சம் அகலமாயிருந்தபோதிலும், போகப்போக அது குறுகிவிட்டது. அதன்மீது நடக்கலானான் காலதத்தன். கடைசியில் தான் செல்லும் வழியின் அகலம் அரையடிக்கு வந்துவிட்டது. இரண்டு பக்கங்களிலும் பார்த்தால், பாதாளம் வரைக்கும் ஒரே பள்ளமாயிருந்தது. என்னசெய்வான் பாவம்! தன் உடம்பைப் பாறையோடுபாறையாய் ஒட்டிக்கொண்டு மெதுவாய் நகர்ந்து செல்ல யத்தனித்தான். கடைசியில் காலதத்தன் அவ்வொட்டுப்பாறையின் முடிவையடைந்தான். அது ஒரு மிகச்செங்குத்தான பாறையில் வந்துமுடிந்தது. என்னசெய்வது? பின்னும் மேலேபோக முடியாததனால், திரும்பவேண்டியதாயிற்று. ஆனால் காலதத்தன் தன்னைச்சுற்றிலும்பார்த்தான்; பயங்கரமாயிருந்தது. கீழே குனிந்து பார்த்தான். பாதாளம்வரை ஒரே பள்ளமாயிருந்தது. அவன் கால் பூமியில் பாவவில்லை; தைரியத்தை இழந்தான். எவ்வாறு திரும்பி மலையடிவாரத்தையடைவோம் என்று ஏக்கம் கொண்டான்; உடம்பெல்லாம் வியர்வைவிட்டது; ஒரு அடி கூட நடக்கத்தைரியம்கொடுக்கவில்லை. கடவுள் விட்டவழிவிடட்டும் என்று பாறையோடு தன் சரீரத்தை ஒட்டிக்கொள்பவன்போல, அதைப் பிடித்துக்கொண்டு அதன்மேல் படுத்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் அங்குவந்த பிரதாபன், காலதத்தன் நிலைமையைக்கண்டு பரிதபித்தான். தட்டி எழுப்பி, "என்னபயம் உனக்குக் காலதத்தா? எழுந்துவா போவோம். மனதை தைரியப்படுத்திக்கொள். கீழே எல்லோரும் காத்திருப்பார்கள். என்னைப்பிடித்துக்கொண்டு என் பின்னேவா" என்றான் பிரதாபன். அச்சமயத்திலாவது பிரதாபன் விஷயமாய்க்காலதத்தனுக்கு நல்லஎண்ணம்தோன்றியதோ? இல்லவேயில்லை. அவன் மனம் பொங்கிற்று; பொறாமை அதிகரித்தது. பிரதாபனை மனங்கொண்டமட்டும் வெறுத்தான். அவன் இவ்வாறு இருக்க, உடலமாத்திரம் பிரதாபனைப்பின்பற்றிச்சென்றது. காலதத்தனை ஒருகையால் பிடித்துக்கொண்டு மெதுவாய் நடந்து, அநேகம் அபாயகரமான இடங்களையெல்லாம் கடந்து, கடைசியில் பிரதாபன் மலையடியையடைந்தான். காலதத்தன் தான் பிரதாபனை அழிக்க மனதிற்குள் சபதம் செய்துகொண்டான். காலதத்தனின் உயிரைக் காப்பாற்றியதற்குப் பிரதாபன் அடைந்த பலன் இதுதான்!

(அடுத்த ஸஞ்சிகையில் முடியும்.)

என். எஸ். சுப்பிரமணியம்.

Notes

குறிப்புக்கள்.

எலிகளால் நேரும் சேதங்கள்.

நமது தேசத்தில் எலிகள் ஏராளமாக இருக்கின்றன. இவை ஸாதாரண பிராணிகளாயிருப்பினும், இவற்றால் அதிகமான சேதாரங்கள் உண்டாகின்றன. இந்தியாவானது வியவசாய தேசமானதனால், எலிகளின்

வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றதாயிருக்கின்றது. இதுவுமன்றி, வீடுகளின் அமைப்பும் அவற்றின் வளர்ச்சிக்கு அனுகுணமாகவே யிருக்கின்றன. ப்ளேக் முதலான தொத்துவியாதிகளுக்கு இவ்வெலிகளே காரணமாயிருக்கின்றனவென்பதை நாம் கூறத்தேவையில்லை.

இந்தியாவில் எலிகளினால் உண்டாகும் சேதத்தை மூன்றுவிதமாய்ப் பிரிக்கலாம். முதலாவது: எலிகளினால் உண்டாகும் நோய்கள். இரண்டாவது: தானிய நஷ்டம். மூன்றாவது: அவற்றை ஒழிப்பதற்கான செலவுகள்.

இராஜாங்கத்தாருக்குச் சென்ற இருபது வருஷங்களாக எலிகளினால் நஷ்டமானது 1,242½ கோடி ரூபாயென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது 828,000,000 பவுன்களாகின்றன. இந்தத் தொகையில் 428,000,000 பவுன்கள் ப்ளேக்வியாதியைத் தடுப்பதற்கான விஷயங்களில் செலவிடப்பட்டுள்ளன. மீதி 400,000,000 பவுன்கள் தானியவிஷயங்களில் ஏற்பட்ட நஷ்டமாகும். ஆயினும், இவ்வளவு சேதாரத்துக்குக் காரணமாக எலிகளை ஒழிக்க அதிகமான பிரயத்தினங்கள் ஒன்றும் கவர்ன்மெண்டாராலாவது அல்லது பொது ஜனங்களாலாவது எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால், ப்ளேக் வியாதியைத் தடுப்பதற்கென்று எலிகள் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுவருகின்றன

இந்தியாவில் மாத்திரமல்லாமல் இதர தேசங்களிலும் எலிகளினுடைய உபத்திரவம் இருந்துவருகின்றது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் எலிகளினால் உண்டாகும் நஷ்டமானது, நபர் ஒன்றுக்கு வருஷவாரியில் நான்கு முதல் எட்டுஷில்லிங்குவரையில் ஆகின்றது. இந்தியாவிலோ நபர் ஒன்றுக்கு இரண்டரைஷில்லிங்வரை ஆகின்றது. இந்த விகிதத்தைக்கொண்டே உலகமுழுதுக்கும் கணக்குப்பார்த்தால், வருஷவாரியில் 200,000,000 பவுன்கள் எலிகளினால் நஷ்டமாகின்றனவென்று புலப்படும். ஆகையால், எலிகளை ஒழிக்க நாம் எவ்வளவு பிரயத்தினம் செய்கிறோமோ, அவ்வளவு நன்மையுண்டாகுமென்பதில் ஐயமில்லை.

உலகத்திலுள்ள மதங்கள்.

உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒருபங்கு அதாவது 50 கோடியே 30 லக்ஷம்பேர் கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்தவர்கள். கிறிஸ்தவர்களில் கத்தோலியர் 35 கோடியாவர். மிற்க, முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர்களின் தொகை 22 கோடியே 20 லக்ஷம். இந்துக்கள் 32 கோடியே 30 லக்ஷம். யூதர் 90 லக்ஷம். பாரசீகர் லக்ஷத்து 50 ஆயிரம். பௌத்தமதத்தைப் பின்பற்றுவோர் 10 கோடியே 70 லக்ஷம்பேர் என்று சுதேசபரிபாலினி எழுதுகிறது.

வைரங்களைப் பரீக்ஷித்தல்.

வைரக்கற்கள் நல்லவையாவென்று அறியப் பின்வருமாறு பரீக்ஷிக்கலாம். ஒரு வெள்ளைக்காகிதத்தில் மையினால் பொட்டொன்று வைத்து, அந்தக் கல் வழியாய் அதைப்பார்க்கவும். ஒரேஒரு பொட்டுத்தெரிந்தால், அது சுத்தமான வைரமென்று தெரிந்துகொள்ளலாம். அநேகம் பொட்டுக்களாகவாவது அல்லது பரந்தாவது தெரிந்தால், வைரம் சுத்தமற்றதென்று அறியவேண்டும்.

ரூ. அ. ப.

தோத்திரப்பாமாலை ... 0 6 0

இதில் பற்பல ஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களின்மேல் பாடிய ஸ்தோத்திரங்கள் பல அடங்கியிருக்கின்றன. வி. சுப்பையர் இயற்றியது.

மோஹனதாஸ் காந்தி ... 0 5 0

இந்திய தேசாபிமானிகளுள் ஒருவராகிய மிஸ்டர் காந்தியின் சரித்திரமாகும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெரு, மதராஸ்.

ஜனோபகாரி.

(THE JANOPAKARI).

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்."—திருக்குறள்.

புஸ்தகம் 4. Vol. IV. } காளயுக்தி௵ மாசி௴, பிப்பிரவரி 1919. { சஞ்சிகை 2. No. 2.

கைத்தொழில் நிலைமை.

மேல்நாட்டார் மணலைக் கயிறாய்த்திரிக்கிறார்கள். காற்றைக் கையாற் பிடிக்கிறார்கள். நீர்த்துளிகளை எண்ணிக்கைசெய்துவிடுகிறார்கள். ஆகாயத்தில் பறக்கிறார்கள். விண்ணில் மறைகிறார்கள். தண்ணீர்க்குள் ஒளிந்து செல்கிறார்கள். வாயுபகவான் மூலமாய் நெடுந்தூரங்களுக்குத் தூதனுப்புகிறார்கள். பேரிடிகளை யுண்டாக்கி நூறுமைலுக்கப்பாலிருந்து மனிதரையும் தேசங்களையும் நாசமாக்குகிறார்கள். நீரை நெருப்பாகவும், நெருப்பைக்காற்றாகவும், காற்றைமண்ணாயும், மண்ணை விண்ணாயும் மாற்றிவிடுகிறார்கள். கடவுளாற் படைக்கப்பட்ட பொருட்கள்யாவும் அவர்களுடைய சௌகரியங்களுக்கேற்றவாறு திரும்ப வேறுவிதமாகமாற்றிப் படைக்கப்படுகின்றன. அவர்களே கண்கூடாக்காணும் தெய்வங்களாக விருக்கிறார்கள். படைத்துக்காத்தழித்தலென்னும் கடவுளின் முத்தொழிலையும் அவர்களே செய்கிறார்கள். சொற்ப மனிதரான அவர்கள் எத்தனையோ கோடானுகோடி ஜனங்களை அடக்கியாளுகின்றனர். பாலைக் கடைந்து அதினின்று பல பொருட்களை யெடுப்பதைப்போல சிருஷ்டிப்பொருள்கள் யாவற்றையும் கடைந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய பலன்களை எடுத்துவிடுகிறார்கள். மயிலைப் பிடித்து அழுத்தி இறகைப் பிடுங்குவதைப்போல, ஒவ்வொரு பொருளையும் தம் வசப்படுத்தி, அதன் வன்மையை யடக்கி, அது மறைத்து வைத்துள்ள அந்தரங்கப்பதையல்களின் திறவுகோலை வற்புறுத்திப் பிடுங்கிவிடுகின்றனர். கைத்தொழிலில் கீழ் நாட்டார் யாவரும் அவரது உதவியையே நாடும் விதத்தில் அரும் பெரும் விஷயங்களைச் செய்கின்றனர். கடவுள் படைப்பில் எத்தகைய அற்பப் பொருளும் பெரும்பயனுடைத்தென்பதையும், காரணமின்றி எப்பொருளும் படைக்கப்படவில்லை யென்பதையும் அவர்கள் நன்குணர்ந்திருக்கின்றனர்.

இத்தகைய உன்னத நிலைமையிலிருக்கின்ற நாடுகளில் அமெரிக்காவும், ஜெர்மனியுமே முதன்மையாகச் சொல்லத்தகுந்தவை. அமெரிக்காவின் பெருங்காடுகளில் மரங்களிலிருந்து ஏராளமாய்க் கீழே உதிர்ந்து, மலைபோற் குவிந்து மட்கிநாசமாகிவரும் இலை, சருகு, முதலிய

வற்றைக்கூட இப்போது பயன்படுத்தப்போகிறார்களாம். அது எளிதிலும், விரைவாகவும், அதிகப்பணச்செலவன்றியும், பயன்படக்கூடிய பொருட்களாகமாற்றத் தகுந்ததென்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இலை, சருகு, முதலியவற்றை வாரி எடுத்துப்போய் இயந்திரத்தால் நசுக்கி, நார், நரம்பு போக்கித் தூளாக்கி, மாவாக அரைத்துவிடுவார்களாம். பிறகு அதன் நிறத்தைப்போக்கி, அதற்கு வெண்மை நிறம் ஊட்டிக்கூழாய்ச் செய்வார்களாம். இக்கூழால் காகிதம் செய்யலாமாம். கூழ் ஏராளமாய் உண்டானால், இயந்திரத்தினுதவியால் அதை வெல்லக்கட்டிகளைப்போல மாற்றிக்கொள்ளுவார்களாம். அதை மாடுகள் ரொட்டிகளைப்போலத்தின்னுமாம். தவிர, அதை அடுப்பிலிட்டால், அது விறகைப்போலெரியுமாம். இம்மாதிரி அவர்கள் செய்வதெல்லாம் புதுமை புதுமையாகவிருக்கின்றது.

இந்தியாவில் நாம் இத்தகைய காரியம் ஏதாவது செய்கிறோமா? அன்றிப்பிறர் செய்வனவற்றையாயினும் கண்டு அவர்களைப்பின்பற்றி அம்மாதிரி செய்யும் திறமையையாயினும் தேடிக்கொண்டோமா? ஒன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். எக்காரியத்தையும் தனக்கெனச்செய்தற் காற்றா விலங்கின் நிருவாண நிலையில் நாம் இருக்கின்றோம். அவ்வாறே பிறராலும் மதிக்கப்படுகின்றோம். நன்முன்னோர் புராணங்களில் வரப்பிரசாதத்தினாலும், தபோபலத்தினாலும் இத்தகைய காரியங்களைச் செய்ததாக உணர்கின்றோம். அவ்வளவோடு திருப்தியடைகின்றோம். அதையே நமது பெருமையாகவெண்ணித் தோள் தட்டுகின்றோம். நாம் கைத்தொழிலில் முன்னேற்றமடைவது ஒருபுறமிருக்க, நாம் அதை அறியத்தேவையான சாதாரணக் கல்வியுணர்ச்சியையும், சாஸ்திரப்பயிர்ச்சியையும் பெற்றிருக்கிறோமாவென்பதை ஆராய்வோம். நம்முடைய தேசத்திலும் பிறதேசங்களிலும், நூற்றிற்கு எத்தனை மனிதர் கீழ்த்தரக்கல்வி கற்றவரென்பதை ஒத்திட்டுப் பார்ப்போம்.

		12-வயதுக்கு மேற்பட்டு எழுதப்படிக்க அறிந்தவரின் தொகை.
ஜெர்மனி	... 100-க்கு	 99
நார்வே	.... ,,	... 99
சுவீடன்	.... ,,	... 99
சுவிட்சர்லாந்து	.... ,,	 99
நியுஸீலாந்து	.... ,,	... 96
பிரான்ஸ்	... ,,	 95
இங்கிலாந்து	... ,,	 94
ஆஸ்திரேலியா	.... ,,	... 91
ஹாலந்து	... ,,	 90
அமெரிக்கா	.... ,,	... 90
நமது இந்தியா	... ,,	சுமார். 6

மேற்கண்ட புள்ளிகளில் நம் தேசத்தினிருப்பிடத்தை விளக்குவைத்தே பார்க்கவேண்டும். நம்முடைய தேசத்திற்கு இவ்வளவே அளவுக்கு மீறியதன்றோ!

கீழ்த்தரக் கல்வி இவ்வாறிருக்க, உயர்தரக்கல்வி, சாஸ்திரப்பயிர்ச்சி முதலியவற்றின் நிலைமை எவ்விதமிருக்கின்றது? நமது தேசத்திலும், பிறதேசங்களிற் சிலவற்றிலும், இதன் பொருட்டுத் துரைத்தனத்தாரால் ஒவ்வொரு வருஷத்திலும் செலவழிக்கப்படும் தொகை எவ்வளவென்பதைக் கவனிப்போமாயின், உண்மை நன்கு விளங்கிவிடும்.

		துரைத்தனத்தார் கொடுக்கும் தொகை. பவுன்.
இங்கிலாந்து	வருஷம் 1-க்கு	5,00,000
அமெரிக்கா	ஷை	200,00,000
ஜெர்மனி	ஷை	18,00,000
இந்தியா	ஷை	48,909

நமது தேசத்தின் ஜனத்தொகையை உத்தேசித்துப் பார்ப்போமானால், இந்தியாவிற்குக் கிடைக்கும் துரைத்தனத்தாரின் உதவி, கடலில் பெருங்காயம் கரைத்ததையொக்கும். இத்தகைய பரிதாபகரகான நிலைமையில் நாமிருக்கின்றோம், தொழில் கமிஷனர்களின் விசாரணை முடிவுபெற்றது. அவர்களுடைய சிபார்சுகளும் வெளிப்படுத்தப்பட்டன. அவைகளால் நாம் எவ்வளவு பயன் பெறப்போகின்றோமென்பதை இனி கவனிப்போம்.

பூசணிக்காயின் உபதேசம்.

“அவனன்றி ஓரணுவு மசையா”தென்னும் அரும்பெரும் வாய்மையை அறியாத இந்தியரே இலர். இது பிறதேயத்தார்க்கே புதுமையானதன்றி நம்மால் இது எக்காலத்திலும் அறியப்பட்டதேயாகும். இப்பெரும் இரகசியத்தை ஒவ்வொரு இந்தியரும் தமது அன்னையின் வயிற்றிலேயே கற்றுக்கொள்கின்றனர். குழவிப்பருவத்தில் அதைத் தாய்ப்பாலுடனருந்துகின்றனர். எட்டிரண்டறியாச் சிறியோரின் வாயினின்று இத்தத்துவமே எப்போதும் வெளிவரும். அவனுடைய அருளின்றி எக்காரியம் நடைபெறும்? எத்தகைய நோக்கம் பலிதமாகும்? எத்தகைய பலன் கைகூடும்? எம்முயற்சிக்கும், எம்மனிதருக்கும், எத்தேயத்தினருக்கும் ஈசனருளே வெற்றிக்கு இன்றியமையாத மாத்திரக்கோலாகும். தெய்வபக்தியுடையவனுக்கு அவனருளும், அதன்பயனாக இம்மையிலும் மறுமையிலும், பெறும் பேறும் சித்திக்குமென்பதை நம்முன்னோரில் எண்ணிறந்தவர் கண்கூடாக்கண்டு அனுபவத்திற்பெற்று, நூல்களில் எழுதியுள்ளார். அத்தகைய தெய்வபக்தி ஒவ்வொருவர் உள்ளத்திலும் வெள்ளமாய்க் கரைபுரண்டோடப்பெற்ற இப்பரத பூமி ஏனைய நாடுகளுக்கு முன் எங்ஙனம் காணப்படுகிறது? பல புலிகளுக்கிடையில் தோன்றுமோர் எலியைப்போலவன்றோ மழுங்கி நிற்கின்றது. செல்வச்செருக்காலும், வல்லமைச் செருக்காலும், செழித்துக் கொழுத்து, மதோன்மத்தமாய் ஒப்புயர்வற்று, வைரங்களாலும், உன்னத ஆடைகளாலும் அலங்கரிக்கப்பெற்றுப் பல சூரியரைப்போல விளங்கும் அரசர்களுக்கருகில், இல்லாமையால் வருந்தி, நோய்கொண்டிளைத்து, பீடிழந்து, பிறருதவியையே பேருதவியாய்க் கருதிப் பணிந்துநிற்கும் ஒரு பிச்சைக்காரனைப்போலன்றோ நம் தேயம் தத்தளித்து நிற்கிறது. நம் தேயமாகிய முடக்குவாதம்கொண்ட பிணியாளிக்கு, எழவும், உட்காரவும், நிற்கவும், நடக்கவும், உடையுடுக்கவும், உண்ணவும், எத்தகைய சிறிய அசைவிற்கும், இயக்கத்திற்கும் அன்னியருதவியே தேவையாய்ப்போய்விட்டது. இப் பிணியாளியின் அறிவும், மனமும், புத்தியும், யாவும் அந்நோயாற் பீடிக்கப்பெற்றிருத்தலின் அன்னியரே இப்பிணியாளிக்காக எண்ணத்தகுந்தவற்றை எண்ணி, விலக்கத்தகுந்தவற்றைவிலக்கி, புரியத்தகுந்தவற்றைப் புரிகின்றனர். இத்தகைய இழிவினும் இழிவான நிலைமையில் நம்தேயம் இருப்பதற்குக் கருணைவடிவான எம்பெருமானை நாம் மறந்து, அறநெறியைத் துறந்திருப்பதே மூல காரணமாம். நம் மூதாதையர் தம் தூய நெறியிலும், ஒழுக்கச் சிறப்பிலும் கடவுளை வழிபடுதலிலும், தம்முயிரை இழக்கவரினும், ஒரு சிறிதும் வழுவாமல் ஒழுகி வந்தனர். அக்காலத்தில் நம்தேயம் எங்ஙனமிருந்தது? பிறதேயங்களால் பெரிதும் நன்கு மதிக்கப்பெற்று, வணங்காமுடியுடைத்தாய், செல்வமும், வளப்பமும் செழித்தோங்கவிருந்தது. காலஞ்செல்லச்செல்ல நாம் நமது இயற்கை நன்னெறியினின்று தவறிச்சேற்றில் வீழ்ந்தோம். நற்போதனைகளாம் ஆருயிர்த்துணைவரை இழித்து வெறுத்து விலக்கினோம்.

நல்லொழுக்கமென்னும் விளக்கை யவித்தோம். காமம், சுயநலம், அகம்பாவம், மதம், விபசாரம் முதலிய தீய வொழுக்கங்களைக் கொண்ட பகைவரின் வஞ்சகத்திற்பட்டோம். அவர்களால் அக்ஞானமாகிய இருண்ட நெறியில் நடத்தப்பட்டு குருடராயும் அன்னியர் கைக்குழவியாயும் ஆனோம். அவர்களைப் பணிவதில் புழுப்பூச்சிகளினும் கடையரானோம். இதற்கு நம்மீது கடவுள்கொண்ட வெறுப்பே மூலகாரணமன்றோ. அவ்வன்னியர்மீது கடவுள்கொண்ட விருப்பும், அவர்களது ஒழுக்கத் தூய்மையும் காரணங்களாகாவோவெனச் சிலர் கேட்கலாம். அங்ஙனமேயிருக்கவேண்டுமென்னும் கட்டாயமில்லை. கொலைக்குற்றம் சுமத்தப்படுவோரைத் தூக்கிலிட்டுக் கொன்று நீதியை நிறைவேற்றுந் தொழிலில் ஒரு சண்டாளனிருக்கிறான். எத்தகைய சிறப்பைக் கொண்டோரும், நல்லோரும், பொல்லாரும், குற்றம்புரிந்தோரும், குற்றமற்றதூயோரும் அவனால் தண்டனைபெறுகின்றனர். அதனால் அக்கொலைஞன் அவனால் கொல்லப்படும் மனிதரினும் மிக்க மேம்பாடுடையவனாவனோ? அவன் கடவுளால் நன்குமதிக்கப்பட்டவனாவனோ? அவன் மேலதிகாரியின் தண்டனையை நிறைவேற்றும் துணைக்கருவியேயாவான். அங்ஙனமே நாம் இக்கருவியின்மூலமாய் ஒறுக்கப்படுகிறோம். நாம் எய்தோனை நோவதா? அம்பை நோவதா? அன்றி எய்யப்படும் நிலைமைக்கு அருகமான நம்மையே நொந்துகொள்வதா? நம் நிலைமைக்கு நாமேகாரணமானவர். நமது இழிவை நாமே தேடினோம். நம்மானக்கேட்டை நமது செருக்கே யுண்டாக்கியது. நமது சீர்கேட்டை நம் அகந்தையே செய்தது. நம் அடிமை நிலைமையை நமது ஒற்றுமையின்மையும், பொறாமையுமே செய்தன. இறைவனதுபகைமையும் நமதுமதிமயக்கமே வளர்த்தது. நம்தாழ்மையும், ஏழ்மைத்தனத்தையும் நமது அறிவின்மை ஆக்கியது. ஆதலின் இனியேனும் நாம் நமது ஒழுக்கத்தைக்கைப்பற்றுவோம். ஒற்றுமையிற் பயில்வோம். பெரியோரைத் துணைக்கொள்வோம். அறநெறியில் நடப்போம். எக்காரியத்திலும் இறைவனை வழுத்தி அவனருளைப்பெறுவோம். எக்கணத்திலும் அவனருளைப்போற்றி அதற்கருகமாவோம். எத்தினமும் தவறாமல் அவன் பெருமையைப் பாடுவோம். அவன் கோயிலின் முன் கைகுவித்து நிற்போம். நெஞ்சுருகப் பரவி வாயாரத் துதித்து மனதாரவேண்டுவோம். நல்லறிவும், ஆண்மையும் பெறுவோம். இழிவை யகற்றுவோம். முன்னேற்றம் பெறுவோம். செல்வமும், சிறப்பும், மேம்பாடும் அடைவோம். நாம் கடவுளின் அருள்நோக்கத்தைப் பெற்றால் அது நமது இருளை ஒரு நொடியிற் போக்கிவிடும். எத்தகைய மேம்பாடுடையவனது பகையும், வன்மையும், அக்கருணைகடாட்சத்திற்கு முன் நிற்குமோ? அரசனே நினைக்கினும் கடவுளது நினைவிற்கு முரணாய்த்தீங்கிழைத்தற்பாலனோ! கடவுளின் துணையை நாடுவோர்க்கு ஏனையோரின் துணைதானே கிடைக்குமன்றோ! மன்னாதிமன்னனேயாயினும் கடவுளாற் செய்யப்படும் உதவியை விலக்கற்பாலனோ! இங்கு பழய கதையொன்று நினைவிற்கு வருகிறது.

முன்னொரு காலத்தில் இரண்டு ஏழைப்பிச்சைக்காரர்களிருந்தனர். அவர்களில் ஒருவன் பிறரிடம் ஏற்பவனாயினும், அவனும் தன்னாலேன்றவரையில் அடியார்க்கு ஐயமிட்டு, அதிதிபூசை புரிந்தே உண்பவன். தெய்வத்தினுதவியே பெறுவதற்குரியதென்றும், அது இல்லையாயின் அவனுக்கு எவ்வுதவியும் கிட்டாதென்றும் உறுதியாக நினைத்தவன். அவன் எப்போதும் “சுவாமி சகாயம்! சுவாமி சகாயம்” என்னும் சொற்களைக்கூறியே பிச்சை கேட்பான். இன்னொருவனோ நாஸ்திகன். கண்ணிற்கு முன் காணப்படும் பெரிய மனிதனே அவனுக்குப்பெரியவன். இவ்வுலகில் பொருள் வைத்திருப்பவனே அவனுக்கு வள்ளல்.

அவனுக்கு இவ்வுலகத்திய அரசனே கண்கூடாக் காணப்படும் தெய்வம்; அரசனே புவியோரால் போற்றப்படும் புண்ணியவடிவம். அவன் “ராஜ சகாயம்: ராஜ சகாயம்” என்று கூறியே பிச்சை கேட்பான். தெய்வபக்தியுடையோர் முன்னவனையும், இராஜ பக்தியுடையோர் பின்னவனையும் நன்குமதித்து ஆதரித்துவந்தனர்.

ஒரு புண்ணிய தினத்தன்று வேந்தன் அவ்வூரிலிருந்த வறியோர்க்குப் பிச்சையிட்டபோது, மேற்கூறப்பெற்ற யாசகரிருவரும் தோன்றினர். பின்னவன் “ராஜ சகாயம்” என்று அரசனை வணங்கினான். அதைக் கேட்ட மன்னன் மகிழ்வடைந்து பூரித்தான். தனது மேன்மையைப்பற்றித் தனக்குத்தானே நினைத்து பெரிதும் ஆணவத்தில் மூழ்கினான். மற்றவன் “சுவாமி சகாயம்” என்று கூறி வணங்கினான். அதைக்கேட்ட மகிபன் பெருஞ்சீற்றமடைந்தான். முகம் சிவந்தது. கண்களில் தீப்பொறி பறந்தது. “கேவலம் பிச்சைக்காரனாகிய உனக்கு அரசன் ஒரு பொருட்டாய்த் தோன்றவில்லையோ! அரசனுடைய உதவி உனக்கு அற்பமாய்ப்போயிற்றோ? உன்னைப்போன்ற தரித்திரரிற் கோடிகணக்கானவர்களைச்செல்வவந்தராக்கும் வல்லமையும், செல்வமும் பெற்ற எனது சகாயம் உனக்கு அலட்சியமாயிற்றோ?” என்றான். அவ்வேழையின்மீது சீறி விழுந்தான். ராஜ சகாயக்காரனுக்குத் தகுந்த நன்கொடையும், சுவாமி சகாயக்காரனுக்கேற்ற நற்புத்தியையும் உதவ நினைத்த அரசன் மறுநாள் மாலை 6-மணிக்குத் தவறாமல் தன்னிடம் வரும்படி கட்டளையிட்டனுப்பினான். மறுநாள் அவர்கள் வருமுன் அரசன் உட்புறம் முற்றிலும் அழுகிப்போன ஒரு பூசணிக்காயைப் பொறுக்கியெடுத்து அதை ஒரு புறத்தில் வைத்தான். இன்னொரு பெருத்த பூசணிக்காயை எடுத்து அதன் ஒரு பக்கத்தில் சிறியபாகத்தை வட்டமாய் அறுத்து உட்புறத்திலிருந்த வஸ்துக்களை விலக்கி அது நிறையப் பதினாயிரம்பவுனைக்கொட்டி நிரப்பி, திரும்ப மூடி அதை எவருமறியாவண்ணம் ஒட்டிவிட்டான்.

வேந்தனாற் குறிக்கப்பட்ட காலம் தவறாமல் ஆறு மணிக்கு ராஜசகாயக்காரன் வந்து சேர்ந்தான். ராஜசகாயம் என்ற மொழியோடு அரசனை வணங்கினான். மகிபன் மீண்டும் களிப்பும் பூரிப்புமடைந்தவனாய்ப் பவுன்கள் நிறைந்த பூசணிக்காயை அவனுக்கீந்து “அடே! இதை வேறு எவருக்கும் கொடுத்துவிடாதே. வீட்டிற்குக் கொண்டுபோய் நீயே உடைத்துச் சாப்பிடு” என்று கூறி அவனை அனுப்பினான். அவ்வறியோன் பெருத்த பேப்பாய்க்குடியனாதலால், அன்றைக்குத் தனக்கு அரசன் பெரும் பொருள் தருவானென்றும், அதனால் நன்றாய்க் குடிக்கலாமென்றும் நினைத்து மனப்பால் குடித்துவந்தான். பூசணிக்காயைப்பெற்றதனால் பெருத்த ஏக்கமடைந்து வருந்தினான். இந்த அற்பப் பூசணிக்காய்க்காகவா அரசன் இவ்வளவு ஆடம்பரம் செய்து திரும்பவரச்சொன்னான்? என்னைக் காட்டிலும் அரசன் பெருந்தரித்திரனாயிருக்கிறானே!” என்று எண்ணமிட்டவனாய் மேலே நடந்து அருகிலிருந்த ஒரு கடையில் அப்பூசணிக்காயை மூன்று காசுக்கு விற்று, அதனால் கள் குடித்துவிட்டு வெறுங்கையனாய்த் தன் வீட்டையடைந்தான்.

சுவாமி சகாயக்காரன் தலைபோவதாயினும் தன் நியமங்களையும் அநுஷ்டானங்களையும் தவறவிடாதவன். அவன் இயற்கையின்படி தன் மாலைக்கடன்களை முடித்துக் கோயிலுக்குட் சென்று தெய்வந்தொழுதபின்னர் ஏழு மணி சமயத்திற்கு அரசனிடம் “சுவாமி சகாயம்” என்னும் சொல்லுடன் தோன்றினான். பெருஞ்சினம்பெற்ற அரசன் “அடே! இறுமாப்புக்கொண்ட நாயே! இப்புவியையாளும் அரசனாகிய நான் குறித்த

காலத்தில் வராமல் தாமதித்து வரத்துணிந்தாயா? என்முன்னிற்காதே. இதோ இருக்கும் பூசணிக்காயையும், ஆறுகாசையும் எடுத்துக்கொண்டுபோ! எதனால் நீ பிழைக்கிறாய் பார்க்கலாம்" என்றான். அவன் திரும்பவும் "சுவாமி சகாயம்!" என்றான். அரசனுக்கு மேலும் கோபமுண்டது. அவனுக்கு அவ்வூரில் எங்கும் பிச்சையிடக்கூடாதென்றும் தவறி அவ்வாறு செய்பவரின் சிரம் அறுபடுமென்றும் அரசன் உடனே ஊரில் பறைசாற்றுவித்தான். பூசணிக்காயைப்பெருமகிழ்வுடன் எடுத்துக்கொண்ட வறியோன் "மகாராஜா! இதிலும் எனக்கு சுவாமி சகாயம் செய்தார். நான் நாளையதினம் சில அதிதிகளுக்கு அன்னமிடுவதாய்ச் சொல்லி அவரை அழைத்திருக்கிறேன். அதற்கு எல்லாப்பொருளும் கிடைத்தது. கறியொன்றே அகப்படாமையால் வருந்தினேன். அதற்காகக் கடவுளின் ஆலயத்தில் வேண்டினேன். தாங்கள் பொருளைக்கொடுப்பதைக் காட்டினும் எதாயினும் காயைக்கொடுப்பது நன்றென நினைத்துவந்தேன். என் விருப்பத்திற்கேற்றவாறு உங்களுடைய மனதைத் திருப்பி சுவாமி சகாயம் செய்தார். இதுவே பதினாயிரம் பொன்னுக்குச்சமானம். மிக்க சந்தோஷமானது. போய்விட்டு வருகிறே" னென்று கூறிச் சென்றான். அரண்மனையை விடுத்துச் சிறிது தூரஞ்சென்ற அவ்வறியோன் கடவுளின் இன்னருளை நினைத்து அவரை மனதாரப்புகழ்ந்தான். பெருமகிழ்ச்சியால் தன்னை மறந்தான். பாதையிலிருந்த ஒரு கல்லில் அவனுடைய கால் எற்ற, அவன் கீழே விழுந்தான். பூசணிக்காய் உடைந்தது. அது முற்றிலும் அழுகியதாயிருந்ததைக்கண்ட அவனுடைய மகிழ்ச்சி முழுதும் பறந்துபோயிற்று. துயரம் குடிகொண்டது. ஏக்கங்கொண்டவனாய் மேல்நடந்தான். "கடவுளே கொடுத்துப் பிறகு கெடுப்பானேன்?" என்று பன்முறையும் நினைத்தான். அவ்வாறே சற்று தூரம் சென்றான். எதிரிலிருந்த ஒரு கடையிற் காணப்பட்ட இன்னொரு பெருத்த பூசணிக்காய் அவனுடைய கண்ணைப்பறித்தது. அவன் மனதைக் கவர்ந்தது; "வா வா!" என்று கைகாட்டி யழைப்பதைப்போலத் தோன்றியது. வேறுயாவரேனும் அதைக் கொள்ளுமுன் தான் முந்த நினைத்து அங்கு ஓடினான். அதன் விலை ஆறுகாசென்று அறிந்தான் அரசனால் கொடுக்கப்பட்ட காசைக்கொடுத்து அதை வாங்கித் தோளின்மீது வைத்துக்கொண்டான். அது மிக்கக் கனமுடையதாயிருந்தது. அழுகிய தன்றென உறுதிகொண்டான். அரசனால்கொடுக்கப்பட்ட அழுகிப்போன காயைத் தான் சுமந்துசென்றது கடவுளுக்கே சம்மதமாகாமையால், அது வீழ்ந்து உடைந்துபோனதாக மதித்தான். கடவுளின் ஆற்றலை நினைத்து அளவளாவினான். இரண்டொரு நிமிஷத்தில் தன் வீட்டை யடைந்தான்; மனையாட்டியை அழைத்தான். காயைப் பெற்ற வரலாற்றை அவளிடம் கூறினான். இருவரும் பேருவகைகொண்டனர்.

மறுநாள் அதிகாலையில் எழுந்த இருவரும், நீராடி, மடியுடுத்தி, அதிதி பூஜைக்குத் தேவையானவற்றை ஆயத்தம் செய்யலாயினர். கணவன் பூசணிக்காயை எடுத்துத் தண்ணீர் விட்டலம்பி அதை ஈசனுக்கு அர்ப்பணம் செய்து "சுவாமி சகாயம்" என்று கூறி உடைத்தான். கலகலவென்று கீழே வீழ்ந்த பவுன் குவியல் கண்ணைப்பறித்தது. கணவனும், மனைவியும் திகைத்துக் கல்லாய்ச் சமைந்தனர். அது கனவோ அன்றி நனவோவென ஐயுற்றனர். கண்கொள்ளா அக்காட்சியைக்கண்டு, கட்டிலடங்காப் பூரிப்பையும் மனங்கொள்ளாப்பெருமகிழ்வையும் பெற்றனர். ஆடினர், பாடினர், குதித்தனர், கடவுளைத் துதித்தனர். அப்பொருளைக்கொண்டு பெரிய மாளிகை கட்டி அதில் ஒவ்வொரு நாளிலும் ஆயிரக்கணக்கில் அதிதிகளை உண்பித்துவந்

னர். ராஜசகாயக்காரன்மென்மேலும்இழிந்து தாழ்மையுடைந்து உய்யும் வழியறியானாய் உழன்று திரிந்தே அவன் ஆயுளைப்போக்கினான். நிகழ்ந்தவற்றைக் கேள்வியுற்ற அரசன் கடவுளுக்கு முன் தான் கேவலம் கொசுவினும் தாழ்ந்தவனென்பதை யுணர்ந்து தன் இறுமாப்பைவிடுத்துப் பணிவையடைந்தான்.

ஆதலின் நாம் மானிடனை வேண்டிப்பணிதலைக்காட்டினும் யாவரினும் மேம்பட்ட பெரியோனை வழிபட்டு அவனிடம்முறையிடுவோம். கடவுள் எவருக்கு நற்கதியளிக்க நினைக்கிறாரோ அவரையே சோதனைக்குட்படுத்தித் துன்புறுத்துதல் இயல்பு. அவனுடைய அருளுக்குப் பாத்திரமானவர்களின் மனோநிலையைச் சோதிக்குமாறே அவன் இடையூறுகளைச் செய்கிறான். அவற்றை நாம் மதியாமல் அவனுடைய சரணங்களையே துதிப்போம். அவனருளை முன்னிட்டு நல்வழியில் முயற்சி புரிவோம். யாவரும் ஒன்றுபட்டுழைப்போம். நாமடைந்திருக்கும் இழிந்த நிலைமையை ஒவ்வொருநாளும் நினைத்து நினைத்து அது மனதிலூன்றுமாறு செய்வோம். அதனால் உள்ளக்கிளர்ச்சியும், ஊக்கமும் பெறுவோம். ஊக்கத்தினின்று உஞற்றலும், உஞற்றலால் உழைப்பும், உழைப்பால் ஊதியமும், உன்னத பதவியும், உயர்வும் தோன்றுதல் முக்காலும் திண்ணம்.

சோகதத்வமும், சுகதத்வமும் அல்லது வாழ்வின் சிறுமையும், பெருமையும்.

[ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபாலன் எழுதியது.]

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிக."

என்னாளும் நீடித்து நிலைத்திருப்பதுபோல் செழிப்புடன் வளரும் ராஜ்யங்களும், நாகரிகங்களும் நாளடைவில் தாழ்மையுற்று மறைந்துபோவதையும்; பாறைகளாலும், தேக்குமரங்களாலும் உயர்த்தப்பட்ட கட்டிடங்களின், வன்மையும், அழகும் நாள் செல்லச்செல்லக் குறுகிச் சுருங்க அவைகள் பொடிபட்டுப் போவதையும்; காணவுங் கருதவுங்கூடாத இடங்களிலிருந்து மின்னல்-இடி-மழை-தூமகேது-பூகம்பம் முதலிய அற்புதங்கள் தோன்றி நாடு - நகரம் - மலை - வனம் - கடல்களை அல்லோலகல்லோலப் படச்செய்தலையும்; பொறா மிடியும், தீராப் பிணிகளும் ஜீவப் பிராணிகளை யடைந்து வருத்துவதையும்; சீரியோர் அகாரணமாய்த் துன்புறுவதையும்; பூரியரும் பண்பிலாரும் அநியாயமாய் ரமித்து மகிழ்வோடு இருப்பதையும்; வலியோர் மெலியோரைக் கஷ்டப்படுத்துவதையும்; மெலியோர் எத்தகைய உதவியுமில்லாது அலைப்புண்டு வாடி வருந்துவதையும்; வஞ்சகமும் - பொறாமையும் - அசத்தியமும் - போர், கொலை, களவு, கட் காமக்குரோதாதிகளும் நாளுக்குநாள் பெருகி அட்டகாசஞ் செய்தலையும்; இன்பம் துன்பத்திலும், யௌவனம் விருத்தாப்பியத்திலும், நேசம் பிரிவிலும், வாழ்வு மரணத்திலும், மரணம் புதிய ஜன்மங்களிலும் முடிவுறுகின்றதையும்; இப்பூமியும், ஆகாயமும், இங்குள்ளவைகளும் எப்பொழுதும் மாறுபட்டுக்கொண்டேயிருப்பதையும்; எங்கு பார்த்தாலும் ஓய்வின்றிச் சண்டையும், சச்சரவுமாக இருந்து வருவதையும்; விருப்பும் வெறுப்பும், திருப்தியும் அதிருப்தியும், இளமையும் முதுமையும், செல்வமும், தரித்திரமும், சமாதானமும் சஞ்சலமும், சகடக்கால்போல் சுற்றி, ஒன்றையொன்று இடைவிடாது பற்றித் தொடர்வதையும்; பலியாத காரியங்களையும்; நிறைவுபெறாத ஆசைகளையும்; கைகூடாத எண்ணங்களையும்; முன் செல்வோர் பின் வாங்குவதையும்; மேலிருப்போர் கீழிறங்குவதையும்; கீழிருப்போர் மேலேறுவதையும் நாம் பார்த்துச்சிந்திக்கையில், நம் மனதில் திகைப்பும, ஐயமும்உண்டாகின்றன. பாலைவனத்தில், தாகத்தினால்மேலிடப்பட்டு, அதைத் தணிப்பதற்காக இங்குமங்கும் அப்போதைக்கப்போது காணப்படும் கானல் நீரை ஊற்றுநீரெனநினைத்துமருண்டு, அதைநோக்கிஓடி

யோடிக் கடைசியில் தன்தாகம் அடங்கப் பெறாது அலைந்து வாடி மடியும் மானைப்போல், பேய்த்தேராகிய "இப்பூவுலகில்" வாழ்க்கையில், ஆசையென்ற தாபத்தினால் பீடிக்கப்பட்டு, கானல் நீரின் தன்மையையொத்த அழிபொருள்களை அழிவில் பொருளென நினைத்து மயங்கி, அவைகளைத் தொடர்ந்து சென்று, இறுதியில் தம் ஆசைகள் பூர்த்தியாகாது விசனமுற்றுக் கண்மூடிச் செல்லும் மாந்தர்களைப் பாராய்!

இன்னமும், மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்த பட்டணங்களைக் கட்டிமுடித்து, இவ்வற்புத வேலைகளைப் பார்த்து வியந்து களிப்புற்றிருக்கையிற்றானே பூமியின் பிளப்பு, அல்லது மலைவாயின் திறப்பு, அல்லது கடலின் பொங்குகை. இவைகளிலேதேனுமொன்று உண்டாகி அப்பட்டணத்தைத் தூளாகச்செய்து விடுகின்றது! உழுது பயிரிட்டுக் கதிர்கள் தழைத்து நிற்கையில், கடும்புயலோ, அல்லது ஆற்றுவெள்ளமோ ஏதேனுமொன்று அவைகளை அழித்துவிடுகின்றது! தன் உறவினர்க்கும், இனத்தாருக்கும் நன்மைபுரிய விரும்பி உழைப்பவனைக் கவர்ந்துவிடுகிறான் பாழ் மறலி! பொருட்செல்வம் பெற்றோர் மகப்பேறில்லாது வருந்துகின்றனர்! புத்திர பாக்கியமுடையவர்கள் தனமில்லாது கஷ்டப்படுகின்றனர்! இவைகளே இயற்கை நியாயம்!!

மேலும், "எளியாரை வலியார் வருத்தின் வலியாரைத் தெய்வம் வருத்தும்" என்ற மூதுரை பன்முறைப் பொய்படுவதைப் பார்த்துவருகிறோம் "உண்மை பேசு" இங்ஙனஞ் செய்வதனாலுண்டாகும் அபாயங்களை விரித்துரைக்கவேண்டாம். "அறஞ்செயவிரும்பு." இவ்வான்றோர் வாக்கை அநுசரிப்பதனாலுண்டாகும் தீமைகளை எடுத்துக்காட்டவேண்டாம். "நன்மை செய்" இங்ஙனஞ் செய்தோர் பட்டபாடுகளையும், கஷ்டநஷ்டங்களையும் நாம் நினைப்போமானால் நம் மனமும் இருதயமும் தன்மையடைந்து பிளந்துபோம். "கடவுளை வழிபட்டு நல்லோர் குழுவிற்கலந்து, ஞானத்தைப் பெற்று விருத்திசெய்பவனே இம்மைப் போகங்களையும், மறுமைப் பலன்களையும் பெற்றுச் சுகித்திருப்பனென்பது பொய்யினும் பொய்யே." இதற்குச் சான்று எங்குளதோ? இங்ஙனஞ்செய்தும், மயங்கி உழன்று வாடி வருந்தியவர்கள் எத்தனை பேர்! மேலும், சுகம், ஆனந்தம் என்பவைகளின் மெய்ப்பொருள் என்னையோ? உணர்வு விருத்தியாகி லௌகீக சிந்தனைகளும் பெருகி மேம்படவே எவ்வளவு ஆசைகள் நம் மனதில் உதித்து நம்மைக் கலக்குகின்றன! அவ்வாசைகளைப் பூர்த்தி செய்யவேண்டி உழைக்கையில் எவ்வளவு இன்னல்கள் நம்முன்தோன்றி நம்மை வருத்தி இறுதியில் தோல்வியடையச் செய்கின்றன! அல்லது, அவாவியவைகளைப் பெற்றபின் அவைகளுடன் திருப்தியடையாது வெவ்வேறு பொருள்களைப்பெற விரும்பி மேன்மேலும் பாடுபடுகையில் மனக்கொந்தளிப்பும், ஆசாபங்கமும், வெறுப்பும் உண்டாகி நம்மைப் பெருங்கவலைக்கடற்குள் ஆழ்த்தித் தத்தளிக்கச் செய்கின்றன! என்ன உலகம்! என்ன வாழ்வு!! இத்தகைய ரசமில்லாததும், துன்பத்திற்குக் காரணமும் மிக்க வெறுப்புக்கும் இடமுமான இவ்வுலக வாழ்க்கையை விரும்புவாருண்டோ? நாவால் சொல்லுதற்கியலாத அவ்வளவு அசஹ்யமானவைகளையுடையதும், பற்பல பிணிகளுக்கும் - பூச்சி புழுக்களுக்கும் இருப்பிடமானதும், நாறுவிதத் தீச்சொல் செயற்களின் வாசஸ்தானமானதும் கல்-முள்-இன்னுமிவைபோன்ற ஏனைய அற்பங்களைப்பொருக்கக்கூடாததுமான இப்பாழுடலைப் பெற்றுப் போற்றித் தடிக்கவளர்த்து, அதை உற்றுப்பார்த்து மகிழ்வாருண்டோ? பேதையர்காள்! உங்களுக்கு விதித்த விதியை என்னென்றுரைப்பது! இவ்வளவு விநோதமான உலகையும், உலகாதிகளையும் படைத்துக் காத்துவருபவனின் குணத்தைப்பற்றி யாம் யாது கூறுவது! காலஞ் செல்லச் செல்ல, நாகரிகம் ஓங்கிவளர, இன்ப சுகங்களும் பெருகிவர வேறொரு பக்கத்தில் பற்பல இடையூறு - இடுக்கண்கள் மேற்கிளம்பி மாந்தர்களைவருத்துவதைப் பார்த்து வருகிறோம்! பிழைத்திருப்பதில் துயரமதிகம், தாபமதிகம், உயிர்வாழ்க்கையிலிருப்பவனுக்கு லாபநஷ்டம், சீதோஷ்ணம், ஜயாபஜயம், சுகதுக்கம் என்பவைகள் வரத்தவறா. பொருளீட்ட முயல்வது பெருந்துயரம்; அப்பொருள் கிடைத்தபின் அதைக் காப்பாற்றுவது அதற்கு மேலான துயரம். பொருளில் ஆசையுண்டானவனுக்கு அது விலகியபோது மிகப்பெருந்துயரம். எவனுக்குத் தான் விரும்பிய திரவியலாபங்கள் உண்டாகின்றனவோ, அவ்வளவு விசனம் என்னும் ஆணிகள் அவன் உள்ளத்தில் நாட்டப்படுகின்றன! இவைகளே சோகதத்வக்ஞரின் கோட்பாடுகள். விரிக்-

கப் பெருகும். இவன் இப்பிரபஞ்சம், பிரபஞ்சாதிகளின் கெடுதல்களை விரித்துக்கூறி, தக்க நியாயங்களுடன் அவைகளை வெறுத்து ஒழிக்கப் புகட்டியபோதிலும், உண்மையில் அவனுடைய கொள்கைகள் ஒருதலைச் சார்பாகவே உள்ளன. நம்முடைய ஐம்புலன்களையும், மனத்தையும், இருதயத்தையும் இவ்வுலகம், உலகாதிகள் முழுவதிலுஞ் செலுத்தி, ஆய்ந்தோய்ந்து நிதானித்து அறிந்து ஓர் உறுதியான முடிவுக்கு வரவேண்டுமேயல்லாது, ஒரே பாகத்தில் செலுத்தி இங்கு தோன்றும் தீமைகளை மாத்திரம் பார்த்து, இதினின்று நாம் கண்டுகருதுவதெல்லாம் பிழையும் தீமையும் நிறைந்துள்ளனவெனப் பொதுப்படச் சாதித்தல் மதியீனமே. இன்பமில்லாது துன்பமில்லை; துன்பமில்லாது இன்பமுமில்லை. இன்பமும் துன்பமும், இன்னுமிவை போன்ற விபரீதமாகத் தோன்றுபவைகளும் ஒரு பொருட் குணங்களாகும். இங்கு எவ்வளவு இன்பங்களும், இனியவைகளும் இருக்கின்றனவோ, அவ்வளவு துன்பங்களும், விகாரங்களும் இருந்துவருகின்றன. இதை அறிதலே ஒவ்வொருவனின் முழுமுதற்கடமை. பூமியும், வானமும், இங்குள்ளவைகளும் மானிடராசிக்கு மாத்திரம் உண்டுபண்ணப்பட்டிருக்கவில்லை. ஆதலால், நமக்கு எது அநுகூலமாகத் தோன்றுகிறதோ அதை உபயோகமுள்ளதெனவும், பிரதிகூலமாகத் தோன்றுவதை நிஷ்பிரயோஜனமானவையெனவும் நிர்ணயித்தல் இயற்கை நியாயத்திற்கு முரண்பாடானதே.

சிற்றறிவும், சிறுதொழிலுமுடைய ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு ஓரோர் இடங்களில் ஓரோர் காலங்களில் மெய்யறிவாளர் அவதரித்து மெய்யறம் பரவ உழைத்து வருவதையும், நாளுக்கு நாள் நன்மையும், க்ஷேமமும் செழித்தோங்கி வளர்ந்து நாலாபக்கங்களிலும் வியாபித்து வருவதையும், துராத்மா இறுதியில் தண்டிக்கப்பட்டுத் துன்புறுவதையும், சுசீலன் கடைசியில் தக்க கைம்மாறு பெற்றுக் களித்திருப்பதையும் நாம் உற்றுநோக்கி அறியுங்கால், இப்பிரபஞ்சம் பிரபஞ்சாதிகளை ஞானமும், கருணையும் நிரம்பிய ஒரு சக்தி சிருஷ்டித்துப் பரிபாலித்து வருவதென்பதும், தீமையும் - துக்கமும் மனத்தோற்றங்களெனவும், அல்லது அவைகள் மெய்யாக இருப்பினும், அவைகளின் குணாதிசயங்களையும், பயன்களையும் நாம் தெளிவாக அறிந்து ஒழுங்குடன் நடப்போமானால், அவைகள் தாமே குறுகிச் சக்தியற்றுப் போகுமெனவும், இதை அறிந்து செய்வதற்கு வேண்டிய மதியூகமும் - மனோதிடமும் - தேகவன்மையும் நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறதெனவும் பேரறிவாளர்கள் பன்முறை செப்பியிருக்கிறார்கள்.

இம்மனிதப் பிறப்பு எய்துவது எவ்வளவு அருமை? அப்படி அடைந்தும் அதனால் ஒரு நற்பயனும் அடையாது, ஆங்காங்கு சிற்சில சமயங்களில் தோன்றும் கெடுதல்களை மாத்திரம் பார்த்துத் துக்கித்தல் எற்றக்குறைவே. அரிதிற் கிடைத்ததாகிய இம்மானிடதேகமோ இன்ன காலத்திற்றான் அழியுமென்பதில்லை. கருவில் தானே கழிவன பல; பல தோன்றியவுடன் ஒடுவன; இளமைப் பருவத்தும் பல; யௌவனப் பருவத்தும் பல; முதுமையிலும் பல. இனிப் பிறப்புண்டென்பதற்கும், அப்பிறவி மானிடப் பிறவிதான் என்பதற்கும் பிரமாணம் என்ன? ஒன்றுமில்லை. நாம் இவ்வுலகில் எவ்வளவு பொருள் தேடினுமென்ன? அதனால் நமக்கு நிலைபெற்ற இன்பம் சித்திப்பதில்லை. நமன் ஓலைவரின் அப்பொருள் தடைசெய்து உதவுமோ? இல்லை, காண்! இங்கு பிறந்தோர் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் படைத்து இம்மைப்போகம் யாவும் அனுபவித்து மறுமைப் பலனைத் தேடுவதுதாம் காரியம். இன்றேல் எங்ஙனம் உய்ய முடியும்?

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது."

அறமென்றாலென்னை? வையகத்தோரின் அறிவு விசாலித்தற்கும், நல்லொழுக்கப் பெருக்கத்திற்கும், நல்வளர்ச்சிக்கும், நாகரிகக் கிளர்ச்சிக்கும், அழியாப் பேரின்பம் பெறுவதற்கும், மூலாதாரமாக நின்று உதவுவது அறம். ஜீவன், அல்லது வாழ்வு என்ற வயலில் சோம்பலென்னும் களையைப் பிடுங்கி, கல்வியாகிய விதையை விதைத்து, ஊக்கமென்ற எருவிட்டு, உழைப்பு என்னுந் தெண்ணீரைப் பாய்ச்சினால், ஆண்மை - விவேகம் - சிரத்தை - இனிமை என்ற வேர்களை விட்டு விச

வாசமென்ற வலிய பட்டையினுற் காக்கப்பட்டு, உறுதி - நியாயம் - பெருந்தகைமை என்னும் பெருங்கிளைகளை நாலாபக்கங்களிலும் பரப்பி, பெருமை - ஜீவகாருண்யம் - நற்சிந்தனை - நற்சொல் - நற்செயல்களென்ற தளிர்களைத் தழைத்து, நாளுக்கு நாள் தெய்வத்தன்மையை யொத்த இந்நேர்த்தியான மரம் ஓங்கிவளர்ந்து, இதினின்று அறமாகிய துல்லிய மலர் அலர்ந்து ஜீவன், அல்லது வாழ்வாகிய அவ்வயலைப் பிரகாசிப்பித்து மணக்கச்செய்கின்றது. மனோவாக்கு காயங்களில் தூய்மையும், நேர்மையும், நன்மையும், பொருந்தியிருத்தலே அறத்தின் இலக்ஷணமாகும். இச்சைகளாகிய முடிகளையுடைய வாழ்வென்ற வலையிற்சிக்குண்டு அலறும் புள்மாக்களை ஞானமாகிய கதிரவன் முடிகளை எரித்து. அறுத்து அக்கொடிய வலையினின்று விடுவிக்கிறான்; அறம் என்ற அம்புலி மனவமைதி யுண்டாக்கிப் புனிதம் பெறச் செய்கிறான்.

மண்குடிசைகளைச் சலவைக்கற்கள் நிரம்பிய உயர்ந்த மாடமாளிகை கூடகோபுரங்களாக மாற்றுபவர்களும், விகாரம் பொருந்தியவைகளையும் - சீரழிந்தவைகளையும் அழகும் - ஒழுங்கும் வாய்க்கப் பெற்றதாகச் செய்பவர்களும், இவ்வுலக வாழ்க்கையின் இடர்களைக் களைந்து அதை இனிதாகத் தோன்றச் செய்பவர்களுமே மெய்ஞ்ஞானிகள்.

ஒவ்வொருவனுடைய சிந்தனைகளும், காரியங்களும் வீண்போகா. நாம் சிந்திக்கும் எண்ணங்களும், செய்யும் காரியங்களும் நாளடைவில் வெளியாகும். பொறாமை உதடுகளைச் சுருங்கச் செய்கின்றது; துவேஷம் வாயைக் கோணச் செய்கின்றது; விரோதம் முகமலர்ச்சியைக் கெடுக்கின்றது; பேராசை முகத்தை மழுங்கச்செய்கின்றது. ஆனால். முகத்தைப் பிரகாசிக்கச் செய்வதும், நேத்திரங்களை ஜ்வலிக்கச் செய்வதும் இனிமையே. தூய்மையும் - அன்பும் - இரக்கமும் கையிலுள்ள வாசனைத்திரவியங்கள் போல் விளங்கும். மலர்ந்த ரோஜாவைப் போன்ற சிறப்புற்ற கருத்துக்களையும், ஆகாயத்தில் புரண்டோடும் மேகத்தைப்போன்ற பரிசுத்த ஆன்மாவையும் உடையவனயிருப்பாயாக. பால்ப் பருவத்திலும், யௌவனத்திலும் பொய். அழுக்காறு - வஞ்சகம் - சூது - காமக்குரோதாதிகளில் பிரவிர்த்தியாது, உன் தேகத்தையும், மனதையும், ஆன்மாவையும் செம்மையாகக் காப்பாற்றுவாயாக. சலவைக்கல்போன்ற சரீரத்தை அவலக்ஷணப்படுத்தி யழிப்பதும், கண்ணின் ஒளியைப் போக்குவதும், வைரத்தையொத்த செவ்விரத்தத்தைக் குறைத்து நானாவித நோய்களுக்கு இருப்பிடமாகச் செய்வதுமான கட்காமங்களில் பிரவேசியாதே.

ஜீவான்மா ஓர் அழகிய மாளிகையாகும்; ஞானம் மேன்மைதங்கிய மண்டபமாகும்; ஞாபகம் விசாலமான புத்தகசாலையாகும்; மனக்கற்பனைகள் சித்திரங்களடங்கிய தாழ்வாரமாகும்; நம்பிக்கை, அல்லது விசுவாசம் கோபுரமாகும்; மனம் சிற்பியாகும். ஆன்மாவின் ராஜ்யத்தில் மனம் அரசனுக விளங்குகின்றது. மாந்தரின் மேன்மைக்கும், தாழ்மைக்கும் மனமே காரணமாகின்றது. காவியங்கள், புராணங்கள், தத்வஞான புத்தகங்கள், இன்னுமிவைபோன்ற இலக்கியங்களாகிய நல்லாடைகளை நெய்து வெளிப்படுத்தும் தறியாம் ஞானமென்பது. விசுவாசத்தின் பலதிறப்பட்ட வணிகங்கள் தாங்கிய மரக்கலங்களைச் சரியாக நடத்தி நற்கரையில் சேர்ப்பது விவேகமே. சமுசாரமென்ற சாகரத்தைக் கடந்து முக்தியெய்துதற்கு உதவுவது ஞானம் என்ற படகும் அறம் என்னும் மாலுமியே. குணநடத்தைகளை ஒழுங்கு படுத்தும் சிற்பி விவேகமே. அனுராகம், அடக்கம், நேர்மை பூததயை, விசுவாசம் என்பவைகள் தங்குமிடத்தைச் சீர்படுத்தி உயர்த்திக் காப்பது விவேகமென்ற சிற்பி. அப்போதைப்போது நம் முன்தோன்றும் இடையூறு இடுக்கண்களை அகற்றியும் குறைத்தும் மேற்செல்லக் கைகொடுத்து அநுகூலிப்பது விவேகமே.

புறங்காட்டி யோடுபவர்களுக்கும், முதலிலுண்டாகும் அபஜெயங்களினுல் மனத்தளர்ச்சியடைந்து கைக்கொண்டவைகளை நழுவவிட்டுத் துக்கிப்பவர்களுக்கும் உய்வில்லை. வாழ்வென்ற வீரன் வழியில் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்து, அல்லது அப்புறப் படுத்தித்தான் மேற்செல்லவேண்டும். ஜயாபஜயம் மனிதனுடைய குணநடத்தைகளைப் பொருத்திருக்கின்றன. அதிருப்தி துயரத்தை விளைவிக்கும்; துவேஷம், அல்லது அருவருப்பு நீசவார்த்தைகளுக்கும், இழிய செயற்களுக்கும் காரணமாகும்; அவநம்பிக்கை,

அல்லது அவிசுவாசம் வாழ்விற்குரிய இன்பசுகங்களை நசிக்கச் செய்யும். சஞ்சலம், அல்லது சலனம் மனதை அரிக்கும் துருவாகும்; கவலை புண்ணாகும். நற்சிந்தனைகளால் ஞானி புகழ்பெறுகிறான்; உபயோகமான கருத்துக்களால் கற்பிப்போன் (இம்மைப் போகங்களைப்பெற்று அநுபவிக்கச் செய்பவைகளை நூதனமாகக் கண்டுபிடித்து வெளிப்படுத்துபவன்) மேலோனுகிறான்; இனிய எண்ணங்களால் சிற்பி கீர்த்தியடைகிறான். ஆகையால், தூய்மையும், வாய்மையும், அழகு அல்லது நன்மையும் பொருந்தியவைகளைப்பற்றியே நினைத்துச் செய்வாயாக. ஆதியில் நியமிக்கப்பட்ட விதிகளை நிராகரித்தும், எதிர்த்தும் நடப்பதால் மனிதன் இடருற்று வருந்துகிறான். பாசத்தினுல் கண் பஞ்சடைகின்றது; காமத்தினுல் சரீரத்தின் உறுப்புக்கள் உபயோகமற்றுப் போகின்றன; தீமைகள் தேகத்தின் பொலிவையும், வன்மையையும், மனத்தின் மாண்பையும் அழித்துவிடுகின்றன. தைரியமும், விசுவாசமும், பொறுமையுமே வாழ்க்கையின் நண்பர்கள்.

விரிந்து ஆழமாக ஓடும் பெருநதியாம் வாழ்வு என்பது. நதியின் விசாலமும், ஆழமும் அது ஓடும் இடங்களைப் பொருத்திருப்பதுபோல், வாழ்வின் உயர்வும் தாழ்வும், அல்லது நன்மையும் தீமையும் அதைப்பெற்றுள்ள சரீரத்தின் அமைப்பைப் பொருத்திருக்கும். ஒவ்வொருவனும் தனக்குரிய நியமங்களைத் தெளிவாகவும், பூரணமாகவும் அறிய வேண்டும்; அறிந்தவைகளைச் செம்மையாகச் செய்யத் தீர்மானிக்கவேண்டும். மனோதிடம், அல்லது தீர்மானம் மனிதர்க்கு இன்றியமையாதது. ஒவ்வொருவனுடைய எண்ணங்களும், காரியங்களும், வெற்றிபெறுவோம் என்ற திடநம்பிக்கையுடன் செல்லும் பட்டாளங்களைப்போல், கைக்கொண்ட காரியம் பலிக்கும் வரையிலும், வீரம் - உறுதி - ஒழுங்குகளுடன் ஒன்றையொன்று பின்தொடர்ந்து செல்லவேண்டும். மனது ஆத்மாவின் நேத்திரமாகும். நம்மைச் சுற்றியிருந்து வருபவைகளைச் சரியாக உற்றுபார்த்துக் கிரஹிக்கும்படி மனதைப் பழக்கவேண்டும். மனத்தை நல்வழிகளிற் செலுத்துவதற்குக்கல்வி அவசியமானது. கல்வி மனதிற்கு உதவிபுரிவதைப்போல், சூக்ஷ்மதிருஷ்டிக் கண்ணாடி கூட நம் சாதாரண நேத்திரங்களுக்கு உதவுவதில்லை. கல்வியறிவுபெற ஊக்கமும், உழைப்பும் மிக்க அவசியமானவை. மிடியும் – உறக்கமும் மரணத்தின் சகோதரராகிறார்கள்; அவித்தை, அல்லது மடமை சாவினின் ஒற்றனுகிறான். எடுத்தாளாத ஆயுதம் துருப்பிடிப்பதைப்போல், சன்மார்க்கங்களில் உபயோகப்படுத்தப்படாத மனம் பாழாகின்றது. உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளாது. புஜபலமுள்ளவனுக்குத் தான் வெற்றி; தக்க வழிகளிற் செலவு செய்பவனுக்குத் தான் தனம்; ஞானமும், நீதியும் நிரம்பவுடையவனுக்கே கீர்த்தி. உண்டுறங்கி ரமித்திருப்பதற்கான உய்யானவனமல்ல இவ்வுலகம்; இது ஒரு பெரும்பாலைவனம். இப்பாலைவனத்தை ஓர் உத்தியானவனமாகச் செய்வதுதான் மனிதனின் முழுமுதற் கடமை.

சுயநன்மைகளைப்பெற்றபின், நம்முடனிருந்து வருபவர்களின் இன்ப சுகங்களையும் நாம் கவனிக்க வேண்டும். பிறரை மதியாத தற்புகழ், சுயலாபம் என்பவைகளை விரும்பிப் பாடுபட்டுவருதல் துரோகமாகும்; சுயத்தை முற்றும் மறந்து இதரரின் அகதுக்கங்களையே முன்கருதி உழைத்தல் மதியீனமாகும். சுயநலத்தைக் கருதி ஞானவிஷயங்களில் பிரவிர்த்தித்து உழைப்பவன் கலைஞனுகிறான்; கற்பனுசக்தியை அபிவிர்த்திசெய்பவன் லலிதனுகிறான்; வாக்கு வல்லமையை மேன்மேல் வளரச் செய்பவன் சபாப்பிரசங்கனுகிறான்; பிறர் கஷ்டநஷ்டங்களை முன்னிட்டு உழைத்து அவர்களை இன்புற்றிருக்கச் செய்பவன் லோகோபகாரியாகிறான்; சுதந்திரத்திற்காக வேலைசெய்பவன் சூரனுகிறான்.

எல்லாவற்றினும் மேலானதாய், ஆதியந்தமற்றதாய், எங்கும் நிறைந்ததாய், எப்பொழுதும் நன்மையே செய்வதாய் ஒரு சக்தி இருக்கிறது. அதின் சட்டங்ளே ஸ்திரமானவை. சிறுமுல்லையின் மணமும், தாமரையின் கம்பீரமும்-அழகும் மலை-வனங்களின் இனிமையும், சர்க்கரையின் தித்திப்பும, எட்டியின் கைப்பும், மானின் ஓட்டமும், நரியின் தந்திரமும், புலியின் கொடுமையும், கேசரியின் பெருந்தகைமையும், நீரின் தன்மையும், அக்கினியின் கொதிப்பும் அதின் வேலைகளே. பிரகாசமான மேகங்களின் சுவர்ண நிறத்தையும், மயில் தோகையின் மரகதத்தையும் எழுதியது அதுதான். இடியும், மின்னலும், காற்றும், மழையும் அதின் அடிமைகள். அது எப்பொழுதும் வேலைசெய்துகொண்டே

யிருக்கின்றது. அதின் போக்கை ஒருவராலும் தடுக்கவாவது, அல்லது திருப்பவாவது முடியாது-அதுதான் இரக்ஷிப்பதும் கொல்வதும், உண்டுபண்ணுவதும் அழிப்பதும். அதன் சட்டங்களுக்கு விரோதம் செய்கிறவன் கஷ்டமடைகிறான்; அவைகள் நிறைவேறிவர முயலுபவன் லாபமடைகிறான். அவைகள் நன்மைக்கு நன்மையும், தீமைக்குப் பிரதி தீமையும் செய்துவருகின்றன.

நீங்கள் விதைக்கிறதையே அறுக்கிறீர்கள். நெல்விதைத்தவன் பின் நெல்லையே பெறுவான். அதுபோலவே இப்பொழுது நன்மையென்ற விதையை விதைப்பவன் பின் அதற்குத் தக்க கைம்மாறு பெருவான். ஆதலால், ஒவ்வொருவனும் துன்பங்களுண்டாகும் காரணத்தைத் தீர அறிந்து அவைகளைப் பொறுமையுடன் சகித்து, தன்னால் கூடிய வரையிலும் பிறர்க்கு அன்பும்-உண்மையுமே கொடுத்து, ஒருவர்க்கும் அணுவளவும் துன்பஞ்செய்யாது, தன் மனதிலிருந்து பொய்யையும் - ஆசையையும் ஒழித்து, எதையும் தாழ்மையுடன் அநுபவித்துக்கொண்டு, ஒவ்வொரு நாளும் பரிசுத்தத்தையும், நியாயத்தையும், அன்பையும், நேர்மை அல்லது வாய்மையும் அபிவிர்த்தி செய்து, காமாதிகளில் உழலாது இருக்கப் பிரயத்தினஞ் செய்ய வேண்டும்.

ஈவு, இரக்கம், பொறுமை, வீரம், தன்னம்பிக்கை என்பவைகளே ஜெயத்திற்கு மூலாதாரமாவன. கசடர்களின் அங்கியாம் மோசம் என்பது; உடனே விரிந்துடையும் நீர்க்குமிழிபோன்றது. கபடம், உண்மை யென்பது அசையாப்பாறை; அறம்வற்ரு ஊற்றுநீர். கடித்தெறியும் பாம்பு, கிழித்துதறும் ஓநாய், கொன்றுதின்னும் புலி முதலானவைகளின் குணத்தை ஒத்தது அபக்தி, அல்லது துரோகம் என்பது.

கடனில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. உனக்குத் தேவை யில்லாத பொருள்களையும், நீ பெற்று அநுபவிக்கமுடியாத அருமைப் பதார்த்தங்களையும் வாங்காதே. பிறரிடமிருந்து ஒன்றையும் பரிசாகப் பெருதே.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்." மிகவும் சாமான்ய அன்னபானாதிகளை ருசிக்கச் செய்வது ஆரோக்கியமே; கைமேற் கொண்ட வேலைகளை உற்சாகத்துடன் செய்யத்தூண்டி உதவுவது ஆரோக்கியமே; வாழ்க்கையைப்பற்பல அபாயங்களினின்று விடுவித்துக் காப்பாற்றும் பரமௌஷதமும், சிறந்த ஆயுதமுமாம் ஆரோக்கியம் என்பது; வாழ்வென்ற கோப்பையை அமிர்தமாகிய சந்தோஷத்தினால் நிரப்புவது ஆரோக்கியமே.

இடையூறு - இடுக்கண் - இடர் - இன்னல் - கஷ்டநஷ்டம் என்பவைகளெல்லாம், பெருமழைபோல், தங்கள் பலன்களை உன்மேல் தாரைதாரையாக வருஷித்தாலும், நீ அவைகளுக்கு இடங்கொடாதே. சோர்ந்தால், உட்கார்ந்து ஆறுதலடைவாயாக; பின் மேற்செல்ல மீண்டும் முயலுவாயாக. உன் குண நடத்தைகளைப் பலப்படுத்தி என்றுமழியாக் கீர்த்தியையும், ஐசுவரியத்தையும் வெற்றியையும் அளிப்பது அவ்விடையூறுகளே. ஆரத்திர ஆலோசித்து விடாமுயற்சியினாலும் உழைப்பினாலும் கிடைக்கப் பெருத திரவிய லாபங்கள் சடுதியில் மறைந்துபோம்; உபயோகமற்றவையாகும். தளர்ச்சி, கோழைத்தனம், வியாகுலங்களைப் போக்குவது ஊக்கமும், உழைப்புமே; வியாதிகளை அகற்றுவதும், நூதன விஷயங்களை வெளிப்படுத்துவதும், தர்மத்தை வியாபிக்கச்செய்வதும் ஊக்கமும், உழைப்புமே. முன்செல்ல வேண்டுமென்ற எண்ணமே விதையாகும்: ஊக்கமும், உழைப்பும் உழவுகோலாகும்; நம்பிக்கை தெண்ணீராகும்; ஜெயம் பலனாகும். பண்டை வினைப்பயன்களும், காலஸ்திதியும் எங்ஙனமாயினும் அவைகளைப் பொருட்படுத்தாது அப்புறப்படுத்தி, அல்லது அடக்கி, நன்மையையே கடைப்பிடித்து மேற் செல்லுதலே விவேகியின் மெய்யியல்பு. வாழ்க்கையின் கொடூரங்களைத் தணிப்பது விசுவாசம் என்ற தண்ணீரே; புண்ணடைந்த நெஞ்சுகளை ஆற்றும் பரிமள மொழுகாம் விசுவாசம் என்பது; தைரியம், விடாமுயற்சி, விவேகம், அன்பு, இரக்கம், ஈவு என்பவைகளைப் பாதுகாத்து மேன்மேல் ஓங்கி வளரச்செய்வது விசுவாசமே.

பேராசையாகிய அக்னி தங்கம், அல்லது பணம் என்ற வெண்ணெயினால் மேன்மேல் எரிகின்றது.

நன்மையை அறிந்து பின்பற்றிச் செய்வதற்காகவே நாம் இப்பூமியில் ஜெனிப்பது; தூங்குவதற்கல்ல. அறத்திற்கு மூலாதாரமாவது ஞானம்; ஞானத்திற்கு இன்றியமையாதது கல்வி. அவித்தை, அல்லது மடமை என்றதை இங்கிருந்து துரத்தவேண்டும். இல்லையானால், சகலரும் அவதிப்பட வேண்டியது தான்.

"The end of man is in Action and not a thought though it were the noblest."

7-MAY 1919 MADRAS

காலதத்தன்.

[ஸ்ரீமான் - என். எஸ். சுப்பிரமணியம் எழுதியது.]

(32-வது பக்கத் தொடர்ச்சி)

II

முதல் அத்தியாயத்தில் கூறப்பட்ட ஸம்பவங்கள் நடந்தபொழுது, பிரதாபன் இளவரசன். அவனுக்கு அப்பொழுது வயது 18. அச்சம்பவங்கள் நிகழ்ந்து பத்து வருஷங்களுக்குப் பிறகு நடந்தவற்றை இவ்வத்தியாயத்தில் கூறுவோம்.

"ஜயப்ரதாப! ஜயஜயப்ரதாப!!" என்ற ஜயகோஷம் முழங்கிற்று. மகாராஜா பிரதாபனுடைய முதற் குமாரனும், இளவரசுமான சாந்த குமாரனுடைய முதல் 'அப்தபூர்த்தி'க் கொண்டாட்டம் அன்றையதினம். எட்டுக் குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு திவ்ய வாகனத்தில் மகாராணியார் தன்னுடைய ஒரு வயது இளங்குமாரனை மடியில்வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். அவர்களருகில் மகாராஜா பிரதாபன் வீற்றிருந்தான். அவன் முகம் மலர்ந்திருந்தது; ஆனந்தத்தில் மூழ்கியிருந்தான். "அரசே! நம் சாந்தத்தினது முகத்தின் சாந்தியைப்பாரும்" என்றாள் மகாராணி. பார்த்து ஆனந்தித்தான் பிரதாபன். யானை, குதிரை, ரதம், காலாட்படை முதலியன சூழ, தம் பிரஜைகளெல்லாம் குதூகலத்துடன் பின் தொடர்ந்துவர, மகாராஜா அம்பிகையின் கோயிலை வந்தடைந்தார். அம்பிகையின் அநுக்ரஹம் பெற்றுப்போவது ராஜபரம்பரையின் வழக்கம்.

அம்பிகைக்கு ஆராதனைகள் நடந்தன. மகாராஜா சாஷ்டாங்கமாக அம்பிகையைப் பணிந்தார். எல்லோரும் பணிந்தார்கள். பிறகு குழந்தை 'சாந்த'னை அம்பிகையின் பாதத்தில் ஸமர்ப்பித்து, அம்பிகையை ஸ்துதித்தார்கள். வாத்யகோஷம், வேதகோஷம் கரகோஷம், ஜயகோஷம் முதலியன முழங்கின. புஷ்பங்கள் இறைக்கப்பட்டன. சந்தனம், பழம், சர்க்கரை, பிரஸாதங்கள் முதலியன வழங்கப்பட்டன. எங்கு பார்த்தாலும் குதூஹலம்! எங்கு பார்த்தாலும் ஆனந்தம்!!

குதூஹலத்தில் மஹாராணியாரின் ரதத்தினடியில் முகமூடிபோட்டுக்கொண்டும், உடம்பு முழுவதும் கறுப்பான உடையணிந்து கொண்டும் ஒருவன் பதுங்கியிருந்ததை எவரும் கவனிக்கவில்லை. மகாராணியார் தன் குழந்தையை மார்பில் சார்த்திக்கொண்டு ரதத்தில் ஏறுவதற்கு முதற்படியில் காலைவைத்தார்கள். அச்சமயம் ரதத்தினடியில் பதுங்கியிருந்த மனிதன், குபீலென்று ராணிமேற் பாய்ந்து, குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு ஒரு நொடியில் எங்கோ சென்று மறைந்தான். எங்குதேடியும் அவன் அகப்படவில்லை. ஆகவே, அன்று குதூஹலம்போய் துக்கம் வாஸம் செய்தது.

III

இன்னும் இருபது வருடங்கள் சென்றுவிட்டன. 'கபாலி' என்ற ஒருவன் ஊருக்கப்பாலிருந்த ஒரு தனியங்களாவை வாடகைக்கு வாங்கிக்கொண்டு அங்கு வசித்துவந்தான். அவனும், சுமார் இருபத்திரண்டு வயது மதிக்கக்கூடிய ஒரு வாலிபனும் அங்கு வசித்து வந்தார்கள். அந்த வாலிபனுக்கு வெளியில் நடக்கும் ஸமாசாரங்கள் தெரியாது. அவனுக்கென்று ஒரு அறை உண்டு. அதில் அவன் உட்கார்ந்துகொண்டு சித்திரம் வரைவதுதான் அவன் வேலை; வேறு மனிதப் பழக்கமே அவனுக்குக் கிடையாது.

ஒருநாள் 'கபாலி' அந்த வாலிபன் அறைக்குள் நுழைந்தான். உடனே வாலிபன் எழுந்திருந்து கபாலிக்கு ஆஸனமளித்துப்பக்கத்தில் நின்றான்.

"குழந்தாய் உட்காரு" என்று சொல்லித் தன்பக்கத்தில் வாலிபனை உட்காரவைத்துக்கொண்டான் கபாலி. பிறகு மடியிலிருந்து ஒரு படத்தை எடுத்து வாலிபனுக்குக் காண்பித்தான்; அதைப்பார்த்தவுடன் வாலிபனுக்குத்தன்னையுமறியாமல் ஒருவிதமான உணர்ச்சியுண்டாயிற்று.

வாலிபன் :—இது யாருடைய படம்?

கபாலி :—இதுவரையில் உன்னிடம் காண்பிக்காமல் வைத்திருந்த உன் தாயாரின் படம்.

வாலிபன் அப்படத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டான்; கீழே வைத்து வணங்கினான்; பிறகு எடுத்து மடியில்வைத்துக்கொண்டான்.

வாலிபன் :—பிதாவே! என் தாயாரைப்பற்றி எனக்குஎன்றுசொல்லுவீர்கள்? நானும் கேட்காதநாளில்லை. நான் கேட்கும்போதெல்லாம் துக்கத்தால் தலையைக் கீழே தொங்கப்போட்டுக்கொண்டு, உடனேஎழுந்து சென்றுவிடுகிறீர்கள். இன்று விடேன். கட்டாயம் தாங்கள் சொல்லித்தான் ஆகவேண்டும்.

கபாலி :—இன்றுதான் சொல்ல உத்தேசித்திருக்கிறேன். உன் தாயாரைப்பற்றி அறிய உனக்குப் பாத்யமுண்டு. கேள். உன் தாயின் சரிதை மிகவும் விசனிக்கத்தக்கது. அவள் உன் பிதாவுடன் சௌக்யமாயிருந்தாள்; உன் பிதாவைத்தன் உயிரைப்போல் கருதிவந்தாள். அப்படியிருக்க, ஒருபாதகன் அவளையபகரிக்க எண்ணினான். நீ பிறந்து ஒருவருஷமானபிறகு, உன் தாய் உன்னுடனும், கூடஒரு தாதியையழைத்துக்கொண்டும் வெளியில் காற்றுவாங்கப்போனாள். அன்று அவளை அபகரிக்க எண்ணிய பாதகன் நீங்களிருந்த வண்டியைத்தொடர்ந்துவந்து உன் தாயைக்கவர்ந்துசென்றான். பாவியை நான் ஒன்றும் செய்யக்கூடவில்லை. ஏனென்றால், அவன் மிகுந்த பராக்ரமசாலி.

வாலிபன்:—யார்? யார்-அந்தப்பாதகன்? சொல்லுங்கள். இப்பொழுதேசென்று அவனை வதைக்கிறேன்.

கபாலி:—ஆத்திரப்படாதே குழந்தாய். நம்மால் அவனை ஒன்றும் செய்யமுடியாது. அவனிருக்குமிடத்தைக்கூட நம்மால் அணுக முடியாது.

வாலிபன் :—அவன் எங்கிருந்தாலும்சரி. அங்குசெல்வேன். கோட்டைக்குள்ளிருந்தாலும், அதை இடித்து த்வம்ஸம் செய்துவிட்டுப்போவேன். சொல்லுங்கள் அவன்பெயரை.

கபாலி :—ஏன் வீண்வார்த்தை? அவனை நம்மால் அணுகவே முடியாது; முடிந்திருந்தால் நான் இதுவரையில் சும்மாயிருந்திருப்பேனோ?

வாலிபன் :—இனி என்னால் சகிக்கமுடியாது. என் தாயை யபகரித்தவனின் பெயரை உடனே சொல்லுங்கள், இல்லாவிடில் என்னுயிரை மாய்த்துக்கொள்வேன் இப்பொழுதே.

கபாலி:—அவன் இவ்வூர் அரசன்தான்.

IV

மகாராஜா பிரதாபன் தன் அந்தரங்க அறையில் ஸமஸ்தான விஷயங்களை ஆராய்ந்துகொண்டிருந்தான். மேஜையின் மேல் தஸ்தாவேஜுகள் கட்டுக்கட்டாய்க் குவிந்து கிடந்தன. சென்ற பத்து நாட்களாய்த் தன்னையறியாமலேயே, அவன் மனம் இருபது வருஷங்களுக்குமுன் இழந்த தன் புதல்வனைப்பற்றிச் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. ராஜ்ய சம்பந்தமான வேலைகளோ குவிந்து கிடக்கின்

றன; வேலை செய்யவோ ஓடவில்லை. திடீரென்று கதவு திறக்கப்பட்டது. ஒரு வாலிபன் வந்து எதிரே நின்றான்.

வாலிபன் :—என் தாயை அபகரித்த பாதகனைக்கண்டேன். நீயும் ஒரு அரசனோ? அரசன் பிரஜைகளுக்குப் பிதாவென்னும் நியாயத்தை உணர்ந்திருக்கிறாயோ? மானிடப்பதரே! நீ கிரீடத்தைத்தாங்க யோக்கியதை யுடையவனல்லன்.

வாலிபன் அரசனை உற்று நோக்கினான். அவன் முகத்தில் விளங்கிய தேஜஸையும், குற்றமற்ற தன்மையையும் கண்டு தன்னையறியாமலே, தான் அத்தகைய மகானைப் பார்த்துப்பேசியவற்றிற்காக வெட்கி மேலே சொல்ல நாவெழாமல் நின்றான் ஒரு க்ஷண நேரம்.

மகாராஜாவும் பிரமித்துப் போனார். அந்த வாலிபனுடைய முகத்தை அவரும் உற்றுநோக்கினார். இன்னதென்று விவரிக்க முடியாத ஒருவித உணர்ச்சி அவர் உள்ளத்தில் உண்டாயிற்று, வாலிபனின் அகன்ற மார்பும், கோபத்தில் கூட அவன் முகத்தில் தோன்றிய சாந்தியும், தேஜஸும் அரசனைக் கவர்ந்தன.

அரசன் :—நான் ஒரு ஸ்திரீயையும் கவர்ந்ததில்லை; வாலிப! நீஏதோ ஏமாற்றப்பட்டோ அல்லது மோசம்போயோ இவ்வாறு பிதற்றுகிறாய்.

முற்கூறிய வெட்கம் ஒரு க்ஷணநேரந்தான் வாலிபனிடம் இருந்தது. தன் தாயைக் கவர்ந்தவன் அரசனானாலென்ன, மற்று எவனாயிருந்தாலுமென்ன? பாபிக்கு இரக்கப்படுவதுமுண்டோ?

வாலிபன்:—நீ சொல்வது பொய்; நீ என் தாயைக் கவர்ந்தாய்; என் பிதா கபாலி எனக்கு இன்று தான் சொன்னார். நீ இறக்க வேண்டியதுதான். உடனே ஆயத்தமாயிரு. ஒரு நிமிஷகாலந்தான் கொடுப்பேன்.

அரசன் :—உன்னைக் கடிந்துகூற எனக்கு நாளாகவில்லை; நீ சந்தேகமின்றி மோசம் போயிருக்கிறாய்.

புலிக்குட்டிபோல் அரசன்மேல் பாய்ந்தான் வாலிபன். "ஒரு நிமிஷநேரம் ஆய்விட்டது. என் கையால்மடி" என்று சொல்லிக்கொண்டு வலது கையிலிருந்த கத்தியை ஓங்கிவிட்டான். ஆனால், ஓங்கிய கையை ஒரே பிடியாகப் பிடித்துக்கொண்டான் பிரதாபன்.

பலங்கொண்ட பிரதாபன் ஒரு நொடியில் வாலிபனிடமிருந்த கத்தியைப் பிடுங்கி அப்புறம் எறிந்துவிட்டு, வாலிபனை ஒரு கையால் மடக்கிப்பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் அருகிலிருந்த கயிற்றை இழுத்தான். உடனே சேனாதிபதி ரணவீரன் உடைவாளையுருவிக் கையிலேந்திக்கொண்டு ஓடிவந்தான்.

அரசன் :—ரணவீர! கபாலியார்?

ரணவீரன் :—இன்னானென்று திட்டமாகத் தெரியவில்லை. ஏதோ கொஞ்சகாலமாய் ஊருக்கு வெளியிலிருக்கும் பங்களாவில் வாஸம்செய்து வருகிறான். எப்பொழுதும் வீட்டிற்குள்ளேயே இருக்கிறான்.

அரசன்:—உடனே சென்று அவனைக் கைதிசெய்து என் முன்கொண்டுவா.

ரணவீரன் :—மகராஜ் உத்தரவு.

ரணவீரன் சென்றதும் பிரதாபன் தன் முன்நின்ற வாலிபனை இறுகத்தழுவி "கண்ணே! என்மைந்தா! நீ என் குமாரன். உன் பிதா என்று சொல்லுகிற 'கபாலி' யின் உண்மைப் பெயர் காலதத்தன்; காரணமில்லாமல் என்னைப்பால்யம் முதல் வெறுத்தான். என் குமாரனைக்கொண்டே என்னை வதைக்க வெண்ணி, நீ ஒரு வயதுக் குழந்தையாயிருக்

கும்பொழுதே உன்னை அபகரித்தேகினேன். உன் தாயார் முகத்தின் சாயலுடைய உன் முகமும், நீ சொன்ன அபாண்டமான சங்கதிகளும் நிச்சயமாய் நீ என்மைந்தன் என்று எனக்கு விளக்கின. ஏனெனில், என்னை வெறுப்பவர்கள் காலதத்தனைத் தவிர உலகில் வேறு ஒருவருமில்லை. என்னைப்பற்றி அபாண்டமான பொய்களை அவன் ஒருவனே சொல்லத் துணிவான். கபாலியின் நடத்தைகளைப்பற்றி ரணவீரன் சொன்னதும், நிஜமாய் எல்லா விஷயங்களும் விளங்கிற்று.

அச்சமயம் மகாராணியார் அவ்வறையில் நுழைந்தார்கள். அவள் முகத்தைப் பார்த்தான் வாலிபன். தனக்குக் கபாலி காண்பித்த படத்தின் உருவம் போலிருந்தது "அம்மாவென்று கதறிக்கொண்டு, பிரமித்து நின்ற 'கமலா' வின் மேல் சாய்ந்தான்.

திலோத்தமா.

[ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், பி. ஏ., எழுதியது]

I. அங்கம். 1-வது காட்சி.

இடம்:—காஞ்சிமாபுரியில் தொண்டைமான ரண்மனையிலோரு விடுதி.

காலம்:—மாலை.

(கீழே வரும் காட்சியின் சுருக்கம்:—தஞ்சையையாண்ட சோழவேந்தனுடைய புதல்வன் மகேந்திரனும், மந்திரி புதல்வன் மகிபதியும், பகையரசன்தேசமாகிய காஞ்சிமாபுரத்தில், முறையே, மாரன், வீரன், என்னும் புனைபெயர்களுடன் இரண்டு ஏவலராயிருக்கையில், காஞ்சித்தொண்டைமான்புத்திரி திலோத்தமை மகேந்திரனைக்கண்டு அவன் மீது வேட்கைகொள்ள, இருவரும் மாலைவேளைகளில் பூங்காவில் அந்தரங்கமாய்ச் சந்தித்து மொழிந்துவருகின்றனர். திலோத்தமை மகேந்திரனை உண்மையில் ஏவலனென நினைத்தாளாதலின் தான் திலோத்தமாவின் தோழியெனத் தன்னையும் இழித்துக்கூறிவருகின்றனள். அவளை உண்மையில் யாவளென உணர்ந்த மகிபதியும் அவள்மீது மோகங்கொண்டு, மகேந்திரனை வஞ்சிக்க நினைத்துப் பகையரசனூரில் அவ்விதம் காதல்கொண்டலைவது தீங்கைத்தருமென நன்மதிபுகட்டி அவன் மனதைக் கலைக்க முயல்கிறான். மகேந்திரன் அதை அசட்டை செய்து சோலைக்குப்போகிறான். மகிபதியும் அங்கு நிகழ்வதை ஒளிந்துகேட்டுவருகிறான்.)

மகிபதி உட்கார்ந்திருக்க மகேந்திரன்வெளிக்கிளம்புகிறான்.

(புன்முறுவலுடன்)

மகிபதி.

நண்பா! மகேந்திரா! நடப்ப தெங்ஙனம்?
பெண்பா லித்தகைப் பித்தமுற் றலைந்துநீ
கனவிலு நினைவிலுங் கலங்கி யுருகினாய்!
உணவுந் துயிலு மோய்வு மொழிந்தன.
நெடுமூச் செறிந்தாய்; நெகிழ்ந்துடல் சோரத்
தடுமா றிப்பெருந் தகைமையு மேன்மையும்
அஞ்சலில் சீயமாந் தஞ்சையாள் சோழரின்
புத்திர னுகுமப் புனிதமு மிந்நகர்
மெத்தவும் பகைவளர் வேந்தனூ ரெனவொரு
தினைத்துணை நினையா தனைத்தையு மறந்தாய்.
கேவல மிழிந்தவள் சேவகம் புரியுமோர்
பூவையை விரும்பிநீ போகுதல் தகைத்தோ?
இழுக்கே யுண்டாம்; விபத்திற் புகுத்தும்;
ஒழுக்கமு மன்றெம தூரெலா நகைக்கும்.

மகேந்திரன்.

அறிவே யுருவெனு மமாத்தியர் மகனாய்
வருநீ இத்தகை மடமைப மொழிவையோ!
உலகெலா மமைத்த ஒருதனி யிண்ணவின்
அலகிலா வல்லமை யாற்ற லியாவினுங்
கயல்விழி மடப்பெடைக் கரும்புநேர்சுவைமொ
மயிலியல் மனோக்கிய மங்கையின் மேம்படு [ழி

162065

புடைப்பு முளதோ! பாவையர் மாட்சியை
நெரிடிப்பவ ரெவரோ! உலகெனு மகன்ற
வாவியிற் குயிற்றிய வனசமா மலர்நிகர்.
காவிசேர் விழியரைக் கண்டெனல் சிறுமையே.
கண்டா லின்பமாங் கவினுறு பொருள்தமை;
உண்டா லின்பமாஞ் சுவையெனு மனைத்தையு
முக்கனி மதுபால் முதலுறு பொருள்தமை[ம்;
இக்கனி யொத்தன வென்றிடல் பொருந்தா.
மனத்தா லெண்ணினு மகிழ்வு சுரக்கும்;
நினைத்தா லைம்புலன் நெக்குநெக் குருகப்
பரமா னந்தம் பலிதமா முடனே.
சுரர்மா வமிழ்துந் துறக்கமு மடந்தையே!
கடுமன வன்செயற் கரடிவெம் புலிகடம்
பெடையினங் காணுமுன் பிடெலா மிழந்து
நாடி வணங்கி நயம்பட வொடுங்கி
நாவினு லவைபத நக்கியின் புறுத்தும்.
யாவையு மகற்றி ஐம்புல னடக்கியோ
னடல்பெறு மாமுனி யாயினி மெழில்விரி
மடவரல் கண்ணுற மனோதிட மிழப்பன்.
கரைந்தமு மதலையர் கனிமன வனிதைமென்
கரம்பட நகைகொடு களிபெற் றுடுவர்.
இம்மையி னெல்லையி னின்றுடல் தளர்ந்து
செம்மையி ழுந்தவ னெண்பதா மாண்டினன்
எழிலிலா னாயினு மிளையதன் மனைவிபின்
தொழிலெலா மொழித்துத் தொடருவ
[னுயிரிலாப்
பொருளென மனைதனிற் பூட்டுவ னவள்
[பொருட்
டெத்தகை யிடரெனுங் கொலையெனும்
[புரிகுவன்.
அங்ஙன மாகவென் பைங்கிளி யெய்தொணு
எத்துணை மேன்மையு மிணையிலா நன்மையுஞ்
சித்திர வடிவநேர் சேட்டிள மேனியும்
குணகல மியாவையு மொருங்கே சமந்தநன்
மணியெனு உயிரென மதித்தவம் மயில்முகங்
காணு தொருநொடி கழித்திட லேலுமோ!
நானு தெத்தகை நவைதரு கருமமு
மவள்பொருட் டேற்பே னலக்கணை மதியேன்.

மகிபதி.

எத்தகை யதிசயம்! இன்னு நிகழுமோ?
சித்தமு மறிவுஞ் செம்மையி நீந்தவோ?
பசியினும் புல்லிறை பல்லவ முண்ணுமோ?
திசைதொறும் பணிவொடு திறைகொளும்
[பெற்றியன்
மன்னவர் மன்னவன் மாமணித் தஞ்சையாள்
மைந்துகொள் சோழர்கோன் மைந்தனு
[மென்பதைச்
சிந்தையி லோர்ந்திலை; தேயம னைத்தையுங்
கண்ணுற விரும்பியாங் காதலார் தாதைபா
லெண்ணமு ரைத்தபோழ் தன்னவ ரேவிய
பணிதனை மீறுமித் துணிவையாங் கொண்ட
[னம்.
பண்டைநாள் முதலிரும் பகைவளர்
[கொடியவன்
தொண்டைமா னுறைநகர் ஒருவிய தற்குள்
நுழையா தேகிட நுவன்றன ரதில்யாம்
பிழையே புரிந்தோம். விலக்கிய செய்தோம்.
பகைவன் வன்மையும் படைகளின் தன்மை
[யும்
இங்குபோந் துணரச் சங்கையிற் கொண்டு
[யாம்
கேவல மிழிந்தவிக் கீழோர் குழாத்திரு
காவல ராளும். கோவைப் பணிந்தரண்
மனையில் வதிந்திவண் மருமமு ணர்ந்துயாம்
துனைவிலிப் பகையவ னூரைவிட் டகன்று
போதலை விரும்பலே புத்தியி னழகலாற்
காதலை வளர்த்திவண் காரிகை யொருத்தியின்
பற்றையு முறவையும் பற்பல தீங்கையும்
பெற்றிங் கிருந்தாற் பெயருத லெத்தினம்?
கண்டன மனைத்தையுங் கடுகியித் தன்புகூர்
தொண்டைய னெல்லையா மொல்லையில்
[விடும்போம்.
பேதைமை யகற்றிநின் பித்தெலா மொழிப்
[பாய்;
பேய்முக மறப்பாய்: பெயர்தலை யெண்ணு
[வாய்.

மகேந்திரன். (அன்போடு கடிந்து)
வாய்தனி லித்தகை வன்மொழி பிறந்ததோ ?
ஐந்தையுங் கொன்றுய ருந்தவம் புரிந்தோர்
மைந்தையு மீறிய மஞேதிட மடைந்துநீ
தத்துவ முரைத்தெனை மெத்தப் பழித்தனை.
பிறவியிற் குருடன் போழ கிளையதென்
றறிவனே ! அவனுக் கனைத்துங் கங்குலாம்.
எத்தின மாயினு மேந்திழை யொருத்தியை
நத்திநீ யலைவா யக்கா லுரைப்பேன்.
வனிதையைப்பேயென வகுப்பனேபித்தனும்?
மனதுயிர் கவர்ந்தவம் மங்கையர் தலைவியின்
பேரொழில் குணநலம் பேசுதற் குரியவோ !
ஆருயி ரெனவெனை மதித்தவள் வேட்கையின்
மிகுதிக் கிணையிம் மேதினி யறியுமோ !
தகுதியே மலிந்தவத் தையலந் தோகையாள்
ஒருதின மென்முக நோக்கா திருக்க
வரினுயிர் விடுப்பாள். மணந்தா லவளையே
மணப்பேன் ; அன்றேல் தணப்பே னுவியை ;
மகிபதி நண்ப !வென் மனதையு மாசையும்
சகமதிற் றையலே கொள்ளை கொண்டனள்.
இருவரு முயிர்மெய் யென்னலா மொருமை
[யும்
பிரிவுறு வொருபொருட் டன்மையு மெய்தி
[னேம்.
அவளே புவியா மன்றேல் நரகாம்.
தவமே வடிவாந் தையலை விடுத்துப்
போதலை யெண்ணிற் போகுமென் னுருயிர்.
காதலி பொருட்டெக் கருமமுந் துணிவேன்.
வீரியங் கருதேன்; விழுமமு நினையேன்.
நாரியின் பொருட்டென் னவையெனு
மதியேன் ;
அலக்கணு மோரேன் ; அல்லலும் பாரேன்.
விலக்கொணு என்னுய ரசியல் விலகினும்
இம்மையு மறுமையு மினியெனக் களிக்கு
நன்மைக ளனைத்து மகலினுங் கவலேன்.

மகிபதி.
எத்தகை யாதரம்! எப்பெருந் தோத்திரம் !
மெத்தவே வெட்கினேன் ! மேதினி நகைத்
[திடும்.
குவலய மெலர்மோர் குடைக்கீ ழளிக்குங்
கோப்பெருஞ் சோழரின் கொற்றவ ருதவிய
மேம்படு குரிசிலாம் வீற்றிள வரிமா
ஒப்பிடற் குரியளோ ஓதிய கீழ்மகள் ?
எத்துணை யாயினு மெமக்கிணை யெனத்தகாத்
தொண்டைமா னளித்தவத் தோகையாள்
[மாட்டிழி
தொண்டுசெய் பாங்கிநற் சுந்தரம் பெற்றதா
லுத்தமி யாவளோ? உயர்வளோ யாவினும்?
சித்தமி தற்கிட மெங்ஙன மீந்ததோ !
பணிபுரி தன்மையாற் பணிமக ளொருத்தியை
மணம்புரி வேட்கைநின் மனத்தி லெழுந்த
[தோ?
நின்கழற் குறட்டையு நீக்குதற் கருகளோ ?
நின்கரம் பற்றலும் நெடியவித் தரணியாள்
செம்மலர் தேவியின் சீரெலாம் பெற்றுயர்
சிம்மா தனமிசை யிணையா யாண்டிடல்
சிறுமயிற் சிறுமையே யென்பதை மறந்தை
யோ ?
பொறுமையா டைக்கியிப் புன்மைவி லக்கு
[வாய்.
வேண்டா மிதைநீ விடுப்பாய் ; நேயனே !
மகேந்திரன்:—போபோ மூடனைப் போலமொ
[ழிந்தையே !
குலத்தாற் பெருமையோ ! குணத்தாற்
[பெருமையோ ?
நலத்தான் மேன்மையோ ? தலத்தான்
[மேன்மையோ ?
நத்தைய ளித்திடு முத்தையு மரவின்
நெற்றியி லுறுமிகை யிணையிலா மணியையுங்
குற்றமென் றகற்றுதல் குவலயத் துளதோ ?
பணியா முடிபெறு பார்த்திப னாயினு
மணிவான் சிரமிசை ; அரிதென மதிப்பான்.
ஆவையு மைவிழிப் பொய்யிடை யெழில்வழி
பாவையர் தம்மையும் யாவினு மிழிந்த
குலத்திற் கொள்ளினுங் குற்றமன் றெத்
[தகைச்
சிறப்பும் போற்றலுஞ் செல்வத் தாலாம்.
பிறப்பா லுறுவதோ ஏற்றமு மிழுக்கும்?
குணநல மெழில்நல மனநல மொப்பிலாத்

துணைநல முதலுறு தொல்வினைப் பயனும்
பேறெலாம் பெற்றிட லியற்கை மேன்
[மையா
லூரெலா மலையினு முயர்நல மடவர
லடைதலெ ளியதோ ? அன்பனே ! யன்னப்
பெடைதனை யொத்தவப் பெண்மணி யாள்
[தனைப்
புன்மையாய் மதித்துநீ புகன்றால் முனிவேன்.
இதுவரை என்னுள விருப்பிற் கிணங்கநீ
உதவினை ; பற்பல சூசனை சொற்றனை ;
என்வாழ் நாளெலா மின்பம் பெருக்கி
நன்வாழ் நாட்களாய் நடத்தற் காகுமென்
உயிரினு முரியதாய் உயரிய செயல்தனில்
துயர்தரு மொழிதனை யுரைத்திடல் தகைத்
[தோ ?
மந்திரி புதல்வனே ! மகிமதி ! இதற்கொரு
தந்திர நினைத்துநீ யறிந்தெனக் கோதுவாய்.
மாலை கவிந்தது. மங்கையம் மெல்லியல்
சோலையில் வந்துயான் தோன்றிடக் காணுச்
துன்பால் மெலிந்து துயர்வுற் றயர்வாள்.
ஆதலாற் கடுகியா னங்ஙனஞ் செல்லுவேன்.
ஓதிய வற்றைநீ யோசனை புரிந்துனை
நத்திய வேட்கை நலம்பெற மொழிவாய்.

மகிபதி. (சலிப்பாக)
சித்தமே சட்டம், செல்செல் விரைவாய்.

(மகேந்திரன் சென்றவிடல்)

மகிபதி. (தனக்குள்)
காதலில் மூழ்கியோர் கண்ணிலா ரெனவே
யோதலை யறிவேன். கூரிய புத்தியும்
பகுத்தறி சிறப்பும் பாழாய்ப் போனவே !
சகத்தினி லெவரும் சமப்பொருள் நாடுவ
ரென்னுமவ் வாய்மை பென்றெனும் பொய்த்த
[தோ ?
சொன்னமெனத்தகு சுந்தரி தொண்டைமான்
புரிதவத் துதித்த புத்திரி யென்பதை
யறிகிலா மூடனு யானதே விந்தையாம் !
தேயிடை மடவரல் திலோத்தமாவிடம்
போயிவன் பொழிலிடை மொழிதரக்
[கண்டுளேன்.
ஒவ்வொரு தினமு மொளிந்தொ டர்ந்துயா
னிவ்விரு காதல ரியம்புவ தறிந்தேன்.
கீழ்மக னிவனென வெண்ணிய மானினி
தாழ்குலத் தவளென வகுத்தனள் தன்னையும்.
மதிமுக வஞ்சியை மகேந்திர னென்றுமே
கண்டறி யாதா னாயினும் அவள்புரி
சூதினை யுணர்கிலாச் சூனிய அறிவுகொள்
பேதைக் கித்தகைப் பெண்மணி யுரியளோ !
முதலிற் கோணல் முற்றிலுங் கோணலாம்.
மதலை மொழியினள் ; மாற்றிலா மணியவள்
காத்தையு மகத்துறை காதற் பெருக்கையும்
பெறத்தகு பெற்றியன் யானே யல்லலெனே !
தொண்டைமா னளித்த துவளிடைக் குயிலை
[யான்
கண்டநாள் முதலொரு கட்டினில் நில்லா
வேட்கை யடைந்தேன் ; வேதனை யுற்றேன் ;
வாழ்க்கை நரகாய் வதைதர அயர்ந்தேன்.
கட்டையும் பாரேன். நவையெனுங் கவலேன்.
நுட்பமாய்ச் சூழ்வேன். நுண்ணிடை
[இவளையான்
மணத்தலே திண்ணம் ; அன்றேல் மாய்
[வேன்.

(மறைவாகப் பின்தொடருகிறான்.)

(இன்னும் வரும்.)

ரூ.அ.ப.

ஸ்ரீமதி ஸரோஜினிதேவி ... 0 4 0
இதில் இந்தியகவி ஸ்ரீமதி ஸரோஜினி தேவியின் ஜீவிய சரிதமும், அவருடைய பிரசங்கங்களும் அடங்கியிருக்கின்றன.

யுக்திபோதினி ... 0 10 0
பலவகைப்பட்ட யுக்திகளும் முறைகளும் கொண்டது.

வியவஸாய மஞ்சரி ... 0 12 0
வியவஸாயிகளுடைய அநுபவத்திற் சிறந்தவையென்று தெரியவந்த பல நூதன ஸாகுபடி முறைகளும், வியவஸாயக் குறிப்புக்களும் அடங்கியது.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெரு, மதராஸ்.

வைர மோதிரம்.

[ஸ்ரீமான் எஸ். நரஸிம்மாசாரியார், பி.ஏ., பி,எல்,, எழுதியது.]

அத்தியாயம் 5.

ராமஸிங்.

மாதமிரண்டு கழிந்தன. "நாளை மத்தியானம் ஸ்ரீ நடராஜர் கோயிலில் கொடியேறும்" என்று ஊர்முழுதும் அறியுமாறு தண்டோரா மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. இவ்வளவு நாட்களாய் அம்பலவாணனுக்கு மோதிரத்தைப்பற்றிய நினைவேயில்லை. மாசிலாமணியும் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தானில்லை.

முதல் திருவிழாவன்றிராத்திரி, சொக்கநாதர் ஆலயத்திற்குச் சென்று, த்வஜாரோஹண மஹோத்ஸவத்தைப் பார்த்துவிட்டு, வீட்டுக்கு வந்து போஜனம் செய்கையில் உத்ஸவத்தைப்பற்றி ப்ரஸ்தாபம் வந்தது. நான்காந் திருவிழாவை அவருடைய வீட்டார் நெடு நாட்களாய்ச் செய்து வருவதைப் பற்றியும், அன்றிராத்திரி ஸ்வாமிக்கு வைர மோதிரத்தை அணிவிப்பதைப் பற்றியும், அவ்வாறே இவ்வருஷத்திலும் விமரிசையாக உத்ஸவத்தை நடத்தவேண்டு மென்பதைப் பற்றியும் அவர்கள் அனைவரும் பேசலானார்கள். சொக்கநாதருக்கருகில் உட்கார்ந்து போஜனம் செய்து கொண்டிருந்த அம்பலவாணனுடைய செவியில் இம்மோதிரத்தைக் குறித்த விஷயம் விழவே, அவன் புலிமுழக்கம் கேட்ட புல்வாய் போலத் திடுக்கிட்டான்.

"என்ன இது! கஷ்டமாய் வந்து முடிந்ததே. மோதிரம் எங்கே என்று கேட்டால், அதற்கு நான் என்ன பதிற் சொல்லுவது? பொய்சொல்லி விடுவோமென்றால் அதற்கு என் மனது சம்மதப்படவில்லை, உண்மையைச் சொல்லி விடுவது நல்லதுதான். ஆனால், அதனால் பெருந்தீங்கு விளையுமென்பது திண்ணம். முன்னம் பலதடவைகளிலும் நான் சுந்தரவல்லியைக் காதலிப்பதுகூடாது என்று அவர் கூறியிருக்கிறாரல்லவா. அப்படியிருக்க, இவ்விஷயம் அவர் செவியிற் பட்டால் என்கதி என்னவாகும்? ஆ! ஈசனே!! ஒருவழியும் புலப்படவில்லை" என்று மனங்கலங்கித் திகைத்து, அன்னத்தையும் ஸரியாக உண்ணாது சும்மாவிருந்தான். அதைக்கண்ட சொக்கநாதர் அம்பலவாணனுக்குத் தேகஸௌக்கியக் குறைவோவென்று எண்ணி, மறுநாள் வைத்தியரைக் கொணர்ந்துபார்க்கச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். பிறகு போஜனம் முடிந்ததும், அனைவரும் தாம்பூல மருந்தி நித்திரைபோயினர். அம்பலவாணனுக்குமாத்திரம் தூக்கம் வரவில்லை.

"நான்காந் திருவிழாவிற்குள் எவ்விதத்திலாவது மோதிரத்தைக் கொண்டுவர வேண்டுமே. இன்னும் இரண்டு நாட்கள்தாம் இருக்கின்றன. இந்தக்காலத்திற்குள் அதை எப்படித் தருவிப்பது? யாரை அனுப்புவது? குறித்த தினத்தில் மோதிரம் இல்லாவிடில் அநர்த்தம் விளையுமே" என்று எண்ணி ஏக்கம் பிடித்துப் பெருமூச்செறிந்து வெகுநாழிகைவரையிலும் படுக்கையின்மீது புரண்டான். திடீரென்று அவன் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. அப்படிச் செய்தால் இப்பெருங் கஷ்டத்தினின்றும் தப்பலாம் என்ற நம்பிக்கையும் அவனுக்குத் தோன்றிற்று. உடனே படுக்கையினின்று எழுந்து முற்றத்தில் வந்து வானத்தைப் பார்த்தான்; மேகங்கள் பரவியிருந்தபடியால் நக்ஷத்திரங்கள் ஒன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆகையால் அப்பொழுது என்ன வேளை என்பது அறியக்கூடாமலிருந்தது

மறுபடியும் அவன் படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டான்; ஐந்து நிமிஷங்களுக்குள் நித்திரை மேலிட்டது; அயர்ந்து தூங்கினான்.

பொழுதுவிடிய இன்னும் ஐந்துநாழிகை நேரமிருக்கும். அம்பலவாணன் விழித்துக் கொண்டான்; ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தான். சந்திரன் அஸ்தமித்து விட்டது. ஆகாயத்தில் மேகங்கள் இல்லாததனாற் கொஞ்சம் வெளிச்சமிருந்தது. தூரத்தில் கோழி கூவியதும் அவன் காதிற்பட்டது. உடனே எழுந்து ஒரு சால்வையை மேலேபோர்த்துக் கொண்டு, கதவை மெதுவாய்த் திறந்து வீதி வழியே கிழக்கு நோக்கி நடந்தான்.

அம்பலவாணனைப்போல் மாசிலாமணியும் அன்றி ராத்திரி சரியாக நித்திரை செய்யவில்லை. அவனும் நெடுநேரம்வரைப் பலவாறாய்ச் சிந்தித்துப் பிறகு தூங்கினான். ஆயினும் விடிய ஸுமார் நாலுநாழிகைப் பொழுதுக்கு யாரோ மெதுவாய்க் கதவைத் திறந்து மூடிய சத்தம் அவன் காதில் விழுந்தது. உடனே சந்தேஹித்தான்; ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். சால்வையைப் போர்த்த ஒருவன் கதவை மெல்ல மூடி வெளியே வேகமாய் நடப்பதைக் கண்டான். அவனுடைய சந்தேகம் அதிகப்பட்டது. சால்வையைப் போர்த்த மனிதனுடைய உயரத்தையும் நடையையும் உற்று நோக்கும்போது அம்பலவாணனுடைய ஜாடை தோன்றியது. உடனே மாசிலாமணி தன் படுக்கையினின்று எழுந்து, அவஸரமாக வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு, மேல்மாடியினின்றும் கீழேயிறங்கிச் சந்தடி செய்யாமற் கதவைத் திறந்து அம்பலவாணனுக்குப் பின்னேயே நாருகஜ தூரத்தில் அவனைப் பின்தொடர்ந்து நடந்தான். அதிகமாக வெளிச்சமில்லாததனாலும், தெருவில் உயர்ந்த மரங்கள் இருந்ததனாலும் தன்னையொருவன் பின்தொடர்ந்து வருகிறான் என்பது அம்பலவாணனுக்குத் தெரியாமற் போயிற்று.

முன்னே சென்ற அம்பலவாணன் நாலைந்து தெருக்களைக் கடந்து, கடைசியில், ஒரு சிறிய தெருவிற் கொஞ்சதூரம் சென்று, சுண்ணாம்பு பூசப்பட்டு மிகவும்வெண்மையாயிருந்த ஒரு வீட்டின் குறட்டிலேறிக் கதவை மெதுவாய்த் தட்டினான். ஒரு நிமிஷம் கழிந்தது; ஒருவரும் வரவில்லை. மறுபடியும் கதவைத் தட்டினான். உள்ளிருந்து ஒருகுரல் 'யாரங்கே?' என்று உரத்தசத்தத்துடன் கேட்டது. 'நான்தான் அம்பலவாணன்; ராமஸிங்! சீக்கிரம் கதவைத் திற' என்றான் அம்பலவாணன்.

அதற்குள் மாசிலாமணியும் அருகேவந்து அடுத்த வீட்டின் திண்ணையிற் பதுங்கியிருந்து மேல் நடக்கும் விஷயங்களை அறிவதற்கு ஆவலோடிருந்தான். அந்த ஸமயத்தில் அம்பலவாணன் தட்டிய கதவம் திறக்கப்பட்டது. கையில் ஒரு விளக்கைப் பிடித்தவண்ணம் ராமஸிங் எதிரே நின்றான்.

"அம்பலம்! நீ இந்த அகாலத்தில் இங்கு வரக் காரணமென்ன? ஏதாவது விசேஷம் உண்டா? சீக்கிரம் சொல். எக்காலத்திலும் எவ்விதமான உதவி வேண்டுமானாலும் அதை நான் உனக்குச்செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று ராமஸிங் கூறினான்.

"ராமஸிங்! நாம் உள்ளே போவோம். இரவில் வெளியே நின்று பேசுவது அவ்வளவு உசிதமன்று." என்று சொல்ல இருவரும் உள்ளே சென்றார்கள்.

ஸம்பாஷணையைக் கேட்கவென்றே அருகிற் பதுங்கியிருந்த மாசிலாமணி கதவு மூடின சத்தம் காதிற் பட்டவுடனே, 'இனி இங்கிருப்பதிற் பயனில்லை; வீடு சென்று மேல் நடக்கவேண்டிய காரியங்களை யோசித்துத் தாமதமின்றி முடிக்கவேண்டும். இப்

போது நான் கொஞ்சம் தாமதிப்பேனாகில் எல்லாக் காரியங்களும் கெட்டுப்போய்விடும். இந்த ராமலிங் அம்பலவாணனுக்கு மிகுந்த ஸ்நேகிதன்; நல்ல வீரன்; சிரமத்தைப் பார்க்காது எடுத்தகாரியத்தை முடிக்கும் மனவுறுதிவாய்ந்தவன். இவனை எப்படியாவது தடுக்கும் மார்க்கத்தை நான் உடனே தேடவேண்டும். அம்பலவாணா! ராமலிங்கைப் பிடித்தாயல்லவா நீ! காரியம் கைகூடிவிட்டது என்று எண்ணியிருக்கிறாயோ? ஸரி, பார்ப்போம். உன் ராமலிங்குக்கு எதிராக நான் ஒரு லக்ஷ்மணலிங்கைக் கண்டுபிடிக்கிறேன் பார்'' என்று சொல்லிக்கொண்டே தன் வீட்டுக்குத் திரும்பச் சென்றான்.

புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

மதுரையினின்று வெளியாகும் ''கல்வி'' யென்னும் பத்திரிகையின் சொந்தக்காரரால் நமது பார்வைக்காக அன்போடு அனுப்பப்பட்ட அடியில் வரும் ஐந்து சிறிய புஸ்தகங்களையும் வரப்பெற்றோம்;

கணபதி: விநாயகக் கடவுளின் பிறப்பு, வளர்ப்பு, சௌரியம், ஞானம் முதலியபுராண வரலாறுகளை எளிய ஆங்கில நடையில் ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரசர்மா, பி. ஏ. எழுதியிருக்கிறார். இப்புஸ்தகம் ஆங்கிலம் பயின்ற சிறியோரது உபயோகத்தின் பொருட்டு எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. தாய்ப் பாஷையை வெறுத்து, ஆங்கிலத்தையே பாராட்டும் பெரியோரிற் பெரும்பாலாருக்கும் இத்தகைய பல புராணக் கதைகளை எழுதி யுபகரித்து அவர்களுடைய கண்களைத் திறத்தல் பெறும் பயனளிக்குமென்பது எமது துணிபு. இப்புஸ்தகத்திற் கூறப்பட்டுள்ளதை உணரப்போதிய ஆங்கிலபாஷைத்தேர்ச்சிபெற்ற சிறார்க்கு வெற்றுப் புராணக் கதையைச் சொல்வதுமாத்திரம் தீங்கையன்றிப் பயனைத்தராதென்பதையும், இவ்வரலாறுகளி லடங்கியுள்ள இரகசியங்களையும், உட்கருத்தையும் ஒருசிறிதாயினும் கூறுதலே தற்காலப் பகுத்தறிவிற்குகந்ததென்பதையும் நாம் கூறுவ தவசியமென்று தோன்றுகிறது.

பேசிய சிங்கம்: (The lion that spoke.) இப்புஸ்தகமும் முற் கூறப்பெற்ற ஆசிரியரால் ஆங்கிலத்தில் மிக்கத் திறமைதோன்ற எழுதப்பெற்றிருக்கின்றது. தற்காலத்தில் உயிர்விலங்குகளை இரக்கமின்றிப் பிடித்துப்பொருட்காட்சிச் சாலைகளில் அடக்கி யொடுக்கி வைத்துக் காட்டுதலினும், முற்காலங்களில் நம்முன்னோர் சிற்பசாஸ்திரத்தின் தேர்ச்சியால் விலங்குகள் முதலிய சகல ஜீவராசிகளையும் மண்டபம் முதலிய விடங்களில் உள்ளவாறு உருப்படுத்திக் காட்டியதே புகழத்தக்கதென்பதும், நாகரிகத்திற் கேற்றதென்பதும் புலப்படுமாறு இது ஒரு கட்டுக்கதையைப்போல அமைக்கப்பட்டிருக்கிறது. சித்திரமெழுதும் பயிர்ச்சிபெற்ற இந்நூலாசிரியர் மதுரையிலுள்ள புதுமண்டபத்தி லமைக்கப்பட்டிருக்கும் பதுமைகளின் உருவப் படங்களை வரைந்திருக்கிறார். அதன் விலை ரூ. 1—8—0. அதற்கு இச்சிறு புஸ்தகம் ஒரு விளம்பரயபோலத் தோன்றுகிறது.

குமணராஜன்: இது ஸ்ரீமான் ஆர். எஸ். நாராயணசாமி அய்யர், B.A. B.L. என்பவரால் எளிய தமிழ்நடையில் பழய நூல்களினின்று எடுத்தெழுதப்பெற்ற ஒருசிறியகதை. படிப்போர் மனத்தைப்பொங்கியெழச்செய்து தேகத்தை மயிர்க்குச் செறியப் புரியும் சம்பவங்களைக்கொண்ட இக்கதை பற்பல விடங்களில் இன்னமும் எத்தனையோமடங்கு அதிகரித்த மனோவெழுச்சியும், இன்பமும் பயக்கும் விதத்தில் எழுதப்படக்கூடியதாயிருக்கிறது.

சிவாஜி மகாராஜ்: மோகலாயர் நமது இந்தியாவை யாண்டகாலத்தில் இந்துமதமும், இந்திய மகாராஜாக்களின் அரசியலும் அடியோடொழிந்துபோகக்கூடிய நிலைமையிலிருந்த காலத்தில் அவதார புருஷராய்த் தோன்றி, எண்ணிறந்த அருப்பெருங் காரியங்களையியற்றி இந்து மதத்தையும், இந்திய தருமங்களையும் அழியாவாறு நிலைநாட்டிய சிவாஜி மகாராஜாவின் சரித்திரம் இதில் மிக்கச் சுருங்கக் கூறப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகமும் ''குமணராஜனும்'' சிறுவரின் உபயோகத்திற்கு எழுதப்பட்டனவோவெனும் ஐயத்தை உண்டுபண்ணுகின்றன. எத்தனையோ அற்புதச் சம்பவங்களைக் கொண்ட சிவாஜியின் சரிதம் இன்னம் ஆயிரமடங்கு வனப்புடைத்தாயும் இன்பம் பயப்பதாயும் சிறியோரன்றிப் பெரியோரும் படித் தானந்தித்துப் போற்றும் விதத்தில் எழுதப்படவேண்டுமென்பது எமது அபிப்பிராயம்.

சுகிர்லாபம் அல்லது நட்பின் மேன்மை: பஞ்சதந்திரக் கதைகளிலொன்றான இக்கதையை ஆங்கிலத்திலிருந்து எளியதமிழ் நடையில் ஸ்ரீமான் என். ஆர். கேதாரி ராவ், எம். ஏ. எல். டி. என்பவர் எழுதியிருக்கிறார். இதுவும் சிறியோருக்குப் பயன்படும் விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வைந்து புஸ்தகங்களிலும் பலசித்திரப்படங்கள் சந்தர்ப்பத்திற்குரிய விதம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் விலை அணா 2. மதுரையில் ''கல்வி'' என்னும் தமிழ்ப் பத்திரிகை ஆபீசில் கிடைக்கும்.

சபாபதி: ஒரு ஹாஸ்ய நாடகம். ஏராளமான தமிழ் நாடகங்களை எழுதிப் புகழ்பெற்ற ராவ் சாகெப் பி. சம்பந்த முதலியாரவர்களால் எழுதப்பெற்ற இப்புஸ்தகமொன்று நமது பார்வைக்கு வந்தது. ஏற்கனவே பத்திரிகைகளிலிருந்த சில ஹாஸ்யங்களையும், புதியவை சிலவற்றையும் ஒன்றுசேர்த்துத் தொகுத்து அவற்றை ஒரு சிறு நாடகத்திற் பொருத்தி யாவரும் நகைகொள்ளும் விதத்திற் செவ்வனே எழுதியிருக்கிறார். நாடகத்தின் அமைப்பு பெரிதும் திறமையைக் காட்டுகிறது. எத்தனையோ நாடகங்களை எழுதித் தேர்ச்சியையும் புகழையும் பெற்ற இவருடைய புஸ்தகத்திற் குறைகூற இடமிராதாயினும், இப்புஸ்தகத்தில் இரண்டொரு சிறு விஷயங்களைச் செவ்வைப்படுத்தியிருந்தால் புஸ்தகம் இன்னம் அதிகச் சிறப்புடைத்தாயிருக்கு மென்பது எமது துணிபு. இதிற் சில ஹாஸ்யங்கள் நகைப்பையுண்டாக்கவேண்டு மென்னும் கருத்துடனேயே புகுத்தப்பட்டனவாகத்தோன்றுகின்றன. ஹாஸ்யங்கள் எவருக்கும் துன்பத்தைத் தராமல் இன்பத்தையே பயப்பதாயும் குற்றமற்றதாயுமிருத்தல் மேலன்றித் தூஷணையாக விருத்தல் உசிதமன்று. இதில் வரும் தமிழ்ப்பண்டிதரின் விஷயம் அருவருப்பைத் தருகிறது. விரைகின்றேன் என்பதற்கு விரைக்கின்றேன் என்றும், ஆடகச்சீர் என்பதற்கு ஆடமாகிய சீர் என்றும், இடையறு என்பதற்கு இடையராகிய என்றும் தமிழ்ப்பண்டிதர் பதவுரை கூறினனென்று எழுதப்பட்டிருப்பது தூஷணையின் பாற் படுகின்றது. அத்தகைய அறிவிலியைத் தமிழ் உபாத்தியாயரென நம்மவர் மதித்து வந்தனரென்பது ஒருசிறிதும் பொருந்தாது.

இதிற் சபாபதி முதலி பல விடங்களில் மிக்கக் கூரியபுத்தி, சிறந்த பகுத்தறிவு தந்திரம். முதலியவற்றை யுடையவனாயும், வேறு பல விடங்களில் மிக்க மூடனாயும் காட்டப்பட்டிருப்பது முரண்படுகிறது. அவன் தன் மாமன், மாமி, மைத்துனன், முதலியோருடன் சம்பாஷித்த பல சமயங்களில், மடமையால் அவ்வாறு பேசினனோ

...ாக அவ்வாறு பேசினானோவென்பது ...ருவிதமாய் அவன் சொற்கள் அமைந்திருக்கின்றன. அவனைப்போலவே மெட்ரிகுலேஷன் வகுப்பிற் படித்த மைத்துனன் ...லிருக்கையில், அவன் மெயில் பத்திரிகை வாசித்தபோது யூகிலிட் (Euclid) புஸ்தகக் ...க்கை ஒப்புவித்தானென்பதும், பொனொகிராப்பை, (Phonograph) பொடோகிராப் (Photograph) என்றானென்பதும், கிராமபோன் தட்டின் விலை Half past three quarter past five என்றானென்பதும், மியூசிக், என்றானென்பதும் இன்னம் பலவும் பொருத்தமாகத் தோன்றவில்லை. அவ்வையார் கூற்று, மணவாளமாமுனி ராகம், வடகலை தென்கலை சண்டை, உப்புமாவிற்கு வேறு பெயர் கொடுத்தற்கு முகாந்திரம், இன்னும் இவைபோன்ற பல நுட்பமான விஷயங்கள் முதலியவற்றையுணர்ந்த சபாபதி முதலி மேற்குறித்தவிதம் தாறுமாறாய்ப் பேசினானென்பது முரண்படுவதாய் எமக்குத் தோன்றுகிறது. தவிர, கதைத்தொடர்ச்சியும் ஒரோவிடங்களில் நன்கு விளங்கவில்லை. மெட்ரிகுலேஷன் பரீட்சையின் முடிவு வெளிவந்த தினத்தன்று சபாபதிமுதலியுடனிருந்த தன் மாமனுக்கு அவன் பிறகு பரீட்சை தேரியதாகத் தந்தியடிக்கவேண்டிய முகாந்திரமென்ன? அன்று அவர்களுடன் கூட இருந்த மைத்துனன் பிறகு எங்கிருந்து பரீட்சை தேரியதாகத் தந்தியடித்தான்? திரும்பவும் அது தவறென்று எங்கிருந்து தந்திகொடுத்தான்? பட்டணத்தில் வெளியாகும் விஷயத்தை வெளியூரிலுள்ளவன் அறிந்து பட்டணத்திலுள்ளவனுக்குத் தெரிவிப்பது எவ்விதம் எளிதில் பொருந்தும்? இத்தகைய சில சிறிய விஷயங்கள் நிற்க, புஸ்தகத்தின் தொகுப்பு உலகானுபவ முதிர்ச்சியையும், தற்காலத்திய நடையுடை பாவனைகளில் இந்நூலாசிரியருக்குள்ள அருவருப்பையும் செவ்வனே காட்டுகிறது. எனினும் நாடக மேடைக்கு இது நன்குபொருந்துமென்பதைப்பற்றி ஐயமே இல்லை. இதன் விலை அணா 0—8—0. புஸ்தகம்வேண்டுவோர் ஆசிரியருக்காவது அல்லது வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, 135, தேவராஜ முதலி தெருவு, மதராஸ், என்ற விலாஸத்துக்காவது எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

விவேகனின் விக்ரஹ ஆராதனையின் கொள்கை.

[ஸ்ரீமான் கே. வி. பஞ்சனாதய்யர் எழுதியது]

விக்ரஹ ஆராதனையென்பது கடவுளை, நாம் பூஜிப்பதற்கெனக்கொண்ட ஒரு விக்ரஹத்தினுள் இருப்பதாகக் கருதிப் பூஜைபுரிதலாகும். அநேகர் அங்ஙனம் செய்வது மிகவும் கெட்டது என்றும், சமஸ்த அண்டசராசரங்களுக்கெல்லாம் அதிபதியாயும் நிர்க்குணராயும் அரூபராயுமிருக்கிற தெய்வத்தை ஒரு விக்ரஹரூபமாகவைத்து அதையுபாஸித்துவருதல் மிகவும் பாபகரமான செய்கை என்றும், அத்தகைய் காரியத்தில கடவுளுக்குச் சற்றேனும் திருப்தியுண்டாகாதென்றும், மற்றும், இத்தகைய ஆராதனைகளால் நாம் கடவுளைப் பூஜித்தலானது அவரைப் பரிகாசம் செய்வதைப் போலாகுமென்றும் கூறுகிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றிச் சற்றே நாம் ஆராய்வோம்.

கிறிஸ்து மதஸ்தர்கள் விக்ரஹ ஆராதனையைப்பற்றி உபந்நியாஸஞ்செய்துகொண்டுவருதலை யாவரும் கவனித்திருக்கக்கூடும். அவர்களில் ஏழெட்டுமனிதர் கூடிக்கொண்டு சுமார் 50 மனிதர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்த ஓர் இடத்தில் ஒரு நாள் ஆத்மபோத விஷயங்களிற் சிலவற்றைத்தெரிந்துகொள்ள எண்ணி நின்றேன். அங்கு அவர்களாற் கொண்டுவரப்பட்ட மூன்று படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று இயேசுநாதர் சிலுவையில் மரித்ததைப்போலவும், மற்றொன்று அவர் இறந்த பெண்ணொருத்தியை உயிர்ப்பித்துக் கொண்டிருந்ததுபோலவும், மூன்றாவது அவர் கடற்கரையில் தம்முடைய சிஷர்களுக்கும் மற்றும் கூடியிருந்த ஜனங்களுக்கும் போதித்துக்கொண்டிருந்ததைப் போலவுமிருந்தன. அடிக்கடி, பிரஸங்கம் செய்துகொண்டுவந்த போதகாசிரியர் அப்படங்களிற் குறிக்கப்பட்டிருந்த இயேசுநாதரைக்காட்டிக்கொண்டேவந்தார். "இப்படத்தில் இருக்கும் இயேசுநாதரைப் பாருங்கள்; ஏ பாமர ஜனங்களே! அவர் பாவிகளான நமக்காகத் தமது ஆவியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்," என்று கூறும்பொழுது அவர் காட்டிய படத்தில் இருந்தவர் உண்மை இயேசுநாதரா? அங்கு காட்டப்பெற்றிருந்த ஜனங்கள் உண்மை ஜனங்களா? விக்ரஹ ஆராதனையைப்பற்றி மிகவும் இழிவான அபிப்ராயங்கொண்டு இந்து ஜனங்களுக்குப்போதித்துவரும் கிறிஸ்து மதஸ்தர்களும் போதனா விஷயங்களுக்கு மட்டிலாவது கடவுளை விக்ரஹரூபமாகக் கொள்கிறார்களன்றோ? அங்ஙனம் என் அவர்கள் கொள்ளல்வேண்டும்? விக்ரஹரூபமாகக் கடவுளைக்காட்டிப் போதித்து வருதலில் ஜனங்கள், எளிதில் கடவுளை அறிகிறார்கள் என்ற எண்ணத்துடனன்றோ?

தற்காலம் பள்ளிக்கூடங்களில் வாசித்து வரும் பிள்ளைகளுக்குப் பூகோள சாஸ்திரம் கற்றுக்கொடுப்பதை நாம் நன்கறிவோம். உபாத்தியாயர் தாம் பிள்ளைகளுக்கு ஒரு தேசத்தைப்பற்றிப் போதித்துக்கொண்டுவரும்பொழுது அத்தேசத்தைக் குறிக்கும் ஒரு படத்தைக்குறிப்பித்துக்கொண்டே வருகிறார். ஒரு ஸமயத்தில் ஒரு பிள்ளையை விளித்து "ராமா! லண்டன் பட்டணத்தைக் காட்டு" என்று அவர்சொல்லும்பொழுது அப்பிள்ளை சரேலென்று எழுந்துசென்று அப்படத்தின் முன் நின்று அங்கு லண்டன் என்று எழுதப்பட்டிருப்பதற்கு அண்டையிலுள்ள ஒரு கறுப்புப் புள்ளியைக்காட்டுகிறான். உபாத்தியாயர் திருப்தியடைகிறார். மித்ரர்களே! அது தானா லண்டன் பட்டணம்? அதனுடைய பரிமாணம் அப்புள்ளியினுடைய பரிமாணந்தானா? லண்டன் பட்டணம் அதுவன்றென்று நமக்குத் தெரியாதா? அங்ஙனம் நமக்குத் தெரிந்திருந்தும் அத்தகைய காரியத்தை நாம் என் செயல்வேண்டும்? நமது கொள்கை பூகோளம் கற்பிக்கப்படவேண்டும் என்பது தானன்றோ? அதற்குப் படத்தின் மூலமாகக் கற்றுக்கொள்வது சுலபமாக நமது மனதில் பதிகின்றதாதலால் நாம் அங்ஙனஞ் செய்கிறோம். காகிதத்திற் குறித்திருந்த இயேசுநாதரைப்போலவே படத்திற் காட்டியிருக்கும் இங்கிலாந்து தேசமும் லண்டன் பட்டணமும் நமது அறிவைத் தெளியச்செய்கின்றனவேயன்றி நம்மை அறிவீனராகச் செய்வனவல்ல.

ஆகவே மேற்காட்டிய இரண்டு திருஷ்டாந்தங்களாலும் போதனாவிஷயங்களிற் கடவுளை விக்ரஹரூபமாகக்கொள்ளலாம் என்பது தெளிவாக விளக்கப்பட்டதன்றோ? ஆயினும் அத்தகைய விக்ரஹங்கள் நாம் பூஜிப்பதற்குத் தகுந்தனவாவென்பதைச் சற்றே ஆராய்ந்தறிவோம். சென்னையிலிருக்கும் ஒரு மனிதன் உத்தியோகத்தின் நிமித்தம் புனாவிற்குப் போக நேரிடுகிறது. அங்கு அவன் சுமார் ஒருவருஷ காலம் தன் பந்துக்களைப் பட்டணத்தில் விட்டுப் பிரிந்திருக்கநேரிடுகிறது. அவ்விதம் அவன் புனாவில் வசித்துவருங் காலத்தில் சென்னையிலிருக்கும் அவன் மனைவியினிடமிருந்து ஒரு கடிதத்தை அவன் பெறுகிறான். அக்கடிதத்தில் பின்வரும் விதம் எழுதப்பட்டிருக்கிறது:—

புரசை,
சென்னை,
15—3—1919.

"க்ஷேமம்,

பிராணபதியவர்களுக்கு மனையாள் லக்ஷ்மி சிரோவந்தனம் செய்கிறேன். தாங்கள் என்னை விட்டுப் பிரிந்திருக்கும் இவ்வாறு மாதங்களை ஆறு யுகங்களாகக் கஷ்டத்துடன் கழித்துக் கொண்டுவருகிறேன். தங்களுடைய படத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் தங்களுடைய ஞாபகம் வந்துவிடுகிறது. பிரிய ரமா! தங்களைப்போலத் தங்களுருவமைந்த படத்தைக் கருதிப் பிரதிதினமும் படுக்கையைவிட்டெழுந்தவுடனே தேகசுத்தம் செய்து கொண்டு தங்களுடையபடத்தை வந்தனஞ்செய்து கொண்டுவருகிறேன். தங்களுடைய மனையாகிய நானும் தங்களுடைய குழந்தைகளும் மது பந்துக்களும் இவ்விடத்திற் கடவுளுடைய அநுக்ரஹத்தால் க்ஷேமமாக இருக்கிறோம். தங்களுடைய குழந்தை ஸ்ரீநிவாஸன் தங்களுடையபடத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் என்னைக் கூவியழைத்துப் படத்தைத் தன் சிறு விரலால் தொட்டுக் காட்டி "இதோ அப்பா" என்கிறான். உடனே தங்களுக்கு முத்தம் கொடுப்பதைப் போல் நினைத்து அப்படத்திற்கு முத்தங் கொடுக்கிறான். ப்ரபோ! நம் குழந்தை இப்பொழுது நன்றாய் வார்த்தைசொல்ல ஆரம்பித்துவிட்டான். தங்களுடைய புஸ்தகங்கள் வஸ்திரங்கள் முதலியவைகளைப் பார்க்கும்பொழுதெல்லாம் "அப்பா, அப்பா" என்கிறான். பிராணநாதா! தாங்கள் சீக்கிரம் இவ்விடம் வருவதைக் கோருகிறேன். என்னை முற்றிலும் அறிந்த தங்களுக்கு நான் அதிகமாக விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுவது என்ன இருக்கிறது. தங்களுடைய பிரிவை நான் மிக்கக் கஷ்டத்துடன் வஹித்துக்கொண்டுவருகிறேன். ஸதாகாலமும் தங்களுடைய க்ஷேமத்தைக் கோரிக் கடவுளைப் பிரார்த்தித்துவரும்,

தங்களுடைய பிரியை,
லக்ஷ்மி.

முக்கிய கவனிப்பு. காந்தா! தங்களுடைய பதில் கடிதத்தை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்."

மேல்கண்ட கடிதத்தைப் படித்த உத்தமர்களே! இக்கடிதத்திற் குறிக்கப்பட்டது விக்ரஹ ஆராதனையன்றோ? விக்ரஹ ஆராதனை மிகவும் கெட்டது என்று போதித்து வரும் போதகாசிரியரும் இத்தகைய கடிதம் தமக்கு ஒன்றுவருதலை விரும்பமாட்டாரா? ஒரு மனிதன் தன் மனைவியிடமிருந்து மேற்கண்டவிதம் கடிதத்தை யடைந்தானாயின் அவன் தன் மனைவி தன்னையன்றித் தன் படத்தையும் வஸ்திரங்களையும் நேசித்துக்கொண்டிருப்பதைப்பற்றி மனம் வெறுத்து அவளைக் கோபிப்பானா? அல்லது அவ்விதம் செய்து வரும் தனது புத்திரனைத்தான் கோபிப்பானா? எங்ஙனமாவது தன்னைப்பற்றி அவர்கள் ஞாபகத்துடன் விசுவாசித்துக்கொண்டிருக்கிறார்களே என்கிற எண்ணம் அவன் மனதில் உதிக்குமேயன்றி அவர்கள் செய்யும் செயல்களை விபரீதமாகக் கொள்ள மாட்டானன்றோ?

இதே கொள்கையை நாம் கடவுளிடத்திலும் அநுஸரிக்கிறோம். கடவுளிடத்தில் நமக்குள்ள பக்தியை வேறெந்த விதத்தாலும் செலுத்துதல் அஸாத்யம் என்பதை நாம் நன்கறிந்துளோம். விசுவாஸத்தைப் போலவே பக்தியும் மனதில் ஏற்படும் ஒரு பற்றேயன்றி வேறன்று. மனது எப்பொழுதும் சபலிக்கும் தன்மையையுடையது. அத்தகைய சபல சக்தியையுடைய மனதானது ரூபமில்லாதவைகளுக்கும் ரூபங்களைக் கற்பிக்கக்கூடியது. அது ரூபரஹிதமாயுள்ளவைகளைப் பற்றாது. மனது அகோசரமாயும், அமோகமாயும், நிர்க்குணமாயும், அரூபமாயும், ஸர்வவ்யாபியாயுமுள்ள ஒரு தெய்வத்தை எங்ஙனம் பற்றும்? ஆகவே மனதைத் தெய்வத்தினிடத்திற் பற்றச்செய்தல் வேண்டின் அத்தெய்வத்

திற்கு ரூபங்களும் குணங்களும் கற்பிக்கப்பட வேண்டும். அப்பொழுது மனதானது விக்ரஹ ரூபமாயுள்ள தெய்வத்தினிடத்தில் நன்றாய்ப் பற்றுதலடைகிறது. பிறகு சிற்சில சமயங்களில் அதே காரணமாகக் கடவுளிடத்தில் ஞாபகமும் உண்டாகிறது. நமக்கும் கடவுளுக்கும் உள்ள ஸம்பந்தமானது நாளடைவில் வ்ருத்தியாய்க்கொண்டேவருகிறது.

ஆன்றோர்களே! நாம் அனைவரும் கடவுளின் ச்ருஷ்டிக் குழந்தைகளல்லவா? நம்முடைய பிதாவாயிருக்கிற கடவுளிடத்தில் அவர் நமக்குச் செய்துவரும் நன்மைகளுக்காக நாம் அவரை விசுவாஸிக்கவேண்டாமா? அங்ஙனம் நமது விசுவாஸத்திற்குப் பாத்ரராயிருக்கிற கடவுள் நம்முடைய கண்களுக்கு அத்ருச்யமாய் இருக்கிறானன்றோ? அவ்விதம் பரோக்ஷமாயிருக்கிற கடவுளை ஒரு குழந்தையானது தன் பிதா ஸமீபத்திலிராத காலங்களில் அவருடைய உருவமைந்த படத்தையும் மற்றும் அவருடைய புஸ்தகங்களையும் ஆடைகளையும் எங்ஙனம் பார்த்துத் தன் பிதாவை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து விசுவாஸிக்குமோ அதேபோல் நாமும் சிலாரூபமாகவோ புஸ்தகரூபமாகவோ படங்களின்ரூபமாகவோ கடவுளை நமது ஞாபகத்திற்குக்கொண்டுவந்து அவரைப் பூஜிக்கிறோம். அங்ஙனம் செய்வது கடவுளையன்றி விக்ரஹங்களை ஆராதனைசெய்வதாகக்கொள்ளப்படின் அது அறிஞரின் கொள்கையன்று.

கடவுளுடையக்ருபைக்கு நம்மைப் பாத்ரராகச் செய்வது அவரிடத்தில் நமக்குண்டாக வேண்டிய பக்தியென்னும் பற்றுதல்தான். அப்பற்று மனதால் உண்டாக்கப்படுவதன்றி வேறன்று. அம்மனது அரூபமாயிருக்கப் பெற்ற கடவுளிடத்தில் பற்றாது. ரூபத்தையுடையபோலிக்கடவுளரிடத்தில்தான் பற்றும். அவைகள்தாம் விக்ரஹங்கள். அவைகளின் மூலமாகத்தான் நமது பற்றுதலை நாம் எளிதில் கடவுளிடத்தில் விருத்திசெய்துகொள்ளலாம். அத்தகைய விக்ரஹங்களின் மூலமாகத்தான் நாம் உண்மைக் கடவுளை எளிதில் அறிந்துகொள்ளுதல் இயலும். கடவுளும் மனிதர்களுக்குத் தன்னிடத்தில் எவ்விதமேனும் பற்றுதலேற்படவேண்டுமென்பதன்றி மற்றெதையுங் கருதுபவரல்லர். ஆகவே விக்ரஹ ஆராதனையும் கடவுள் வெறுக்கத்தக்கதன்று. மற்றும் "அணோரணீயான் மஹதோ மஹீயான். அயமவ்யய" என்ற கூற்றின்படி அணுவுக்குள்ளணுவாயும் மஹத்துக்கெல்லாம் மஹத்தாயும் கடவுள் வியாபித்துள்ளார் என்பது உண்மையாயின் நாம் பூஜிக்கும் சிலையிலும் கடவுளுளர் என்பது முண்மையாகும். ஆகவே அச்சிலையும் நம்மால் கடவுளாகக் கொண்டு பூஜிக்கப்படுவதற்கு உரியதாகும்.

காணமற்போன மரண சாஸனம்.

[ஸ்ரீமான் எம். எஸ். கிருஷ்ணசாமி எழுதியது.]

13-ம் அத்தியாயம்.

ருக்மணியும், சீதையும் ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டு, ஜலமெடுத்துக்கொண்டு சேஷி வீட்டுக்குப் போகாமல் சீதை வீட்டுக்கே போவதென்று உறுதி கொண்டார்கள். அப்போது துரைசாமி அங்கிருந்ததனால், ருக்மணி சுந்தரம்மாள் வீட்டுக்குப் போயிருந்தபோது நடந்த பேச்சுக்களனைத்தையும் அவனுக்குத் தெரிவித்தாள். "அவள் என்னவோ கொஞ்சமும் பிடி கொடுத்துப் பேசவேயில்லை. சேஷிக்கும் அவளுக்கும் ஆகாததனால், அதன் காரணமாக நம்மைக் கண்டாலும் அவளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. நீ அவளுடன் இல்லாவிட்டால், வேறு யார்

திருக்கமாட்டானு" என்று மீண்டும் அவள் கூறினாள்.

நீலகண்டன் தன் தாயாருடன் பேசிய பிறகு வெளியில் வந்தவுடன் துரைசாமியைக் கண்டானுகையால், அவனிடம் தன் தாயாருடைய உண்மையான அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தான். இப்போது துரைசாமி அதைத் தன் தாயாரிடம் தெரிவித்து, "அவனுக்குப் பார்வதியைக் கலியாணம் செய்துகொள்ள இஷ்டந்தான். அத்தைக்காகத்தான் பின் வாங்கினுன். முன்னே அவளுக்கு இஷ்டமென்றும், அத்தை வகையராவில் ஸம்பந்தம் செய்யத் தயங்குகிறுனென்றும் நீலகண்டன் சொன்னுன்" என்றுன்.

ருக்மிணி :—அப்படியானுல் வேறு இடம் பார்க்கவேண்டியது தான். என்னவோ நல்ல பையனுக இருக்கிறுன் என்று பார்த்தேன். பிராப்தமில்லை போலிருக்கிறது.

சீதை :—நாம் நாத்தனுராத்துக்குப் போவதை நிறுத்தி விட்டால், அப்போது ஸம்மதமாயிருக்கும் போலிருக்கு.

துரைசாமி:—அவாள் ஸம்மதப்படுகிறுளென்றே வைத்துக்கொள்வோம். பார்வதிக்குக் கல்யாணமாகிறது. அத்தை வருவாளல்லவா ?

ருக்மிணி :—வரத்தான் வேண்டும். அதற்காக வரவேண்டாமென்று சொல்லமுடியுமா?

துரைசாமி :—அது தான் அந்த மாமி வேண்டாமென்கிறுள். அத்தையை அந்த மாமி கலியாணத்தில் எப்படிப் பார்ப்பாள் ? அவளுடைய அதிகாரந்தானே அதிகமாயிருக்கும்.

சீதை :—உன் சித்தப்பா நிச்சயமாய் உன்னுடைய அத்தையைவரவேண்டுமென்று தான் சொல்லுவார். அதோடு அவன் பேச்சைக்கேட்டுக் கொண்டு கலியாணத்தையும் இந்த ஊரிலேயே நடத்தவேண்டு மென்று சொன்னுலும் சொல்லுவார்.

துரைசாமி:—அப்போது அந்த அம்மாமி (சுந்தரம்மாள்) சொல்லுவது சரிதானே. அதனுல்தான் சேஷி வகையருவே வேண்டாமென்கிறுள்.

ருக்மிணி :—அப்படியானுல் வேண்டாம்.

சீதை :—வேறு இடத்தில் வரன்கிடைத்தாலும், நாத்தனுர் குணத்தைப் பார்த்தால், நாளைக்கு ஸம்மந்திகள் ஏதாவது சொல்லமாட்டார்களோ? இதையும் நாம் யோசிக்கவேண்டும்.

ருக்மணியம்மாளுக்கு சேஷியின் நடத்தையால் தன் பெண்ணுக்குத் தக்கவரன் கிடைக்காததைப்பற்றி மிகுந்த வருத்தமுண்டாயிற்று. ஸமாராதனைக்கு ஏன் வந்தோம் என்று எண்ணினுள். கொஞ்சநேரம் மௌனமாயிருந்து, சோர்ந்தமனத்தினளாய் "எல்லாம் ஈச்வரன் விட்டவழி" என்று சொல்லித் தன் வேலைகளைக் கவனிக்கலானுள்.

பார்வதிக்கு மாளா வருத்தம் மேலிட்டது. தான் மனத்தில் வரித்த புருஷன் கிடைக்க மாட்டான் என்று நிச்சயப்பட்டது. அவள் தன் நிலைமையை நினைத்துத் துக்கம் மேலிட்டவளாய், அதைப் பிறரிடம் காட்டிக்கொள்ள இஷ்டப்படாமல், வீட்டின் மேல் மாடிக்குப்போய்ப்படுத்துக்கொண்டு கண்ணீர் விடலானுள்.

"நான் எண்ணியன வெல்லாம் பயனில்லாமற் போயின. இனி நான் உயிரோடிருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேலென்று தோன்றுகிறது. வேறு யாரையாவது நிச்சயம் பண்ணினுல், அது எனக்கு ஸம்மதமில்லை. அடைந்தால் அந்த நீலகண்டரையடைவது; இல்லாவிடில் உயிரைத்துறப்பது. இந்த இரண்டைத்தவிர எனக்கு வேறு வழியில்லை. ஒரு ஸமயம் என் எண்ணத்தை அவர் அறிந்தால், தன் தாயார் மனத்தை மாற்றினும் மாற்றுவரோ அவரிடம் எப்படி என் உள்ளத்திலிருப்பதைச் சொல்வது? எனக்கு இன்னது செய்வதென்று ஒன்றும் புலப்படவில்லை." என்று அவள் பலவாறு யோசித்துவிட்டு அயர்ந்து தூங்கிவிட்டாள்.

ஸமாராதனை வெகு விமரிசையாய் நடைபெற்றது. அந்த மும்முரத்தில் பார்வதியை ஒருவரும் கவனிக்கவில்லை. பகல் இரண்டு மணிக்கு ஸ்திரீகள் சாப்பிட உட்காரும்போது அவளுடைய ஞாபகம் வந்தது. அவள் எங்கேயென்று தேடினுர்கள். எங்குமேதேடியும் அவள் காணப்படவில்லை. எல்லோருக்கும் பயம் அதிகரித்தது. யாவரும் வருத்தமடைந்தார்கள். நீலகண்டன் இவ்விஷயத்தைக் கேட்டதும் பிரமித்துப்போனுன். மற்றவர்களும் என்னசெய்வதென்று யோசித்தார்கள்.

துரைசாமி தான் எங்கேயாவது போய்ப் பார்ப்போமென்று புறப்பட்டான். மேலே போட்டுக்கொள்ள ஒரு உத்தரியத்தை எடுத்து வருவதற்கு மாடியின்மேல்போனுன். மாடியில் ஏறியதும் ஒரு மூலையில், நிழல் மறைவில் பார்வதி படுத்திருப்பதைக்கண்டான். அப்போது அவனுக்குண்டான சந்தோஷத்துக்கு அளவேயில்லை. அவன் பார்வதியை உற்று நோக்கினுன். அவள் சோர்ந்து படுத்துக்கொண்டிருப்பதாக அவனுக்குத் தெரிந்தது. அவளுடைய கண்களினின்று ஜலம் வடிந்துகொண்டிருந்தது. அழுது ஓய்ந்தவள்போல் காணப்பட்டாள். அவளுடைய கண்களினின்று வடிந்த ஜலமானது அவளுடைய மேலாடையை முற்றிலும் நனைத்துவிட்டது. இவற்றைக்கண்ட துரைசாமிக்கு வருத்தம் மேலிட்டது. எதற்காக இவள் அழுதிருக்கவேண்டுமென்று அவனுக்கு விளங்கவில்லை; சற்றுயோசித்தான். பிறகு பார்வதியின் அருகிற்சென்று, அவளை இரண்டுமுறை கூப்பிட்டான். அவள் எழுந்திருக்கவில்லை. மீண்டும் நாலைந்து தடவை கூப்பிட்டதன்மேல் அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

"ஏனடீ இங்கே படுத்துக்கொண்டிருக்கிருய் ? நாங்கள் எங்கெல்லாம் உன்னைத் தேடுகிறது."

"இவ்வளவு நாழிகையாயிற்று! தூக்கம் வந்தது. நான் இங்கே வந்து படுத்துக்கொண்டேன்."

"ஒருவரிடமும் சொல்லாமலா இங்கு வந்து படுத்துக்கொள்ளுகிறது? கொஞ்ச நேரத்துக்குள் எங்களை அலையவைத்தாயே. அது கிடக்கட்டும். உன் முகத்தைப்பார்த்தால் நீ அழுதிருப்பதைப்போல் காணப்படுகின்றதே ; காரணமென்ன ?"

பார்வதி உடனே தன் நிலைமையை அறிந்து, முகத்தைத் துடைத்துக்கொண்டாள். பிறகு தலை குனிந்துகொண்டு மௌனமாயிருந்தாள்.

"பார்வதி! நான் கேட்டதற்குப்பதில் ஒன்றுமில்லை. உன்னுடைய குறையை என்னிடம் சொல்லக்கூடாதா. என்னுல் கூடுமட்டும் நான் உனக்கு உதவிசெய்யச் சித்தமாயிருக்கிறேன். என்னையன்றி வேறு யாரிடம் சொல்லப்போகிறுய் ?"

"என்னவோ என் விஷயங்களை நினைத்துக்கொண்டேன். என்னையும் மீறி அழுகை வந்துவிட்டது."

"அவ்விஷயங்கள் என்னவென்பதைத் தான் நான் இப்போது கேட்கிறேன்."

"அவ்விஷயங்களை நீயறிந்து இப்போது செய்யப்போவதென்ன ?"

"சரி, அதைப்பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளுவோம். சாப்பிட நேரமாயிற்று நாம் போவோம் வா"

"எனக்குப் பசிக்கவில்லை"

"காலையில் சாப்பிட்டவளுக்கு இப்போது பசிக்கவில்லை யென்றால் வேடிக்கையாகவே யிருக்கிறது. பசிக்காவிட்டாலும், சமாராதனைக்கு நீ வந்து சாப்பிடாவிட்டால் அத்தை என்ன சொல்லமாட்டாள்."

"என்னவேணுமானாலும் சொல்லட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை."

"நீ சாப்பிடாவிட்டால் போகிறது. அத்தை யாத்துக்கு வந்தால் போதும்"

"நான் அவள் வீட்டுக்குப் போவேனாகில், நான் செய்து கொண்ட உறுதிப்பாட்டிற்கு விரோதமாக நடப்பவளாவேன். ஆகவே அவ்விஷயமாய் நீ என்னைத் தொந்திரவு செய்வது உனக்குத் தாகாது."

"ஏன் அப்படி"

"அதைப்பற்றி விஸ்தாரமாக உனக்குச் சொல்ல இப்போது எனக்குச் சௌகரியமில்லை. இன்றையதினம் அம்மா சொல்லியதை நீ கவனிக்கவில்லையோ?"

துரைசாமிக்கு அப்போதுதான் விஷயம் கொஞ்சம் புலப்பட்டது. சுந்தரம்மாள் சேஷியின் ஸம்பந்தம் கூடாதென்று சொன்னதும், சேஷியின் குணத்தால் அவளை எல்லோரும் தூற்றுவதும் அவன் ஞாபகத்துக்கு வந்தன. அதனால்தான் பார்வதியும் அங்கே போக இஷ்டப்படவில்லையென்று எண்ணினான். மீண்டும் அவன்,

"அத்தையின் குணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் நாள் கிழமைகளில் நாம்விட்டுக்கொடுக்கலாமா? நாங்கள்எல்லோரும் போகும்போது உனக்கென்ன?"

"அண்ணா! எல்லாம் தெரிந்த உனக்கு இனி நான் அதிகம் சொல்லத்தேவையில்லை. என் இஷ்டத்தையும், இனி நான் செய்யப் போவதையும் முன்பே அறிவித்துள்ளேன். இவ்விஷயமாக என்னை நீ அதிகமாக வற்புறுத்துவதில் பிரயோஜனமில்லை."

"நீ சொல்வது முற்றும் சரியே. நான் உன்னுடைய விஷயங்களை யெல்லாம் அறிந்து கொண்டேன். உனக்கு இன்னும் கலியாணமாகவில்லை. சுந்தரம்மாளுக்காவது அல்லது நீலகண்டனுக்காவது நீ கட்டுப்பட்டவளல்ல. அப்படி யிருக்க அவர்களிஷ்டப்படி நீ நடக்க வேண்டுமென்பதென்ன? கலியாணமே சந்தேகத்திலிருக்கிறது."

பார்வதி தரையைப் பார்த்தவண்ணம் மௌனமாயிருந்தாள்.

(இன்னும் வரும்.)

ஸ்திரீகள் பத்தி.

குழந்தைகளும், பாலுணவும்.

குழந்தைக்குத் தாய்ப்பாலே சிறந்த உணவு. இது இயற்கையாலமைந்தது. தாய்க்குப் பாலில்லாத காலத்து வேறு பால் உணவு தேடுவது அவசியமாகும். கழுதைப்பால், [illegible] முலைப்பாலுக்கு ஸமானமான [illegible] அமைப்புள்ளது. அதனால்தான் குழந்தைகள் பிறந்ததும் இப்பாலைத்தேடி அவற்றிற்குப் புகட்டுவது. அதில் கொழுப்பும், ஜீர்ணமாக முடியாத மாமிஸ ஸத்தும் இல்லாமல் முலைப்பாலைக்காட்டிலும் சிறிதே உப்பு அதிகமாய் இருக்கும். ஆனால் நகரவாஸங்களில்

கழுதைப்பால் கிடைப்பது பிரயாஸை; ஆட்டின் பால் தாய்ப்பாலுக்கு ஸமானமாயிருப்பதுமல்லாமல், குழைந்தைகளுக்குப் பலவித வியாதிகளைத் தடுக்கும். குழந்தைகள் நேராக ஆடுகளை ஊட்டும்படி செய்யலாம். அது தாயிடம் பாலூட்டுவதுபோலவே அப்போது உண்ணும். ஸாதாரணமாக நாம் பசுவின் பாலையே குழந்தைகளுக்குப் புகட்டி வளர்த்தல் வழக்கம். இப்பாலில் மாமிஸஸத்தும், தித்திப்பும், நீரும் முலைப்பாலைக்காட்டிலும் குறைவாயிருப்பதனால் அதில் ஒரு சொட்டுச் சர்க்கரையும், சிறிது நீரும் கலந்து கொடுத்தல் நல்லது. நீரை அதிகமாய்ச் சேர்ப்பது தவறு. சுத்தமான பசுவின்பால் இரண்டு பங்கில் கொதித்து மிதமாகக் குளிர்ந்த வென்னீர் ஒரு பங்கு கலந்து அதில் ஒருசிறிது சீனாக்கற்கண்டுப் பொடி போட்டுக் குழந்தைகளுக்கு உபயோகிப்பது சிலாக்கியமானது. கூடியவரை ஒரே பசுவின்பாலை எப்போதும் உபயோகிப்பது உசிதமாகும். பல பசுக்களின் பாலை உபயோகித்தலால், பாலின் அமைப்பின் வேறுபாட்டால் குழந்தையின் தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாமலுமிருக்கலாம். நகரவாஸங்களில் பசுவின் போஷணையை ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். நோய் பிடித்த பசுவின் பால் குழந்தைக்கும் அவ்வியாதியை உண்டாக்கலாம். பசு அதிகமாகப் பால் கறக்க வேண்டுமென்று மணிலாக்கொட்டை, எள் முதலியவற்றின் பிண்ணாக்குகளை உணவாகக் கொடுக்கப்பெறும் பசுக்களின் பாலில் கொழுப்பு அதிகமாயிருப்பதனால், அவற்றின் உபயோகம் குழந்தைகளுக்கு மந்தம் முதலிய வியாதிகளைப்பயக்கும். இக்காலத்தில் பாலைப் புட்டியில் வைத்துக் குழந்தைகளுக்கு ஊட்டும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதனால், அப்புட்டியில் விடும் பாலில் ஒருசிறிது சுண்ணாம்புத்தேட்டை சேர்ப்பது நலம். அது புட்டியிலிருக்கும் பாலில் புளிப்பு ஏறாமல் காக்கும். குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் விஷயத்தில் இவற்றைக் கவனிப்பது நன்மை பயக்கும்..

பாலை மிச்சப்படுத்தல் இந்நகரில் ஸர்வ ஸாதாரணமாக இருக்கிறது. இவ்விஷயத்தில் நாம் ஜாக்ரதையாயிருக்கவேண்டியதும் அவசியம். ஏனெனில் பாலிற் கலக்கப்படும் பொருள்கள் சிலஸமயங்களில் அளவுகடந்த தொந்தரையைக் குழந்தைகளுக்கு உண்டாக்கும். பாலைப் பாதுகாப்பதிலும் ஜாக்கிரதை வேண்டும். அசுத்தமான பாத்திரங்களில் வைப்பதால் பால் கெட்டுவிடும். பாத்திரங்களைப் புளியிட்டதும் அதில் பால் வைப்பது தவறு. அப்பாத்திரத்தை நன்கு கழுவி அதிலுள்ள அழுக்கு நீரைப் போக்கித் துடைத்த பாத்திரங்களிலேயே பாலைவைப்பது உத்தமம். அப்படி வைத்தாலும் அதன்மேல் வேறு ஏதாவது தட்டினாலோ அதுபோன்ற வேறு பாத்திரத்தாலோ மூடிவைக்கவேண்டும். இல்லாவிடில், பாலில் ஈ, எறும்பு முதலியன விழுந்து அதை அசுத்தமாக்கிவிடும். இவ்விஷயங்களையும் நம்மவர் கவனிப்பது நலந்தரும்.—விவேகபோதினி.

சிறுவர் பத்தி.

ஆரிய நீதி கதைகள்.

"ஒன்றானுந்தீச் சொற்பொருட் பயனுண்டாயி, னன்றாகா தாகிவிடும்"

ஒருவன் கர்வத்தினாற் கடுஞ்சொற்களைக் கூறுவானாயின், அவைகள் அவனுக்குத் துன்பத்தை விளைவிக்கும். ஒவ்வொருவரும் மனவடக்கம், வாக்கடக்கம், காயவடக்கமென்னும் மூன்றையும் கைக்கொள்ளவேண்டும். இவைகளில் வாக்கடக்க மிருப்பவர்களிடமே ஏனைய இரண்டடக்கமும் இருக்கும். பிறனுக்குத் தீங்கு பயக்கும் பொய், குறளை, [illegible]

சொல் முதலியவற்றைப் பேசாமல் யாவரிடத்திலும் வணக்கத்துடன் பேசுதலே நாவடக்கமாம். இவ்வடக்கத்தை மேற்கொண்டவர் நன்மையென்று சொல்லப்படுவனவனைத்தும் பெறுவர். நாம் கல்வி, செல்வம் சௌகரியம், தவம் முதலியவற்றால் சிறப்புடையவராயிருக்கிறோமென்று கர்வமடைந்து, 'இதுசெய்யத்தக்கது; இது செய்யத்தகாதது' என்பதையுணராமல், பிறரையிகழ்ந்து, நமது மேன்மையை நாமே புகழ்ந்து வருவோமாயின், பல மைகளை அடைவது திண்ணம்; ஆதலின் அடக்கத்தை யாவரும் கைக்கொள்ளவேண்டும்.

உதாரணம்.

முற்காலத்தில் ஸ்ரீராமன் விவாகஞ்செய்துகொண்டு, சீதையோடும், பெற்றோர், சகோதரர், உற்றோர் முதலானவர்களோடும் அயோத்திக்குத் திரும்பி வந்தபோது, பிருகுபுத்திரரான பரசுராமர் கையில் பெருத்த வில்லுடன் நடுவழியில் வந்து இராமரை வழிமறித்து, "அடே! க்ஷத்திரியப் பையலே! உலகத்தார் உனது பராக்கிரமத்தைப் பலவாறு புகழ்ந்து கூறுகின்றனர். அதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில், நீ கேவலம் அபலையாகிய தாடகையைக் கொன்றவனன்றோ? அன்றியும் நீ ஜனகராஜனிடத்திலிருந்த ஒரு சொத்தை வில்லை ஒடித்துவிட்டுக் கர்வமடைந்திருப்பதாகக் கேள்விப்பட்டு இங்கு ஓடிவந்தேன். நீ பலவானாயிருப்பது உண்மையானால், எனது மூதாதைகள் உபயோகித்த இந்தவில்லை வளைத்து நாணேற்று; பார்ப்போம்" என்று சொன்னார். பிறகு ராமன் வணக்கத்துடன் அவரைப் பார்த்து," ஸ்வாமி! அடியேனிடம் தாங்கள் இவ்வளவு கோபங் கொள்வதற்குக் காரணம் யாது? யான் தங்களுக்கு ஒரு அபராதமும் செய்யவில்லையே! கருணைகூர்ந்து சாந்தமடையவேண்டும்; நான் குருமொழி தவறாமல் நடக்கையுங்கொள்கின்றேன்; ஜனகருடைய வில்லை ஒடித்ததனால் என்னிடம் பெருமை சிறிதும் இல்லை" என்று பதிற்சொன்னார். அதற்குப் பரசுராமர் "அடே! ராமா! நீ நியாயங்கள் கூறினது போதும்; இப்பொழுது இவ்வில்லை வளைத்து நாணேற்று; இன்றேல், உன்னை வெளியே போகவிடமாட்டேன்" என்றார். பின்பு ராமர், பரசுராமரிடமிருந்து வில்லையும் நாணையும் வாங்கி, நாணேற்றி, அதில் அம்பைத்தொடுத்து, பரசுராமரைப் பார்த்து, "ஸ்வாமீ; நீங்கள் எப்படியிருந்தாலும் பிராம்மணராகையால் வணங்கத் தக்கவராயிருக்கிறீர்கள்; மேலும் நீங்கள் விசுவாமித்திர முனிவருக்குச் சமீப பந்துவாகவும் இருக்கிறீர்கள். அவருக்காகவும் இப்பாணத்தைப் போடுவதற்கு உங்களுடைய உத்திரவை நான் கேட்க வேண்டியவனாயிருக்கிறேன். இந்தப் பாணத்திற்கு இலக்கு எங்கே?" என்று கேட்க, பரசுராமர், திக்பிரமைகொண்டு, வேறொன்றும் சொல்ல நாவெழாதவராய் "நான் இதுவரையில் செய்து வந்திருக்கும் தவமே இதற்கு இலக்காவது" என்று சொன்னார். பின்பு இராமர் தவமுழுவதையும் வாங்கிக்கொண்டு, தான் தொடுத்த பாணத்தை விட்டுவிட்டுச்சென்றார். பரசுராமர், அடக்கமின்மையால் கைவில்லையும், தவத்தையுமிழந்து இராமரிடம் விடைபெற்றுத் தமது இருப்பிடத்திற்குச் செல்லத்தொடங்கினார். அடக்கமின்மையால் தீங்கு உண்டாகும்.

"கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்,
மாறாநீர் வையக்கணி."

மக்களாயிருப்பவர் பெற்றோர் இதைச் செய்யென்று கட்டளையிடுவதற்கு முன்பே அவர் தம் குறிப்பையறிந்து அவர்களுடைய விருப்பங்களைப் பூர்த்திசெய்தல்வேண்டும். ஒருவனுடைய வாழ்க்கை மேன்மையடைவதற்குக் காரணம் அவனுடைய மக்கள் அவனது குறிப்பை யறிந்து ஒழுகுதலாம். இவ்வாழ்க்கைக்கு அணிகலமாயிருப்பவர் நன்மக்களாம். ஆதலால், அம்மக்களில்லாவிடத்து இல்வாழ்க்கை சிறந்து விளங்குவதில்லை. மக்களாய்ப் பிறந்தவர் யாவரும் தம்முடைய தாய் தந்தையர் கட்டளையிடுவதற்குமுன் அவர் விரும்பிய காரியத்தைச் செய்து முடித்தல் வேண்டும். இத்தகைய நன்மக்களே பெரும் புகழும் பெருவாழ்வும் பெறுவார்கள்.

உதாரணம்.

காசியப முனிவருக்கு, கத்ரு, வினதை என இரு மனைவியர் இருந்தனர். அவ்விருவரும் பாற்கடலில் 'உச்சைசிரவம்' என்ற வெண் குதிரை உண்டானபொழுது, உல்லாஸமாக அவ்விடஞ்சென்றனர். அப்பொழுது கத்ரு, வினதையைப்பார்த்து, "தோழி! உச்சைசிரவம் என்ன வர்ணம்? உடனேசொல்" என்றாள். அதற்கு வினதை' உச்சைசிரவம் வெண்மையானதுதான். நீ என்ன நினைக்கிறாய்.?" என்று சொன்னாள். பிறகு கத்ரு, "நான் அக்குதிரையின் வால் கறுப்பென்று நினைக்கிறேன்; நம்மில் தோற்றவள் ஜயித்தவளுக்கு அடிமையாகவேண்டும்" என்றாள். அதற்கு அவ்விருவரும் சம்மதப்பட்டு, "நாளையத்தினம் அக்குதிரையைப் பார்ப்போம்." என்று சொல்லிவிட்டு, தம்தம்வீட்டுக்குச் சென்றனர். பிறகு கத்ரு சக்களத்தியை வஞ்சகஞ்செய்ய நினைத்து, ஸர்ப்பங்களான தன்னுடைய ஆயிரம் பிள்ளைகளையும்பார்த்து, "என தருமைமக்களே! நான் அடிமையாகாவண்ணம் நீங்கள் மைபோல் கறுத்த வால்மயிர்கள் போலாகி அக்குதிரையைச் சீக்கிரம் அடையவேண்டும்" என்று சொன்னாள். சில ஸர்ப்பங்கள் அக்கட்டளையை ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே கத்ரு, அவர்களைப் பார்த்து, 'ஸர்ப்பயாகத்தில் நீங்கள் இறப்பீர்கள்' என்று சாபங்கொடுத்தாள். கார்க்கோடகனும் சில ஸர்ப்பங்களும் அக்கட்டளைக்கிசைந்து சென்றன. மறுநாள்பொழுது விடிந்ததும் கத்ரு, வினதை இருவரும் குதிரையைப் பார்ப்பதற்காகக் கடலைத்தாண்டிச் சென்றனர். இருவரும் குதிரையருகே, சென்று பார்க்கவே, அதன் உடலெல்லாம் வெண்மையாயும், வால் கருமையாயும் காணப்பட்டது. உடனே கத்ரு, வினதையை அடிமையாக நியமித்தாள். வினதையும் வருத்தத்துடன் அடிமைத்தன்மையை ஏற்றுக்கொண்டாள். அப்பால் சிறந்த தேஜஸையுடைய கருடன் வினதைக்குப் புதல்வனாகப்பிறந்தான். பிறகு கருடன் தன் தாயாருடன் கத்ருவின் ஏவல்களைச் செய்துவந்தார். ஒருநாள் கருடன் வினதையைப்பார்த்து, "நாம் ஏன் கத்ருவின் ஏவல்களைச் செய்யவேண்டும்?" என்று கேட்க, அவள் "பந்தயம் போட்டு ஏமாற்றி என்னை அடிமையாக்கிக் கொண்டாள்" என்றாள். உடனே கருடன் ஸர்ப்பங்களைப் பார்த்து, "எதைக் கொண்டுவந்து கொடுத்தால் என் தாயின் அடிமைத்தனம் நீங்கும்?" என்று கேட்டார். அதற்கு ஸர்ப்பங்கள், "நீ அமிருதத்தைக் கொண்டுவந்து கொடுத்தால் அடிமைத்தனம் நீங்கும்" என்றன. பிறகு கருடன் தாயிடம் விடைபெற்றுக்கொண்டு தேவலோகஞ் சென்று, தேவர்களிடம் யுத்தஞ்செய்து, அக்கினி, ஸர்ப்பம் முதலியவற்றைத் தாண்டி, அமிருதத்தைக் கொண்டுவந்து, ஸர்ப்பங்களின் முன்பு தர்ப்பையைப் போட்டு வைத்தார். உடனே ஸர்ப்பங்கள் "வினதையின் அடிமைத்தனம் நீங்கிவிட்டது" என்று வாக்களித்தன. பிறகு அவைகள் ஸ்நானஞ்செய்து வருவதற்குமுன் அமிருதத்தை இந்திரன்கொண்டு போய் விட்டான். ஸர்ப்பங்கள் தாங்கள் செய்த மோசத்திற்காகப் பிரதிமோசம் செய்யப் பட்டதென்றறிந்து வருந்தின. வினதை தன் புதல்வனது சாமர்த்தியத்திற்கு மெச்சி அவனை ஆசீர்வதித்தனள்.

பெற்றோரின் குறிப்பறிந்து நடப்பதே புதல்வருக்குப் பெருமை தரும்.

குறிப்புக்கள்.

ஈக்களைத் தடுக்கும் எளிய முறைகள்.

ஈக்களைத்தடுப்பதற்கான சில முறைகளை "வைத்திய கலாநிதி" பின்வருமாறு எழுதியிருக்கின்றது.

மனிதருக்குத் துர்க்கந்தமாயிருப்பவை ஈக்களுக்கு உவப்பான வாஸனைகளாகவும், மனிதருக்கு ஆனந்தமளிக்கும் நறுமணங்கள் ...களுக்கு மிக்க அருவருப்பாகவும் இருக்குமென்பதை அனைவரும் பொதுப்பிரமாண ...ாகக் கொள்ளலாம்; ஆகவே, ஸ...வாஸனை ஈக்களைத் துறத்திவிடுமென்றறியவும்.

ஒரு அணு மதிப்புள்ள லவெண்டர் தை ...த்தை அதற்குச் சம அளவான சுத்த ஜலத் ...ல் கலக்கி, பன்னீர்ச்செம்பு அல்லது அது ...போன்ற கண்ணாடிக் குப்பியில் ஊற்றி ஈக்கள் ...ரவியுள்ள அறைகளில் தெளிக்கலாம். போ ...ன அறையிலும், மேஜைகளின் மேலும் ...தைத் துளித்துளியாக இறைக்கலாம். இவ் ...ாசனை ஈக்களுக்கு மிகவும் துர்நாற்றமாகத் ...தாற்றுவதனால், அவை அங்கு அணுகமாட் ...ா; மனிதருக்கோ மிகவும் மனோஹரமான ...ாஸனையாயிருக்கும். முக்கியமாய் வெட்டி ...வர், லவங்கப்பொடி, வாஸனைப்புல் இவற் ...ன் மணத்தை ஈக்கள் மிகவும் வெறுக்கின் ...ர. ஒரு ப்ரெஞ்சு தேசத்திய சாஸ்திரா ...ப்ச்சிகாரரின் கொள்கைப்படி, ஈக்களுக்கு ...நிறம் மிக்க வெறுப்பை யுண்டாக்குகின் ... அறைகளில் சுவர்களுக்கு நீலச்சாந்து ...இருந்தால், ஈக்கள் அவ்விடத்தில் நெருங்க ...டா.

ஒரு மேஜைக்கரண்டியளவு பாலாடை ...யும், நன்றாகப் பொடித்த அவ்வளவு மிள ...யும், அதேஅளவு சிவப்புச் சர்க்கரையை ... கலந்து மெழுகுபோலச்செய்யவும். இக் கலவையானது ஈக்களுக்கு விஷவஸ்துவாகும். இதை ஒரு அகலில் வைத்து, ஈக்கள் வியாபித்துள்ள அறையில் ஒரு ஜன்னலின் மேடையின் மேல் இத்தட்டைவைத்துவிட்டு, அந்த ஜன்னல் கதவைத் தவிர மற்ற எல்லாக் கதவுகளையும் மூடிவிடவும்.

அக்கராகாரத்தூளை நெருப்புத்தழலில் போட்டு அறைக்குள் தூபம் போடவும். இதனால் அறையிலுள்ள ஈக்கள் மயக்கங்கொண்டு கீழே விழுந்துவிடும். உடனே அவற்றைப் பெருக்கியெடுத்துப் பள்ளத்தில் புதைத்து அல்லது எரித்துவிடவேண்டும்.

வீட்டுக்கு வெளியில் சுற்றுப்புறத்தோட்டங்களில் ஈக்களைத் தடுப்பதற்கு வெண்காரம் சிரேஷ்டமானசரக்கு. பத்துப்பன்னிரண்டு கூடை எருவுக்கு ஒருபவுண்டு வெண்காரம் போதுமானது. இந்த வீதப்படி வெண்காரப் பொடியை உரங்களில் கலந்து செடிகளுக்கு உபயோகித்தால், அவ்விடங்களில் ஈக்கள் நெருங்கமாட்டா; எருவின் குணத்திற்கும் எக்கெடுதியும் நேரிடுவதில்லை. வெண்காரம் ஈக்களுக்கு விஷச்சரக்காகும். உரங்களின் மேல் வெண்காரத்தூளை இறைத்து, அதன் மேல் ஜலத்தைத் தெளித்துவிட்டால், வெண்காரப்பொடி காற்றுக்குப் பறந்துவிடாமல் தங்கி நின்று ஈக்களை விலக்கும்.

ஓர் பிழை திருத்தம்.

சென்ற ஜனவரிமாதத்து சஞ்சிகையின் 29-ம் பக்கத்தில், முதல் பத்தியின் 7-வது வரியில் "கூடுமோ" என்பதைக் "கூடுமே" என்றும், 11-வது வரியில் உள்ள "கூடுமோ" என்பதை "கூடுமே" என்றும் படிக்கவும்.

ஜனோபகாரி.

(THE JANOPAKARI).

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்."—திருக்குறள்.

புஸ்தகம் 4. Vol. IV. | காளயுக்தி ஹு பங்குனி மீ, மார்ச்சு 1919. | சஞ்சிகை 3. No. 3

ஏணிவைத்தாலும் எட்டுமோ?

நாம் எத்தனையோ யுகங்கள் முயன்றபோதிலும் மேல்நாட்டாருடைய நாகரிகத்தையும், சுகபோகங்களையனுபவிக்கும் பெரும் பாக்கியத்தையும் ஒருநாளும் அடைய மாட்டோம். அவர்களைப் பின்பற்றி நடக்க நாம் முயல்வது புலியைக் கண்டு பூனை சூடு போட்டுக்கொண்ட கதையேயாகும். அவர்களுடைய நெறி சரியானதோ, தவறானதோவென்பதைப் பற்றி நாம் இங்கு பேசுவதவசியமில்லை. மனிதர் இந்த உலகத்தில் எவ்வளவு அதிகமாய் செளகரியங்களைத் தேடிக்கொள்ளக் கூடுமோ, எவ்வளவு அதிகமாக இன்பம் அனுபவிக்கக் கூடுமோ, அவற்றிற்கு தேவையான சாதனங்களையெல்லாம் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

முதலில் அவர்களுடைய போஜன ஏற்பாட்டைக் கவனிப்போம். நம்முடைய இல்லங்களிற்பொறுமையே உருவாய்த்தோன்றியுள்ள இந்தியப்பெண்டிர் தம் குழவியரான பல சிறார் சிறுமியரால்வதையுண்டு, புருஷரால் இழித்துக் கூறப்பெற்று, காலைமுதல் நடு இரவு வரையில் வருந்தி அடுப்பின் துணையையே அகலாத்துணையாகவும் உழைப்பதையே ஒடுங்கா வழிவாகவும் தம் கொழுநனையும், மக்களையும் உபசரித்துண்பதையே, தாம் பெண்ணெனப் பிறந்ததற்குப் பலனாகவும் கொண்டு தம்பொழுதைப் போக்குகின்றனர். வீட்டில் மனைவி தன் கணவன் மக்கள் முதலியோருக்கு அப்போதைக்கப்போது தேவையானவாறு, ஊட்டிப் போஷிப்பதே இல்லற ஒற்றுமைக்கும், ஒருவரிடத்தொருவர் அன்பு கொண்டொழுகுவதற்கும் மூலகாரணமானதென இந்தியராகிய நாம் நினைத்திருக்கிறோம். வெள்ளைக்காரர்கள் நம் நினைவைத் தவறாக்கி விட்டனர். நம்மில் எவரேனும் ஜுரநோய் கொண்டால் வெந்நீரையன்றித் தண்ணீரை தொடினும் தவறெனநாம் நினைத்து வந்தோம். இப்போது அதே நோய்க்குப் பனிக்கட்டியை அவர்கள் வைத்துக்கட்டிக் குணமுண்டாக்குவதை நாம் காண்கிறோம். இவ்வாறு போஜன விஷயத்திலும் அவர்கள் செய்வது விந்தையாயிருக்கிறது. அவர்களில்பெரும்பாலருக்கு இல்லங்களிற் சமையல், சாப்பாடு முதலிய காரியங்களே நடைபெறுவதில்லையாம். அவர்கள் வீடுகளில் அடுப்பே புகைவதில்லை. அவர்கள் வீட்டு அடுப்பையே கண்டதுமில்லையாம். ... பெருத்த போஜனசாலைகள் பலவிருக்... ஒவ்வொரு மனிதனும், தன் ...

ளோடு போஜன சாலையிலேயே தமக்கு வேண்டியவற்றை வேண்டிய அளவு அருந்துவார்களாம். தம் வீட்டிற்கு யாரேனும் விருந்தினர் வரினும் அன்றிப் பலருக்கு விருந்தளிக்க நினைக்கினும், அவைகளும் போஜனசாலைகளிலேயே மிக்கச் சிறப்பாக நடைபெறுமாம். உப்பில்லை, புளியில்லை யென்னும் கவலையும், அது செய்யப்படவில்லை, இது செய்யப்படவில்லை யென்னும் மனக்குறையும் உண்டாவதற்கு முகாந்திரமே யில்லை.

ஒவ்வொருநாளும் எத்தனையோ ஆயிரம் மனிதருக்குப் போஜனம் செய்விக்க வேண்டுமானால், அத்தகைய போஜனசாலையின் ஏற்பாடுகள் எவ்வாறிருக்க வேண்டுமென்பதை மனதால் பாவிக்கவே வேண்டுமன்றி அதை எழுத்தில் விவரிப்பது பகியாக்காரியமாம். பிரான்ஸ் தேசத்தினரே இத்தகைய சிற்றின்பங்களை அநுபவிப்பதில் நன்றாய்த் தேர்ந்தவர்கள். அமெரிக்காவும் அதற்குத் தோற்றதன்று.

கல்கத்தாவில் வெளியாகும் மாடர்ண் ரிவியூ என்னும் பத்திரிகையில் சுதீந்திரபோஸ் என்பவர் அமெரிக்காவிலுள்ள நியுயார்க் என்னும் நகரில் போஜன சாலைகள் எவ்விதம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன வென்பதைப்பற்றி எழுதியிருப்பது மிக்க அற்புதமாயிருக்கிறது.

தெய்வலோகமோ வென்ன ஐயுறும் படியான மாடமாளிகைகள் கூடகோபுரங்களைக் கொண்ட நியு யார்க் நகரில் எண்ணிறந்த போஜனசாலைகளிருக்கின்றனவாம். ஒவ்வொன்றும் அரண்மனையை போலவும், இருபத்தைந்து உப்பரிகைகளை (மேன்மாடிகளை) க்கொண்ட கட்டிடங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறதாம். கீழே இருந்து மேன்மாடிகளுக்கு ஒருவன் செல்லவேண்டுமானால் ஒரு ஏற்றத்தில் அவன் உட்கார்ந்து கொண்டால், அது மின் சாரத்தின் வல்லமையால் அடுத்த நிமிஷம் அவனை அவன் விரும்பிய மேன் மாடியிற் சேர்க்கின்றதாம். மேலே உயர்ந்தும் அத்தகைய ஏற்றம் ஒவ்வொரு மேன்மாடிக்கும் ஏராளமாயிருக்கின்றதாம். ஒவ்வொரு மேன்மாடியிலும் ஆயிரம் அறைகளும், எங்கு நோக்கிலும் கோடி சூரியப்பிரகாசம்போல மின்சார விளக்குகளுமிருக்கின்றனவாம். ஒரு போஜனசாலையில் ஒரே காலத்தில் மூவாயிரம் மனிதரிருப்பாராம். என்றாலும் கூட்டமென்பதே இருக்காதாம். ஒரு அறையிலுண்டாம் ஓசை மற்றோரறையிற் கேளாதாம். ரப்பர்ச் சக்கரத்தின்பேரில் அவ்வறைகள் நகருகின்றதோ வென்ன நினைக்கும் விதமாக அங்கு அமைதியும் சுகமும் இழைந்து தோன்றுமாம். குளிர்காலத்தில் நீராவியால் அந்த மாளிகைகளின் ஒவ்வொரு பாகமும் சூடாக்கப்படுகிறதாம். கோடை காலத்திலோ அவ்வறைகள் மிக்கக் குளிர்ச்சியுள்ளனவா செய்யப்படுகின்றனவாம். ஒரு அற்ப மாசும் அழுக்கும் கூடக் காணப்படாத போஜன மருந்துமிடங்களும், மனதைக்கவரும் சிற்றுண்டி நிறைந்த விடங்களும், சோபாக்களும், முகம்பார்க்கும் கண்ணாடிகளும், நிலைக்கண்ணாடிகளும், புஷ்பத்தொட்டிகளின் அலங்காரங்களும், நடப்பதற்குக் கீழே விரிக்கப்பட்டுள்ள வழுவழுப்பான இரத்தின கம்பளங்களும், தொங்கல்களும் எங்கும் நிறைந்திருக்கின்றனவாம்.

இத்தகைய போஜனசாலை யொன்றில் ஒருவர் ஒருநாள் தங்கும் பொருட்டுப்போவதாக வைத்துக்கொள்வோம். அவர் எவ்வாறு நடத்தப்படுகிறாரென்பதைக் கவனிப்போம். காலை ஒன்பது மணிக்கு அவர் அதன் முதல் வாயிலுக்கு வருகிறார். அங்கு மிக்க ஆடம்பரமாகவும், டாலி டவாலிகளோடும் நிற்கும் வாயில் காப்போன் அவருக்கு முன்குனிந்து வணக்கம் செய்து, அவரிடத்திலுள்ள சிறு பெட்டியையோ, மூட்டையையோ வாங்கிக் கொண்டு, ஒரு எலக்டிரிக் பொத்தானை அழுத்துவான். உடனே உட்புறத்திலிருந்து முன்னவனைப்போலவே உடைதரித்த இன்னொரு பணிமகன் ஓடிவந்து வணக்கமும், மரியாதையும் மிக்கக்காட்டி அம்மூட்டையை வாங்கிக் கொண்டு அவரை உள்ளே அழைத்துப் போவான். நடையைக்கடந்து அதற்கப்பாலுள்ள விடுதி குமஸ்தா விருக்குமிடத்திற்கு அவரை நடத்திச்செல்வான். ஒருவர் இருப்பதற்குத் தேவையான படுக்கை அறை, ஸ்நான அறை, போஜனக்கூடம் முதலியவற்றைக் கொண்ட ஒரு விடுதிக்கு ஒரு நாளைக்குக் குடிக்கூலி இருநூறு ரூபாய் முதல் ஐந்நூறு ரூபாய்வரையில் பலவகைப்பட்டதாயிருக்கிறது. பெருத்த பிரபுக்களுக்குத் தேவையான தனிவிடுதிகளுக்கு ஒரு நாளைக்குக் குடிக்கூலி ரூபாய் எழுநூறு. விடுதி குமஸ்தாவிடம் அம்மனிதர் தமக்குத் தேவையான விடுதியைக்குறிப்பார். அவன் உடனே அவருடைய பெயரைப் பதிவு செய்துகொண்டு, அவருடன்வந்த ஆளிடத்தில் ஒருதுண்டுக் காகிதத்தைக்கொடுப்பான். அவருக்குஅந்தப்போஜனசாலை விலாசத்திற்குஏதாயினும் கடிதமோ தந்தியோ வருவதை அவர் எதிர்பார்க்கிறாராவென்று அந்தவேலைக்காரன் கேட்பான். அவர் "ஆம்" என்றால், அவன் அருகிலுள்ள தபால் குமஸ்தாவிடம் சென்று அவருக்கு வந்துள்ள தபால்களை வாங்கி வருவான். உடனே அவரை மேலேஏற்றும் இடங்களில் மிகவும் சுகமான ஒன்றிற்கு அழைத்துப் போவான். அதினால் அவர் சில நொடிக்குள் எந்த மேன்மாடிக்குப் போகவேண்டுமோ அதற்குப்போய்ச் சேருவார். உடனே அந்த வேலைக்காரன், ஆங்கிருக்கும் மேன்மாடிக்குமஸ்தாவாகிய ஒரு பெண்மணியினிடம் அந்தத்துண்டுக் காகிதத்தைக் கொடுப்பான், அவளுடைய வேலை என்னவென்றால் தன் மாடியிலிருக்கும் அறைகளில் தங்கும் மனிதருக்கு எவ்விதமான தேவைகள் ஏற்படுமோ அவற்றைக்கொடுப்பதேயாம். அது எளிதான காரியமன்று. அங்கு வசிப்போரின் சொக்காவிலிருந்து கீழேவிழும் பொத்தானைத்தைத்தல் முதல், அவரைப் பார்க்க வரும் நண்பரை அவரிடம் சேர்ப்பது வரையில் யாவும் அவளுடைய காரியங்களே.

அவர் தம்முடைய விடுதியில் சௌக்கியமாய் விடப்பட்டபின்னர், இன்னும்ஏதாயினும் தன்னால் ஆகவேண்டிய காரியமுண்டோவென அப்பணிமகன் கேட்பான். ஒருகால் அவருடைய மூட்டைகளை அவிழ்க்கவும், கட்டவும், ஓயாமல் அவர் கூப்பிடுவதற்குக் குரல்கொடுக்கவும் ஒரு ஆள் அவருக்கு வேண்டியிருக்கலாம். அதன் பிறகு அப்பணிமகன் போய் விடுவான்.

பிறகு அவர் தம்முடைய மூட்டைகளை அவிழ்க்கிறார். அதில் அழுக்கான சில சொக்காக்களிருக்கின்றன. எதிரில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஒரு விளம்பரத்தைப்படிக்கிறார். காலை 10-மணிக்குள் உடைகள் கொடுக்கப்பட்டால் அவைகள் மாலைக்குள் சலவை செய்து கொடுக்கப்படும் என்று எழுதப்பட்டிருக்கும். அவர் அவ்விடுதியின் ஒரு மூலையிலுள்ள டெலிபோனிற்குச்சென்று மேன்மாடி குமஸ்தாவாகிய பெண்ணுடன் தன்னைச் சேர்க்கும்படிசொல்ல, அவர்கள் உடனே டெலிபோன் மூலமாகப் பேசுவார்கள். அவள் உடனே சலவை குமஸ்தாவை அழைத்து விஷயத்தைத்தெரிவிப்பாள். அங்கிருந்து ஒரு பெண் உடனே புறப்பட்டு அவருடைய அறைக்குச்சென்று சலவைசெய்யப்படவேண்டியவற்றைக் கொண்டுபோய் மீண்டும் மாலையில் மிக்க நேர்த்தியாய்ச் சலவை செய்யப்பட்ட அவற்றைக் கொணர்ந்து கொடுத்துப்போவாள்.

சலவைக்குச் சொக்காக்களை அனுப்பிய பிறகு, அவர் தம்முடைய தபால்களைப் படிக்கிறார். அவற்றிற்குத் தந்திமூலமாய்ச் சில மறுமொழிகள் அனுப்ப விரும்புகிறார். எழுதும் பொருட்டு [illegible]-போடப்பட்டுள்ள ஒரு மேஜைக்குப்போகிறார். அதன் வழுவழுப்பா[illegible]

லிச்சொருகு பெட்டியை (டிராயரை) இழுக்கிறார். அதில் தந்தி கொடுக்கும் நமூனக்கள், (பாரங்கள்,) வெற்றுக் காகிதம், கவர், கார்டு, மைஒற்றுங் காகிதம், மை, பலவிதமான பேனக்கள், பஞ்சாங்கம் முதலிய யாவும் ஏராளமாயும் ஒழுங்காயும் வைக்கப்பட்டிருக்கின்றன. தந்தியை எழுதுகிறார். அதை அனுப்பவேண்டுமென்று டெலிபோன் மூலமாய்ச் சொல்லுகிறார். உடனே ஒருபணிமகன் அங்கு வருகிறான். தந்திகளை வாங்கிக்கொண்டுபோகிறான். அந்த போஜனசாலைக்குள்ளே வைக்கப்பட்டிருக்கும் சர்க்கார் தந்தி ஆபீசிற்குக் கொண்டுபோய் இரண்டொரு நிமிஷத்திற் சேர்க்கிறான். அன்றி, அவரே நேரில், மேன்மாடி குமஸ்தாவிடம் அவற்றைக்கொணர்ந்து கொடுத்துத் தந்தியாபீசுக்கு அனுப்ப விரும்பினால், அவள் அதை உடனே ஒருபெட்டியில் வைத்துப்பூட்டி, மேலே இருந்து தந்தியாபீசுக்குஎலெக்ரிக் ஏற்றத்தினால் அனுப்பிவிடுவாள். எவ்வாறாயினும், அவர் தந்தி எழுதிய இரண்டொரு நிமிஷங்களில், அவைகள் விலாசதாருக்குப் போய்க்கொண்டிருக்கும்.

அவருக்குத் தேவையான உணவுகள் புகையிலைச் சுருட்டுகள் முதலியவற்றிற்குட் டெலிபோன் மூலமாய்ச் சொல்வதுதான் தாமதம். உடனே தட்டுக்களில் யாவும் பிரசன்னமாகும். அவரும் அவருடைய நண்பர்களும் நாடகங்கள் பார்க்க விரும்புவார்கள். அதற்குத்தேவையான டிக்கட்டுகளை எங்கேபெறுவார்? அந்த ஊரில் நடைபெறும் எல்லா நாடகங்களின் டிக்கெட்டுகளும் அந்தப் போஜனசாலையிலேயே விற்கப்படும். அவர் தமது தேவையை டெலிபோனிற் சொன்னால் அவை உடனே அவரிடம் வந்து சேரும். நாடகத்திற்குப் போய்விட்டுத் தம் நண்பருடன் அவர் உல்லாசமாய்த் திரும்பி வந்தால், அவருக்கு உடனே முதல்தரமான சிற்றுண்டிகள், பழவகைகள், காபி, டீ முதலிய மாதுரியமான உணவு [illegible] யின்மீது அழகாய் பரப்பப்பட்டிருக்கும். அவற்றில் எதையுண்பதென்னும் மயக்கமே அவருக்குத் துன்பமாகும். போஜனக்கூடத்திலிருந்து அவர் தம் விடுதிக்கு வருவாராயின், அங்கு பணிமகளால், யாவும் நேர்த்தியாயும் ஒழுங்காயும் வைக்கப்பட்டிருக்கும் தமக்குத் தேவையான சௌகரியங்களில் ஒரு சிறிதும்குறைவின்றி ஏற்படுத்தப்பட்டிருக்கும். அவருடைய மெத்தை தலையணைகள் முதலியவற்றிற்கு அன்றே சலவை செய்யப்பட்ட உறைகள் போடப்பெற்றிருக்கும். படுப்பதற்கு ஆயத்தமாக மெத்தை பிரித்துவிடப்பட்டிருக்கும். அதன்மீது தலையணைகள் நேர்த்தியாய் வைக்கப்பட்டிருக்கும். மெத்தை தைக்கப்பட்டதும் உட்காருவோரைப் பரவசப்படுத்துவதுமான சாய்வான நாற்காலியில் உட்கார்ந்து படிக்கும்பொருட்டு ஒரு நாற்காலியும் அதற்கண்டையில் ஒரு மேஜையின்மீது விளக்கும் பொருத்தப்பெற்றிருக்கும். அவர் அலங்கோலமாய்ப் போட்டுவிட்டுப்போயிருந்த ஆடைகள் யாவும் நன்றாய் மடிக்கப்பட்டு அழகாய் வைக்கப்பட்டிருக்கும்; அவருடைய உபயோகத்திற்குத் தேவையான புதியவைகள் சுவற்று மூலைகளில் மாட்டப்பட்டிருக்கும்; அவருடைய அலங்காரத்திற்குத் தேவையான ப்ரஷ், சீப்பு, கண்ணாடி, தைலம் முதலியவை ஒரு இடத்திற் மிகவும் சுத்தமாகக் காணப்படும். அடுத்த ஸ்நான அறையில் துடைத்துக்கொள்ளத் துண்டுகள், கையலம்பும் சோப், உடம்புக்குத் தேய்க்கும் சோப், கோவணம் முதலியவை ஏராளமாகத் தயாராக வைக்கப்பட்டிருக்கும். ஆகா! இத்தகைய இடத்திலிருப்பதிலும் ஆனந்தம் வேறுண்டோ?

பிறகு தாம் இரவு 1-மணி ரயிலில் இன்ன ஊருக்குப் போகவேண்டுமென்பார். $12\frac{3}{4}$-மணிக்குஅவர் எழுப்பப்படுவார். அவரெழுந்தவுடன் அவரிடம் ஒரு ரயில் டிக்கட்டும் அவரால் போஜனசாலைக்குச் சேரவேண்டியபணத்திற்குப் பட்டியும் கொடுக்கப்படும். அவருடைய சாமான்கள் யாவும் ஒரு வண்டியில் வைத்துக் கொணர்ந்து ரயிலில் ஏற்றப்படும். ரயில் டிக்கெட்டு, தந்திச் செலவு முதலிய செலவுகள் யாவும் போஜனசாலையாராலேயே முதலிற் கொடுக்கப்படும். எல்லாம் ஒரே பட்டியில் அவரிடம் போஜனசாலைக்காரரால் வசூல் செய்யப்படும்.

ஒருவர் எந்தப்போஜனசாலைக்குப்போனபோதிலும் அங்கு தம்சித்தம் சட்டமாக மதிக்கப்பட்டு அக்கணமே நிறைவேற்றப்படுவதைக் காண்பார். அவருக்குத் தேவையாகக்கூடியவிஷயங்களையெல்லாம்போஜனசாலையார் முன்னாலேயே அறிந்து அதற்கு ஆயத்தமாயிருப்பார்கள். பாட்டுக்கச்சேரி, கசரத் செய்யுமிடம், அம்பட்டன் அறை புஸ்தகசாலை, குழந்தைகளாடுமிடம், மனிதர் விளையாடும் பலசாதனங்கள்முதலியயாவும் இருப்பதால், எவ்விதவிருப்பமுடையோரது காரியமும் நிறைவேறும்.

அங்கு மடைப்பள்ளியின் தலைமைப்பரிசாரகனுடைய ஸ்தானமே மிக்க முக்கியமானது. அவனுடைய மாதச் சம்பளம் இரண்டாயிரம் ரூபாய் முதல் நாலாயிரம் ரூபாய் வரையில் போஜனசாலையின் சிறுமை பெருமைக்குத் தகுந்தவாறிருக்கிறது. நம்முடைய தேசத்து ஐகோர்ட் ஜட்ஜி முதலிய பெருத்த உத்தியோகஸ்தரின் சம்பளத்திற்கு இது சிறிதே குறைவாகிறது. அவனுக்குக் கீழ் சுமார் 50 முக்கிய உதவிக்காரரும், எண்ணூறு முதல் தொள்ளாயிரம் வரையில் ஆண் பெண் சமையற்காரரும்வேலைசெய்கின்றனர். இத்தனை ஆட்கள் இருந்தும், சமையல் முழுதும் மின்சார இயந்திரங்களாற் செய்யப்படுகிறது. உருளைக்கிழங்கின் தோலை உரிப்பது முதல் தட்டுக்களை அலம்புவது வரையில் யாவும் கைகளாற் செய்யப்படுவனவன்று, யாவும் இயந்திரங்களின் உதவியாலேயே செய்யப்படுகின்றன. இது அற்புதத்திலும் அற்புதமன்றோ!

ஆனால் அமெரிக்காவில் நெடுங்காலமாயிருந்து வரும் வழக்கம் என்னவென்றால் ஒவ்வொன்றிற்கும் உண்போர்சன்மானம் (லஞ்சம்) கொடுக்கவேண்டும். அவருடைய சொற்படிச் செய்யும் ஒவ்வொரு பணியகனுக்கும் அவர் போஜனசாலைக்குப் போகுமுன் அவருடைய தொப்பியை வைத்துக்கொள்ளும் சி[illegible]மிக்கும் சந்தோஷமாகவும், தாராளமாகவும் சன்மானம் கொடுக்கவேண்டும். இவ்வாறுஒருவர் சன்மானம் கொடுக்கும்தொகைமாத்திரம் ஒரு வருஷத்திற்கு மூன்றிலட்சம் ரூபாய் ஆகுமாம்!!

இவ்விஷயங்கள் யாவும் நமக்குக் கனவாய்த்தோன்றுமேயன்றி உண்மையில் நடப்பனவாய்த்தோன்றா. இவையாவும் விண்ணுலகில் நடப்பனவாயன்றி மண்ணுலகில் நடப்பனவாய் நமக்குக்காணப்படா. "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்னும் தத்துவத்தைக் கைக்கொண்ட நம்முடைய நிலைமைக்கும் இம்மேல் நாட்டாருடைய நிலைமைக்கு ஏணிவைத்தாலும் எட்டுமா? எத்தனை யுகங்கள் சென்றாலும் இவ்வித நாகரிகத்தை நம் அடைவோமா?

வயிற்றின் தொல்லை.

"பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பது தமிழில் ஒரு அழகான பழமொழி. அதுமிக்கச் சிறிதாய்க் காணப்படினும் அதற்குள் அரும் பெரும் பொருட்களடங்கியிருக்கின்றன. அது கடுகிற்குள் கடலைமறைத்ததைப் போன்றது. பசியென்பது தேவலோ[illegible]

ரப்பும் ஒரு அற்பக்காரியமென்பதை மாதத்
ரமே நாமறிவோமன்றி அதன் உண்மைச்
றப்பைப்பற்றி நாம் ஒருசிறிதும் நினைப்ப
ல்லை. முற்காலத்தில், குழந்தைவடிவாயிருந்த
றது கிருஷ்ணபகவான் தன் அன்னையிடம்
ன் வாயைத்திறந்து காட்டியபோது, உலகம்
ழுதும் அவருடைய வயிற்றிற் காணப்பட்ட
ன்றோ! அதன் கருத்தென்ன? வயிறே
லகமென்பதுதான் அதன் கருத்து. வயிற்
றுண்டாம் பசிப்பிணியே உலகத்தை ஆட்டி
வக்கும் பெரும் சக்தி. உலகத்திய விஷயங்
யாவும் ஒழுங்காய் நடைபெறுவதே வயிற்
ல். ஒருவன் பிறனிடத்தில் அடங்கியொடு
அவன் காலாலிடுவதைத் தலையாற்செய்
ததனால்? ஒருவன் மற்றவனைக் காட்டி
டம் சிறந்தவனென்பதனாலன்று. வேலைசெய்
வனது வயிறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு
வேளையிலும் பசிப்பிணியால் வருந்துவதால்
தை விலக்கும்பொருட்டு அவன் பிறனைப்
ணிகிறான். உலகிலுள்ள எத்தனையோ தொழி
ளரும், வர்த்தகரும், வேளாளரும், உத்தி
பாகஸ்தரும், நியாயாதிபதிகளும், வக்கீல்
களும், கூலியாட்களும், மற்றும் பலவகைப்
ட்ட காரியங்களைச் செய்யும் மனிதரும் ஒவ்
வொரு தொழிலிலமர்ந்து, ஒருவருக்கொருவர்
ந்தாசையாயும், சார்பாயுமிருந்து அவரவர்
தம் தொழிலை வழாது நடத்துவதெதனால்?
தவயிற்றினால், ஒரு குடும்பத்தில் ஒருவன்
பாருள் தேடுவதும், ஒருத்தி உணவு தயா
து யாவரையும்போஷிப்பதும், இன்னொரு
சுகப்படுவதும், வேறொருவன் பாடுமெய்ப்
ம், வேறொருவன் இலை தைப்பதும், இன்
னொருவன் வீட்டிற்குத் தேவையானவற்றைக்
டையில் வாங்கிவருவதும் உண்டன்றோ! அவ்
ாறு ஒரே குடும்பமாகிய இப்பெரும் உலகில்
காடிக் கணக்கிலுள்ள மாந்தர் ஒவ்வொரு
வலைச்செய்து ஒருவருக்கொருவர் துணை
ருக்கின்றனர். "ஒவ்வொருவரும்" பிற
செய்வதால் தமக்கே உதவி செய்

துகொள்ளுகின்றனர். ஒவ்வொரு வேளையும்
"ஆகாரமெங்கே? ஆகாரமெங்கே?" என்று
கேட்கும் இரக்கமற்ற பெரும்பேயாகிய வயிற்
றினாலேயே ஒவ்வொருவரும் தம் ஆண்மையை
மதியாது, தம்மைப் போன்ற பிறரைப் பணி
கின்றனர். ஆகவே, உலகம் நடைபெறுவதற்
குக் கடவுள் வயிற்றிலேயே சூத்திரக் கயிற்றை
வைத்திருக்கிறார். அதுவே இவ்வுலக நாடகத்
தை நடத்தி ஒவ்வொருவரையும் ஆட்டிவைக்
கிறது. அதனாலேயே ஒவ்வொருவரும் வேஷ
தாரிகளாய் நடிக்கின்றனர்.

ஆகவே மனிதருக்கு வயிறு மாத்திர
மில்லாதிருந்தால், உலகத்தில் ஒரு மனிதனை
மற்றொருவன் ஒரு துரும்பளவும் மதிப்பானா?
ஒருவன் சொல்லை மற்றவன் கேட்பானா?
பெண்டிர் கணவனையும், பிள்ளைகள் பெற்றோ
ரையும், வேலைக்காரர் எஜமானரையும் வணங்
குவார்களா? நல்லொழுக்க மென்பதிருக்கு
மா? கட்டுப்பாடு என்பது நிலைத்திருக்குமா?
அதிகாரம், பணிவு, என்னும் இருவகுப்பான
நடத்தைகளிருக்குமா? பல்லக்கிலேறுபவன்
பல்லக்கைச் சுமப்பவன், சமைப்பவன், சாப்
பிடுகிறவன், உழைப்பாளி, சுகவாசி, பணக்
காரன், பிச்சைக்காரன், முதலாளி, கடன்
காரன், முதலிய தொடர்புச்சொற்களே இல்லை
யாம். வயிறுள்ளவரையிலே தான் பணி
வும், ஒழுக்கமும். அதுவரையிலே தான் ஒவ்
வொருவரும் கட்டில் நிற்பது. வயிற்றின் பசிக்
கொடுமை மனிதரால் விலக்கக்கூடாயற் போ
மாயின், அது மனிதரின் மனிதத்தன்மையைப்
போக்கிவிடுகிறது. ஒரு தமிழர் வயிற்றின்
தன்மையைப்பற்றி அடியில் வருமாறு பாடி
யிருக்கிறார்.

ஒருநாள் உணவையொழி யென்றால் ஒழியாய்
இருநாளைக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ வறியா இடும்பைகூர் என்வயிறே!
உன்னோடு வாழ்த லரிது.

என்றார். வயிற்றை வைத்துக்கொண்டு நாம்

உயிர் வாழ்தல் அரிதென்பதை மாத்திரம்
அவர் கூறினாரே யொழிய அது இல்லாவிட்
டால் இவ்வுலகிலிருந்து உயிர் வாழ்வது சிறி
தும் சுவையற்றதாகையால் அது அரிதினுமரி
தென்பதை அவர் கவனிக்கவில்லை. அவருக்
கிருந்த பசிப்பிணி அவருக்கன்றோ தெரியும்!
இந்தியாவில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு
நாளும் அரைவயிறே புசிக்கின்றனர் என்று
தாதாபாய் நௌரோஜி சொன்னதை மேற்
சொன்ன புலவர் எவ்வாறு உறுதிப்படுத்துகி
றார் பார்த்தீர்களா? நெடுங்காலமாய் ஏழ்
மைத்தனத்தினாலும், பசிப்பிணியாலும் வருந்
திவரும் இந்தியரின் வயிற்றில் கடவுள் இப்
போது நிரந்தரமாய்ப் பசியைவைத்து விட்
டார். அன்னவிசாரமதுவே விசாரமாய்ப்
போய்விட்டது. ஒருவன் சம்பாதிக்கும்
பணம் அவனுடைய குடும்பத்தினரையும்
போஷிப்பதற்கு ஒருசிறிதும் போதியதா
யில்லை. உணவுப்பொருட்களின் விலை ஒன்றி
ற்கு மூன்று பங்காய் உயர்ந்து விட்டது.
கடன் கொள்வதற்கும் ஜனங்கள் ஏழ்மைத்
தன்மையிலிருக்கின்றனர். ஆதலால் தீராப்
பெரும் பசியே எவரிடத்தும் குறையாச்
செல்வமாயிருக்கிறது. இதனால் நாட்டின் கதி
என்னவாகுமோ அறியக்கூடவில்லை. இந்நிலை
மையில் கொள்ளைகளும், வேலைநிறுத்தங்களும்

மூலைக்கு மூலை கிளம்புவது ஆச்சரியமாகுமோ?
மேல் நாட்டுத் தேயங்களிற் செல்வப் பெருக்
கால், விலையினேற்றம் அவ்வளவாக வருத்து
தில்லை. இந்தியாவோ வறுமையையே பெ
மையாய்ப்பெற்றது. ஆதலின் இங்கு வருவா
உயராமல்செலவுகள் உயர்வதுசீர்கேட்டை
தரும். அதனால் ஜனங்கள் நிலைகுலைந்து தே
வார்கள். சட்டங்களுக்குக் கட்டுப்படுதலு
நல்லொழுக்கமும் இல்லையாம். கொலை, கள
முதலிய பல தீமைகளும் பெருகும். பசி
டாயினும் ஜனங்கள் பாதுகாப்பாய் வாழ்க்
செய்தலும் கூடாக்காரியமாகும். தொடக்
திற் கூறியவாறு அதிவிரைவிற் பத்தும் ப
போம். ஆதலின் துரைத்தனத்தார் இப்பெ
யானைப்பசிக்குச் சோளப்பொரியே போ
மென்று நினைத்து வாளா விராமல் இதற்
தகுந்த ஏற்பாடுகளை விரைவிற் செய்தல் நல
இல்லையேல் மகத்தான கொடுமைகளும், இ
குகளும் உண்டாகு மென்பது நிச்சயத்தி
நிச்சயம். ஆனால் பசிப்பிணியையே பெற்
யாதவர் அதன் தன்மையை அறிவ
எளிய காரியமன்று. அநுபவப் பயனாக
மனிதர் சிறுகச்சிறுக நல்லறிவு பெறவே
டும். துரைத்தனத்தார் என்ன உபாயம் செ
கிறார்களோ பார்க்கலாம்.

திலோத்தமா.

[ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ., எழுதியது.]

I அங்கம். 2-வது காட்சி.

இடம்: அரண்மனையை யடுத்த பூங்கா.

காலம்: மாலை.

(இக்காட்சியின் சுருக்கம்:—காஞ்சித் தொண்
டைமானுடைய புதல்வி திலோத்தமா தன் காத
லன் வாராமையால் வருந்தி நின்று தத்தளித்துச்
சோலையில் அவனைத்தேடுகிறாள். மாரனென்னும்
பெயருடன் மெய்க்காவலனாய் உருமாறியிரு
தஞ்சைச் சோழனுடைய புதல்வன் மகேந்
அவளைத்தேடி வருகின்றான். இருவரும் ச
கின்றனர். தாம் இன்னமும் மணக்கக் கூட
விருப்பதைப்பற்றி, இருவரும் பெரிதும்
குறுகின்றனர். அவளைத் திலோத்தமை
பணிப்பெண் மாலினியென நினைத்திருந்த ம
திரன், மணப்பதில் யாது இடையூறு இருக்
தென்றும், திலோத்தமாவின்

அவள் தான் விரும்பிய புருஷனை மணக்கக்கூடா தோவென்றும் வினவுகின்றான். தான் திலோத்தமைக்குத் தோழியாயினும், அரசனுக்கு உறவினளாதலால், அரசன் தனக்கு யாரைக் கணவனாய் நியமிக்கிறானோ அவனையே மணத்தல்வேண்டுமென்றும், அரசகுலத்தாரை யன்றிப் பிறரைத் தான் மணக்க அரசன் இணங்கானென்றும் அவள் கூறுகின்றாள். தாமிருவரும் வேறு தேசத்திற்கு இரகசியமாய்ப் போய் மணப்போமென்று மகேந்திரன் உபாயம் கூறுகின்றான். அவ்வாறு பெண்டிர் செல்வது இழிவென்றும், கற்பிக்கு இழுக்கென்றும், இன்னம் சற்றுப் பொறுமையோடிருந்தால் கடவுள் தமக்கு எப்படியும் நல்வழிகாட்டுவாரென்றும் கூறுகிறாள். அப்போது சோலையில் யாரோ ஒளிந்து ஒட்டுக்கேட்பதை யுணர்ந்து இருவரும் அச்சங்கொண்டு பிரிந்து போகின்றனர்.)

திலோத்தமா (தனியாக நின்று)

மனதுயிர் கொள்ளைகொள் மணாள ரின்னமுந்
தனதுயர் மேனியின் தரிசன மீந்திலர்.
விழிகளுஞ் செவியும் விருந்தினை விரும்பிக்
கழிந்தபன் னாழிகை கண்டிலே னன்பரை.
முன்னமே தோன்றிமுனிந்தகன் றார்கொலோ?
இன்னமேன் வந்திலர்? என்னவா வகற்றிலர்?
சாணு நொடியோர் கடியுக மானதே!
வாணா ளவரிலா வாழ்க்கை பொருட்டோ!
காணாக் கண்ணிரு புண்களே யானவே.
வீணே பார்த்து விழியிணை பூத்தவே.
மதியிலா வானென மாண்பெலா மிழக்குமிப்
பதியிலா மனை; அவர் பற்றிலா வென்னுயிர்
பாழே யல்லவோ? பாவியே னுய்வெனோ!
எந்தையர்க்கஞ்சியா னென்னுளங் கவர்ந்தவிச்
சுந்தர இனியரைச் சொந்தமா யேற்றிடா
தெத்துணை நாட்க ளிங்ஙன மொளிந்து
பத்தினி யாகாப் பாவியா யுழல்வேன்?
நாதனை நானொரு நாழிகை கண்ணுறின்
வேதனை மலிந்து விடுமென வதைக்கத்
[illegible]ணலிலு ணங்கிய தளிரென வாடினேன்.
குணமிலர் தோங்கிய கோமான் மகளாய்ப்
[illegible] லெவரினு மேழையா யுதி[illegible]பின்
[illegible]லெதா மாசையு முடிவுறும்;
மாந்தரி னுயர்ந்தஇவ் வேந்தன் மகள்மன
மொருத்த வோரவா முற்றிடா தொழியுமேல்
வெறுத்தற் பாலவே மேன்மையு மிடம்பமும்.
தற்செய லாயவர் தாழிட மிருப்பினும்
பொற்புய ராண்மையும் புனிதகு ணங்களும்
மேன்மையி ரக்கமும் வீரமு மரியநற்
பான்மையுங் கல்வியும் படைத்தவென்
[காதலற்
கெத்தகை யிளவலு மிணைசொலற் கருகனோ!
தனதனு மெங்கையின் தனிமக ளெனக்கினிப்
புனிதனு மிணையறு புண்ணிய புருஷனைக்
கோமக ளாங்கனைக் கோதிலா இனியனைச்
சோமனை யென்மனத் துறைந்தெனக் கிரமிய
மீந்தோ னிணையிலா வின்பக் கடலையான்
காந்தனு யடைதலைக் காட்டினு மோங்கிய
பேறுமா னந்தமும் பெற்றிடற் கியாவுள?
மீறுமிக் காமத மெத்தவ தைத்ததே!
எப்பொழு தென்னுயி ரேந்தலை நோக்குவேன்?
கப்பிய வேட்கையோ கனலென வெதுப்பின.
கண்ணே! மாலினி! யென்றெனை விளிக்குந்
பண்மொழி யமுதம் பருகுமோ செவியிணை.
மெய்மனந் துடித்தன இனியரை யணுகிடப்
பாழும் மனதே! பதைத்து வருந்திநீ
தாழா திங்ஙனந் தவித்தலே னவமாய்?
வருந்தேல் நெஞ்சமே வரும்பொழு தானது.
பொருந்தா நினைவே பொறுப்பாய் சிறிது.
சுந்தரர் வரவை யுணர்த்துவோ ரிலரே!
அந்தரத் தியங்கிய சந்தமார் புட்களே!
கமுகிற் பயின்ற காக்கைகாள்! வாவியின்
குமுத முவக்க மோகனம் பாடி
யமுதம் பருகி யாடிக் குதிக்குஞ்
சுரும்புகா! ளென்றன் துணைவரை நீவீர்
திரும்புகா லெங்கெனுங் கண்டனீர் கொல்
[லோ?
மோனமா யொன்றையு மொழியா திருத்த
[லேன்?
யானெனு மகந்தையோ? அவரவர் பெடை
[யொடு
கொஞ்சிக் குலாவிக் கொந்தளித் தாடலான்

மிஞ்சிய மகிழ்வினால் மெய்ம்மறந் தீர்கொ
[லோ?
சுயநலங் கருதிய சூதரே யானீர்.
பயமிலா தெம்பாற் பற்றை மறந்தீர்.
மதியாப் பேதைகாள்! மதுகரர் வந்தபின்
சதியை யுணர்த்திநுஞ் சங்கதி விரிப்பேன்.
இனியுமை நோக்கலு மேத்தலும் புரியேம்.
மந்திர வித்தையால் மற்றோ ருருக்கொளுந்
தந்திர மறிந்தாற் றடையிலா தெங்கணும்
மறைவா யகன்று மனத்தைக் கவர்ந்த
துரைபா லிருந்தென் றுயரம கற்றுவேன்.
என்னே புதுமை! நீண்டதே தாமதம்!
முன்னே யிங்ஙன முற்றவ ரொருகால்
விளையாட் டின்பொருட் டெங்கெனும் மறைவி
லொளிந்திருப் பார்கொலோ! உற்றுயா
[னோக்குவேன். (தேடுகிறாள்)

மகேந்திரன் (வேறொரு புறமாய் வருகிறான்.)
(தனக்குள்.)

என்னே யதிசயம்! எத்தகை நூதனம்!
அந்நாள் தொட்டென தாருயிர் கவர்ந்தவள்
மேவுவா ளிங்ஙன மென்றனை மெத்தவு
மாவலோ டெதிர்பார்த் தாதரஞ் சுரக்க
நிற்பவ ளென்கொலோ வந்தில ளித்தினம்?
கற்பினட் கியாதெனு மலக்க ணுற்றதோ?
கண்மணி யவளது கவினுறு மேனியைக்
கண்ணுறப் பதறின கண்களு முள்ளமும்.
அஞ்சுகம் பழித்துக் கொஞ்சிய குதலையாற்
றேன்மழை பொழிந்தெனத் தீங்கழை
[மொழிதமை
மான்விழி மடவரல் மகிழ்வொடு குலாவிக்
குயிலலை யள்ளியென் குழைசெவி யெக்கணம்
அயிலுமோ? மைவிழி யணங்கின் றுறக்கநேர்
பாங்கிலி ருத்தலா மமுத வாரியில்
நீங்கா தாடுமந் நேரம் வாய்க்குமோ?
ஆகா! வந்தன ளாருயிர்ச் சுந்தரி!

திலோத்தமா (சேய்மையில் அவனைக் கண்டு.)
ஆகா! வந்தனர் அரியவென் னுயிர்நிலை!

(இருவரும் ஆவலோடு நெருங்கி அணைகின்றனர்.
ஆருயிர்க் கணவரே! அடியாள் மீதுநீர்
மீறிய வன்சின மெய்தினு லதற்கெனை
இவ்விதமொறுத்தலோ ஏற்றவோர் தண்டனை?
தெவ்வரும் புரிவரோ? எத்தகைக் கன்மனம்?

மகேந்திரன்.

காதலித் தோகையே! கண்ணினுட் பாவையே!
ஓதிய தெத்தகை யொவ்வா வதிசயம்!
நிலையறு கொடியனு நின்பான் முனிவனோ?
கொலைபுரி விலங்குதன் கொடுநினை வகற்றிச்
சாந்தகு ணம்பெறுஞ் சற்குரு நின்வயின்.
ஏந்திழா யுன்றனை யெங்ஙன முனிவேன்?
இடைவழித் தோன்றி யென்னொடு வீரன்
தடைப்பட மொழிந்ததாற் றுமத மானது.
மன்னித் தருளிநீ மறப்பா யுற்றதை.
நின்னையான் மெத்தவு மிறைஞ்சி வேண்டி
(மோவாயைப் பிடிக்கிறாள்.) [னேன்.

திலோத்தமா (புன்முறுவல் பூக்க.)

இதைநிகர் பிழைசெயு மெவர்க்குமிந் நியாய
அதிபதி யென்றுங் கமைபுரி யாதவர்.
இதற்கொரு தண்டனை யின்னொரு நாழிகை
முன்னமே நாளைக் கிங்ஙன முறுதலே
மன்னிப் பாகுமால் மற்றவெ தற்கும்
கட்டுப் படுதலை யறியா ரதிபதி.

மகேந்திரன் (அவளை இறுகத்தழுவி).
பட்டிள மேனிநற் பாவாய்! கொடியே!
ஓதிய விதமே புரிவேன்; உலகில்
யாதினுங் கட்டுணு வதிபதி யென்னிரு
கரங்களா லிங்ஙனங் கட்டுண் டனரே!

திலோத்தமா.

நீவிரென் மேனியை யிங்ஙனங் கட்டுமுன்
தீவிர மாகவென் னிதயத் தகணியில்
நும்மைவி சித்ததை யுணர்கிலீர் விந்தையே!
நுங்கர [illegible]சிப்பொரு கொடியி லகலும்
மென்மன மகன்றுநீ ரேகுத லே[illegible]

மகேந்திரன்.

என்னென ஏத்துவே னின்மன மாட்சியை !
முன்புயா னெண்ணறு சென்மமெ டுத்திவண்
புரிந்தநன் மாதவப் புண்ணிய வடிவமே !
பிரிந்துனை விடுக்கா திருத்தலா மிணையறு
பாக்கிய மெத்தினம் பலிதமா மறிகிலேன்.
வீக்கிய வென்றுய ரெக்கண மகலுமோ?
இத்தலம் போமுன மேகாப் பொழுதாற்
பித்தனே யெனயான் பிதற்றி யுழன்றேன்.
இங்ஙன முற்றன தெழில்முக நோக்கவிச்
சங்கட நாழிகை சடுதியிற் கழிவதாய்த்
தோன்று கின்றதே! துன்பே யானதே!
ஆன்றவென் மணியே! அமுதின் பிழம்பே!
போவென வெளியிற் புகுத்தினு மகலென
ஏவினு மரைநொடி இனியான் பிரிவெனோ?
நீயே யென்றனம் நீயே யென்றவம்.
நீயே யென்னுயிர் நீயே யின்பெலாம்.
நீயென் விருந்து நீயரு மருந்து.
நீயென் தெய்வத நீயென் றுறக்கம்.
நீயிலா வானியி லிருந்தலு மேலுமோ?
இங்ஙன முறுவதா லெய்துபே ரின்பையா
னெங்ஙன முணர்த்துவே னெவ்வித முயலி
[னும் ?

திலோத்தமா.

துரையே! யென்மனத் துயரமு மனையதே.
உரையா லியாவு மொழிதற் பாலவோ ?
ஒருநாட் கழிந்தபின் னொருயுக மாயபின்
மறுநாள் வந்தெனை வதைத்தலை யறிகிலீர்.
துஞ்சா பிரவெலாந் துணையே யானீர்.
நஞ்சே யானது நல்லுண வனைத்தும் ;
பிறரொடு மொழிதா லெட்டியிற் கைத்தது.
விறலொடு வதைக்குமிவ் வேட்கையென்
[னுணர்வாய்க்
கண்கள் நிறைந்ததுங் கவினுறு வடிவமே
புண்கள் செறிந்தவென் னுளத்தினு மென்
[விழி
மெல்லா மகலா திறைவாய்
வீணுடற் பொறையால் வெதும்புத லோர்கு
[வீர்

மகேந்திரன்.

கண்டே! கனியே! கழறுறு வித்துயர்
கொண்டே மினியாங் கூடிம ணந்தொரு
கணமும் பிரியா வன்றிலை யொப்பயா
மிணையிலா னந்தமெத் தினமுற லெய்து
[வோம்?
தொண்டையன் பெறுமகட் டோழிநீ யான
[தாற்
கொண்டவ னைப்பெறல் குற்றமே யாகுமோ ?
அவள்மாட் டுண்மையை யறைந்தா லிப்
[பெருங்
கவலையு மல்லலுங் கடிதலோ ரருமையோ ?

திலோத்தமா. (கனிவாக.)

அங்ஙன மெளிதே லரைநொடி நிற்குமோ ?
எங்ஙன மென்றுயர் விரிப்பே னும்வயின்?
மணமக னொருவனை மன்னரே தரயான்
பெறுதலே மரபாற் பேதையே னெங்ஙனங்
கருதிய விரித்தெங் காதலு ணர்த்துவேன்?
இந்தக ரரசிபா லியம்பியெம் மாசையை
மன்னருக் குரைத்தல ரநுமதி பெறுதலை
எண்ணினே னன்னவர் தன்னுயர் நிலைமையுங்
கண்ணிய மியாவையுங் கருதுவா ரன்றியெங்
காதலை மதிப்பரோ ? காரிய முடிப்பரோ ?
ஆதலி னாயினு மரயர்கு லத்துறு
மொருவனை யேயவ ரோம்பியெற் கீவார்.
உறவின னன்றே னுன்னலுஞ் சகியார்.
நம்மன வாதர நவின்று லதனாற்
றுன்பமே விரியு மன்பரே ! நந்தமைக்
கன்மன மன்னவர் கடிவர கற்றுவர்.
மரத்துள கனிபெறு மாந்திர முயற்சியாற்
கரத்துள மதுவையுங் கவிழ்த்த கதையாய்த்
தினமொரு முறைபெறு மிப்பெரு நன்
[மையு
மினியிலா தொழியுமா லிதற்கொரு தந்திரங்
காலமே யுதவு மதுவரை பொறுப்போம்.

மகேந்திரன்.

கண்ணே! இன்பமே! கனவிலு மகலாப்
பெண்ணே! இனியான் பிரிந்தொரு கணமுனை
யகலேன். காலம் வருமென வெத்துணைப்
பகலுனைப் பெறுத பாவியா யுழல்வேன் ?
சின்னாட் போகுமுன் செல்லுமென் னுவியே.
பன்னாட் கழியினும் பார்த்திப னியைவனோ ?
ஆதலின் காலங் கருதா தெங்கெனும்
போதலே மேலது புரிவையோ ? வென்
[னொடு
பிறிதொரு தேயம் பெயர்வா யங்குயா
மிருவரு மணப்போ மிணைபிரி யாச்சுக
வாரியி லாடியெம் வாணாட் களையெலாம்
மாறுத லறியா மங்கள நாட்களாய்ப்
போக்குவோ மரயனி னுயர்நிலை யெமதா
யாக்குவே னிதயத் தாமரை யலர்மிசை
யிருத்துவே னநுதின மேத்துவேன் கடவு
[ளாய்.

திலோத்தமா.

மணந்தா லும்மையே மணப்பே னன்றேற்
கணந்தா னாயினுங் கருதேன் பிறனையான்.
ஆவியு முடலையு மனதையு மாசையும்
யாவையு நுமக்கே யருப்பண மளித்தேன்.
சரதமே யாம், பதி விரதமே கொண்டிடு
முத்தம குணம்பெறு கோதையர் தம்மனை
யெத்தின மேனுமி ரகசிய மாய்விடுத்
தேகிய தறிகிலே னென்றுமி ழுக்கே
யாகிய கரும மல்லவோ ? யாவையும்
செவ்வனே யுணர்ந்த சீலரா மினியரே !
இவ்வித மியம்புத லென்வயி னுமக்குள
மோகப் பெருக்கை முற்றவு ணர்த்திய
தாக மதித்தே னாயினு மதைச்செய
வென்மன மியையுமோ ? இழிதக வாகுமாற்
கன்மன தினனெனக் கருதா தின்னமுஞ்
சொற்புநாட் பொறுமின் றுயர்ப்பொறை
[யகற்றுமின்.
அற்பர னெமக்கொரு தந்திர முதவுவான்.
குன்றென வூறுகள் குவயினு மவனரு
ளுண்டெனி லியாவு மொருநொடி விலகும்;
இணையிலாக் காதலை யெம்பா லளித்தோன்
றுணையிலா தெந்தமை யொறுக்க நினைப்ப
[னோ ?
கடவுளை நம்பினோர் கைவிடப் படுவரோ ?
நட்பன யாவு மவனரு ளாதலின்
மன்னவ னாயினு மற்றெவ னாயினுஞ்
சொன்னவ னருள்தனை யொழித்திட லாகு
[மோ ?
திடமனம் பெறுமின்; சிறுகாற் பொறுமின்
சுடர்முன மிருளெனத் துயரெலா மிலதாம்.

மகேந்திரன்.

மாற்றிலா மணியே ! வாய்மையே சொற்றனை
போற்றிலா மொழியே புகன்றேன் பேதை
[யேன்
கூறிய மனதிற் கொள்ளா தகற்றியான்
கோரிய செயலிற் குற்றங் கருதாய்.
பிரிவா லயர்ந்தேன். பித்தமு யர்ந்தது.
விரைவாய் மணக்க வெண்ணியு ரைத்தேன்.

திலோத்தமா.

பிரிவெனு மொழிபட வென்மன மாழ்ந்தது.
வெருவுந் துன்பமும் விறலொடு தாக்கின.
பிரிவுறு மமைய மெய்திய தையகோ !
துரையே ! யெங்ஙன முந்தமை விடுப்பேன் !
என்னுயிர் மனதா மிருபொருள் கவர்ந்துநீ
ரென்னுடல் விடுத்திவ ணேகுதல் நெறியோ ?
இனையதோர் களவினை யேற்றிடல் சரியோ ?

மகேந்திரன்.

அவ்விரு பொருட்குமென் னாவியு மனதையு
மிவ்விட மிருத்தியா னேகுதல் கண்டாய்.
ஆதலி னெங்ஙனம் கள்வனே யாவேன் ?

திலோத்தமா.

வம்மென மொழிதலே வாய்தனி லுறுமா
லென்மன மியையுமோ ஏகெனக் கூறிட

(திக்கிட்டு.)

என்னையிவ் வதிசயம்! எவனோ மறைவாய்ப் பின்னிய கொடிகளி னிடையிற் செல்கிறான்.

மகேந்திரன். [கொலேநு?

உற்றவ னியாவையு மொளிந் துணர்ந் தான்
தெற்றென வரண்மனை செல்வாய் கடுகியான்
அவ்வனைத் தொடருவேன் யாரென வறிவேன்.

(இருவரும் அஞ்சிப் பிரிகின்றனர்.)

(தொடரும்.)

விவேகனது பிரபஞ்சம்.

[ஸ்ரீமான் கே. வி. பஞ்சநாதையர் அவர்கள் எழுதியது.]

ஹே! ஸூத்ரதார! எங்கும் நிறைந்த பராபரஸ்துவாயுள்ள தாங்கள் இப்பிரபஞ்ச நாடகத்தை நடத்திக்கொண்டுவரும் தன்மையானது மிகவும் ஆச்சரியப்படத் தக்கதேயன்றோ! ஆஹா! இப்பிரபஞ்சமே தங்களது நாடக பூமியாயிருக்க இதற்குள்ளும் அறிவிலிகள் நாடகமியற்றுகின்றனரே. அதுவும் ஆச்சரியப்படத்தக்க தன்றோ?

இப்பிரபஞ்சமே ஒரு நாடகசாலையன்றோ? ஆதிமத்யாந்தரஹிதரா யிருக்கும் தாங்களன்றோ அந்நாடகத்தை நடத்தும் ஸூத்ரதாரர்? பிரபஞ்சத்திலுள்ள ஈ, எறும்பு முதலாகக் கூறப்படும் எண்பத்து நான்குலக்ஷம் யோனிபேதங்கள் கொண்ட ஜீவராசிகளும் அந்நாடகத்தின் வேஷதாரிகளன்றோ? அவர்களுள் யானும் ஒருவனலனோ?

ஹே காருண்யமூர்த்தி! நாடகமென்று ஒன்றிருப்பின் அதைப் பார்ப்பதற்குச்சிலர் வேண்டுமே அவர்கள் யாவராயிருக்கலாம்? ஒருகால் தங்களது அருளுக்குப் பாத்ரராயுள்ள மும்மலந் தீர்ந்த முனிவர்களும், ஞானிகளும், தேவர்களும்தாம் அந்நாடகத்தைப் பார்ப்பவர்களோ?

பிரபோ! உமது நாடகமியற்றுவிக்கும் தன்மை மிகவும் அற்புதமானது. இவ்வுலகத்தோர் நடத்தும் நாடகங்களில் நடிப்பவர்கள் தாங்கள் வேஷதாரிகள் என்றும் தங்களுடைய உண்மையுருவம் வேறென்றும் தங்களுக்குத் தற்காலம் ஏற்பட்டுள்ள ஸம்பந்தங்கள் செயற்கையே யன்றி உண்மையானவை யல்லவென்றும் தெரிந்து கொள்ளுகிறார்களன்றோ? இராஜ வேஷந்தரிப்பவன் தான் உண்மையில் அரசனல்லன் என்றும் பிச்சைக்கார வேஷந்தரிப்பவன் தான் உண்மையில் அத்தகையனல்லன் என்றும் பெண் வேஷந்தரிப்பவன் தான் உண்மையில் பெண்ணன்றென்றும் இவ்விதம் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தற்காலம் கிடைத்திருக்கும் வேஷங்களால் தங்கள் உண்மை ரூபத்தை மறவாதவர்களாகவே யிருக்கின்றார்களன்றோ? ஹேதீனசரண்யா! அவர்களுக்குத் தற்காலம் கிடைத்திருக்கும் போலி ரூபங்களும் போலி ஸம்பந்தங்களும் வண்ணான், அம்பட்டன் முதலியவர்களுடைய ஸகாயத்தால் கிடைத்தனவென்றும், அத்தகைய போலிரூபங்களைத் தரிக்கும் இடமானது நாடகத்திரையின் பின் புறத்திலிருக்கிறதென்றும், அவர்கள் தமக்குள்ள ஸம்பந்தங்கள் திரைக்கு வெளியிலேயே யொழிய திரைக்குள்ளன்றென்றும் திரைக்குள்ளே அவர்களெல்லோரும் ஸமானமானவர்களென்றும் அவர்களுடைய போலி ஸம்பந்தங்கள் அவர்கள் வேஷந்தரித்துக்கொண்டிருக்கும் அந்த இரவு மட்டிலுந் தாம் என்றும் அவர்களே யறிந்து கொண்டிருக்கின்றார்களன்றோ?

நாடக மியற்றிவரும் பொழுது ஆங்காங்கு நேரிடும் ஸுகத்தால் அவர்கள் உண்மையில் ஸந்தோஷிப்பதும், கஷ்டங்களால் உண்மையில் துக்கப்படுவதும் இல்லை யன்றோ! நாடக ஸம்பந்தமாய்த் தனக்கு ஸம்பவிக்கும் மனைவியையும் புத்ரர்களையும் பார்த்துத் தன்னுண்மை மனைவியைப் போலவும் உண்மைப் புத்ரர்களைப் போலவும் வேஷதாரன் நினைத்துக்கொள்வானோ? அவர்களும்

தன்னைப்போல் வேஷதாரர்கள் என்றன்றோ நினைப்பான்? அங்ஙனமே நாடக ஸம்பந்தமாய்த் தன்னைக் கொலைசெய்யக் கொலைக்களத்துக்கு அழைத்துக்கொண்டு போய்க் கொலைசெய்தலை நினைத்து வேஷதாரன் உண்மையில் துக்கிப்பானோ? அவ்விபத்தானது அவன் தரித்திருக்கும் வேஷத்தை மாற்றுமேயன்றித் தனதுண்மைத் தேகத்திற்கும் பிராணனுக்கும் யாதொரு தீங்கையும் உண்டாக்காது என்று நினைத்துக்கொள்ளுவானன்றோ?

தான் நாடக ஸம்பந்தமாய் அடைந்துள்ள ஆபரணங்களையும், வஸ்திரங்களையும் தனக்கேயுண்மையாயுள்ளவைகளென்றும் அவைகளங்ஙனமே நீடித்திருக்கக் கூடியவைகளென்றும் வேஷதாரன் நினைத்துக்கொள்வானோ? தற்காலவஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் முகத்திற்குப் பூசிக்கொள்ளும் வர்ணங்களாலும் தான் அபிநயிக்கும் அபிநயங்களாலும் உண்டாகும் ஒரு கௌரவிக்கத்தக்க நல்ல ரூபத்தைத் தனக்குரிய உண்மை ரூபமென்றும் அதுவே கடைசியளவும் நீடித்திருக்கக் கூடியதென்றும் நினைத்து வேஷதாரன் ஸந்தோஷப்படுவானோ? அல்லது நாடக ஸம்பந்தமாகத் தற்காலம் தனக்குக் கிடைத்திருக்கும் அருவருக்கத்தக்க ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் முகப்பூச்சுக்களாலும் உண்டாம் ஒரு வெறுக்கத்தக்க ரூபத்தைத் தனக்குரியதும் நிலைத்திருக்கக் கூடியதுமான ரூபமென்று நினைத்துத் துக்கிப்பானோ? இல்லை யன்றோ?

அருட்பெருங் கடலே! நாடகம் இரவில் நடத்தப்படினும் விளக்குகளின் சம்பந்தத்தால் அதைப் பகலாக்கிக்கொள்ளுகிறார்களே அப்பொழுது அது பகலன்றுஎன்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லையா? திரைகளின் மூலமாய்க் காட்டப்படும் வீடுகளும் காடுகளும் கோவில்களும் கோபுரங்களும் பட்டணங்களும் உண்மையில் அத்தகையனவென்று அவர்கள் கருதுகின்றார்களா? நாடக ஸம்பந்தமாய் வரும் புலிகளையும் யானைகளையும் பாம்புகளையும் மற்றும் கொடிய ஜந்துக்களையும் கண்டு அவைகள் உண்மை ரூபமுள்ளவைகள் என்று நினைத்துப் பயப்படுகின்றார்களா? அவைகளைப் போலி ரூபங்களாகவும் கற்பனா ரூபங்களாகவுமன்றோ நினைக்கிறார்கள்.

ஹே பிரபஞ்சநாடக ஸூத்ரதார! தங்களுடைய நாடகசாலையாயிருக்கிற இவ்வண்டசராசரங்கள் அவைகளுட் காணப்படும் ஜீவகோடிகள் அவைகளுக்குள்ள சரீராதி அவயவங்கள் மந்திகரணங்கள் முதலியன யாவும் தங்களாலியக்கப்படுகின்றனவன்றோ? சுத்த ஜீவர்களாயிருக்கிற தங்களுடைய அடியார்களை நாடக பாத்ரராகச் செய்து அவர்களுக்கு வெவ்வேறு அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆநந்தமயகோசம் ஆகிய சரீரங்களைத் தந்து காமக்ரோதாதிகளாயுள்ள அரிஷட்வர்க்கங்களுக்கு அவர்களை ஆளாக்கி, மாயைக்கு வசப்படுத்தி நான் எனது என்னும் அஹங்கார மகாரங்களுக்கு ஆதார பூதராகச்செய்து, ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகமாயுள்ள தாபத்ரயங்களை மேலுமேலுமனுபவிக்கவிட்டு ஸஞ்சிதப்ராரப்த ஆகாம்யங்களுக்குட்பட்டு "மாதாவுஞ் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன். வேதாவுங் கைசலித்து விட்டானே" என்னும் கூற்றைப்போல் ஜன்மாக்களை அளவில்லாமலெடுக்கச்செய்வது தங்களுடைய நாடகமோ? ஜனனமரணங்களை ஆதியந்தமாகவுடைய சொற்பகால வாழ்வுதான் ஒவ்வொரு வேஷத்தின் அளவோ கர்ப்பவாஸமே தான் வேஷந்தரிக்கும் காலமோ? மரணம்தான் வேஷம் முடியும் காலமோ? அணுவுக்குள்ளணுவாயும் மஹத்துக்கெல்லாம் மஹத்தாயிருக்கிற பரம்பொருளாகிய தாங்கள்தாம் அத்தகைய வேஷதாரர்களின் ஹிருதயங்களில் அந்தர்யாமியாய் வஸித்துக்கொண்டு அவரவர்களுடைய கர்மாக்களுக்குத் தக்கபடி அவர்களை நடிக்கச்செய்யும் கர்த்தாவோ?

பரம்பொருளே! தங்களுடைய நாடகபாத்ரர்களாயிருக்கும் ஜீவகோடிகள் தங்களை இப்பிரபஞ்ச நாடகத்தின் வேஷதாரர்கள் என்று நினைத்துக்கொள்ளாமலிருப்பது ஆச்சரியப்படத்தக்கதன்றோ? ஆயின் அவர்கள் ஏன் அங்ஙனம் இருத்தல்வேண்டும்? அவர்கள் தாங்கள் வேஷந்தரிப்பதற்கு முன்னர் இருந்த நிலைமையையும் அவ்விதம் தாங்கள் வேஷம் தீரும் பின்னர் இருக்கும் நிலைமையையும் அறிந்துகொள்ள அசக்தராயிருப்பதல்லன்றோ? அவர்களது அறியாமைக்குக் காரணம் யாது? ஒருகால் தங்களால் ஏற்படுத்தப்பட்ட மாயையானது மூடுபனிபோன்று

ன்னும் மரணத்திற்குப் பின்னும் அவர்களுக் ள உண்மை நிலையை அவர்கள் காணவிடாது த்து ற்கின்றதோ? அன்றி அவர்களது மனக் ண்களுக்கும் அந்நிலைக்கும் மத்தியில் அஞ்ஞானம் ந்தகாரமேபோன்று வியாபித்துநிற்றலால் அதை ர்கள் அறியக்கூடவில்லையோ? அன்றி மன னது பிரபஞ்சவிஷயாதிகளிடத்தில் பத்தப் டு அவைகளையே பின்பற்றி மீளாவழியில் சன்றுகொண்டிருக்கின்றதோ? அன்றி இம்மண் லகச் சிற்றின்பமானது மதுவேபோன்று உண் ரது மனதைத் தன் வசமாக்கிக்கொள்வதால் ர நிலையில்லாத வாழ்வை நிலையென்றும் கேவ ம் துக்கத்திற்கே ஹேதுவாயிருக்கப்பட்ட வாழ்க் கையைச் சுகவாழ்க்கையென்றும் அநித்யமாயிருக் கிற சரீரத்தையும் செல்வத்தையும் பந்துமித்திரர் களையும் சாச்வதமாயிருக்கக்கூடியவைகளென்றும் நினைக்கச்செய்கிறதோ? அன்றி சர்வ ஜீவர்க ளுடைய ஹிருதயங்களிலும் வசித்துக்கொண்டிருக் கிற தாங்கள் அவரவர்களுடைய கர்மாக்களின் பலனை அவரவர்கள் அநுபவிக்கும் வரையில் அவர் களை மாயையான கயிற்றால் பிரபஞ்சத்தோடு பந் தப்படுத்தி அவ்வநுபவத்தின் பின்னர் தங்களருள் என்னும் கட்கத்தால் அப்பந்தத்தைச் சேதித்து அவர்களுடைய வேஷங்களைக் கலைத்து ஆட் கொள்ளுகின்றீரோ?

ஸ்ரீராமாயணத் தனிப்பாசுரங்கள்.

[ஸ்ரீமான் வி. சுப்பய்யர் எழுதியது]

(9-வது பக்கத் தொடர்ச்சி)

(11) ராமன் சீதையுடன் அயோத்தியை யடைதல்.

நேரிசை யாசிரியப்பா.

விவாக மானதுந் தசரத வேந்தன்
அவாவுட னயோத்தியை நோக்கி யகன்றிட
அவனது மைந்தராம் ராமலக் மணரும்
பரதனுஞ் சத்துருக் கினனுந் தொடர்ந்தனர்;
இளைய வரச ரிதமுடன் வேட்ட

தேவியர் தாமுஞ் சேர்ந்துடன் சென்றனர்:
சனகனு மன்று தன்பதி யகன்று
கனக முதலிய ஸ்த்ரீதனந் தாங்கிச்
சென்றன னயோத்தியைச் சேர்ந்து மகிழ்ந் [திட.
இவர்வருஞ் செய்தியையெழில்நக ருள்ளோர்

கேட்டதும் பதியலங் கரித்தனர் கேண்மோ;
ஆவலா யவர்ரலா மெதிர்வந் தழைத்திடக்
காவலு னின்ற காளையர்
தேவிய ரோடு சேர்ந்தனர் பதியே.

---

(12) தசரதன் ராமனுக்குப் பட்டங்கட்ட வேண்டுமெனல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

அயோத்தியை யடைந்தவவ் வருந்தவப் புதல் [வர்
சகோதர பாவஞ் சற்றும் பிறழ்ந்திலா
திருந்தன ரவர்களை யீன்றதே வியருந்
திருமணஞ் செய்தவ ணடைந்தமங் கையரும்
ஒருவரோ டொருவ ருளக்களிப் போங்க

நட்பினைப் பெருக்கி நடந்து வந்தனர்;
இவ்வித மிவர்க ளிருப்பது சண்டுந்
திவ்விய வருளைத் தேட நினைந்துந்
தசரதன் றன்குல குருவாம் வசிட்டன்
இசைந்திட வென்றோர் மாற்ற மியம்புவான்:—

'குருவே! குமாரன் வயதில் முதிர்ந்தான்;
சருவேச் சுமையைச் சார்ந்திட நினைந்தேன்;
ஆகையால் ராம னவனியை யாளத்
தாக மாயினேன்; தருகநின் விடையே.

---

(13) ராமனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யத் தீர்மானித்தல்.

நேரிசை யாசிரியப்பா.

இச்சொலச் செம்ம லியம்பிய வுடனே
'மெச்சத் தகுந்ததிம் மேன்மையாம் நினைவே'
என்று வசிட்ட னெடுத்துக் கூறினன்.
அன்றங் கிருந்த வமைச்சருந் தாங்கள்
ஆமோ தித்ததை யரசர்க் குரைத்தனர்.

'தாமோ மகிழ்ச்சியைத் தாங்குதல் திண்ணம்'
என்று குடிகளு மேந்திப் பேசினர்.
'நன்று நவின்றீர் நீவிரெல் லோரும்
ஆகையால் ராமனை யடைந்திடு மரசனாய்;
வேகமாய் நானு மில்லறம் விடுத்துத்

தவமே செய்து தற்பரன் றனைப்
பவபா சங்களு மகலப் பணிவேன்'
என்று தசரத னியம்பினன்:
சென்றன ரங்குளோர் சித்தங் களித்தே.

(14.) கூனி கைகேயிக்குச் சொல்லுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

அங்கிருந் தவர்களிற் கூனி யென்பவள்
சங்கட மடைந்தனள் சங்கதி கேட்டே;
எனெனி லோர்நா ளிளமைவாய் ராகவன்
தான்விளை யாட வெய்த்மண் ணுண்டை
கூன்முது கதனிலே வீழ்ந்தது குறியிலா

தன்னதை யன்னவ ளகத்தே யடக்கிப்
பின்னமொன் றிழைக்கப் பெரிதக நினைந்து
சென்றனள் சீர்க்கை கேயிவா ழிடமே:
அவ்விடஞ் சேர்ந்துதன் னழுமுகத் தோடு
'செல்வியே! ராமனைச் சீர்கொளிப் பதிக்கு

மன்னவ னாக்க மதித்தனன் வேந்தன்'
என்றது மரசி யெழில்முக் மலர்ந்து
தன்கழுத் திருந்த தரள மாலையைப்
பெண்கழுத் ததனிலே பேணியிட் டனளே.

(15.) கூனி கைகேயியின் மனத்தை வேறுக்கத் தலைப்படுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

மாலையைப் பிய்த்திடும் மர்க்கடம் போல
சிலமொன் றில்லாத் தெரிவையவ் வடத்
கழுத்தி லிருந்து கழற்றி யெறிந்து
விழுந்து தரைமேல் விசனங் காட்டக்
கைகே யிகண்டு 'கன்னியே! உனக்

இவ்வித விசன மெழுந்ததிந் நாளில்?
கண்மணி ராமன் கனமுடன் ராச்சியங்
கொண்டது விசனக் குறிப்போ? சொல்
என்றது மன்னவள் 'இளமைவா யர
நன்றிது கேடிது வென்றுநன் குணரா

உன்றன் மனநிலை ஓ! ஓ! வியப்பே!
பரத னெனிய பாலக னிருக்க
இதர மானவர் பட்டங் கொள்ளவோ?'
என்று கலைத்தன ளேர்திழை தன்னையே

(16.) கைகேயியின் மனங் கலைக்கப்படுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

அதற்குஞ் சலியா தரசி யிருந்ததைப்
பதரெனச் சொலத்தகும் பாவைகண் ணு
'மனத்தைக் கலைக்க மற்றோர் மாற்றஞ்
சொல்லுவம்' என்று தன்னுள் நினைந்
'கோசலை தன்னதாங் குமார னண்டி

பேசுவ ளன்றோ வுன்றனை யிழிவாய்?'
என்று மிதுபோ லேனைய பகர,
'நன்றே நவின்றனை! நாமென் செய
என்றவ் வரசி யியம்பக் கூனி
'தாயே! தசரத னுனக்குமுன் னீ

வேண்டு மிரண்டு வரங்களை வேண்டு
ஒன்றினால் ராமனைக் காட்டிடை போ
மற்றுள வொன்றாற் பரத னண்டிட
கேளாய்' என்று மொழிந்தன ளா

(17) கைகேயி தசரதனிடம் வரங்களைக் கேட்டது.

நிலைமண்டில வாசிரியப்பா.

அப்படிக் கூனி செப்பின வுடனே
அரசி யெழுந்தோர் கறையிற் புகுந்து
தன்குழல் விரித்துத் தரையிற் படுத்து
மன்வரும் வேளையில் மலர்க்கண் சொரிந்தன
ராமனை மன்னவ னுக்குஞ் செய்தியைச் [ன் ;

சொல்ல வந்தவம் மன்னன், சுந்தரி
அழுது புரண்டிடுஞ் செயல்தனைக் கண்டு,
'பழுது யாதோ? பாவையே!' என்ன,
'முன்னொரு நாள்நான் முடித்த பணிக்கா
மன்னனே! எனக்கிரு வரமளித் தீரால்,

அன்னவற் றொன்றினால் ராமன் காட்டைப்
பன்னான் காண்டுகள் தவறிலா தடையவும்
பின்னத னாலே பரதனி ராச்சியம்
பெற்றிட வென்றும் அருளு'மென் றனனே.

(18) தசரதன் கைகேயியுடன் மன்றாடி அவள் தன் மனவுறுதியைச் சொல்லுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

இச்சொல் செவியி லிடிவிழுந் தாற்போல்
பட்டதும் மன்னவன் பதைத்துநா நடுங்கக்
'கெட்டேன்! என்று கீழே விழுந்து
'உனக்கே னிம்மதி வந்தது ஓ! ஓ!
வுனையோ ரடிமையாய் வேண்டினு மியைவன்:

ராமன் ராச்சிய மடைந்திட வியையாய்;
பரதனிங் கிருந்தாற் பண்புட னவன்றன
தன்ன னாண்டிடக் களிப்பது திண்ணம்.
ஆகையால் நீஎன் காலேச சித்துச்
சொல்லுக' என்னத், துட்டரை யழிக்கச்

செல்வன் காட்டிடைச் செலவுள தாகையால்,
கைகே யிதன்மனங் கலங்கா திருந்தே
'அவ்வா மிரண்டு மளிக்க; இலையேல்
இக்குலத் திற்கோ ரிழிவிதென் றனளே.

(19) கைகேயி ராமனைக் காட்டிற்குச் செல்லச் சொல்லுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

குலசலம் பேசிய கொடுமையை நினைந்து
மலர்தலை யுலகின் மன்னர் மன்னவன்
'உனையிது வரையான் பெண்ணென வுவர் [தேன்.
மனைதனில் வதிந்திடு பேயென மதித்திலேன்
சொன்ன வண்ணமே துரிதமாய்ச் செய்கி [றேன்.

என்றங் கிருந்தே யெழுந்தது வாயில்
'மன்னு! மனைவிட் டகலா திங்கு
ராமனை யழைத்துச் சொல்லுமின்' என்று
தாமத மின்றி யாட்களை யனுப்ப
ரகுகுல திலக னவ்விடம் வரவே,

தசரதன் சஞ்சல மடைதல் கண்டு
கைகேயி தன்னதாங் கடின நெஞ்சுடன்
'பதினான் காண்டுநீ காட்டிடைச் செல்க;
பரதன் பட்டம் பெறுக'வென் றனளே.

(20.) ராமனுஞ் சீதையும் வனம்புகத் தீர்மானித்தல்.

நேரிசை யாசிரியப்பா.

தன்னைக் காட்டிடைப் போகச் சாற்றிய
அன்னையி னடிபணிந் தப்புற மெழுந்து
மன்னனை நோக்கி, 'மனஞ்சலி யாதிரும்
இம்மெனு முன்போம் பதினான் காண்டும்.
நானாண் டாலென்? பரதனாண் டாலென்?

நாட்டி லுள்ளவர் நலமே யடைவர்'
என்று தந்தையை வணங்கி யெழுந்து
தன்தாய் கோசலை தங்கு மிடம்போய்
அங்கவட் குரைத்தே யவளைத் தேற்றிப்
பின்புதான் விழைந்த பேதையை யணுகிப்

போவது சொல்லப் புவியின் றெடுத்த
சானகி தானும் வரமன் றாட
ராயனு மாங்கவட் கியைந்தே
இருவருஞ் செல்லத் துணிந்தன ரன்றே.

21. லக்ஷ்மணன் கோபங்கொள்ளுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

இவையெலாங் கேட்ட விலக்மணன் துடித் [தே
'அவனியி லிதுபோ லநியா யமுண்டோ?
பெரிய மகன்றனைக் காட்டிடை விடுத்துச்
சிறுவ னுளவுஞ் செய்வரோ? இங்கு
ராமனைத் தவிர வேறொரு வன்றனை

அரசாய்க் கொள்வது சாத்திய மன்று:
பரதன் றனக்குப் பட்டங் கட்டத்
தசரதன் வரினுந் தகர்ப்ப னவனை:
எத்துணைப் பேரென் னோடே யெதிர்ப்பினு [ஞ்
சத்தியம் வெல்லு மென்பது சரதம்.

ஆகையாற் பார்ப்போ மொருகை' என்றே
இளைய பெருமா னியம்பிய துணர்ந்த
ரகுகுல திலகன் மனஞ்சலிப் படைந்து
தம்பியைத் தேற்றத் தானடைந் தனனே.

(22) லக்ஷ்மணன் ராமனுடன் செல்ல விடைகேட்டது.

நிலைமண்டில வாசிரியப்பா.

தம்பியைக் கண்டதும் ராமச் சந்திரன்
"செம்மலே! உனக்கேன் கோபஞ் செப்பிடா [ய்
'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
என்பதை யின்றுநீ மறந்தனை போலும்;
அன்னவ ரென்னை யாரணி யம்புகச்

சொன்னதைச் சுருதியின் வாக்காக் கொண்டுநீ
அவருட னிருந்தே யன்பனும் பரதன்
தவறிலா திராச்சியந் தன்னை யடைய
வேண்டிய பணிகளை விநயமாய்ச் செய்வாய்"
என்று சொன்னது மிலக்மணன் பதறி

நன்றி மைத்திடு நாயகன் றாளைப்
பிடித்துக் கொண்டு 'பிரபுவே! நானும்
அடிமை யாகி யங்குடன் செல்ல
விடையரி' என்று விம்மின னங்கே.

(23) ராமனுஞ் சீதையும் லக்ஷ்மணனும் பயணமாகுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

'தந்தையை விடுத்து நீவரத் தகுமோ?'
என்று ராகவ னியம்பிய வுடனே
இலக்மண னெழுந்து தன்தலை நிமிர்த்துக்
'கலக்கிடு மம்மொழி மறந்திலே னாயினும்,
அண்ணனு மப்பனும் ஆயந்திடி லொன்றெனப்

பண்டுள வேதம் பகர்ந்ததும் மறந்திலன்'
என்று சொன்னது மவனுடன் வாதஞ்
செய்வது பயனைத் தராதது நினைந்து
நைந்திடு முளத்தொடு ராம னியைந்தான்.
உடனவ் வூருளோ ருடன்புறப் படவுந்

திடமனம் வாய்ந்த செம்மல் ராமனும்
நடையன மெனத்தகும் நாயகி சீதையும்
அடலே றொத்திடு மிளைய வீரனும்
விடுத்தனர் தந்நகர்; வினைகளைந் திடவே.

(24) கங்கைக் கரையை யடைதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

மூவரும் மரவுரி முடித்துப் பின்னர்
தாவெழிற் றலைமிசைச் சடைமுடி தாங்கிச்
சுமந்திரன் கொணர்ந்த தேரினி தேறி,
'எந்தலைச் செவ்வனே பார்த்திடும்' என்று
'பரத னைப் பணிந்திடும்' என்றும்

அங்குவந் தவர்களைத் தேற்றி யனுப்பிச்
சங்கரன் றலையினின் றிழிந்து மண்ணுள்
பாவிக ளுய்யப் பரந்து வந்திடுங்
கங்கையின் கரையினை விரைவா யடைந்து,
சுமந்திரன் றன்னைத் தொன்னகர்க் கனுப்பி

அந்நதி தாண்டி யப்புறஞ் செல்ல
அங்குள் ளவர்களைக் கேட்டுத் தெரிந்து
மரக்கல மியக்குவோர் மன்னவன் போன்ற
குகனிடஞ் சென்றுதங் குறிப்புரைத் தனரே

(25) சித்திரகூடஞ் சேர்தல்.

நேரிசை யாசிரியப்பா.

அன்னவர் சொல்லிய வம்மொழி கேட்ட
குகனவர் காட்டிய குணமெலாம் நினைந்து
தான்பலம் வாய்ந்த தன்னிய னைகையாற்
கோன்மகார் திறத்தைக் குறித்து மகிழ்ந்
அங்கவர் முன்னிலை யடியினை

செங்கண் மாலுடன் சேர்ந்த வர்களைத்
தன்னரு வோடந் தானே யோட்ட
முன்னிரு மென்று மொழிந்தே யவர்களைத்
தென்கரை சேர்க்க, ராமன் கசிந்தே
'என்சகோ தரன்நீ' என்று தழுவக்

குகனு மவருடன் கூடி நடந்து
மிகமுனி வரர்தவஞ் சேர்ந்துசெய் வதனால்
மித்திர பாவ மிகவுள
சித்திர கூடஞ் சேர்ந்தன ரினிதே.

(26) தசரதன் பரமபதமடைதல்.

நேரிசை யாசிரியப்பா.

திரும்பின வுடனே சுமந்திரன் செய்தியைப்
பெருநிலம் புரக்கும் மன்னவர்க் குரைத்திட
அன்னவ னடியறு மரம்போல் விழுந்தே
'இன்னது கேட்கவோ வென்னுயி ரிருந்தது?

என்று புலம்பி, வேக்க மடைந்து
'முன்னொரு நாள்நான் முனைந்த வேட்டையில்
நீர்க்கரை சேர்ந்தவோர் நிதிவாய் வேதியச்
சிறுவனை விலங்கென நினைந்து கொன்றதும்
அவன்கிழத் தந்தை கொதித்தே யழுது
தன்னுயிர் துறந்திடும் வேளையிற் சாபம்

இட்டது பலித்ததே!' என்று கரைந்து
சட்டெனத் தன்னுயிர் விடுத்தன னந்தோ!
இந்திரன் விண்விடுத் திழிந்து
வந்திடு மன்னனை வரவேற் றனனே.

') பரதன் தன்தாயைக் கோபித்துக்கொண்டு ராமனது தாயைத் தேற்றுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

தசரதன் றன்னுயிர் விடுத்ததும் வசிட்டன்
இசையுள மாதுலன் மனைதனக் கேகிய
பரதனைப் பாராள் வதற்காத் தூதரை
விரைவுடன் விடுத்துக் கொணரச் செப்பினான்.
அன்னவ ரோர்வா ரத்து ளறைந்திட

மன்னருக் கேவரும் மதித்திடு பரதன்
மாமன், மனையை யுடனே விடுத்துச்
சேமமாய்த் தன்பதி சேர்ந்ததுந் தமையன்
கானிடைச் சென்ற கதையினைக் கேட்டுத்
...ருத்தல் தகுமோ வென்றுதன்

தாயைக் கடிந்துமேல் தாசரதியின்
தாயாங் கோசலை தன்முன் வந்தே
'அம்மா! அண்ணனைக் கொணர்வேன். மேலுஞ்
சிம்மா சனம்வேண் டே'னென் றனனே.

(28) பரதன் கங்கையை யடைதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

தன்னையீன் றெடுத்த தாயைக் கடிந்து
முன்னவன் றாயை மொழிகொடு தேற்றிச்
சத்துருக் கினனுடன் தமையனைக் கண்டே
இத்தரை யாள விசையக் கேட்கப்
புறப்படப் புரந்தனி லுள்ள மக்களும்

சிறப்புடு படைகளுந் திரண்டு பின்வரக்
கங்கையின் கரையினை யடைந்தன ரெளிதாய்;
அங்கே யமர்ந்துள குகனிவன் வரவைக்
கண்டதுந் தன்னதாஞ் சிந்தை கலங்க
'அண்ணனை யனுப்பியு மடங்கா நெஞ்சுடன்

வந்தனன் போர்செய' என்று நினைந்து
தன்படை சேர்த்துச் சித்தமா யிருக்கப்
பரதன் மாவுரி பாங்காய்த் தரித்து
விரைவுட னணுகினன் வேடன் முன்னமே.

(29) குகன் பரதனைப் புகழ்தல்.

நேரிசை யாசிரியப்பா.

தன்படை விடுத்துத் தனியே வந்தவம்
மன்னனைக் குகனும் மலைத்து நோக்கி
'ராமன் ராச்சிய முனக்குத் தந்தபின்
சேமமா யங்கிருந் தாளுகை செய்யா
திங்கேன் வந்தனை யியம்புக' என்னப்

பொங்கிசைப் பரதன் புவியில் விழுந்து
தன்னுளக் கருத்தைச் சரிவறப் புகல
இன்னுளங் களித்த குகனு மியம்புவான்:—
'செம்மலே! பலநா றாயிரம் ராமர்
சேர்ந்துமோர் பரத னாவரோ? செப்புக

உன்போ லுலகுள தம்பிய ரிருந்திடில்
அன்பே யாளு மென்பது சரதம்.
ஆகையால் நாமெலா மன்பனே
யெகுவோ மண்ணலும் போயிடம்' என்றே.

(30) லக்ஷ்மணனுக்கு ராமன் புத்திபுகட்டேதல்.

நேரிசை யாசிரியப்பா.

பின்பவர் கங்கையாம் பெருநதி கடந்து
மன்னவன் ராமனும் மனைவியு மிளையனுஞ்
சேர்ந்து வசித்திடுஞ் சித்திர கூடஞ்
சேர்ந்திட நினைந்து விரைவாய் வருகையில்,
இலக்மணன் கண்டு தன்மன மிடிந்து

'பலதிறப் படைக ளுடனே பரதன்
நம்மை யிங்கும் நாசப் படுத்த
வந்தனன்; ரகுபதே! ஆகையா லெனக்கு
விடைகொடுத் தருளு மம்பினை விடுக்க"
என்றதுஞ் சாந்த மூர்த்தியாம் ராமன்

'அவசர முடையோ னறிவிழந் திடுவன்;
ஆதலாற் சற்றே யடங்கி யிருந்து,
வருபவர் மனத்தை யுணர்ந்தபின்,
தருவன் விடை'யெனச் சாற்றினன் றனனே.

(31) பரதன் ராமனைக் காணுதல்.

நேரிசை யாசிரியப்பா.

இலக்மண னிமையா திருந்து பார்க்கையிற்
கலக்கமொன் றின்றிக் காலால் நடந்து
மாவுரி சடைமுடி மாண்புட னணிந்து
வருகிற பரதனைக் கண்டு வியந்து
ராமனை யடைந்து 'பூமியை யாள

நாமெலாம் விடுத்த பரதன், நாயகா!
துறவுற வேடந் துலங்க வருகிறான்'
என்றதுஞ் செம்ம லெழுந்து 'லக்மண!
நன்றிது தீதிது வென்றுமுன் னோக்கா
தொன்றுஞ் செய்யா திருப்பாய்' என்று,

வருகிற மன்னனை நல்வர வேற்றங்
கருகினி திருத்தி யன்புபா ராட்டி
'ஊரெலாஞ் சுகமோ வுண்மையைக்
கூ'றெனக் கூறுவன் பரதனுங் கனிந்தே.

(32) பரதன் ராமனை ராச்சியமடைய வேண்டுதல்.

நேரிசை யாசிரியப்பா.

'அண்ணலே! தந்தையர் மண்விடுத் தேகி
விண்ணுல கடைந்தனர்' என்று பரதன்
சொன்னதும் ராமன் துயரந் தாழ்ந்து
'மன்னவா! நான்கு மக்களைப் படைத்தும்
ஒருவ னும்முட னிறுதியி லில்லையே!

திருவுளச் செயலைத் தடுப்பது முண்டோ?
என்று துடித்தபின் னிளையோ ருடனே,
சென்றதன் தந்தையின் தென்புலக் கடனை
செய்தபின் பரதனைச் சேர்ந்திடு நகரென
அன்னவன் ராமனி னடியிணை பாவி

'உன்னதா மிராச்சிய வுரிமையைக் கொண்
டந்தெம் முடனே வளநக ரடைந்தபின்
அந்தமா யாண்டிட லென்றன்
சிந்தை யா'மெனச் செப்பின னங்கே.

(33) ராமன் பரதனைத் திரும்பிப்போக வேண்டுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

சொன்னதும் ராமன் துதித்துப் பரதனை
'மன்னவா! பதிதனை மயங்கா தடைவாய்
தாய்சொன் பிக்கது செய்களுக் கின்மைய
நீபோ யுலகின் நிருபனாய் விளங்குக.
வேறோர் காரணம் விளம்புக் கேளாய்:—

தாரார் தசரதன் மக்கட் பேறிலா
துன்தாய் தன்னை யுவந்து மணக்கச்
சென்றவந் நாளிற் கீர்த்திவா யுன்றன்
பாட்ட னிடத்திற் பார்தனை யவனின்
சேட்ட புத்திரர்க் கீவதாய்ச் செப்பினன்

ஆகையா லவனியின் மன்னவன் நீயே
போகுக' என்று புகன்றிடப் பரதன்
'நீயிலா நாட்டில் நிலைபெற் றிருத்தலின்
தீயினில் மாய்வதே செம்மை'யென் றனனே

(34) பரதன் பாதுகையை வேண்டுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

இக்கொடுஞ் சொல்லைக் கேட்டதும் ராமன்
மிக்க விசனம் மனத்தை யொடுக்கச்
'சீரார் பரதா! பதியைச் சேர்ந்துநீ
பாராள் பதினான் காண்டுகள் முடிய;
அதன்பின் னடவியை விடுத்து வருகிறேன்

இதற்கோ ரிடுக்கண் செய்திடேல்' என்னப்
பரத னெழுந்து பதந்தனில் விழுந்து
'விரத மங்ஙன மிருக்குமே யாயின்,
உன்ற னடிமையா யுன்பணி செய்வன்;
என்ற னுளநகை யில்லது விளக்கப்

பாத ரக்ஷைநான் பணிந்திட வருளாய்;
அதன்கீ ழிருந்தர சாளுவன்; சொன்ன
பதினான் காண்டுகள் பார்க்க வராவிடிற்
குதிப்பன் தீயினிற் குறி'யென் றனனே.

(35) பாதுகா பட்டாபிஷேகம்

நிலைமண்டில வாசிரியப்பா.

என்ன சொலியு மிணங்காப் பரதன்
சொன்னது போலவே பாதுகை வழங்க
அன்னதை யன்னவ னிருகை யேந்தித்
தன்முன் னதுசெலத் தமையனைப் பணிந்து,
லக்மண னிடத்தில் 'ராமனுஞ் சீதையும்

இக்கொடுங் கானகத் திடையூ றடையா
திருக்க வேண்டிய விதத்தைத் தே'டென
உருக்கமா யுரைத்துப் பின்பவ னீங்கிக்
குகனுடன் சென்று கங்கையைக் கடந்து
'மிகுவள வயோத்தியை மிதிக்கிலேன்' என்று

நந்தியம் பதியை நயமா யடைந்தே
அந்தமாய்ப் பாதுகைக் கபிஷே கித்துச்
சிந்தையை ராமன் பாலே செலுத்தி
விந்தையா யிருந்தர சாண்டன னினிதே.

அயோத்தியா காண்டம் முற்றுப்பெற்றது.

Note:—The right of publishing these sonnets in book-form is reserved by the author.

புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

இந்தியாவும் சுய ஆட்சியும்.

இப்பெயர்பூண்ட ஒரு புஸ்தகம் வரப்பெற்றோம். ஆங்கிலங்கல்லாதாரும் இந்திய அரசியல்பற்றிய வரலாறுகளை ஒருவாறுணரும் பொருட்டுப் பல ஆங்கில நூல்களினின்றும் விஷயங்களைத் தொகுத்து அதைச் சென்னைத் தம்புசெட்டித் தெரு கணேஷ் அண்ட் கம்பெனியார் இப்புத்தக வடிவமாக வெளியிட்டிருக்கின்றனர். நமது தேயத்தில் ஆங்கிலேயர் தொடக்கத்தில் தோன்றிய முதல் தற்காலம் வரையில் நமது அரசியல் எங்ஙனம் நடைபெற்று வருகின்றதென்னும் விவரங்களும், இந்தியாவின் சிறப்பைப் பற்றி அவ்வப்போது சிற்பல ஆங்கிலேயர் கூறியுள்ள அபிப்பிராயங்களும், இன்னஞ் சில புள்ளி விவரங்களும் இதில் நிறைந்திருக்கின்றன. ஆங்கில மறியாத் தமிழ் மக்களுக்கு இது மிக்கப் பயன்தருமென்பதாகி. இதன் விலை ரூ. 1-8. மேற்கூறப்பட்ட கம்பெனியிற் கிடைக்கும்.

சத்தியாக்கிரகம் அல்லது சாத்வீக எதிர்ப்பின் மகிமை.

இப்பெயர்கொண்ட புஸ்தகமொன்றைத் திருவல்லிக்கேணி இம்பீரியல் டிரேடிங் கம்பெனியாரிடமிருந்து வரப்பெற்றோம். இதில் மகாத்மா காந்தியின் சிறப்பும், அவருடைய சத்தியாகிரகக் கொள்கைகளும், செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு 6. புஸ்தகம் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, 135, தேவராஜ முதலி தெருவு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மீராபாய்.

இப்பெயர்புனைந்த புஸ்தகமொன்றை மதுரையிலிருக்கும் "கல்வி" யென்னும் பத்திரிகையின் ஆசிரியரிடமிருந்து வரப்பெற்றோம். நமது பண்டை நூலாகிய பக்தவிஜயத்தில் மீராபாயின் சரிதம் அடியில் வருமாறு கூறப்படுகின்றது. அவள் தனதிளமைப் பருவத்திலிருந்தே தன் தந்தையின் அநுமதி பெற்றுக் கிருஷ்ண பகவானை வழிப்பட்டு அருச்சித்துப்பாடி அவனே தனக்குக் கணவனென மதித்து வந்தனள். பிறகு, அவள், தனது மங்கைப் பருவத்திலும், தன் பெற்றோர் கூறிய மொழிகளுக்கிணங்காளாய் மணத்தை வெறுத்து, அக்கடவுளை வழுத்தலிலேயே தன் முழுப்போதையும் போக்கிவந்தனள். அவள் பல பைராகிகள் முதலிய பக்தர்களை வித்தியாசம் பாராது தன்னோடு வைத்துக்கொண்டு பஜனைசெய்து வந்ததைக்கண்ட அந்நகர் வாசிகள் வசைமொழி கூறத்தொடங்கி, அவளது கற்பைப்பற்றியும் குற்றங்கற்பித்தனர். அதைக்கேட்ட தந்தை தன் புதல்வியின் செயலை மாற்ற எங்ஙனமுயன்றும், அது பலியாமற் போகவே, அவன் தன் மனையாட்டியை ஏவித் தன் புதல்விக்கு நஞ்சைக் கொடுக்கச்செய்தனன். அன்னை அவ்வாறே தன் புதல்வியிடத்தில் நஞ்சைக்கொடுத்ததுமன்றி உண்மையையும் அவளிடம் கூறினாள். மீராபாய் அதை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்து அருந்த, நஞ்சு அவளுக்கு அமுதம் போலாயிற்று; அதைக் கண்ணபிரான் ஏற்றுக் கொண்டார்; அவளது உயிருக்கு எத்தகைத் தீங்குமுண்டாகவில்லை. ஆனால் அவளாற் பூஜிக்கப்பட்டுவந்த விக்கிரகம் மாத்திரம் நீலநிறமடைந்தது. அங்கு ஒளிந்திருந்து நிகழ்ந்தவற்றைக் கண்கூடாக்கண்ட மன்னன், தன் புதல்வியின் தூய்மையையும் பக்திச் சிறப்பையும் குறித்துப் பெரிதும் கலக்கமுற்று அவளை வணங்கினனென்றும், பின்னர் அவளுடைய வேண்டுகோளின்படி விக்கிரகத்தின் நீலநிறம், தொண்டையைத் தவிர மற்ற விடங்களினின்று இல்லாமற்போனதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இக்கதையின் வரலாற்றை முற்றிலும் வெறுகமாற்றி அவள் ஒரு அரசனை மணந்தாளென்றும், பொறாமைகொண்ட தன் சக்களத்தியின் சூழ்ச்சியிற்பட்ட தன் கணவனால் அவள் அரண்மனையிலிருந்து வெளிப்படுத்தப்பட்டாளென்றும், பிறகு அரசன் அவளைக்கொல்ல பலவாறு முயன்றானென்றும் அவள் அவ[ற்]றினின்று தெய்வீகமாய்த் தப்பினாளென்று[ம்] வரையப்பட்டுக் கதைப்போக்கே முற்றிலும் வேறுபட்டுப் போயிருக்கிறது.

நமது புராணக்கதையை நாடகமாக்குவதில், அதன் வரலாற்றை உள்ளவாறே கொள்ளாலும், தேவையானால், அதற்கு முரண்படாத ஏனைய நூதன விவரங்களைப் புகுத்துதலும் சிறப்புடைத்தன்றி, அதை நினைத்தாங்கு மாற்றுதல் பெருந்தவறு.

நிற்க, தெய்வீகமான சம்பவங்கள் நிகழ்ந்தனவென்று புராணங்களிற் கூறப்பட்டிருந்தால், அவற்றை நாம் மரியாதைப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவற்றை நாம் அவ்வாறே நாடகத்தில் வரையலாம். இ[ப்]போது நாமே நவீனமாக வியற்றும் நூலி[ல்] தெய்வீகச் சம்பவங்கள் நிகழ்ந்தனவென்[று] கூறுதல் பழிப்பிற்கே இடந்தருமன்றி, அ[து] தற்கால நாகரிகத்திற்கும் கல்வியாராய்ச்சிக்கும் இயைபின்றித் தோன்றும்.

தவிர, ஒரு கதையைச்சம்பாஷணை வ[டிவ]மாகக் கூறிவிடுதலே நாடகமென்பது சிலர் கொள்கைபோலும். ஆங்கிலத்தில் ஷேக்[ஸ்]பியரும் வடமொழியிற் காளிதாசரும் வ[ரை]ந்துள்ள நாடகங்களில் வெற்றுக்கதைகள் மா[த்]திர மிருந்திருப்பின் அவர்களுக்கு [...] மழியாப்புகழுண்டா யிருக்குமா?

எதனால் உண்டானது. அக்கதைகளிற் பொதிந்துள்ள சொற்சுவை, பொருட்சுவையாலும், உபமான, உபமேயங்களினாலும், ஏனைய அணிகளாலும் விஷயங்களைக் கண்முன் நடப்பன போலத் தத்ரூபமாய் வரையும் கற்பனா சக்தியினாலுமன்றோ!

இப்புஸ்தகத்தை இயற்றியவர் சாதாரண மனிதரன்று; ஆங்கிலத்தில் எம். ஏ முதலிய பட்டங்களைப்பெற்ற பெருத்த ஆசிரியர். நாடக விலக்கணங்களை நன்கு யுணர்ந்தவர். அத்தகையோரால் எழுதப்படும் நூல், ஏனையோர்க்கு வழிகாட்டியாய் ஒப்புயர்வற்றதாயிருத்தற்பாலது. இப்புஸ்தகம் அவரால் வரைப்பட்டதென்றால், அதை எவரும் எளிதில் நம்பார். கதைப்போக்கு எத்தகைய சுவையுமற்றதாய்க் காணப்படுகிறது. இதன் குறைபாடுகளை ஒவ்வொன்றாய் வரையப்புகின் இப்பத்திரிகை இடந்தராது.

மேலும் இதிற்சொற்களும், வாக்கியங்களும் பலவிடங்களில் தவறாக விருக்கின்றன. அவைகளைப் பெரும்பாலும் அச்சியந்திரசாலையாரின் பிழைகளென்றே கொள்ளலாம். இதன் விலை ரூ. 1—4—0. முற்கூறப்பெற்ற பத்திரிகாசிரியரிடம் கிடைக்கும்.

ராஜா ராம் மோஹனராய்.

[ஸ்ரீமான் வீ வாசுதேவ ராவ் எழுதியது.]

"இருட்சியெனும் கொடும்பேய்க்குப் பிறந்த [இரட்டையராம்
மருட்சியும் பேதைமையுங்கொண்டு தாவும் மனக் [குரங்கைத்
தெருட்சியின் பாலுற்றலவா அமைதிசிறக்க, [என்னுள்
வெருட்சி இரிய, நின்றாளிணைக்கே கட்டவேண்டு [வனே."

என்னும் பாட்டின் கருத்தைத் தினநிதமும் பாராயணஞ் செய்துகொண்டு வந்ததுமல்லாமல், எக்காலத்தவரும் எத்தேசத்தவரும் எம்மதத்தவரும் புருஷோத்தமன் என்று புகழ்ந்து பாடும்வண்ணம் சிறுபருவத்திலேயே ஆத்மவிசாரஞ்செய்து பிரதமத்தில் தம்மதமார்க்க கிரந்தங்களை வெகு சிரமத்தோடும் சிரத்தையோடும் வாசித்து முக்திதாதாவாகிய ஏகவஸ்துவின் திருப்பாதமலரைத்தினமும் சிந்தித்து மானுட ஜன்ம மடைந்த எவரும் தம்மைப்போல் சாயுஜ்யம் சாரும்படி திரு உள்ளம் பற்றி ஐயந்திரிபற உணர்த்தியவர் மோஹனர்.

இன்றைக்குச் சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்குமுன் மூடபக்தி யென்னும் ஓரிருட்கடலில் இந்துஜன சமூஹமானது மூழ்கித்தப்பி யேறக் கரைகாணாது தத்தளித்து இருகை பரப்பி அகதியாய் நின்ற காலத்தில், சமய சஞ்சீவிபோலவும் கடக்கமுடியாதார்க்கு வழிகாட்டி உதவும் மங்காதுமின்னும் தனி நக்ஷத்திரம்போன்றும் காலத்தே தோன்றி, 'நானிருக்க நீங்கள் அஞ்சுவதேன்? அஞ்சவேண்டாம்' என்று அபயப்பிரதானம்செய்து அனைவரையும் காத்தருளிய மகானாகிய ராம மோஹனர், "சிங்காரமாடச் சிகரமுயர் வீடுநிறை" வங்காள மாகாணத்தில் ராதா நகரத்தில் ஜனனமானார். பிறந்த வருஷம் 1774. தேச சரித்திரத்தில் முக்கியமாகக் கருதப்படும் வருஷம் அது. ஏனெனில் அவ்வருஷத்தில் தான் சட்ட நிர்வாக சபையும் சட்ட நிர்மாண சபையும் ஸ்தாபிக்கப்பெற்றன.

இவர்தந்தையார் ராமகாந்தராய். இவர்பாட்டனார் மூர்ஷிதாபாத்தில் குடியிருந்து முகலாய ஆளுகையில் ராஜாங்கத்தாரது அந்தரங்க அபிமானம் பெற்று உன்னத உத்தியோகத்திலமர்ந்து மேன்மைபெற்றவர். வாழ்நாள் இறுதியில் அரசாங்கத்தாரால் காலவிசேஷத்தால் சீராக நடத்தப்படாமையால் போதவனம் சென்று சௌக்கியமாகக் காலத்தைக் கழித்து, அங்கேயே சில ஆண்டுகளுக்குப் பிறகு காலகதியடைந்தார். இவர் தந்தை ஒரு சிறு ஜமீன்தார். தம் குடிகளாலும் மற்றுமுள்ள சுற்றுக் கிராமவாசிகளாலும் நன்குமதிக்கப்பட்டுவந்தவர். இவர் தாயார் தக்கராணி என்பவர். தெய்வபக்தி குணம்

ஸம்பத்து முதலியன அம்மாதிடத்துக் குடிகொண்டிருந்தன. ஆகவே, மோஹனர் குலத்தாலும் நலத்தாலும் முதன்மை பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்; தேர்ச்சியடையும் தோற்றமுள்ளவராயும் பருவத்திற்குமுன் பக்குவமடையும் புத்தியுடையவராயும் இருந்தார்.

சிறு பிராயத்தில் கற்கவேண்டிய விஷயங்களைத் தம் பெற்றோரிடமிருந்து கேட்டுக் கற்றுப் பயின்று வந்தார். அக் காலத்திலேயே பாரசீக பாஷையையும் படித்துப் பலனடைந்தார். அதன்பின் கிராமப் பாடசாலையில் வங்காளபாஷைப் பாலபாடங்களைப் படித்தார். வாழ்நாளில் சோபைபெற வங்காள பாஷாஞானம்மட்டும் கிஞ்சித்தும் போதாதென்றறிந்த இவர் தந்தை இவரைப் பாடலீபுரத்துக்கு அனுப்பி அரபிபாஷையைக் கற்கச்செய்தார். இந்துக்களுக்கு வேத பாஷையாகிய சம்ஸ்கிருதத்தைத் தன்மகன் கற்றுப்பலனடையவேண்டுமென்ற ஆசைமேலீட்டினால் முக்திநகர் எழனுள் ஒன்றாகிய காசியம்பதிக்கு இவரை அனுப்பினார்.

முக்திநகர் சென்ற இவர் தக்க ஆசாரியரைச் சார்ந்து 'மாண்புடையோர் தம்மொடு பயிறல் வினைதல் வினையவை விடுத்தல்' முதலிய மாணவ இலக்கணங்களுடன் அறிந்த பாடங்களைப்போற்றியும், யூகலிதன், அரிஸ்தாதலிதன் முதலாய ஆங்கிலக் கணிதத் தத்துவ சாஸ்திரிகளியற்றிய சிரேஷ்ட நூல்களின் மொழிபெயர்ப்புக்களைக் குருவாயிலாகக்கேட்டு ஆனந்தமயமாகத் தம் ஞான ரசத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்.

ஆகவே, வயது பதினாறு முடியவும் அரபி, பாரஸீகம், கிரேக், சம்ஸ்கிருதமாகிய பாஷாகவிஞர்களின் காவியங்களையும் தத்துவ ஞானிகளின் தீஞ்சுவைகனிந்த தத்துவ நூல்களையும் கசடறக்கற்றுப் பாண்டித்தியம் அடைந்தார். இந்துமத தத்துவத்திற்கும் இதரமதத் தத்துவங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் செவ்வையாய் அறிவதற்குப் உற்ற துணையாய் நின்றுதவியது பாஷாஞானமே.

இடையிடையே வேதாந்தயோகக் கிரந்தங்களையும் தினேதினே படித்து அவைகளிலும் தேர்ந்த பயிற்சிபெற்றார். வேதாந்த உபநிஷதங்களில் இலை மறை காய்போலக் கிடந்த கருப்பொருள்களை உள்ளபடி அறிந்ததேதாமஸம்; உடனே விக்கிரக ஆராதனையைக் கண்டனஞ்செய்ய வெகு ஆத்திரத்துடன் முன்வந்தார். படிப்பு முடிந்ததும் தம் வீடுவந்து சேர்ந்தார். சரீரப்பான்மையில் வேறுபாடடையாமல் மனம்வேறுபட்டுக் கொள்கை வேறுபட்டு முற்றிலும் நூதன புருஷராகவே காணப்பட்டார்.

இவர் குலமோ பிராம்மணகுலம். மிக்கப் பெருமை வாய்ந்தது. தம் மதக்கொள்கைகளிலும் ஆசார விதிகளிலும் தந்தையார் இவரைப் பழக்கி வந்தார். என்றாலும், அதிபால்யத்திலேயே விக்கிரக ஆராதனைக்காரர்களுள் நிகழும் அபிப்பிராய பேதத்தை நாள் தவறாமல் மிகுந்த பக்தியுடன் உற்று நோக்கி வந்தார். சிலர் காத்தல் தொழிலையுடைய விஷ்ணுவே பெரியவரென்றும், வேறு சிலர் படைப்புத் தொழிலையுடைய பிரம்மனே பெரியவரென்றும், இன்னும் சிலர் அழித்தல் தொழிலையுடைய சிவனே பெரியவரென்றும் இவ்வாறாக மண்டையுடைய மன்றாடுதலைக் கண்டு தம்முள் நகைத்தார். அன்றே சச்சரவை ஒழித்து சகோதர தத்துவத்தைப் பெருக்க எத்தனித்தார்.

'படைக்கின்றது ஈசன் திருவிளையாட்டு படைத்தவைகளைத் துடைக்கின்றது அவன் விளையாட்டு மாறல்; படைத்தவையைக் காக்கின்றது அவன் கடமை' என்ற உண்மையை மண்டை வெளுக்கக் கற்றும் மறந்து பல் சமயத்தார் தம தெனச்சாற்றும் பல் வேறு தெய்வங்களும் ஒரு பொருளே என்று உலகத்தார்க்கு உபதேசிக்க எண்ணினார்.

'இந்தியர்களெல்லாரும் வீரமும் சாமர்த்தியமும் இயல்பிலேயே பொருந்தியவர்கள் தாம். எனினும் பழக்கமே எதையும் வழக்கமாகச் செய்கின்றது. அதற்கிணங்க நமது பழக்கமானது நமது திறமையை வெளிப்படுத்தாமல் இருந்து விடுகிறது. அதனாலேதான் நமது சுயரூபம் குணம் முதலியன தலை காட்டாமல் ஒடுங்கி யிருக்கின்றன. ஆதலின் இப்பொழுது அநுஷ்டானத்திலிருந்து வரும் பழக்க வழக்கங்களை மூடோடு ஒழிப்போம்' என்று திடம்பண்ணிக் கொண்டு அந்த நிமிஷம் முதல் அதற்காகப் பாடுபட்டார்.

பிரதமத்தில் தம் மார்க்கக் கிரந்தங்களை வெகு சிரமத்தோடு வாசித்தது மல்லாமல், பிற

(பவுன்.

பிறமதக் கிரந்தங்களையும் வாசித்தார். இழுக்கு வழுக்கில்லாமல் நிஷ்களங்கமாய் பரம கருணாநிதியைப் போல் ஜோதிச்சொரூபமாய் விளங்கி நின்று கண்டோர் காதலித்துப்பற்றும் தன்மை வாய்ந்த மகம்மதிய மதத்தில் பூரண நம்பிக்கையை மனப்பூர்வமாக வைத்து "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கமும்" படைத்த இந்துக்கள் பலரும் அநுசரித்துவரும் அநாவசியமானதும் பொறுக்க முடியாதபடி அருவருப்பானதுமான விக்கிரக ஆராதனைச் சடங்குகளும் ஆசார டம்பங்களும் ... அதற்குக் காரணமென்று சிந்தித்துப் பார்த்துச் சித்தாந்தப் படுத்தினர். அதன் காரணமாக அவ்வேத நூல்களைப் படித்து அதன் அமிர்தத்தைப் ...திரசத்தோடு மனமாரப் பருகினர்.

'ஐயோ! நரர் வாழ்வுதா னென்ன? தொலையாத வம்பு வாசிக்கும், வஞ்சனை வேதனைக்கும் இலக்காகி இன்ப மடையாமல் உழல்கின்றார்களே! இவ்வாறிருப்பின் நம் நாடு நன்னிலை பெற்று வாழ்தல் எப்போது?' என்று எண்ணி மனம் நொந்தார். எப்பாடு படினும் பிராணாபாயம் நேரிட விருந்தாலும் ஜனத்திரள் "ஒன்றென்றிரு தெய்வ முண்டென்றிரு" என்றதற்கேற்பம் பகவான் ஒருவன் தான் என்றும் உண்டென்றும் சந்தேகமற உணர்ந்து அவனை அழகாய் வழிபடும் விஷயத்தில் மிக்கப் பரிதாபங்கொண்டு வியவகார ரீதியாகவும் உபந்நியாச புஸ்தக ரூபமாகவும் உலகத்தார்க்குப் போதிக்கத் தீர்க்கமாய் அங்குரார்ப்பணஞ்செய்துகொண்டார். கல்விமானும் புருஷ பக்குவமு மடைந்த இவருக்குப் பிறமதத் துவேஷ மென்பதே கிடையாது. 'கல்வியுள்ள வாலிபன் கன கிழவன்' என்னும் மொழிக்கு நிதரிசனமாகத் துலங்கினர். 'இளைஞ ஞைலும் ஆடுவான் மூப்பு' என்னும் மொழி இவருக்கே பொருந்தும்.

(இன்னும் வரும்.)

குறிப்புக்கள்.

தொழில் ஸம்பந்தமாக நாம் அனுஸரிக்க வேண்டிய விஷயங்கள்.

ஐரோப்பாக் கண்டத்தில் குபேரஸம்பத்தி லும் கொழுத்த ஸம்பத்துள்ள ராத்ஸ் சைல்ட் வம்சத்தார் அடியிற்கண்ட கோட்பாடுகளைக் கைக்கொண்டுவந்து மேம்பாடடைந்தார்கள். நம்முடைய தொழிலாளர்களும் அந்தக்கோட்பாடுகளைக் கவனித்து அவைகளின்படி நடப்பார்களாக.

1. உன்னுடைய தொழிலில் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் கவனமாய்ப் பரிசோதித்துப்பார்.

2. ஒவ்வொரு விஷயத்திலும் துடியாயிரு.

3. எதையும் சாவகாசமாய் ஆலோசிக்க ... ஆனல் உறுதியான தீர்மானம்

4. முன்னுக்குப்போகத்துணி.

5. கஷ்டங்களைப் பொறுமையுடன் ஸகிக்கவேண்டும்.

6. ஸத்தியத்தைக் காப்பாற்று.

7. தொழிலுக்காகப் பொய் சொல்ல வேண்டாம்.

8. உன் கடன்களைச் சீக்கிரம்செலுத்தி விடு.

9. உபயோகமற்றவர்களுடன் ஸ்நேகம் செய்யாதே.

இந்த விதிகளை ஒருவன் அனுஸரித்தால் அவன் ஒரு நல்ல தொழிலாளியாவதோடு யோக்கியனென்றும் பெயரெடுப்பான் என்று 'ஜனபிமானி' எழுதுகிறது.

ஜனோபகாரி

நம் நாட்டுத் தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக்கென்றே பிரசுரிக்கப்பட்டுவரும் சிறந்த பல சித்திரப் படங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதாந்தரப் பத்திரிகை.

THE JANOPAKARI.

A high class illustrated Tamil monthly Review devoted to practical topics of interest.

Edited by V. N. Sama Rao.

புஸ்தகம் 4. Vol. IV. | சித்தார்த்தி௵ ஆனி௴, JUNE 1919. | சஞ்சிகை 6. No. 6.

Utilisation of Waste Papers.

BY MR. VADUVUR K. DURAISWAMI AIYANGAR B.A.

பழைய காகிதங்களை உபயோகப்படுத்துதல்,

இப்போது முடிவடைந்த ஐரோப்பியப் பெரும் போரினல் உலகத்திற்கு எத்தனையோ பொல்லாங்குகள் சம்பவித்தனவாயினும், அதனல் உண்டான நன்மைகளும் எண்ணிறந்தவையாயிருக்கின்றன. கைத்தொழில்களில் எத்தனையோ அற்புதமான புதிய இரகசியங்களும் புதிய முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுப் போயின. சண்டைக்கு முன் மிக்க அற்பமாயும், பயனற்றவையாயும் தோன்றிய பொருட்கள் இப்போது பெருத்த விலைமதிப்புள்ள பொருட்களாய்ப் போய்விட்டன. கிழிபட்டுப்போனமையாலும், உபயோகிக்கப்பட்டமையாலும் பயனற்ற காகிதங்களை, மேல் நாட்டு ஜனங்கள் இதற்கு முன்னர் குப்பைத்தொட்டிகளிற் கொட்டி வந்தனர்.

போர் தொடக்கமான பின், எழுதத்தேவையான புதிய காகிதத்தைச் செய்வதற்குரிய கூழையுண்டாக்கும் மூலப்பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி இல்லாமற் போய்விட்டது. கிழிபட்ட பழைய காகிதங்களைக்கொண்டு கூழ் செய்யலாமா வென்பதை அப்போதே ஆராய்ச்சி செய்துபார்த்தனர். அது பலிதமாய்விட்டது. உடனே குப்பைத்தொட்டிகளில் ஜனங்களால் எறியப்பட்டிருந்த காகிதங்களையெல்லாம் பொருக்கியெடுக்கத் தொடங்கினர். குப்பைத்தொட்டிகளின் பாத்தியஸ்தர்களான முனிசிபாலிடியாரே அதனல் பெருத்த இலாபம் சம்பாதிக்கத் தொடங்கி விட்டனர். குப்பைகளை எடுத்துச்செல்லும் வண்டிகளில் காகிதக்கந்தைகளைக்கொட்டி வைப்பதற்கொரு பெருத்த தொம்பைக்கூண்டு தொங்கவிடப்பட்டது. இவ்வாறு லண்டன் முனிசிபாலிடியாரால் 1917-ம் வருஷத்தில் சேகரிக்கப்பட்ட கந்தைக்காகிதங்கள் 5000 டன்.

க்கு விற்கப்பட்டனவாம். அடுத்த வருஷத்தில் அதனால் 9000 பவுன்கள் தட்டிவிட்டார்களாம். இந்தியாவில் சர்க்கரை, மிட்டாயி முதலியனவற்றைப் பொட்டலங்கட்டும் பொருட்டு அதற்கு முன்னர் ஏராளமாய்ச் சீமையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த பழைய பத்திரிகைகளை அனுப்பக்கூடாதென அவ்விடத்திய [illegible] தடுத்து விட்டனர். அதனால் இந்தியாவில் பழைய பத்திரிகைகளின் விலை வீசை 2 அணுவிலிருந்து 12 அணு வரையில் உயர்ந்து போயிற்று. இந்தியாவில் இவைகளால் பொட்டலங்கட்டுவது நிற்க, பளுவற்ற தட்டுக்கள், கூடைகள், முதலிய வேடிக்கைச் சாமான்களும் ஆதிகாலந்தொட்டுச் செய்துவந்தனர். நம்மிடமிருந்தே இந்தக் கைத்தொழிலை முதலில் மேல்நாட்டார் கற்றுக் கொண்டனர்.

இப்போது பழைய காகிதக்கந்தைகளைப் பயன்படுத்துவதில், மேல் நாடுகள் யாவற்றிலும் அமெரிக்காவே முதன்மை பெற்று நிற்கிறது. அவற்றுல் முக்கியமாகப் புதிய காகிதங்களை உற்பத்தி செய்வது நிற்க, இன்னம் புதுமை புதுமையாக எத்தனையோ வேலைகளைச் செய்து வருகின்றனர். நாற்காலிகள், மேஜைகள், முதலிய எண்ணிறந்த வசதிப்பொருள்கள் யாவும் காகிதக் கந்தைகளாற் செய்யப்பட்டுக் கறுங்கால் மரத்தினுற் செய்யப்பட்டவைகளைப்போல விளங்குகின்றன. தடித்த அட்டைகளைச் செய்து அதனால் வீடுகள் கட்டிவிடுகிறார்கள். ஒரு அட்டையை இன்னொரு அட்டையுடன் பொருந்துவதற்குத் தேவையான (ஸ்குரு) ஆணிகள்கூடக் காகிதங்களாற் செய்யப்படுகின்றன. மேற்படி வீடுகளில் தண்ணீர் ஊறி உட்புகுவதில்லையாம். அட்டைகளில் நெருப்பும் பிடிப்பதில்லையாம். அவைகளால் சமையலுக்கும், தண்ணீர் பிடித்துவைக்கவும் பாத்திரங்கள் செய்யப்படுகின்றனவாம். அப்பாத்திரங்கள் அலுமினம் பாத்திரங்களைக் காட்டிலும் இலேசாயும், இரும்பு, மரம் முதலியவற்றுற் செய்யப்பட்ட பாத்திரங்களைக் காட்டிலும் உறுதியானவையாயும், நீடித்து நிற்பனவாயுமிருக்கின்றனவாம். ஜெர்மானியர் இதனால் கட்டில்கள், மெத்தைகள், ஒப்பட்டிகள் முதலியனவற்றை அற்புதமாகச் செய்கிறார்களாம்.

ஜப்பான் தேசமோ இவர்கள் எல்லோரையும் தூக்கி யடித்துவிட்டதாம். ஜப்பானியர் காகிதக் கந்தைகளால் பெருத்த படகுகள் செய்து ஏராளமாய் உபயோகிக்கிறார்களாம். பளுவே இல்லாமையால், காகிதப்படகுகள் நெட்டியைப்போல மிதந்து அதி வேகமாயும், கடினமாக வலிக்கும் துன்பமில்லாமலும் எளிதிற் செல்லுகின்றனவாம். அதிகச் சுமையையும் தாங்கிச் செல்லுகின்றனவாம்.

நீர், நெருப்பு முதலியன்வற்றுல் அவற்றிற்கு எத்தகைய துன்பமும் உண்டாகாதாம். மரக்கலங்கள் பாறைகளில் தாக்கினால், உடைபட்டுப் போகின்றன. காகிதப்படகுகள் பாறைகளில் தாக்குறுவதனால் உடைபடுவதில்லையாம்.

எத்தகைய அற்புதமான காரியம் பார்த்தீர்களா?

இந்தியாவில் புதிய காகிதம் செய்யும் கம்பெனியார், வீணாய்ப் போகும் பழைய காகிதக் கந்தைகளை மேல் நாட்டாரைப் போலச் சேகரம் செய்து, பயன்படுத்த முயன்றால், அதனால் எத்தனை கோடி ரூபாய்கள் சம்பாதிக்கலாம். புதிதாகத் தொழில் செய்ய எண்ணுவோர் ஐரோப்பிய நிபுணரொருவரை வரவழைத்துக் கொண்டு இந்தத்துறையில் இறங்கி வேலை செய்தால், இதனால் பெருத்த ஊதியம் பெறுவரென்பது நிச்சயம். இதனால் நம் தேசத்திய பொருளாதார நிலைமையும் ஒரு சிறிது முன்னேற்ற மடையு மென்பது உறுதி.

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார், பி. எ.

Syamanthakamani.

By Mr. T. R. Aravamuda Aiyangar B.A.

ஸ்யமந்தகமணி.

த்வாபர யுகத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனும் அவர் அண்ணன் பலராமனும் ஜராஸந்தன் என்ற அஸுரனுக்குப்பயந்து த்வாரகை என்ற ஒரு பட்டணத்தை புதிதாக நிர்மாணித்துக் கொண்டு, அவ்விடத்தில் வாசம் செய்து வந்தார்கள். அந்த த்வாரகா பட்டணத்திலேயே உக்ரனுடையகுமாரர்களான ஸத்ராஜித்தும் ப்ரஸேனனும் வஸித்துவந்தார்கள். இவர்களில் ஸத்ராஜித்து என்பவன் ஸமுத்திரத்துக்கு ஸமீபம் சென்று ஸூர்யனை யுத்தேசித்துத் தவம்செய்தான். இவன் செய்த தவத்தால் அதிக ஸந்தோஷத்தை யடைந்த ஸூர்யன், ஸத்ராஜித்தின் முன்பு தோன்றி, "நீ செய்த தவத்தால் நான் ஸந்தோஷமடைந்தேன். உனக்கென்ன வேண்டுமோ அதைக் கேள். நான் தருகிறேன்" என்று வாக்களித்தார். இதைக்கேட்டு ஸத்ராஜித்து ஸூர்யனுக்குச் செய்யவேண்டிய பூஜை முதலியவைகளைச் செய்து, "தாங்கள் கழுத்தி லணிந்துகொண்டிருக்கும் ஸ்யமந்தகமணியை எனக்குக் கொடுத்தருள வேண்டும்" என்று கேட்டான். உடனே சூரியபகவான் தன் கழுத்திலிருந்த மணியைக்கழற்றி ஸத்ராஜித்துக்குக் கொடுத்துவிட்டு அவனைப்பார்த்து, "இந்த மணி மிகவும் விசேஷமானது. இதனிடமிருந்து எட்டுபாரம் தங்கம் உண்டாகும். இதை அதிக ஆசாரமாகவும், சுத்தியாகவுமிருக்குங் காலங்களில் கழுத்தில் போட்டுக்கொள்ள வேண்டும்; அசுசியாகவும் அனுசாரமாகவு [illegible]ில் இதைத் தரித்துக்கொண்டால், போட்டிருப்பவனை கொன்றுவிடும்" என்று சொல்லி அந்தர்தானமடைந்தார். ஸத்ராஜித்தும் மணியைக் கழுத்தில் போட்டுக்கொண்டு த்வாரகைக்கு வந்து சேர்ந்தான். இவனையும் இவனுடைய கழுத்திலிருக்கும் மணியின் ப்ரகாசத்தையும் கண்ட ஜனங்கள் ஆகாயத்திலிருக்கும் ஸூர்யன் தான் வருகிறானென்று ப்ரமித்துவிட்டார்கள். பிறகு ஸத்ராஜித்து ஸூர்யனிடமிருந்து ஸ்யமந்தகமணியைப் பெற்று வருகிறானென்று எல்லோரும் தெரிந்து கொண்டார்கள். ஸ்ரீ க்ருஷ்ண பகவானும் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு ஸ்யமந்தகமணியின் மீது ஆசைகொண்டார். ஆனால் மணியைத்தனக்குக் கொடுத்துவிடும்படி ஸத்ராஜித்தைக் கேட்கவில்லை. ஒருவேளை மணி தன்னிடமிருந்தால் கிருஷ்ணன் ஏமாற்றிப் பிடுங்கிக்கொண்டு விடுவாரென்று யோசித்து ஸத்ராஜித்து அந்த மணியைத் தன்னுடைய தம்பியாகிய ப்ரஸேனனிடம் கொடுத்தான். சில நாட்களுக்குப்பிறகு ஸ்ரீ க்ருஷ்ணனும், ப்ரஸேனனும் குதிரைகளின்மீதேறிக்கொண்டு வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குப் போனார்கள். போகுந்தருணத்தில், ஞாபகமில்லாமல் ப்ரஸேனன் ஸ்யமந்தக மணியைக் கழுத்திலணிந்தபடியே குதிரைமீதேறிப்போனான். குதிரைமீதேறிப்போனதாலும், காட்டுக்குள் அதிக ஆசாரத்துடனிருக்க ஸரிப்படாமல் போனதாலும் ப்ரஸேனனுக்கு அசுத்தி யேற்பட்டுவிட்டது. உடனே காட்டுக்குள்ளிருந்து ஒரு சிங்கம் திடீரென்று ஓடிவந்து ப்ரஸேனனைக்கொன்று ஸ்யமந்தகமணியையும் வாயில் கௌவிக்கொண்டு ஓடிற்று. இதைக்கண்டதும், அந்தக் காட்டிலேயே வசிப்பவனான ஜாம்பவான் என்ற அசுரன் அந்த சிங்கத்தைக்கொன்று, மணியை யெடுத்துப் போய்ச் சிறுவனான தன்னுடைய மகனுக்கு விளையாடக்கொடுத்துவிட்டான். நடந்ததைக் கண்டு விஸனப்பட்டுவிட்டு கிருஷ்ணபகவா

த்வாரகைக்கு வந்து சேர்ந்தார். ப்ரஸேனனில்லாமல் க்ருஷ்ணபகவான் மட்டில் தனிமையில் வந்ததைக்கண்டு, ஜனங்களெல்லோரும் வருத்தத்தை யடைந்து, "இதென்ன அநியாயம்: ஸ்யமந்தக மணியின்மீது ஆசைகொண்டு ப்ரஸேனனை ஏமாற்றிக் காட்டிக் கழைத்துப்போய் அவனைக்கொன்று மணியை யபகரித்துக்கொண்டு வந்துவிட்டானே. இந்த க்ருஷ்ணனைவிட கெட்டவர்கள் யாரிருப்பார்கள்" என்று பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வீணாக ஜனங்கள் என்மீது அவதூறான வார்த்தைகளைச் சொல்லுகிறார்களே யென்று மனவருத்தப்பட்டு, தனக்கு வேண்டியவர்களை யழைத்துக்கொண்டு, காட்டுக்குள்சென்று ப்ரஸேன னிறந்த விடத்தைப் பார்த்தார். கொஞ்சதூரத்துக்கப்பால் சிங்க மிறந்து கிடப்பதைக்கண்டு, அங்கிருந்து ஜாம்பவானுடைய இருப்பிடமாகிய குகைக்கு ஸமீபம்வந்தார். குகைமுழுவது மிருள்சூழ்ந்திருந்தபடியால், தன்னுடன் வந்தவர்களை வெளியில் நிறுத்திவிட்டுத் தன்மட்டில் உள்ளே போனார். வெகுதூரத்துக்கப்பால் ஒரு மாளிகை தெரிந்தது. மாளிகைக்குள் நுழைந்து பார்த்தார். அவ்விடத்தில் தொட்டிலில் ஒருகுழந்தை படுத்துக்கொண்டிருந்தது. தொட்டிலுக்கு நேராக ஸ்யமந்தகமணியைக் கட்டித்தொங்கவிட்டிருந்தது. பார்த்ததில் வெகுரூபலாவண்யமுள்ள ஜாம்பவானுடைய மகளாகிய ஜாம்பவதி யென்று தொட்டிலையாட்டிக் கொண்டிருந்தாள்; அந்த ஸமயத்தில் பாட்டும் பாடிக்கொண்டிருந்தாள், அந்தப்பாட்டின் கருத்து என்னவென்றால்: "ப்ரஸேனனைக்கொன்று ஒரு சிங்கம் ஸ்யமந்தக மணியை அபகரித்துக்கொண்டு சென்றது. அந்த சிங்கத்தைத் தந்தை ஸம்ஹாரம் செய்து இந்த மணியை உனக்கு வெகுமதியாகக் கொடுத்திருக்கிறார். ஆகையால் நீ அழக்கூடாது" என்று அர்த்தம். இவளுடைய அழகைக்கண்டதும் ஸ்ரீ க்ருஷ்ணபகவான் மெய்மறந்து நின்றுவிட்டார். ஜாம்பவதியும் திரும்பிப்பார்த்தாள். பகவான் நின்றிருப்பதைக்கண்டு ஆனந்த பரவசமாய், அந்த நிமிஷமே அவர்மீது காதல்கொண்டு வெகு பரபரப்புடன் அவரைப்பார்த்து, "ஐயா, தாங்கள் இங்கு நிற்கக்கூடாது. என்னுடைய தந்தை மிகவும் கொடியவர். அவர் தூங்குகிறார். தாங்கள் வந்திருக்கு மனுவல் எனக்குத் தெரியும். இதோ ஸ்யமந்தகமணியிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு போய்விடுங்கள். என்னுடைய தந்தை கண்விழித்துக்கொண்டால் தங்களுக்கு ஏதாகிலும் ஆபத்துண்டாகும். போய்விடுங்கள்" என்று வேண்டிக்கொண்டாள். இதைக் கேட்டு பகவான் நகைத்து தன்னுடைய சங்கையெடுத்து கெட்டியாக வாசித்தார். சப்தம் கேட்டவுடன் தூங்கிக்கொண்டிருந்த அஸுரன் ஜாம்பவான் எழுந்திருந்து ஓடி வந்து ஸ்ரீ க்ருஷ்ணபகவானுடன் யுத்தம் செய்ய வாரம்பித்தான். வெகு கோரமாக யுத்தம் நடந்தது. ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. ஸ்ரீ க்ருஷ்ணபகவானுடன் வந்திருந்தவர்கள் ஒருவாரம் வரையில் வெளியில் காத்திருந்தும் அவர் திரும்பி வராததைக்கண்டு, க்ருஷ்ணன் இறந்துவிட்டாரென்று நிர்மானித்துக்கொண்டு, திரும்பி த்வாரகைக்குப் போய் ஸங்கதிகளைச் சொல்லி, அவருக்குச் செய்ய வேண்டிய உத்திர கிரியைகளையும் செய்துவிட்டார்கள். ஜாம்பவானும் பகவானும் இருபத்தியொருநாள் யுத்தம் செய்தார்கள். கடைசியாக ஜாம்பவான் தோல்வியடைந்தான். உடனே அவன் பகவானைப்பார்த்து, "ஸ்வாமி! தாங்கள் இன்னாரென்று இப்பொழுதுதான் அறிந்துகொண்டேன். என்னையொருவராலும் ஜயிக்க முடியாதென்று வரம் நான் பெற்றிருந்தேன். தாங்கள் மஹாவிஷ்ணுவானபடியால் என்னை வென்றீர்கள். இதோ ஸ்யமந்தகமணியை யெடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய மகள் ஜாம்பவதியையும் தாங்கள் விவாகம் செய்து கொள்ள வேண்டும்" என்று தன்னுடைய மகளையும் ஸ்யமந்தகமணியையும் பகவானு

க்குக்கொடுத்தனுப்பினான். ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் த்வாரகைக்குத் திரும்பிவந்து ஸபை கூட்டி எல்லோருக்கும் தெரியும்படி நடந்தவைகளையெல்லாம் சொல்லி மணியை ஸத்ராஜித்தினிடம் கொடுத்துவிட்டு, அந்த ஸமயத்தில் தனக்கு நேர்ந்த அபவாதத்தை நீக்கிக் கொண்டார். ஸத்ராஜித்தும் க்ருஷ்ணனுடைய செய்கையைக்கண்டு பயந்து தன்னுடைய மகளாகிய ஸத்தியபாமாவை பகவானுக்குக்கொடுத்து விவாகத்தை நடத்திவைத்தான்.

(இன்னும் வரும்.)

டி. ஆர். அராவமுத ஐயங்கார், பீ.ஏ.

Trees that Rain.

மழை பெய்யும் மரங்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் மேற்குக் கடலில், கூட்டங் கூட்டமான பல தீவுகள் உண்டு. இத்தீவுகளுள் ஒன்றில் நதி, ஓடை, நீர் வீழ்ச்சி முதலிய நீர் நிலைகள் கிடையா. அதனால் இத்தீவிலிருந்த பழைய குடிகள் கிணறுகளை வெட்டி இவற்றினின்றும் ஜலம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். பின்பு கிணறு தவிர வேறு ஜலம் கிடைப்பதற்கு இதர மார்க்கமில்லாமலும், அக்கிணறுகளும் சில சமயங்களில் வறண்டு போனமையாலும் அதிலிருந்த குடிகள் பிந்தினகாலத்தில் மடிந்து போய்விட்டார்கள். அதனால், பிராணிகள் எதையும் அங்கேகாண்பது அரியதாயிருந்தது. இப்படியிருந்தும், அதற்குப் பிந்தின காலத்தில் கடவுளுடைய அதிக சாமர்த்தியச் செய்கையால், அத்தீவில் மழை மரங்கள் என்ற மகா விநோதமான பல விருக்ஷங்கள் உண்டாயினவாம். அவற்றுள் ஒவ்வொரு மரத்தினின்றும் மிகுதியான தண்ணீர் கிடைக்குமாம். இச்சூக்ஷ்மம் மனிதருக்கு நெடுங்காலம்வரை தெரியாமலிருந்து பின்பு தெரிந்ததாம்; அவ்வாறு தெரிந்தபின் அத்தண்ணீரின் ஆதாரத்தைக்கொண்டு மறுபடியும் ஜனங்கள் அத்தீவில் குடியேறினார்களாம். அத்தீவுக்குச் சென்ற ஒவ்வொரு யாத்திரைக்காரர்களும் அம்மரங்களின் அதிசயத்தைப்பற்றித் தம்முடைய யாத்திரைச் சரித்திரங்களில் எழுதியிருக்கின்றனர். அவற்றுள் ஒருவர் எழுதியிருப்பதை இதனடியில் விளக்குகிறோம் அதாவது:—

மழை மரங்கள் 40 அடி உயரமுதல் 48 அடி உயரம் வரையில் வளர்ந்திருக்கின்றன. இவற்றின் கிளைகள் முருங்கைக் கிளைகளைப்போல் வன்மையற்று மிக்க எளிதில் ஒடிந்துபோகின்றன. இவற்றின் இலைகளின் வெளிப்புறம் நீல நிறமாகவும், உட்புறம் வெண்ணிறமாகவும் இருக்கின்றன. இம்மரங்களில் புஷ்பமும் கிடையாது; காயும் காய்ப்பதில்லை. பகற்காலத்தில் இவற்றின் இலைகள் உலர்ந்த சருகு போல் காணப்படுகின்றன. இராப்பொழுதில் அந்த இலைகள் செழித்து அவற்றினின்றும் சுத்த ஜலம் வடிகின்றது. இராக்காலத்தில் ஒவ்வொரு மரத்தைச் சுற்றி மேகத்திரள் காணப்படுகின்றது. இக்காட்சி அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்றது. எனினும், இவ்வாறு ஒவ்வொரு மரத்தையும் சுற்றி மேகம் சூழ்ந்திருப்பது ஒரு பெரிய ஆச்சரியம் அன்று; இம்மரங்களில் மேற்கண்டபடி ஜலம் சுரப்பது தான் பேராச்சரியமாயிருக்கிறது. இராக்காலமாகி மேகஞ் சூழ்ந்தவுடன், முதலில் மரங்களில் அடிப்பக்கத்தில் நீர் சுரக்கின்றது; அங்கிருந்து அந்நீர் பல கிளைகளிலும் சென்று இலைகளின் வழியாக வியர்வை நீர்போலத் துளிக்கின்றது. ஆனால், மேகத்திலிருந்து அந்நீர் உண்டாகவில்லை; மரத்துக்குள்ளிருந்தே

வெளிப்படுகின்றது. ஒவ்வொரு மரத்தினின்றும் ஒவ்வோர் இரவில் இவ்வளவு ஜலம்தான் வெளிப்படுமென்று ஆராய்ச்சிக்காரர்கள் திட்டமாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்கள் கணக்கிட்டபடி ஒரு மரத்திலிருந்து ஓரிரவில் (20,000) இருபதினாயிரம் டன் நிறையுள்ள ஜலம் வெளிப்படுகிறதாம். இப்படிப்பட்ட மரங்கள் அத்தீவில் பலவிடங்களிலும் காணப்படுகின்றன. இம்மரங்களினின்றும் உண்டாகும் நீரின் உதவியைக்கொண்டு 159 மைல் விஸ்தீர்ணம் வரையில் மனிதர்கள் இப்போது வாசம் செய்கிறார்கள். மிருகங்களும் சுகமாக ஜீவிக்கின்றன'' வென்பதே. இத்தகைய மரங்கள் நம்முடைய இந்தியாவிலுமிருந்தால், மழையில்லாக் குறையால் உண்டாகும் பஞ்சம் நிவர்த்தியாகுமன்றோ?

தென் அமெரிக்காவிலுள்ள வெனிஜூலா என்னும் நாட்டில், ஒன்றுமற்ற பாலை வனங்களில் ஒரு மனிதனுடைய தாகத்தைத் தணிப்பதற்கும் போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட விடங்களில் மனிதருக்கு உபயோகப்படுமாறு, 'பாற்பசுமரம்' என்னும் பெயருள்ள அநேக மரங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டு நிற்கின்றன. இம்மரங்களின் சாறு பசுவின் பாலைப்போல இனிமையாகவும், உருசியாகவும், வாசனையாகவும் இருக்குமாம். பசுவின் பாலுக்கும் இச்சாற்றுக்கும் எவ்வகை வேறுபாடும் இல்லை யென்று அனுபவித்துப் பார்த்தோர் சொல்லுகிறார்கள். ஆனால், இப்பாலில் சாம்பிராணியின் வாசனை சிறிது கலந்திருக்கிறதென்று தாவர சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். எனினும், எல்லா விஷயத்திலும் இப்பால் பசுவின் பாலையே ஒத்திருக்கின்றதாம். காய்ச்சினால் இதில் ஆடையுண்டாகுமாம். இதைக்கடைந்தால் வெண்ணெயும் அகப்படுமாம். சுகாதாரத்துக்குப் பசுவின் பால் உபயோகப்படுவதுபோல் இதுவும் உபயோகப்படுகின்றதாம்.

இம்மரங்கள் 100 அடி முதல் 125 அடி உயரம் வரையில் வளர்கின்றனவாம். இவற்றின் அடி மரங்கள் 20 அடி உயரம் வரையில் இலையில்லாமலே வழுவழுப்பாயிருக்குமாம். இம்மரங்களின் பட்டையில் ஒரு துவாரம் உண்டுபண்ணினால், அதினின்றும் சில தினங்கள் வரையில் பால் வடிந்து கொண்டிருக்குமாம். வெளியில் வரும் பால் உறைந்து அத்துவாரத்தை அடைத்துக் கொண்டாற்றான் பால் வடிவது நிற்குமாம்.—பாது காவலன்.

Sir J. C. Bose.

By Mr. N. R. Kedari Rao, M.A., L.T.

ஸர் ஜே. ஸி. போஸ்.

இப்படிப் பலவாறாய்ச் செடிகொடிகளின் மர்மங்களை அறிந்துகொண்டு வந்ததில், நாம் இதுவரையில் கனவிலும் நினைத்திராத பல விஷயங்கள் போஸுக்குப் புலப்பட்டன. அவற்றுள் முதலாவது:—நமக்கு எப்படி ஞாபக சக்தி இருக்கிறதோ, அதேமாதிரி செடி கொடிகளுக்கும் ஞாபக சக்தி இருக்கிறது. இச்சக்தியால் நாம் சுக துக்கங்களை எப்படி மறக்காமல் இருக்கிறோமோ, அப்படியே மரங்களுக்கும் சுக துக்கங்கள் மறவாமல் மனதில் பதிந்திருக்கின்றன. இதைக் கண்டுபிடித்தது மல்லாமல் இதை ருசுப்படுத்த வெகு நுட்பமான கருவிகளையும் ஏற்படுத்தி, அவைகளின் மூலமாய் அதற்கு வேண்டிய சாக்ஷியையும் இவர் தயார் செய்து வந்தார். இவற்றின் சாதுரியத்தைக் கண்டு மகிழாதார் ஒருவருமில்லை. இங்கிலாந்திலும், ஆஸ்திரியாவிலும், அமெரிக்காவிலும் பலர் இதைப்போன்ற கருவிகளைச் செய்ய

முயன்றும், அது சற்றும் பயன்படவில்லை. கடைசியில் அவர்கள் எல்லோரும் போஸினிடத்தில் வந்து அவ்விஷயத்தைக் கற்றுக் கொண்டுபோனார்கள்.

மனிதன் முதலிய ஜங்கம வஸ்துக்களுக்கே உரித்தானது என்று பல நாட்களாய் நினைக்கப்பட்ட இவ்வபூர்வசக்தி செடிகளுக்கும் உண்டு என்ற விஷயம் ஸ்தாபிக்கப்பட்டவுடனே, இன்னும் சில விஷயங்கள் ஊகிக்கப்பட்டன. நமக்கு இச்சக்தி இருத்தலாலல்லவோ குறிப்பிட்ட காரியங்களைக் குறிப்பிட வேளையில் செய்கிறோம்?. செடிகளுக்கும் ஞாபகம் இருப்பது மெய்யானால், அவைகளும் குறித்த வேலைகளைக்குறித்த சமயத்தில் செய்யவேண்டுமல்லவா? அப்படி இருக்கிறதா பார்ப்போம் என்று சோதனை செய்ய ஆரம்பித்தார். பார்த்ததில்: செடிகளும் நம்மைப்போலவே காலையில் மெள்ள மெள்ள தூக்கந்தெளிந்து எழுந்து, மத்தியான வேளையில் வெகு சுறுசுறுப்பாயிருக்கின்றனவென்றும், சாயங்காலத்திலும் இரவு பன்னிரண்டுமணிவரையிலும் விழித்துக் கொண்டிருக்கின்றனவென்றும், அதன் பிறகுதான் தூங்குகின்றனவென்றும் தெரிய வந்தது. ஆதலின், மனிதனுக்கு எவ்வளவு காலம் தூக்கம் வேண்டியிருக்கிறதோ அவ்வளவு காலம் செடிகளுக்கும் வேண்டியிருக்கிறது என்பது வெளியாயிற்று.

இன்னும் இவர் கண்டு பிடித்திருக்கும் விஷயங்கள் வெகு அற்புதமாயிருக்கின்றன. மின்சாரத்தில் இவர் தீர்க்காலோசனை செய்து வந்ததில், நமது கண்ணுக்கு எப்பேற்பட்ட குணங்கள் இருக்கின்றனவோ, அதே குணங்களை உடைத்தாயிருக்கும்படியான 'போடோ இலெக்டிரிக் ஸெல்' (Photo Electric Cell) ஒன்றைச் செய்திருக்கிறார். சாஸ்திர ஞானிகள் அதற்கு 'மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கண்' (artificial eye) என்றே பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையிலும் மனிதனால்செய்ய முடியாது என்று இருந்த இவ்விஷயத்தை இவர் செய்திருப்பது அற்புதத்திலும் அற்புதமாம். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்று சொல்லப்படுகிற முக்காரியங்களும் கடவுள் செயலே அன்றி வேறல்ல. இவற்றுள்ளும், கடவுளால் படைக்கப்பட்ட ஜந்துக்களைக் காப்பாற்றவும், கொன்றுவிடவும் மனிதனுக்குச் சில சமயங்களிலே ஆற்றல் உண்டு. ஆயினும், உயிரில்லாத ஜந்துக்களுக்கு உயிரைக்கொடுப்பது மனிதனால் ஒருபோதும் ஸாத்தியமானதல்ல. அப்படியிருக்க, மின்சாரம், வெளிச்சம் முதலியவைகளை வைத்துக்கொண்டு மனிதன் கண்ணைப்போல் ஒரு கண்ணைச் செய்துவிட்டானென்றால், இவர் வன்மையைப்பற்றி என்னே கூறுவோம்? நித்திய கர்மானுஷ்டானத்தை ஒருவன் சரிவரச் செய்து வந்து, நல்லொழுக்கம், நற்செய்கை முதலியவைகளைக் கையாண்டு, எப்பொழுதுமே ஈசுவரனைத்தியானம் செய்து வருவானானால், அவன் ஸாருஜ்யம், ஸாரூப்யம் முதலிய பதவிகளையடைந்து, கடைசியில் கடவுளுக்குச் சமானமாவான் என்று நமது சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இப்படி நமது ஆன்றோர்கள் தத்வ ஞான விஷயத்தில் புத்தி செலுத்தினால், மனிதன் கடவுளுக்குச் சமானமாகலாம் என்று கண்டுபிடித்ததை நமதுபோஸ் சாஸ்திர ஞானத்தில் (Scientific Research) புத்தி செலுத்துவதனாலும் அப்பதவியை யடையலாம் என்று ருசுப்படுத்தியிருக்கிறார். எப்போதுமே தத்வஞானத்துக்கும் (Philosophy) சாஸ்திர ஞானத்துக்கும் (Science) அதிக வித்தியாஸம் இருக்கிறது என்று நினைத்திருந்தார்கள். தம்முடைய அபூர்வ புத்தி தீக்ஷணியத்தால் 'இவ்விரண்டும் ஒரே விஷயத்தைப்பற்றிக் கூறுகின்றன; எதையும் ஊக்கத்துடன் கைப்பற்றினால், கடைசியில் கடவுளுக்குச் சமானமாகலாம்' என்று கூறி இருபோரையும் இவர் சமாதானப் படுத்தியுள்ளார்.

பூலோகத்திலுள்ள நதிகளென்ன, ஆறுகளென்ன, ஓடைகளென்ன இவையெல்லா

எப்படிக் கடைசியில் சமுத்திரத்தையடைந்து, [illegible] ஒன்றாகின்றனவோ, அப்படியே [illegible]க்கடவுளை தோத்திரம் செய்தாலும் அது ஆதி முதற்கடவுளுக்கே அர்ப்பணமாகும் என்று வேதங்கள் கூறுகின்றன. இதற்கு அநுகூலமாகவே நமது போஸும் எவ்விதமான விஷயத்தை நாம் யோசித்துப் பார்த்தாலும், அது கடைசியில் கடவுளது திருவடிக்கே கொண்டுபோய் விடுகிறது என்று பிரத்தியக்ஷமாய்க் காட்டியிருக்கிறார். இதனாலேயன்றோ 'நமது தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரும்,

"கற்றதனாலாய பயனென் கொல்
வாலறிவன் நற்றாள் தொழாரெனின்"

என்று பாடினார்?

தத்வ ஞானமென்ன, சாஸ்திர ஞானமென்ன, இன்னும் காவியம், நாடகம், சரித்திரம், கணிதம், பூகோளம், நியாயம், வியாகரணம் முதலிய எல்லா வித சாஸ்திரங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவைகளேயன்றி வெவ்வேறன்று. ஆதலால்தான் நமது ஆன்றோர்கள் வேதங்களை முதன் முதலில் ஏற்படுத்தி, ஸர்வசாஸ்திரங்களைப்பற்றியும் அவைகள் கூறுவதனால், 'ஸர்வ ஞானம்' என்று பொருள் பெறும்படியாய், 'வித்' என்றவாக்கினின்று அவைகளை 'வேதம்' எனப்பெயரிட்டார்கள். நாளாவட்டத்தில் எல்லாவித ஞானத்தையும் ஒருவன் அறிவது அசாத்தியமாய் விட்டதனால் அதைப் பலவாறாகப் பிரித்து, அதில் சிலவற்றை மாத்திரம் நாம் கற்றுக் கொண்டு வருகிறோம். ஆயினும், மேனாட்டோருக்கு எல்லாவித அறிவும் ஒன்றே என்ற விஷயம்தெரியாமலிருந்தது. இம்மகானுபாவர்தான் இதைத் தெள்ளென அவர்க்குக் கூறியுள்ளார். எப்படி யெனின்:—இவர் முதன் முதலில் மின்சார (Electricity) விஷயத்தைப்பற்றி ஆலோசித்து வந்தவர். பிறகு அதனின்று வெளிச்சத்தின் (Light) சில அபூர்வ குணங்கள் தென்பட்டன. இதைப்பற்றி யோசிக்குங்கால் ரஸாயன சாஸ்திரத்திலுள்ள (Chemistry) சில மர்மங்கள் இவர் புத்திக்கு எட்டின. இதைத் தொடர்ந்து வருங்கால், மருத்துவ சாஸ்திரத்திலும் (Medicine) செடிகளின் நூலிலும் (Botany) சில விஷயங்கள் புலப்பட்டன. ஆதலின், ஒரு சாஸ்திரத்துக்கும் மற்றொன்றுக்கும் சம்பந்தம் இருக்கிறது; மேல்நாட்டோர் நினைத்திருந்தபடி வெவ்வேறல்ல என்று இவர் ஸ்தாபித்திருக்கிறார்.

இப்படி ஒரு சாஸ்திரத்தில் மட்டுமல்லாமல் நானாவிதத்திலும் சிறப்பு வாய்ந்தமையால்தான், இப்போது ஜீவித்திருக்கும் சாஸ்திர ஞானிகளுள் இவர் முதன்மையானவராவார். தவிர இவ்வுலக சரித்திரத்திலேயே பெயர் படைத்தவர் அதிகமாயில்லை. இன்றைக்கெல்லாம் தேடிப்பார்த்தால், நியூடன் (Newton) பெரடே (Faraday) டார்வின் (Darwin) இம்மூவரைத் தான் இவருக்கு ஒப்பாய்க் கூறலாம். நியூடன் பூமிக்கு ஆகர்ஷண சக்தியுண்டு என்பதைக் கண்டு பிடித்தவர். (Law of Gravitation) மின்சாரத்தைப் பற்றியும், வெளிச்சத்தைப் பற்றியும் வெகுதூரம் பாடுபட்டு, கம்பி இல்லாமலே எவ்வளவு மைல் தூரமானாலும் தந்தி பேசலாம் (Wireless Telegraphy) என்று ஸ்தாபித்தவர் பெரடேயாம். டார்வினோ உலகத்திலுள்ள செடிகள் என்ன, மிருகங்கள் என்ன, மனிதன் என்ன இவையெல்லாம் ஒரே விஷயத்தினின்று உண்டாயின வென்று கண்டுபிடித்தவர். மனிதன் பல யுகங்களுக்கு முன்னே ஒரு குரங்கு மாதிரியே இருந்தவனென்றும், அனாதி காலமாயிருக்கும் நாகரிகத்தினால்தான் இப்போது இப்படி இருக்கிறான் என்றும் இவர் ஸ்தாபித்தார். அதே மாதிரியாய் நமது போஸும் செடிகளுக்கும் மிருகங்களுக்கும் அதிக வித்தியாஸமில்லை யென்றும், இவையெல்லாம்ஜீவராசிகள்தான், உயிரற்றன அல்ல என்றும் ஸ்தாபித்திருக்கிறார். ஆதலின், இவரது பெருமை தானே விளங்கும் என்பது திண்ணம்.

என். ஆர். கேதாரி ராவ், எம். ஏ., எல். டி.

Landmarks of Ramayana in Tamil Sonnets.

By Mr. V. Subba Iyer.

ஸ்ரீ இராமாயணத் தனிப் பாசுரங்கள்.

(51) மதங்ககிரியை யடைதல்.

நேரிசை யாசிரியப்பா.

அந்தநற் பொய்கையி னழகுந் தெளிவுஞ்
சிந்தையைக் கொள்ளுந் திறத்தை வியந்து
வந்த மன்னவர் நீரினி தாடித்
தங்குந் தருணம் ராம னியம்புவான் :—
'அப்பனே! இதுகாற் றேடியு மவனியில்

ஒப்பிலாச் சானகி யுளவிட மறிந்திலம்;
ஆவதோ விப்பணி யென்பது மறிகிலம்,
சாவதே சரியெனத் தேர்ந்தேன்' என்னத்,
தம்பியுந் தமையனைத் தொழுதே 'இங்குள
அம்பொழில் யாவையுந் தேடுவோம்' என்று

சொல்லிய வுடனே வில்லோ டிருவரவ்
'வெல்லையை யாய்வோம்' என்றே வாலியைப்
பயந்துசுக் ரீவன் பதிந்த
மதங்க மாமலை சேர்ந்தன ரன்றே.

(52) சுக்ரீவ ஸக்யம்.

நேரிசை யாசிரியப்பா.

அங்கவ ரடைந்த த[illegible]மன் கண்டு
தங்களின் நிலைமையைச் சாற்றி, யுணர்ந்தபின்
பங்கயில் பகலவன் பாலனைக் கொணர்ந்து
வெங்கலி யகற்றும் வேந்தனை யணுகச்
செய்ததும் ராகவன் சித்தங் களித்தே

'எய்திய துயருனக் கேதோ?' என்னச்
சுக்ரீ வனுஞ்சொல் லுவன், ஐயோ!
'இக்கொடும் பாவிக் கிருப்பனோர் தமையன்;
அவனென் றேவியை யடைந்தது கண்ட
அவமா னத்தினா லலைகிறே னண்ணலே,

வாலி யவன் பெயர்' என்று வருந்தே;
ஆவிலை யயர்ந்தவன் சேட்டதுங் கொதித்து
வேகமா யெழுந்து 'வேந்தனே!
போகுவோ மவனைப் பொடிக்க'வென் றனனே.

(53) வாலியை வதைக்கச் செல்லுதல்.

நேரிசை யாசிரியப்பா.

எழுதலுங் கதிர்மக னேந்த லுடன்றன்
குழுவுடன் பின்வரக் கொல்லெனச் [செல்கையில்
வழியி லிருந்த மராமர மேழினைப்
'பழிசெய் வாலி யாக்குடன் வாலாற்
கட்டி யசைப்பன் காணிவை' யென்றலுஞ்

சட்டெனத் தன்னதா மோரம் பாலவை
துளைபடச் செய்தபின் 'அன்னவன் றொலைத்த
துந்துபி யெனுமோர் ராக்கத னென்பிது'
என்றவ ரியம்பலு மேந்த லன்னதைக்
கலா லெற்றக் கடிதது சென்று

பத்தி யோசனைக் கப்புறம் படிந்தது;
கண்ட வானரர் களித்துமுன் வந்து
விண்டுமுன் காணென விரித்தனர்
தண்டை சிலம்பொடு நகைபல வாங்கே.

(54) வாலியின் மார்பில் ராமன்கணை தைத்தல்.

நேரிசை யாசிரியப்பா.

'இன்ன வற்றையா மிங்க ணெடுத்தேம்'
என்றது மிளையவன் நன்று யாய்ந்து
'பாதச் சிலம்பினைப் பார்த்துளேன்' என்னச்
சீதையின் மற்றுள வணிபல தேர்ந்த
ராகவன் றுயரத் தழல விலக்மணன்

தேற்றச் சற்றே தேறி யெழுந்து
பகலவன் மகனைப் பார்த்து 'வாலியைப்
போருக் கழை'யெனப் புகுந்த தூதருஞ்
சொல்லுமுன் அன்னவன் வெல்லுவே னென் [றெழுத்
தாரை தடுத்துந் தரிக்கா தவன்வந்

திருவருங் கொடும்போ ரியற்றும் வேளையில்
சீரா ரோர்கணை செம்மலும் விடுக்க
அன்னது வாலியி னகன்ற
மார்பினிற் புக்கது; மலைத்தவ னுழன்றே;

(55) வாலியின் மரணம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

'யாரடா வீரன்! என்முன் வாராதுநீ
போரிடை யோர்சாம் பொருக்கென வெய்த
இத்துணைக் கேவலப் பணியை யியற்றுநீ [து
சத்த வீரனோ? சொல்'லென ராகவன்
அவனரு கடைந்து மனஞ்சலிப் புற்றுத்
தவறது வென்று சாற்றிய பின்பு
'மன்னா! மண்ணுள பெயரையீ டேற்ற
இன்னரு ளிரண்டு விதமாங் கருணையைச்
செய்யு மென்பதைத் தெளிந்திடு வா'யென,
மெய்யறி வடைந்தவ் வாலிமெய் சிலிர்த்தாங்
'கையனே! உன்றனை யறிந்தேன், தன்னி
ஆயினும் மானிடச் சன்ம மெடுத்தவர் [யன்
நீதி பிறழ்ந்திடு நிலையை விளக்கவோ.
ஈது செய்தனை?' என்றுயிர் துறப்பனே.

---

(56) சுக்ரீவ பட்டாபிஷேகம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

துறந்தவத் தோன்றலை வீடடை வித்துச்
சிறந்தவன் மனைவியின் மனத்தைத் தேற்றி
அங்கதன் றனைக்கொண் டபரக் கிரியை
பங்கமி லாதே பண்ணப் பணித்துச்
சூரியன் மகற்கு மணிமுடி சூட்டிச்
சீருள சிறுவனைச் சிற்றர சாக்கிக்
'கார்பொழி காலங் கழிந்துசே னையுடன்
பார்புகழ் மன்னவா! வா'வெனப் பணித்துத்
தம்பியுந் தானு மவ்விட மகன்று
செங்குன் றதனிலே சென்று தங்கினர்.
பருவங் கழிந்தும் பரிதியின் மைந்தன்
வருவது துர்லப மாக, மனத்தில்
சினமிகு செம்மறன் செல்வனை விடுத்தான்
'இனகரன் மகனுளந் தேர்ந்துவா' என்றே.

---

(57) சேனைக் காட்சி.

நேரிசை யாசிரியப்பா.

விமலன் விடுத்த வேந்துகிட் கிந்தையிற்
கமலப் பாதம் வைத்ததைக் கண்ட
தாரையும் வேண்டத் தணிந்த சினத்தனை
மாருதி கண்டு 'மன்னவா! இந்தக்
கால தாமதங் கருதா துவந்தது;
சீல முளவெஞ் செம்மலும் படைகளும்
மதுவைப் பருகி மதியில ராகி
இதுவரை யிப்பணி நினையா தொழிந்தனர்'
என்று பலவுள வியம்பி முடித்துச்
சென்றுசுக் ரீவனைத் தேர்ந்திடச் செப்பவும்
அன்னவ னெழுந்தே யணியாய்ப் படைகள்
பின்வர முன்தான் சென்று ராமனைக்
கண்டு தொழுதான்; கரியமால்
அண்டையி லவனை யிருத்தின னன்றே.

---

(58) அநுமன் முதலியவர்கள் சானகியைத் தேடச் சென்றது.

நேரிசை யாசிரியப்பா.

'எழுபது வெள்ளக் குரங்கிரு வெளக்
கரடிகள் வந்தன கா'ணெனச் சொன்னதுந்
திரிபுரதகனன் தந்தசீர் வில்லைச்
சேதனஞ் செய்து சிறந்தவன் நோக்கி
'எதமி லெட்டுத் திசையிலுந் தேடத்
தூதரை விடு'கெனச், சுக்ரீவன் வகுத்தே
ஆட்களை யனுப்ப, அநுமன் சாம்பவன்
தோட்கினைச் சோடிலா வங்கத ளிரண்டு
வெள்ளத் தொகைகொளும் வண்படை [யோடே
உள்ளளோ தென்றிசை யென்பதை யுணரச்
சென்று தேடித் தண்ணீர் பருக
என்றோர் பிலத்திற் புகுதலு மன்னது
சொன்ன மயமாய்ச் சோதியைத்
தந்தது கண்டு தடந்டு மாறியே;

---

(59) அநுமனும் அவனுடன் சென்றவர்களும் உயிர்விடத் தீர்மானித்தல்.

நேரிசை யாசிரியப்பா.

திரிகிற வேளையிற் சீர்சுயம் பிரபையும்
அரிமக ளாட்களைக் கண்டே யிரங்கி
வெளிவரும் வழியினைக் காட்டி விடுக்க,
அளிமிகு சோலைக ளக்கன்ற காடுக
சிங்கமும் வேங்கையுந் தேர்ந்துவாழ் குகைபல

எங்குந் தேடியுங் கண்டிலா தேங்கி
மயேந்திர மாமலைச் சாரலை யடைந்து
'சுயேச்சையாய் நம்முயிர் விடுவதே தூநெறி;
சிவதனு வளைத்த சீருள ராமன்
உவந்திடு மனைவியை யொருவன் கொள்ளத்
தடுத்த சடாயுவுந் தன்னுயிர் துறந்தான்;
இன்றுநாங் கண்டிலா தேகுதல் பொருந்து
என்றவ ரியம்பிய சொற்களைச் [மோ?
சம்பா தியென்பவன் கேட்டா னங்கே.

---

(60) அநுமன் இலங்கை நோக்கித் தாண்டுதல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

சடாயு பட்டதைக் கேட்டசம் பாதியும்
'அடா!வென் றம்பியைக் கொன்ற வரக்கன்
ள்படாத பாடுக படவழி தேடுவன்,
என்றே யியம்பி யுயரக் கிளம்பிச்
சென்றே மீண்டு மவரிடஞ் சேர்ந்து
'சானகி யிலங்கையிற் றங்கிடும்' என்றதும்
வானரர் கேட்டு மனந்தடு மாறிப்
'போவது மாங்குப் பொருந்துமோ?' என்னக்
'கேவல மோநீ கீர்த்திவா யநுமனே!
தானிறைய் பிறந்ததும் பரிதியைத் தட்டவே'
என்று ஜாம்பவ னியம்பக் கேட்ட
வெந்திறல் மாருதி விரைவோ டெழுந்தே
அருகி லிருந்த வம்மலை யேறிக்
குறுகினன் மங்கைவா ழிலங்கையைக் குறித் [தே.

கிஷ்கிந்தாகாண்டம் முற்றுப்பெற்றது.

வீ. சுப்பையர்.

Rajaram Mohan Rai.

By Mr. V. Vasudeva Rao.

ராஜாராம மோஹனராய்.

பிறமதங்களின் கோட்பாடுகளிலும் மதஸ்தாபகர்களிடத்தும் இவருக்கு இருந்த பிரேமையை உத்தேசிக்குமளவில், இவர் பிறமதத்தில் சேர்ந்துவிட்டாரோ வென்ற சந்தேகம் ஏற்படும். அச்சந்தேகம் வேண்டுவதில்லை. இவரைப்போன்ற பெருத்த மாதாபிமானி முன்னும் இல்லை, பின்னும் இல்லை; பிராம்மணனாகவே இருந்தார். பிராம்மணனாகவே இறந்தார். இவர் இறந்ததும், இவர் தம் மீதணிந்திருந்த பூணூலைக் கண்ட மேனாட்டார் கொண்ட ஆச்சரியத்திற்கு அளவே கிடையாது என்றால், இவரது மதாபிமானம் இவ்வளவினது என்று சொல்லத் தேவையில்லை.

எடுத்த கருமத்தில் கருத்தாயிருந்து அவமதிப்பையும் உதாசீனஞ்செய்து உயிரையும் திரணமாக மதித்து ஆணவமுதலிய அஞ்ஞானவிருள் மூடிய ஆசாரஹீனர் வாசாகைங்கரியஞ் சொல்லி ஊர் மெச்சப் பால்வார்த்துண்பதுபோல் உலகம் மெச்சச் செய்கின்ற படாடோப பூஜையையும், பூஜாவிதியையும், பூஜை செய்பவரையும், அவர்கால்வழியையும் நாசமாக்கி ஜனசமூகத்தைச் சத்திய வழிக்குக்கொண்டுவர மார்தட்டிக் கொடும்போர் புரிந்தவர் இவரென்பது புலப்படுகின்றது. இவர் வைராக்கியம் அசாதாரணமாக இருந்தாலும்,

"நிரிறைனிறைந்து நின்றகடலிலே
நெறிமேற்கொண்டு
நீரிறைனிறைந்தவாறு வீழ்ந்த
தானிறைவுறாது"

என்றபடி மரியாதை கடவாமல் நிற்கும்கடல்போல்; தம்மை எதிர்ப்போரிடம் மரியாதை தவறாமல் பட்டவர்த்தனமாகப் பேசி வந்தார்.

ஜலத்தைக் குடித்து வேகங்கொண்டெழுந்த மகாமேகம் போலிரைந்து மூடரென்றும், கம்பீரஜன்னி பிடித்தவரென்றும், பெருமிதங்கொண்டவரென்றும், அபக்தரென்றும், சமயத்துரோகியென்றும் கண்டவர்களெல்லாம் ஆக்கிரகத்தினால் சுதேசப்பழம் பெருமையை உஜ்ஜீவிக்கவந்த மோஹனரைக் கொண்டது கொண்டபடி கொழித்தார்கள். ஆரம்பத்தில் ஒன்றும் சொல்லாது இவர் கருத்தை ஆமோதிப்பது போலிருந்த இவர் தாயார், பிற்காலத்தில் இவரது ஜன்மவிரோதியானார். அதற்குக்

காரணம், வெகு கோப்பியமாகத் தீயகருமங்கியற் றும் வைதிகராகிய வைஷ்ணிகள் அவளுக்கு அடிக் கடி செய்துவந்த மந்திரோபதேசமே. எனினும் அன்னையிடத்திருக்கவேண்டிய பயபக்தியும் பணி வும் அன்பும் இவரை விட்டு நீங்கவில்லை.

நாள் செல்லச்செல்ல த்ராணிதேவி தான் செய்ததை நொந்தாள். இவரது கொள்கை அவளு க்கு மனமொப்பி இருந்தபோதிலும், பாரம்பரிய மாக அநுபோக பாத்தியத்தை கொண்டாடும் பொய்க் கொள்கைகளை விடமுடியாதுபோயி ற்று. என் செய்வாள் பாவம்! மித்திர ரத்தின மாகக் கொண்டொழுகி வந்த அப்பியாச வழக்கத் திலிருந்து விலகுவதென்றால் யாருக்கும் சாத்திய மாகாது. பெண்பேதை யானதால் விட்டுவிட மன மொவ்வவில்லை. இவ்வாறாக மனம் ஒன்றுவிட் டொன்றுபற்றி ஊசலாடிக்கொண்டிருக்க,

"மூர்த்திதலந்தீர்த்தம் முறையாத்
தொடங்கினார்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

என்றதை அடிக்கடி காது குளிரக்கேட்டவளாத லால், தீர்த்தயாத்திரை செல்ல உத்தேசித்தாள். ஜகன்னாதத்துக்குப் புறப்பட்டு நின்றாள். போகும் பொழுது, 'மோஹனா! நீ சொல்வதுசரி. நான் சொல்வது தப்பு. நான் அதை உணருகின்றேன். இது சத்தியம். ஆனால் ஆதிமுதல் வேற்றுமை புத்தி யை விருத்தி செய்ததாலும், வயது முதிர்ச்சியாலும் அவைகளை நீக்க எனக்கு மனவலிமை போதாது. என்செய்வேன்! நான் உன்னுடன் அநுதாபப் படு கின்றேன். இந்த ஜன்மத்தில் இல்லாதபோனாலும் அடுத்த ஜன்மத்திலேனும் உன் கொள்கைகள் என் மனத்தைப்பற்றி என்னை ஈடேற்றட்டும்" என்ற தம்மனவுருப்பாட்டைத் தெரியப்படுத்திச் சென் றாள். சென்றவள் அங்கேயே பரமபதமடைந்தாள்.

இதே காலத்தில் 'எர்ல் ஆவ் மன்ஸ்ற்றரான கல்னல் பிக்களாஞ்சன்' இவர் நட்பாளராயினார். இவரது சத்தியவாக்கியம் கல்விபாக்கியம் யோக் கிய சிலாக்கியமாகிய குணகணத்தைப் பற்றிப் புகழ்ந்திருக்கிறார். இவரது பந்துக்கள் என்று சொல்லி இவரை உயிருடன் உருக்குலைக்க வெண் ணிய கொடியர் இவர் பிதுரார்ஜ்ஜிதம்பெறும் பாத் தியதையை பாதிக்கச் செய்யவேண்டுமென்று ஜாதிப்பிரஷ்டஞ்செய்து வியாஜ்ஜியம்நடத்தினர். மோஹனர் வாதிகளைத் தோற்கடித்துத் தம் உரி மையைப்பெற்றார். இந்தசட்டம் இவருக்குத் தலை கீழ்பாடம்.

கிறிஸ்தவ மதத்தில் மோஹனருக்குப்பற்றுண் டென்று சொன்னோம். அம்மதாசாரியர்களுடன் சம்பாஷித்தும், அம்மதப் புஸ்தகங்களை உள்ளாழ்ந் து படித்தும் சந்தேகந்தீராமல் வேதத்தைக்கற்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டார். அந்நாள் முதல் ஒரு நாளையும் விடாமல் ஒழுங்காகப் பரிசீல னஞ் செய்து முடித்தார். "அறிவு கற்றனைத் தூறும்" என்றாங்கு பன்னிப் பன்னிப் படித்ததை யே படித்ததால், அதிற்கண்ட கிறிஸ்துவ உலகநீதி யின் முதன்மையையும் விசேஷத்தையும் கண்டு உள்ளம் உருகிப் பேரானந்தங்கொண்டு, "யேசு கற்பனை மோக்ஷ ஸாதனம்" எனப் பெரிய புஸ்தக மொன்றைபோலப் பெயர் புனைந்து பதிப்பித்தார். அப்புத்தகத்தின் முகவுரையில் "ஜாதி ஸ்திதி உயர்வு தாழ்வில்லாமல், பிறப்பு இறப்பு மாறுதல் எக்கமாதியவற்றிற்கு எல்லா ஜீவன்களையும் சுக துக்க முள்பட உள்ளாக்கிய எந்தப் பரம்பொருள் ஒன்றுண்டோ, அவனிடத்து மனத்தைச் செலுத் தவும், தமக்கும் ஜனஸமூகத்துக்கும் கடவுளுக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் சரிவரச் செலு த்த ஆறறிவுடைய மனிதனின் நடத்தையை ஒழு ங்கு படுத்தவும் இது துணை நின்றுதவு"மென்று எழுதி யிருக்கின்றார். இந்நூலை சம்ஸ்கிருதத்தி லும் வங்காளத்திலும் மொழி பெயர்த்தார்.

கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு இந்நூல் ருசிக்க வில்லை. அதில் வைஷமிகளாய் விடியிற்காலத்துக் காகம்போலக் கரைந்தனர். 'போட்டி யின்றி ஆதிக்கஞ் செலுத்திக்கொண்டிருந்தோமே? இவன் எங்கிருந்து முளைத்தான்' என்று கிலேசித்துத் தம் சங்காதம் விவாதம் நடத்தவேணுமென்று கேட்டுக் கொண்டனர். இயற்கைப் பொருளாகிய அறிவும் செயற்கைப் பொருளாகிய கல்வியுமான சம்பத் துடைய மோஹனர் கொஞ்சங்கூட திகைக்காமல் அவர்களது வேண்டுகோளுக் கிசைந்தார்.

அதை யொட்டி பல நாட்கள் பரியந்தம் மும் முறமாக விகாதங்கள் நிகழ்ந்தன. பாதிரிகளுக்கு முன்னும் பின்னும் ஓடவில்லை. தாம் கூறிய சமா

தானங்கள் முன்னுக்குப் பின் உதைப்பனவாயிருக் கின்றன வென்று விளக்கப்பட்டதைக் கண்டு, கை பிசைந்து வெட்கி மனஞ்சுளித்தனர். மோஹனர் வெற்றிமாலை புனைந்தார். இவர் தர்மத்துவகுணம் வெகு உன்னதமானது. வாதிப்பவரிடம் இவர் கொண்டிருந்த மனப்பான்மை மெச்சத்தக்கது. தம்மபிப்பிராயத்திற்கு விரோதமாக இருந்தாலும், தாராள நோக்குடன் நோக்குவார். இவர் நடத்திய தர்க்கங்களனைத்தும் புஸ்தக ரூபமாய் வெளி வந் திருக்கின்றன. அவைகளனைத்தும் தர்க்கம் படிப் போர்க்கு பூரா ஞானக்களஞ்சியமென்று பல பண் டித சிகாமணிகள் அபிப்பிராயப் படுகின்றனர்.

மேலே சொன்ன புஸ்தகத்தில் ஜனங்களுக்கு அத்தியாவசியமான தேசாசாரக் கடமைகளும், பாபவிமோசனம், திருவருள், சிந்தா சுவாதீனம் இவைகளைப்பெறும் மார்க்கங்களும் தெளியக்கிடக் கின்றன. மேலும், மனப்பூர்வமாக பாபாத்துமாக் கள் தாங்கள் செய்த பாபத்திறகாகத் துக்கித்தால் அந்திகாலத்தில் சுத்தர்களாகி அவனருள் பெறு வார்கள் என்பதும் அதனால் திறப்படுகின்றது.

வேதத்தில் கண்ட உண்மைகளைத் திருத்தி பிரதானம், அப்பிரதானம் என்று பிரித்தெழுதிய நூலை வாசித்த சிரமபுரக் கலாசாலை டாக்டர் மகா விஷமன் என்பவர் அடுக்காக மறுப்புத்தொடுத்துப் பிரயோகித்தார். அவைகளுக்கு மோஹனர் விடுத்த சமாதானத்திலிருந்து இவரது மலர்ந்த முகமும் கனிந்த வாயழகும், தர்க்கமும், சுருக்கச்சொல்லும் விளக்கவுரையும் கோர்வைப் பான்மையும் புத்தி கூர்மையும் சாஸ்திரப்பயிற்சியும் தெளிவாகும்.

சமாதானங்கூறிய பின்னரும், மகவிஷமன் பின்னும் மறுப்பெழுதினார். அதற்கு மோஹனர் முடிவெழுதினார். அதுகாறும் இவரது மதிப்பு களெல்லாம் பாதிரிமார் நடத்திவந்த அச்சுக்கூடத் தில் பதிப்பிக்கப்பட்டு வந்தன. எனினும், இனி அச்சிட முடியாது என்று அச்சுக்கூடத்தலைவர் சொன்னதும், சொந்தத்தில் அச்சுக்கூடம் ஒன்று அன்றே ஸ்தாபித்தார். மறுப்புக்கு சமாதானம் ஒரு மட்டும் வெளிவந்தது. அதையும் சகஜப்படி அளவு கடவாமல் அடக்கத்துடன் எழுதினார். அவைகளு க்கு இவருக்குக் கிடைத்த யோக்கியதாபத்திரங்கள் இத்தனை அத்தனை யென்று எளிதில் சொல்ல முடி யாது. அவைகளுள் 1824-ல் வெளிவந்த வித்தியா மண்டல மதிப்புரைச் சஞ்சிகையில் மிஸ்டர் சிஸ்மாண்டி எழுதியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. (இன்னும் வரும்)

வி. வாசுதேவ ராவ்.

Eternal Wisdom

BY MR. L. SANKARAN, B. A.

ரத்னமாலை.

மேம்பட்ட ஞானத்தையடைவதற்கே நாம் போர் புரிகிறோம். ஆதலால்தான், மனிதர் நம் மைப் போர்வீரர் என்று அழைக்கின்றனர்.—
ஞானக்கோத்து.

* * * *

ஞானத்தை உலகத்தின் தலைமையில்வை; அப்பொழுதுதான் உலகம் தன் யுத்தங்களில் வெற்றிபெறும். மனிதர்களாலாகக் கூடிய உலகங் களுள் தலைமை வகிக்கும்.—**கார்லைல்.**

* * * *

இந்த ஞானமே ஸர்வ வஸ்துக்களுக்கும் மூலம்.—**ஸேஹார்.**

* * * *

இவ் வத்புதமான ஞானமே ஸர்வத்துக்கும் மூலாதாரம்.

* * * *

ஞானமாகிய நான் யோசனையுடன் வஸிக்கி றேன். சாதுர்ய புத்தியை நானே கண்டுபிடிக்கி றேன். நன்மதியும், ஆழ்ந்த அறிவும் எனதே. நானே யூகம். நானே பலம். என்னாலேயே அரசர்கள் ஆளு கிறார்கள்; நீதி செலுத்துகிறார்கள். உலகத்து நீதி பதிகள் என் சக்தியாலேயே நீதிசெலுத்துகின்ற னர். என்மீது யார் அன்பு செலுத்துகிறார்களோ, அவர்களிடம் நான் இருக்கின்றேன். என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் காண்பார்கள். தனமும் கனமும் என்னுடன் குடிகொண்டிருக்கின்றன.

ஆம். அழியாத்தனமும், தருமமும் நான் கொடுக்கும் பலம். புடமிட்ட வெள்ளியைக் காட்டிலும் மேம்பட்டது. என் ஸம்பத்துக்கு விலையுயர்ந்த வெள்ளியும் ஈடாகாது என்னைக் காதலிப்பவர்கள் ஸம்பத்துக்களை யடையுமாறு நான் நீதி முறை பிறழாத தர்மமார்க்கத்தைக் காட்டுகிறேன். அவர்களுடைய செல்வத்தைப் பெருகச் செய்வேன். * * நான் தொன்றுதொட்டு ஏற்படுத்தப்பட்டேன். உலகம் பிறக்கு முன்பு நான் பிறந்தேன். கடல்கள் தோன்று முன்னம் நான் உலகில் தோன்றினேன். நீர்ச்சுனைகள் தோன்ற முன்னம் நான் தோன்றினேன்.—பைபில் பழமொழிகள்.

* * * *

ஞானத்தைக் கரைகண்டவரில்லை.—மினேகிரேத்

* * * *

ஞானமே கருந்தனம்.—சீனதேசத்து பௌத்த நூல்கள்.

* * * *

ஞானத்தையடைவது பொன்னையடைவதைக் காட்டிலும் எவ்வளவு மேல்? புத்தியில் வளர்தல் வெள்ளியை யடைவதைக்காட்டிலும் எவ்வளவு மேல்—பைபில் பழமொழிகள்.

* * * *

ஞானம் முத்துக்களைக் காட்டிலும் விலை பெற்றது.—பைபில் ஜோப்.

* * * *

நமது செல்வத்துளெல்லாம் ஞானமே அமரத்தன்மை பொருந்தியது—ஸாக்ரடீஸ்.

* * * *

ஞானமடைய வேண்டுமென்னும் ஆசை நம்மை சாசுவத ராஜ்யத்திற் சேர்க்கின்றது.—ஞானக்கோத்து.

* * * *

ஞானம் பிரகாசமானது. அவன் அழகு கெடுவதில்லை.—ஷை

* * * *

கருணைக் கடலான அவன் தன் ஸ்வரூபத்தைக் காட்டும் பொழுது, அவன் ஒளியிலும் ஸந்தோஷத்திலும் உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் நாம் பார்க்கிறோம்.

எல். சங்கரன், பி.ஏ.

Dante Alighieri.

By Mr. T. R. Rajagopalan.

தாந்தே அலிகீரி.

பிறப்பும், வளர்ப்பும்.

இத்தாலியா தேசத்தில், ப்லாரென்ஸ் நகரில், கி. பி. 1265-ம் வருடம் மே மாதத்தில், ஐரோப்பிய கவிச்சக்கிரவர்த்தியாகிய தாந்தே அலிகீரி என்பவர் டொறு பெல்லா என்பவளுக்கும் அல்திகீரோ என்பவனுக்கும் பிறந்தவர். அந்நகரில் இருந்துவந்த கல்யர் கிபிலீனர் (Guelfs and Ghibellines) என்ற இரு வகுப்புகளில் முதல் வகுப்பைச்சேர்ந்தவர் நமது தாந்தே. இவருடைய பதிமூன்றாவது வயதில் இவர் தாயாரும், பதினெட்டாம் பிராயத்தில் தகப்பனாரும் காலகதியடைந்தனர். இவருடைய இளமைப்பருவத்தைப் பற்றிப் பின் எழுதியிருப்பதைத் தவிர, வேறொன்றையும் உள்ளபடி ஒழுங்காக அறியத்தக்க ஆதாரவுகள் ஒன்றுமில்லை

இவர் தன்னுடைய ஒன்பதாம் வயதில் தன் தந்தையுடன் அந்நகரிலுள்ள போல்கோ போர்டினாரி என்ற சீமானின் மாளிகைக்கு விருந்துண்ணப் போயிருக்கையில், இருநான்கு பிராயத்தினளும், அழகும் நற்குணவொழுக்கங்களும் வாய்ந்தவளுமான பியாத்ரிஸ் (Beatrice) என்ற அச்சீமானின் புத்திரியைக் கண்ணுற்றார். உடனே இவருடைய

மனமும் இருதயமும் அவள்பாற் சென்று, இன்றுமுதல் இவர் துஞ்சிய வரையிலும் இவர்க்கு அவள்மீது உண்டானநேசம் நாட்கு நாள் பெருகி வளர்ந்துகொண்டேயிருந்தது. இவர் மிக்க எளிய குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்ததால், அவளை விவாகஞ்செய்துகொள்ள முடியவில்லை. அம்மாதுசிரோமணியோ அந்நகரின் சாவுக்கார் ஒருவனைக் கலியாணஞ் செய்துகொண்டதாகவும், பின் கி. பி. 1290-ம் ஆண்டில் அவள் விண்ணுலகமடைந்ததாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விஷயங்கள் தாந்தேயை ஆறாத் துயரக்கடலில் அழுத்தியதால், இதனின்று தன்னை விடுவித்து மனவமைதி பெறும்பொருட்டு அநேக தத்வ ஞான நூற்களையும், காவியங்களையும், சுதேச சரிதங்களையும், லளித வித்தைகளையும் இவர் கற்கவாரம்பித்தார். இதைப்பற்றி இவர் பின் வருமாறு செப்பியிருக்கிறார்: "வெள்ளிச் சுரங்கங்களைத் தேடிச்சென்றவன் கடவுள் அநுக்ரகத்தால் தங்கச் சுரங்கத்தைக்கண்டது போல், மேற்கூறிய விஷயங்களாலுண்டான சோகத்தை நிவர்த்திப்பதற்காகக் கற்றுவருகையில், நான் என் துக்கந்தீர்ந்து மனவமைதியடைந்ததுமல்லாது சகல சாஸ்திரங்களையும் படித்துக்கலைஞனானேன்."

இடையில், மேற்சொல்லிய கல்யர்களுக்கும் கிபிலீனர்களுக்கும் உண்டான பெரும் போரில் இவரும் ஓர் யுத்தவீரராக நின்று சண்டை செய்தனராம்.

மணமும், இல்வாழ்க்கையும்.

பியாத்ரிஸின் இறப்பினாலுண்டான வருத்தத்தை மறப்பதற்காக வேறொரு பெண்ணை மணஞ் செய்துகொள்ளும்படித் தன் உறவினராலும், சிநேகிதர்களாலும் வேண்டப்பட்டதால், கி. பி. 1292-ம் வருடத்தில் மானெட்டோ டொனட்டி என்றவளை மணந்தார். இவ்விருவர்க்கும் நான்கு குழந்தைகள் பிறந்தன. சின்னாட்சென்றபின், எக்காரணத்தையிட்டோ இவர் அவளிடமிருந்து பிரிந்தார். ஆனால், இவருடைய குழந்தைகள் மாத்திரம் இவர் கூடவே யிருந்து வந்தார்கள்

ராஜாங்கவேலையும், சுதேச நீக்கமும்.

(Priorship and Exile.)

குடும்பம் அதிகரிக்கவே இவர் தன் ஜீவனத்திற்காக ஓர் வழி தேடவேண்டி வந்ததால், தன்னுடைய நாட்டிலேயே ஓர் வேலைக்குப் பிரயத்தனஞ் செய்தார். சர்க்கார் உத்தியோகம் பெற விரும்பியவர்கள் அந்நகரின் சங்கங்களிலொன்றைச் சேர்ந்தவராயிருக்கவேண்டுமென ஓர் சட்டமிருந்ததால், இவர் அந்நகரின் பிரதான சங்கங்களேழிலொன்றான வைத்தியர் சபையைச் (Guild of Apothecaries) சேர்ந்தார். பின், கி. பி. 1296-ம் வருடம் ஜூன் மாதம் 15-ந் தேதிமுதல் ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி வரையிலும் அந்நகரின் பிரதான நீதிபதிகளிலொருவராக நியமிக்கப்பட்டு இருந்து வந்தார். இவ்வேலையிலிருந்துதான் இவர்க்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின.

இவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டகாலத்தில், மேற்குறிப்பிட்ட இருவகுப்பினரும் கலகமெழுப்பியதால், இதை அடக்க கிறிஸ்துவர்களின் பிரதான பாதிரியான எட்டாவது பானிபேஸ் (Pope Boniface VIII) என்பவர் ப்ரான்ஸ்தேசத்தரசனின் சகோதரனாகிய சார்லெஸ் (Charles of Valois) என்பவனை அனுப்பினார். தாந்தேயும் இவர் கக்ஷிக்காரரும் அவ்வேற்பாட்டிற்குச் சம்மதிக்காது, தம்மிற் சிலர் அப்பாதிரியினிடஞ் சென்று தங்களுக்கு அநுகூலமான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானித்து, கடைசியில் இதற்காக நமது தாந்தே ரோமாபுரிக்குச் சென்றார். இவர் இங்கு தக்கஏற்பாடு செய்துகொண்டிருக்கையில், 1301-ம் வருடம் நவம்பர் மாதம் முதல்தேதியில் ப்லாரென்ஸிலுள்ள இருதினத்தாரையும் இணைத்துச் சமாதானப்படுத்துவதாகக் கூறிவந்த சார்லெஸ

என்பவன் அந்நகரத்துட் புகுந்து அதைத்தன் வயப்படுத்தியவுடன், ஆங்குள்ள கக்ஷிகளிலொன்றிற்கே அவன் உதவி புரிந்ததால், இவ்வகுப்பினர் மேற்கிளம்பி, இவருடைய விரோதிகளை நகரினின்று துரத்தி, அவர்களுடைய வீடு பொக்கிஷம் முதலானவைகளையும் அபகரித்துக்கொண்டார்கள்.

மேலும், 1302-ம் வருடம் ஜனவரிமாதம் 27-ந் தேதியில், நீதிபதியாயிருந்த கான்டி-டி-காப்ரில்லி என்பவன் தாந்தேயும் வேறு சில சீமான்களும் ப்லாரென்ஸிலிருந்து நீக்கப்பட்டதாகவும், அவர்களுடைய ஆஸ்திகளையெல்லாம் சர்க்கார் கைக்கொண்டுவிட்டதாகவும், அந்நகரின் எல்லைக்குள் எவ்விடத்திலாவது நமது தாந்தே காணப்பட்டால் உடனே அவரைப் பிடித்து எரித்துவிடவேண்டுமெனவும் பிரசுரங்கஞ் செய்தான். பின் தாந்தேயின் புத்திரர்களும் புத்திரிகளும் துரத்தப்பட்டார்கள். ரோமாபுரியிலிருந்த நமது தாந்தே அதைக்கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். பின் பற்பல நாடுகளுக்குச்சென்று கஷ்டப்படுகையில், தன் நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு மொழிந்திருக்கிறார்: "எத்தீங்கையும் எனக்குப் பிறர்செய்யாதபடிக்கும், இங்ஙனம் அகாரணமாய்த் தண்டிக்கப்பட்டு நான் துன்பப்படாதபடிக்கும் கடவுள் அனுக்கிரஹித்திருந்தால் எனக்கு எவ்வளவு நன்மையாயிருந்திருக்கும்! சுதேச நீக்கத்தினாலும், மிடியினாலும் வருந்துகிறேன். இவ்விதம் என் நகரத்தாரையும், காலகதியையும் நினைந்து நொந்து அவர்களை நிந்திக்காதபடி கடவுள் விதித்திருந்தால் மிக்க மேலானதாயிருந்திருக்கும். ரோமாபுரியின் அருமைப்புதல்விபோல் விளங்கும் கீர்த்திபெற்ற ப்லாரென்ஸ்வாசிகள் என்னைத் தண்டித்து இவ்வாறு அலறச்செய்த தன் காரணம் யாதோ? என்னைப் பெற்றுப் பாலூட்டி வளர்த்த தாயாகிய ப்லாரென்ஸ் என்னை இப்பொழுது நிராகரித்துவிட்டாள். அந்தோ! சோர்வடைந்திருக்கும் என் அவயவங்களையும், பரிதபிக்குப் என் மனத்தையும், பாலைவனம்போல் கொதிக்கும் என் இருதயத்தையும் மறுபடியும் என் தாயகத்திலிருத்தி அமைவுற்றிருக்க அவாவுகின்றேன் வறுமை வறுமை யென்ற பாணத்தினலடிபட்டு, நாடுகள்தோறும் அலைந்துதிரிந்து, என்மானத்தை இழந்து, வறுமையின் பாணத்தினல் எனக்கு உண்டான பெரும்புண்ணை என்னிஷ்டத்திற்கு விரோதமாகப் பிறர்க்குக் காண்பித்து, யாசித்து, என் வாணாளைக்கழிக்கும்படியாக விதித்த விதி என்ன விதியோ? அந்தோ! சண்டமாருதத்தினல் அடிபட்டுத் திக்குத்திசைகள் தெரியாது நாலாபக்கங்களிலுமோடி, நானாவிதகரை காடுகளின்மீது மோதப்பட்டு அவதிப்படும் மீகாமனில்லா மரக்கலம்போல், பொறுத்தற்கியலாத தரித்திரமென்ற தீக்காற்றினல் தாக்கப்பட்டு, தேகாரோக்கியத்தையும், மனோதிடத்தையும், உற்சாகத்தையுமிழந்து மயங்கி உயங்கி அலமந்து வாடிநிற்கின்றேன்! கண்டோர் என்னைப்பரிகசிக்கின்றார்கள்......"

பின், சுதேசத்திற்குத் திரும்ப அநேக உபாயங்கள் செய்தும், அவைகளொன்றும் பலியாததினல், பற்பல தனவான்களிடஞ் சென்று அவர்களால் ஆதரிக்கப்பட்டுவந்தார்.

கி. பி. 1310-ம் ஆண்டில், ஏழாவது ஹென்ரி (Henry IV) இத்தாலியாவுக்கு வந்திருப்பதாகக் கேள்விற்றபொழுது, அவனுடைய உதவியைக்கொண்டு தன் தாய்பூமிக்குச் செல்லலாமெனவும், அவ்வரசன் அத்தேசத்தில் வியாபித்துள்ள அக்கிரமங்களை யகற்றித் தர்மத்தை ஸ்தாபிப்பானெனவும் நம்பியதால், களிப்புற்று அவனுக்கு அநேக லிகிதங்கள் எழுதினர். அவ்வேந்தன் ப்லாரென்ஸை நோக்கிப் போவதாகக் கேட்டபொழுது, அந்நகரத்தார்க்குப் பின்வருமாறு இவர் ஓர் நிருபம் வரைந்தார். "பாருங்கள்! நற்காலம் உதிக்கின்றது. சமாதானமும், க்ஷேமமும் உண்டாகித் தேச

மெங்கும் பரவுமென அநேக நற்குறிகள் தோன்றி அறிவுறுத்துகின்றன. துக்கமாகிய காரிருள் நீங்கி, பிரகாசம் நிரம்பிய காலையாகிய சுகமென்பது உதிக்கின்றது. குணக்கு பாகத்திலிருந்து மந்தமாருதம் வீசுகின்றது; விண்ணுலகம் பார்ப்பதற்கு நேர்த்தியாயிருக்கின்றது.........பசி, பிணி, கஷ்ட நஷ்டங்கள் நிறைந்த பாலைவனத்தில் நாம் இதுகாறும் அநேக இரவுகளைக் கழித்து வந்தோம். இனி, அவ்வனாந்தரம் ரமித்துச் சுகித்திருப்பதற்கான பூங்காவனமாக மாறும் சமயம் உதிப்பதைப் பாருங்கள்! இனி அஞ்சாதீர்!"

இவர் டஸ்கனியிலிருக்கையில், ப்லாரென்ஸ் நகரத்தார் அச்சக்கிரவர்த்தியை எதிர்க்கப்போவதாகச் செவியுற்றபொழுது, தன் நகரத்தாரின் கொடியசெயலை நிந்தித்து, இவர் அவர்களுக்கு ஓர் கடிதம் எழுதினர். இவருடன் துரத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையரும் தம் சுதேசத்திற்கு மீண்டும் வரவழைக்கப்பட்ட போதிலும், இவர் மாத்திரம் அழைக்கப்படாததன் காரணம் மேற்சொல்லிய இவருடைய கடிதங்களே யாகும்.

அம்மன்னவன் ப்லாரென்ஸை முற்றுகைபோட்டு அபஜயமடைந்து திரும்பிப் போகையில், கி. பி. 1313-ம் வருடத்தில் நோவுற்று உயிர் துறந்தான். இவன் மரணத்துடன் தன் தேசத்திற்குத் திரும்பிச் செல்லலாமென்றிருந்த இவருடைய நம்பிக்கையும் போய்விட்டது. பின்னும் ஐரோப்பிய மன்னர்க்கும், கிறிஸ்துவப் பாதிரிகளுக்கும் அநேக கடிதங்கள் எழுதினர். ஆனல், இம்முயற்சிகள் கைகூடாமற் போயின.

கி. பி. 1315-ம் வருடத்தில் தேசப் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களில் குறிப்பிட்ட அபராதத்தைச் செலுத்தி மன்னிப்புக் கேட்டுக்கொள்பவர் மாத்திரம் சுதேசத்திற்குத் திரும்பிவரலாமென ப்லாரென்ஸ் நீதிபதிகள் விளம்பரஞ்செய்ததினல், பாக்கிசாக்கியானவர்களும் அதற்குடன்பட்டுச் சென்றார்கள். அவ்விளம்பரத்திலிருந்தும் நமது தாந்தேயின் பெயர் விடுபட்டிருந்தபோதிலும், இவர் அதை அறியாது, தன்னையும் அழைத்திருப்பதாக எண்ணி, ப்லாரென்ஸிலுள்ள தன் நண்பர்களிலொருவர்க்குப் பின்வருமாறு ஓர் கடிதம் வரைந்தார். "பதினைந்து வருடகாலமாய் அநேக நாடுகளுக்குச் சென்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் என்னை இவ்விழிய நிபந்தனைகளுக் குட்படுத்தி அழைப்பது தர்மமோ? மாசிலாக்குணமுடையவனுக்கும், ஞானியாயிருப்பவனுக்கும் அவன் நாட்டினர் செய்யும் பேருதவி இத்தகையதோ? கலைஞனாகிய யான் அந்நிபந்தனைகளுக்கு உடன்படேன். அவ்வாக்கைகள் புல்லறிவாளர்க்கும் பண்பிலார்க்குமே தக்கவை. அதவோன் கசடர்களுக்குமுன் ஓர் குற்றவாளிபோல் நின்று வார்த்தையாடுதல் நியாயமல்ல. இச்செயல் அவன் மாண்பைக் குறைப்பதுடன், தர்மத்தையும் நிலைகுலையச் செய்துவிடும். என் மேன்மைகுணத்தை இழக்காதும், மானபங்கமடையாதும் சுதேசத்திற்குத் திரும்பிப்போகவேண்டுமேயல்லாது, மடமையும் அநியாயமும் நிரம்பிய ஏற்பாடுகளுக்கு இணங்கிச் செல்லேன். நான் என் சுதந்தரத்தைப்பெற மேற்காட்டிய வழியைத்தவிர வேறொன்று மில்லையாயின், எனக்குச் சுதந்தரம் என்பது வேண்டியதில்லை. நான் எங்கிருந்தாலும் எனக்கு அன்னபானாதிகள் கிடைக்கும். இயற்கை அற்புதங்களை எங்கிருந்தும் கண்டு களிப்புறலாம். இதற்காக என் தேசத்திற்குச் செல்லவேண்டுமென்பதில்லை."

கி. பி. 1317 அல்லது 1318-ம் வருடத்தில் ராவென்னா என்ற இடத்திற்குச் சென்று, கைடோ நொவெல்லோ என்றசீமானால் மிக்க அன்புடனும், மரியாதையுடனும் பராமரிக்கப்பட்டு வந்தார்.

இச்சமயத்தில், போலோனாவின் கவிஞரொருவன் தாந்தேயின் கவித்திரத்தைக் கண்டு

வியந்து, பூக்கிரீடம் ஒன்றை 'இவர்க்குக்கொடுக்க எண்ணி இவரை அழைத்தபொழுது, "எத்தகைய பரிசையும் சுதேசத்தாரிடமிருந்தல்லாது அந்நியரிடமிருந்து பெறேன்." என விடையளித்து மறுத்துவிட்டார்.

மரணம்.

கி. பி. 1321-ம் வருடத்தின் வேனிற்காலத்தில், ராவென்னாவுக்கும் வெனீஸ் நகரத்திற்கும் நேரிட்ட சச்சரவுகளை யடக்கிச் சீர்படுத்துவதற்காக ரோவென்னாவின் நீதிபதியால் இவர் வெனீஸின் அதிபதியிடம் அனுப்பப்பட்டுச் சென்றபொழுது, வெனீஸின் அதிகாரி இவரை அசட்டைசெய்து, கடல்வழியிருந்தும், தரைமார்க்கமாகவே இவர் ராவென்னாவுக்குச் சடுதியில்திரும்பிவிடவேண்டுமென உத்தரவளித்தான். வழியில் இவர் மலேரியா ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, ராவென்னாவைச்சேர்ந்தவுடன் அவ்வியாதி அதிகரித்து, கி. பி. 1321-ம் வருடம் செப்டம்பர் மாதம் 14ந்-தேதியில் இவரை நித்திய நித்திரையிலழுத்தியது. இவரை அவ்வதிபதி மிக்க விமர்சையுடன் அடக்கஞ் செய்தனரும். இவருடைய சரீரம் காணமற் போய்ப் பின் அகப்பட்டதையும், இவருடைய கல்லறையின்மேல் மிகவும் அழகான கோபுரமொன்றை எழுப்பப் பலர் முயன்று இறுதியில் கட்டி முடித்த வரலாறுகளையும் ஈண்டு எழுதுவோமாயின் இவ்வியாசம் பெருகும்.

(இன்னும் வரும்)

டி. ஆர். ராஜகோபாலன்.

The Lost will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

காணமற்போன மரணசாஸனம்.

(சென்ற பிப்ரவரிமாத ஸஞ்சிகையின் 64-ம் பக்கத் தொடர்ச்சி.)

"பார்வதி! நீ இப்படி பதில் ஒன்றும் சொல்லாமலிருந்தால், நான் செய்வது."

"துரை! நான் சொல்லவேண்டியவற்றையெல்லாம் சொல்லிவிட்டேன். அதிகப்படி நானுன்னிடம் தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை. அத்தை வீட்டுக்குப் போவதற்கு என் மனம் ஒப்பவில்லை. அவளுடைய குணம் உனக்கு நன்றாய்த் தெரிந்ததுதானே. இவையெல்லாம் தெரியாமல்தானா சுந்தரமாமி அவ்விடத்திய சம்பந்தம் கூடாதென்றது."

"சரி தெரிந்தது. உன்னுடைய போக்கும் புலப்பட்டது. வேறு எங்கேயாவது வரன் பார்த்தால் போகிறது. ஆனால், அங்கேயும் அத்தையின் விஷயம் பரஸ்தாபத்துக்கு வருமென்பதில் சந்தேகமில்லை. இதற்கென்ன செய்வது?"

"இதற்குத்தான் அவள் வீட்டிற்கே போகவேண்டாமென்று சொன்னது. இப்போது நான் அங்கு வராமலிருப்பதற்குக் காரணமும் அதுதான்."

"சரி. நீ அங்கே வரவேண்டாம். நான் ஏதாவது கொண்டுவருகிறேன், சாப்பிடு."

"நாம் வீட்டில் சமைத்துக் கொள்ளலாம். அப்படிச் செய்வதுதான் ஒழுங்கு."

"இப்படி நடந்தால் சுந்தரமாமி மனந்திரும்புவாள் போலும். பேஷ். பார்வதி அசடென்று எண்ணியிருந்தேன். நீ ரொம்பவும் கெட்டிக்காரி. உன் இஷ்டம் நிறைவேறுவதற்கல்லவோ இப்படியெல்லாம் நீ செய்கிறாய்."

பார்வதி மௌனம் சாதித்துப் புன்னகை கொண்டு தலை குனிந்தாள். துரைசாமிக்குத் தன் தங்கையின் எண்ணம் இப்போது வியக்தமாகப் புலப்பட்டது.

"பார்வதி! நீ எதற்கும் அஞ்சவேண்டாம். உன் இஷ்டப்படியே காரியங்கள் நடைபெறுமென்பதில் ஐயமில்லை. வாஸ்தவத்தில் நீலகண்டனைக் கலியாணம் செய்துகொள்ள உனக்கு ஸம்மதந்தானே?"

பார்வதி அவன் முகத்தைப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் மறுபடியும் தலை குனிந்தாள்.

"பார்வதி! அவ்விஷயத்தை என் காதால் கேட்க விரும்புகிறேன். நீ அதைச் சொல்வாயாகில், எவ்விதத்திலாவது நான் சுந்தர மாமியை இதற்குச் சம்மதிக்கச் செய்கிறேன். நீலகண்டன்பேரில் அவளுக்கு அதிக ஆசையுண்டு. ஆதலால், அவனிஷ்டத்துக்கு விரோதமாக அவள் ஒன்றும் செய்யமாட்டாள். உன் மனத்திலுள்ளதைக் கூறிவிடு."

பார்வதி அப்பொழுதும் பேசவில்லை.

"பார்வதி! நீ இவ்விதம் சும்மாயிருப்பது அழகன்று. என்னிடம் சொல்லாமல் பிறகு யாரிடம் சொல்லப்போகிறாய். என்னிடம் உனக்கு வெட்கமென்ன? நான் பிறரைப்போல் எல்லாரிடமும் கேலிசெய்யப் போகிறேனா. உன் இஷ்டத்தைத் தெரிவித்துவிட்டால், அவள் ஸம்மதத்தை எவ்விதத்திலாவது வாங்கிவிடுகிறேன். காரியம் என்னாலேயே முடியவேண்டியிருக்கின்றதென்பதை நீ அறியாய் போலும்!"

பார்வதி தலை நிமிர்ந்து புன்னகையுடன் வாயைத்திறக்கப்பார்த்தாள். நாணத்தால் மறுபடியும் தலை குனிந்தாள். கடைசியாக எப்படியாயினும் மனத்திலுள்ளதை வெளியிடுவதென்றே தீர்மானித்தாள்.

"துரை! இந்த விஷயத்தை உன்னிடம் சொல்வதற்கு எனக்கு என்ன சங்கோஜம். உன்னிடமின்றி பிறகு எவரிடம் சொல்லப்போகிறேன். நான் நீலகண்டரைத் தவிர வேறு எவரையும் மணப்பதில்லை; மனத்தினாலும் ஸ்மரிக்கமாட்டேன். இது சத்தியம். காரியம் முடியும்வரை இதை நீ எவரிடமும் பிரஸ்தாபிக்காதே. இது கைகூடாவிடில், என்னைப் பிறகு நீ உயிருடன் காண்பதரிது."

"பார்வதி! உன் உறுதிக்கு நான் மெச்சினேன். உன் எண்ணங்கள் எவ்வித தடங்கலுமின்றி ஈடேறுமென்பதில் ஐயமில்லை. அதற்காக நீ சஞ்சலப்படாதே. நடக்கவேண்டிய காரியங்களை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். உன் மாமியார் வழியை நீ பின்பற்றுவதில் எனக்கு ரொம்பவும் ஸந்தோஷம். நேரமாயிற்று. நாம் கீழே இறங்கிப்போவோம். நாம் அத்தை வீட்டுக்குப்போக வேண்டியதில்லை; வீட்டிலேயே சமைத்துக் கொள்வோம். இப்போது நீ கூறிய விஷயங்களை நீலகண்டனிடம் சொல்லுகிறேன். இதனால் நன்மையே தவிர, கெடுதி ஒன்றும் விளையாது. அவன் உன்மேல் ரொம்பவும் பித்துப் பிடித்தவன். அவன் ஏதாவது உன்னைக் கேட்கும்பக்ஷத்தில், நீ கூசாமல் பதில் கூறிவிடு. அவனிடம் பேசாமலிருந்தாயோ, பிறகு கஷ்டம் நேரிடும்."

பிறகு இருவரும் கீழே இறங்கிப்போனார்கள். பார்வதியைக்கண்டு அனைவரும் மனமகிழ்ந்தார்கள். அவளுக்கு உடம்பு சரிப்படவில்லையென்றும், அதனால் மாடியில் படுத்துத் தூங்கிவிட்டாளென்றும், ஸமாராதனைச் சாப்பாடு அவளுக்கு இஷ்டமில்லையென்றும், ஆதலால் யாராவது இங்கேயே சமைக்கட்டுமென்றும் துரைசாமி அவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிட்டான். சீதையம்மாளுக்குப் பார்வதியின் மேல் பிரியமாகையால் அவளுக்குச் சமையல் செய்துபோட்டாள். பார்வதி காலை முதல் சாப்பிடாததனால், அவளுக்குத் தலைவலி உண்டாயிற்று. அதனால், அவள் ஒருகட்டிலில் படுத்துக்கொண்டு சாப்பிட்ட சிரமத்தால் தூங்கிவிட்டாள்.

14-ம் அத்தியாயம்.

பார்வதி காலை முதல் காணப்படவில்லையென்று கேள்விப்பட்டதும், நீலகண்டன் ஆச்சரியமும் வருத்தமுங்கொண்டான். தான் எப்படியாவது மணந்துகொள்ளவேண்டுமென்று விரும்பியிருந்த பெண் என்ன ஆனாளோவென்று அவனுக்கு வருத்தமேற்பட்டது. தன் தாயார் கலியாணத்துக்கு ஆக்ஷேபனை சொன்னதைக் கேட்டு கிணற்றில் விழுந்து இறந்தனளோவென்று பயங்கொண்டான். அவள் போட்டிருந்த நகை முதலியவற்றிற்கு ஆசைப்பட்டு, எவராவது அவளைக் கொன்றுவிட்டனரோவென்றும் சந்தேகம் கொண்டான். இது போன்ற பற்பல சந்தேகங்கள் அவன் மனத்தில் தோன்றின. மற்றவர்களைப்போலவே அவனும் பல விடங்களில் போய்த் தேடினான். அவள் எங்கும் காணப்படவில்லை.

இவ்விதம் நீலகண்டன் பலவிடங்களிலும் பார்வதியைத்தேடி கிடைக்காததனால், ரொம்பவும் சோர்வுற்றிருந்தான். இப்படி இருக்கையில் துரைசாமி அவனிருக்குமிடம் வந்து, "பார்வதி அகப்பட்டாள்; சௌக்கியமாயிருக்கிறாள்" என்று சொன்னான்.

"எங்கிருந்தாள்? எங்கிருந்தாள்?" என்று மிக்க ஆத்திரத்துடன் கேட்டான் நீலகண்டன்.

"எங்கேயும் போகவில்லை. ஆத்து மேல் மாடியில் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளை இப்போதுதான் எழுப்பிக்கொண்டு வந்தேன்."

"சமாராதனை சாப்பாட்டுக்கு அழைத்துப்போனாயா?"

"இல்லை. வீட்டிலேயே சமைல்செய்து போடச்சொன்னேன்."

இதன்பிறகு துரைசாமி நீலகண்டனைத் தனியே யழைத்து, அவனிடம் பார்வதி தன் அத்தையாத்துக்குப்போகாததன் காரணத்தையும், அவள் நீலகண்டனையே கலியாணம் செய்துகொள்ள உறுதிகொண்டிருப்பதையும் விரிவாகத் தெரிவித்தான்.

இதைக்கேட்ட நீலகண்டனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தன்னைப்போல பாக்கியவான் எவருமில்லையென்று எண்ணினான். தன் தாயாருடைய நோக்கத்தையறிந்து அவள் தன் அத்தைவீடு போக மறுத்ததை நினைத்து அகமகிழ்ந்தான். இப்பொழுது முதலே தன் பொறுப்பு இன்னதென்பதை உணர்ந்து, தன் புருஷன் மாமியார் இவர்களுடைய நோக்கமறிந்து நடக்க அவள் முயலுவதை நினைத்து ஆனந்தங்கொண்டான். எப்படியாவது தன் தாயாருடைய மனதைமாற்றிக் கலியாணத்துக்கு இணங்கும்படி செய்வதென தீர்மானித்தான்.

அதன்படியே அவன் தன் தாயாரிடம் போய் நடந்தவிஷயங்களனைத்தையும் தெரிவித்தான். தாயாரும் தனயனைப்போலவே ஆச்சரியமும் அகமகிழ்ச்சியும் கொண்டாள். அப்படிப்பட்ட பெண்தான் தனக்கு நாட்டுப்பெண்ணாக வேண்டுமென்றாள். அவளைப்போல ஏனையோர்களும் சேஷியோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளாமலிருந்தால், எவ்வளவோ மேன்மையென்று எண்ணினாள். நீலகண்டன் தன் அன்னையின் அபிப்பிராயத்தை வற்புறுத்திக்கேட்க, அவள் சேஷி கலியாணத்துக்கு வராமலிருந்து, பார்வதியின் பெற்றோர்கள் சேஷியோடு அதிக சகவாசம் வைத்துக்கொள்ளாமலிருந்தால், கலியாணம் செய்துகொள்ளலாமென்று சொன்னாள். நீலகண்டனுக்கு இந்த நிபந்தனைகள் சுலபமென்றே தோன்றின.

நீலகண்டனின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை. தன் தாயாருக்குச் சம்மதந்தான் என்னும் முக்கிய சமாசாரத்தைத் தன் காதலிக்கும் நண்பனுக்கும் உடனே தெரிவிக்க விரும்பி, சாம்பசிவய்யர் வீடு சென்றான். அப்பொழுது அஸ்தமிக்க இரண்டு நாழிகையிருக்கும். வீட்டில் ஒருவரும் இல்லை. நீலகண்டன் கூப்பிட்டுக்கொண்டே உள்ளேபோனான். ஒருவரும் பதில் கொடுக்கவில்லை. உள்ளே கூடத்தில் ஒரு கட்டிலில் பார்வதி படுத்துக்கொண்டிருந்தாள். பாவம்! அதிகநேரங் கழித்துச்சாப்பிட்டதனால், களைப்புற்றுத் தூங்குகிறாள் என்று நினைத்தான். சிலபெண்களின் முகம் தூக்கத்தில் அவலக்ஷணமாய்க் காணப்படுவதுபோலிராமல், புன்சிரிப்புத்தவழ்ந்த உதட்டுடன் சுந்தரமுள்ளதாகக் காணப்பட்டது. தனது சித்தியின் நகைகளையும்சேர்த்து அணிந்துகொண்டிருந்ததனால், அவள் என்றுமில்லாத அழகுடன் விளங்கினாள். இவற்றையெல்லாம் கண்ட நீலகண்டன், மெய்மறந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கினான். அவள் தன்னை மணம்புரியும் விஷயமாய்ச் செய்துகொண்ட வாக்குறுதி அவன் ஞாபகத்துக்கு வந்தது. அவளைச் சீக்கிரம் எழுப்பி அவள் வாயிலிருந்தே அவ்வினிய வசனங்களைத் தான் கேட்க வேண்டுமென்று விருப்பங் கொண்டான். ஒரு நிமிஷமும் தாமதியாமல் தன் தாய் சொன்னவற்றையெல்லாம் சொல்லி அவளைச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டான். உடனே "பார்வதி," "பார்வதி" என்று கூப்பிட்டான். பார்வதி கண்விழித்து, அருகில் தன் காதலன் நிற்கக் கண்டு, சரேலென எழுந்து நின்றாள்.

நீலகண்டன் கட்டிலின்மேல் உட்கார்ந்து பார்வதியைத் தன்பக்கத்திலிறுத்தி, 'பார்வதி! உன்மனதை இன்றுதான் அறிந்தேன். என்னைப்போல பாக்கியசாலி ஒருவரும் இல்லை. எனக்காகச் சாப்பாட்டையும் விட்டிருந்தாயே" யென்று அவளைத் தன் பக்கம் அணைத்துக்கொண்டு "என்மேல் உனக்கு உண்மையான அன்புதானே" என்றான். இதற்குப் பார்வதி ஒன்றும் பதிலளிக்கவில்லை; வெட்கத்தால் தலை குனிந்தாள். பிறகு புன்முறுவல் செய்துகொண்டு, அடிக்கடி நீலகண்டனைப்பார்க்கத் தலையை நிமிர்த்துவதும் மறுபடி தலை குனிவதுமாயிருந்தாள்.

இதைக்கண்ட நீலகண்டன் பார்வதியினிடம் மெய்மறந்த அன்பு கொண்டவனாய், "பார்வதி! என்னிடம் ஏன் பேசவில்லை. என்னிடத்தில் உனக்கென்ன வெட்கம். நாம் முன்பு விளையாடிக்கொண்டிருந்தவர்களென்பதை நீ மறந்தாயோ? என் அம்மா கலியாணத்துக்கு ஸம்மதம் கொடுத்துவிட்டாள். இனிமேலாவது என்னிடம் நீ தாராளமாய்ப் பேசு. உன்னுடைய சம்மதத்தை உன் வாயினின்றே கேட்க விரும்புகிறேன். என்னை மணந்துகொள்வதில் உனக்கு இஷ்டந்தானே" என்று சொல்லிக்கொண்டு அவளைத் தன்னோடு இருகக்கட்டி ஓர் முத்தமிட்டான்.

பார்வதி "ஆம்" என்றாள்.

"உன் பெற்றோர்கள் வேறு எங்கேயாவது நிச்சயம் செய்தால்?" என்று வினவினான் நீலகண்டன்.

"உங்களைத் தவிர வேறு எவரையும் ஸ்வப்னத்தில்கூட ஸ்மரிக்கமாட்டேன்" என்று விடை பகர்ந்தாள் பார்வதி.

"இதைக் கேழ்க்கத்தான் நான் மிகுந்த ஆவல்கொண்டிருந்தேன் பார்வதி. நான் எதிர்பார்த்தது கைகூடிற்று" என்று அவளை இருகத்தழுவி யணைத்து மீண்டுமொருமுறை முத்தமிட்டான்.

"பார்வதி! நீ எவ்விஷயத்துக்கும் பயப்படவேண்டாம். உன் தாய்தந்தையருக்கு உன்னை எனக்குக்கொடுக்க இஷ்டந்தான். ஆனால், என் தாயார்தான் அதற்கு இதுவரை ஸம்மதிக்காமலிருந்தாள். அவளும் இப்போது ஸம்மதித்து விட்டாள். இதுவரை உன்னுடைய இஷ்டத்தை அறிய சந்தர்ப்பமில்லாமலிருந்தது. எவ்விதத்திலாவது இதை உன்னிடம் கேட்டுவிடுவதென்றே தீர்மானித்திருந்தேன். இன்றுதான் சந்தர்ப்பம் வாய்த்தது.

உன் அபிப்பிராயத்தையும் காதாறக் கேட்டுக்கொண்டேன். கண்மணி! உன்மீது நான் எவ்வளவு ஆசைகொண்டுள்ளேனென்பதை துரைசாமி நன்கறிவான். நீ இன்று காலை காணவில்லை என்ற சங்கதி என் காதில் விழுந்ததும், நான்பட்ட பாட்டையும், என்மனது துடித்ததையும் ஐயோ..................என்றால் இப்போது ஒன்றும் கூற முடியவில்லை. காதலி! உனதாசையானது எனது மனத்தில் பசுமரத்திலறையப்பட்ட ஆணி போலப் பதிந்துகிடக்கின்றது. நீ என்னிடம் எவ்வளவு அன்புகொண்டு காதலித்துள்ளாயோ, அதற்குப் பதின்மடங்கு நான் உன்னிடத்தில் அன்புகொண்டுள்ளேன். வேறு எவரையேனும் காதலி என்று நான் அழைப்பேனா? ஒருபோதுமில்லை. இது சத்தியம்" என்று வாக்குறுதி செய்தான்.

பிறகு சற்றுநேரமானபின் மீண்டும் தன் காதலியை நோக்கி, "பார்வதி! என்னுடைய உண்மையான நிலைமை உனக்குத் தெரியுமா? நான் ஏழை என்பதையும், அதிகம் படிப்பில்லாதவனென்பதையும் நீ அறிவாயா? ஏழைகளுக்கு வாழ்க்கைப்பட்டால் கஷ்ட நிஷ்டூரங்கள் சில சமயங்களில் அனுபவிக்கவேண்டுமென்பதை அறிந்திருக்கிறாயா? உயர்ந்த நகைகளும் புடவைகளும் கிடைப்பது அருமை என்பது தெரியுமா? என்று கேட்டான் நீலகண்டன்.

"ஏன் அப்படிக் கேழ்க்கிறீர்கள் நாதா. நான் உங்களை நாடிவந்தேனேயொழிய நகைக்கும், ஸொத்துக்கும், புடவைக்கும் ஆசைப்பட்டுத் தங்களை மணக்க இஷ்டப்படவில்லை. எந்நாளும் உங்கள் பிரியம் குறையாமலிருந்தால், அதுவே எனக்குப்போதும். ஸ்திரீகளுக்குக் கணவனுடைய பிரியமொன்றுதான் தேவை. அவருடைய க்ஷேமந்தான் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது. புருஷன் ஸௌக்கியமாயிருந்தால் ஸ்திரீயின் ஸௌக்கியத்துக்குக் கேட்பானேன். நாதா! நானும் ஏழை என்பதைத் தாங்கள் மறந்துவிட்டீர்களோ. நம்முடைய நிலைமைக்குத் தக்கபடி எனக்குக் குடித்தனம் செய்யத்தெரியும். எனக்குத் தங்கள் அன்பு விசேஷமேயொழிய, மற்றவை அவசியமல்ல."

இவற்றைக்கேட்ட நீலகண்டன் அடங்கா மகிழ்ச்சி கொண்டவனாய், தன்னைப் போல பாக்கியசாலி ஒருவரும் இல்லையென்று எண்ணிக்கொண்டான்.

இந்த சமயத்தில் சீதையம்மாள் தற்செயலாய் அவ்விடம் வந்து, அவர்களிருக்கும் நிலைமையைக்கண்டுப் பின்வாங்கினாள். இதைக் கண்ட நீலகண்டன் உடனே எழுந்து மெதுவாய், "உன் சித்தி வந்துவிட்டாள். நான் போய் வருகிறேன். காலையில் இங்கு வருகிறேன். காவேரிக்குப் போகும்போது உன்னையும் அழைத்துப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு, ஸந்தோஷமான முகத்தில் புன்சிரிப்புத்தோன்ற, சீதையம்மாளைக் கண்ட கூச்சத்தால் சற்றுத் தலைகுனிந்தவனாய் மெதுவாய் நடந்தான். சீதையம்மாளுக்குச் சற்று பயமுண்டாயிற்று. அவனை ஏதாவது கேட்கலாமென்றிருந்தாள். கேட்கத் தயங்கிக்கொண்டிருக்கையில் அவன் வெளியே போய்விட்டான். அதன்மேல் அவள் பார்வதியிடம் சென்று சங்கதி விசாரித்தாள். பார்வதி முதலில் சரியாய்ப்பேச இஷ்டப்படவில்லை. ஆனால், தன் சித்தி தனக்குப் பிரதிகூலமாக ஒன்றும் செய்யாளென்று எண்ணித் தன்மனத்திலிருப்பவற்றையெல்லாம் கூறி, தனது சகோதரனிடம் சொன்னவைகளையும், தான் பட்டினி கிடந்ததையும், அத்தை வீட்டுக்குப்போகாததன் காரணத்தையும், தன் காதலன் வந்துபோன விவரத்தையும் சொன்னாள். சீதை பார்வதியின் குணங்களுக்கு மெச்சி எப்படியாவது நீலகண்டனுக்கே அவளைக் கலியாணம் செய்து கொடுப்பதாய் வாக்களித்தாள். நீலகண்டனுக்குக் கொடுப்பதில் தனக்குப் பூர்ண சம்மதந்தானென்றும், சுந்தரம்மாள் ரொம்பவும் நல்லவளென்றும், அந்த இடம் தனக்குப் பிடித்த இடமென்றும் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

வீட்டைவிட்டு வெளியில் வந்த நீலகண்டனுக்குக் கொஞ்சம் அதிருப்தி ஏற்பட்டது. சீதையம்மாள் நடுவில் ஏன் வந்து குறுக்கிட்டாள் என்று எண்ணினான். அவள் ஏதாவது பார்வதியைத் தொந்திரவு செய்வாளோவென்று ஏங்கினான்; கலியாணத்துக்கு ஏதாவது தடங்கல் ஏற்படுமோவென்றும் கலங்கினான். உடனே எப்படியாவது துரைசாமியைக் கண்டு விஷயங்களைச் சொல்லி அவனிடம் ஆலோசனை கேட்கவிரும்பினான்; அவன் இருக்குமிடம் ஓடினான். அவனைத் தெருக்கோடியில் சந்தித்து விஷயங்களனைத்தையும் தெரிவித்தான். துரைசாமி அவற்றைக் கேட்டதும் சந்தோஷமடைந்து, "நீலா! நீ எதற்கும் விசாரப்படாதே. உன்னைப்பற்றியாவது, பார்வதியைப்பற்றியாவது ஒருவருக்கும் எவ்வித வெறுப்புங்கிடையாது. கலியாணவிஷயத்தில் உன் தாயார் ஸம்மதங்கொடுத்திருப்பது அவர்களுக்கு இன்னும் தெரியாது. தெரிந்தால் போதும். இப்போதே உன்னை மாப்பிள்ளையாகக் கொண்டாடுவார்கள். உனக்காவது பார்வதிக்காவது எவராலும் ஒருவித பிரதிகூலமும் ஏற்படாது. இதை உறுதியாய் நீ உன் மனத்தில் வைத்துக்கொள். நானிருக்கும்வரை நீ எதற்கும் அஞ்சவேண்டியதில்லை" என்று சொல்லி அவனைத் தேற்றினான்.

(இன்னும்வரும்.)

எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.

Children and their School Days.

BY MR. V. K. DURAISAMY AIYANGAR, B.A.

சிறுவர்களும், கல்வி பயிலும் நாட்களும்.

ஒவ்வொருவரும் சிறியோராயிருந்தே பெரியோராயிருக்கின்றனராதலின், நாம் சிறியோராயிருக்குங்காலத்திலேயே பெரியோராவதற்குரிய சிறப்புக்களைத் தேடிக்கொள்வது நமது கடமையாகின்றது. அதற்கு, நாம் பாடசாலையிலும் கலாசாலையிலும் பயிலும் காலமே உரிய சமயம். தமது பிற்காலத்தில் ஜனங்களை நடத்தும் தலைவர்களாகவும், கலெக்டர்களாகவும், இராஜதந்திர நிபுணர்களாகவும், வியாபாரிகளாகவும், தனவந்தர்களாகவும், இன்னம் பற்பல சிறந்த பதவிகளிலிருந்து அவற்றை அழகுபெறச்செய்பவராகவுங்கூடிய திறமையைப்பெற்ற ஒவ்வொருவரும், முதலிற் சிறியோரிலொருவராயிருந்தே தத்தளித்துத் தலையெடுத்தவர். இன்று பள்ளிக்கூடத்து மாணவராயிருப்போரே, பின்னைக்கு நகரத்தின் ஜனசமூகத்தினராக மாறுபடுகின்றனர். ஆகையால், ஒவ்வொருவருக்கும் பிற்காலத்திற்குத் தேவையான சாதனங்களைத் தேடிக்கொள்வதற்குக் கல்விகற்குங் காலமே உரிய தருணமாகின்றது. அக்காலத்தை நன்று பயன்படுத்தாமல், தீயோரின் நட்பால் பொல்லா ஒழுக்கங்களில் மனதைச் செலுத்திச் சோம்பியலைவோர், பிற்காலத்தில் துன்பங்களுக்கு ஆளாய்த் தேம்பித்திரிவது நாம் ஒவ்வொருநாளும் காணும் உண்மையாயிருக்கின்றது. கல்விக்கழகங்களில் எவன் பாடுபட்டுழைக்காமல் அருமையான அப்பருவத்தை வீணாக்குகின்றானோ, அவன் தன் ஆயுட்காலம் முற்றிலும் துயரக்கடலிலாழ்ந்து உருப்படாமற் பாழாய்ப்போகிறான்.

கல்விக்கழகங்களில் நாம் இலக்கிய இலக்கணங்களைக் கற்றல் மாத்திரம் போதாது. அக்கல்வியொன்றே ஒரு மனிதனுக்குப் பிற்காலத்தில் உற்றதுணையாகாது. கல்வியைத்தவிர இன்னம்பல விஷயங்களைச் சிறுவர் தம் இளமையிலிருந்தே கற்கவேண்டும். முதலில் ஒவ்வொருவரும் ஆண்மை என்னும் சிறந்த குணத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். ஆணாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அது இன்றியமையாக்குணம். நம்மில் எத்தனை

யோ மனிதர் ஆண்பாலாய்ப்பிறந்தும், ஆண்மைக் குணம் பெறாமல், பெண்டிரைப்போல நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் குணங்களையே மிக்கப் பெற்றிருக்கின்றனரன்றோ. ஆனால், ஆண்மை என்பது ஆணவமன்று. ஆண்மை என்பது வீண்துடுக்கும், பொல்லா மொழிகூறுதலும், பிறருக்குத் துன்பந்தருதலுமன்று. ஆண்மையென்பது பகைவனிடத்திலும், நீதிதவறாத சுத்த வீரத்தனமுடைமையோடு சாந்தகுணமும், இளகியமனமும், பிறருக்குத் தம்மாலியன்றவரை உதவிபுரிதலுமாகின்றது. உண்மையுடைமை, தூய ஒழுக்கம், முதலியயாவும் பிறருக்கஞ்சா வீரத்தன்மையிலிருந்தே உண்டாகின்றன.

நம்தேசத்தில் ஆரியர் என்னும் பெயரே நற்குணங்கள் யாவற்றையும் தன்னிடத்தில் அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆண்மையென்பதும் அதிலடங்கிய குணமே. ஆரியன் என்னும் பெயரை வகித்தவன் பொய்யுரைத்தல் கூடாது. கோழைத்தனங் கொண்டிருத்தல் கூடாது. ஆபத்தில் நண்பனைக் காட்டிக்கொடுத்தல் கூடாது. வீழ்த்தப்பட்ட பகைவனை வதைத்தலாகாது. இராஜபுத்திர ஜாதியாருக்குள் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. ஒரு பெண்பாலுக்கு யாதேனும் துன்பம் நேரிடுமாயின், அவள் தன்னுடைய கை வளையல்களிலொன்றையெடுத்து ஒரு ஆடவனுக்கு அனுப்பினால், அவன் அவளுடைய வதனத்தையே அதற்குமுன் கண்டறியாதவனாயிருப்பினும், அவன் அவளை அந்த இடுக்கணிலிருந்து விடுவிப்பதற்குக் கடமைப்பட்டவனாகிறான். ஒருகாலத்தில் இந்த ஜாதி மகாராணியான கர்ணவதி என்பவள் தன் குழந்தையைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு, அப்போது டில்லியை ஆண்ட உமாயூன் என்னும் முகம்மதியச்சக்ரவர்த்திக்குத் தன் வளையலையனுப்பினாள். அவர் உடனேபுறப்பட்டு ஓடோடியும்வந்து, அவளுடைய பகைவனாகிய முகம்மதியனைத்தொலைத்து, அவளுடைய மானத்தையும், உயிரையும் காத்து, அவளை அவளது இருப்பிடத்திற்கு அனுப்பினாரென்று ஒரு வரலாறு கூறுகின்றது. உண்மையான ஆரியர் எத்தகைய இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்கு அரசர்களில் உத்தமனான ஸ்ரீராமச்சந்திரனே உதாரணமானவன். அவனிடத்தில் சிறந்த ஆரியனுக்குரிய இன்றியமையாத ஆண்மைக்குணங்கள் யாவும் ஒருங்கே விளங்கின. ஆகையால், ஒவ்வொருமனிதனும் அவனையே ஒரு சட்டமாக மதித்து, அவனிடமிருந்த மனோதைரியம், தூய்மை, வாய்மை, அன்பு முதலிய கலியாண குணங்களையும், மாணவனும், புத்திரனும், கணவனும், சகோதரனும், நண்பனும் நடந்துகொள்ளவேண்டிய முறைமையையும் அடைய ஒவ்வொருவனும் முயற்சிசெய்து, உண்மை ஆரியராக ஆவதற்குக் கல்விகற்குங் காலமே உற்ற துணையான காலம். அக்காலத்தை நாம் எவ்வாறு பயன்படுத்தவேண்டுமென்பதை இனிக் கவனிப்போம்.

வி. கே. துரைசாமி ஐயங்கார், பி.ஏ.

Notes.
குறிப்புக்கள்.

நமது ஹிருதயத்தின் வலு.

நாம் வேலைசெய்யும்போதும், சும்மாவிருக்கும்போதும், தூங்கும்போதும் நமது ஹிருதயம் அடித்துக் கொள்ளுகின்றதே. அதன் தொகை ஒரு வருஷத்தில் சற்றேறக்குறைய 360 லக்ஷம் ஆகிறதாம். இத்தனை சிறிய அடிகளின் விசையும் ஒன்றாய்த் திரண்டால், இப்போது நடந்த பெருத்த [illegible]போரில் உபயோகிக்கப்பட்ட எல்லாவற்றிலும் [illegible]களில் பன்னிரண்டு பீரங்கிகளை ஒரே காலத்தில் சுட்டதால் உண்டாகும் வேகத்திற்குச் சமமாக இருக்கிறதாம். அல்லது, கடலில் ஆழ்ந்துகிடக்கும் ஒரு சண்டைக் கப்பலை நீரிற்கு வெளியில் தூக்கிவிடக் கூடிய வலுவைக் கொண்டதாம். ஒரு மனிதனுடைய வலு இவ்வளவானால், முப்பது லக்ஷம் மனிதர்களின் ஹிருதய அடிப்பின் வன்மை ஒன்றாய்த்திரண்டால், அதை எதற்கு ஒப்பிடுவது? கீல் கானல் என்னும் பெருத்த ஜல சந்தியை நாசமாக்கக்கூடிய வல்லமையுடையதாம்.

நாமும் வெள்ளைமனிதரானோம்.

நமதுதேசத்தாராகிய மோகனசிங் என்னும் பெயர்கொண்ட ஒருவர், அமெரிக்காதேசத்தில் குடியேறினார். சமீபத்தில் நடந்த பெருத்த யுத்தத்தில் அமெரிக்காவின் சேனையில் போர்வீராய்ப் புகுந்து புகழ்பெற்றார். அவர் எப்போதும் அமெரிக்காவிலேயே இருக்கவேண்டுமென்னும் உறுதிகொண்டு, அமெரிக்காநகரத்தினருக்குள்ள ஓட்டுக்கொடுத்தல் முதலிய உரிமைகள் தமக்கும் கிடைக்கவேண்டுமென்று விரும்பினார். அவர் கருப்புமனிதராதலால், அவருக்கு அமெரிக்கா நகரவாசிகளோடு சரிசமானமான உரிமைகள் கொடுக்கப்படவில்லை. அதன்பொருட்டுஅவர் நியாயாதிபதியிடம் வழக்குத் தொடர்ந்தார். நியாயாதிபதியும் அவ்வாறேமறுத்துவிட்டார்.

மோகனசிங்கு அவருக்குமேம்பட்ட நியாயாதிபதிக்கு மனுச்செய்தார். அந்நியாயாதிபதி கீழ்நியாயாதிபதியின் தீர்மானத்தை மாற்றிவிட்டாராம். அமெரிக்காவின் சட்டப்படி, மேற்படி "உரிமைகள் வெள்ளைக்காரர்களுக்கே உரியன" வென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தீர்மானத்தில் "வெள்ளைக்காரர்" என்பதற்கு அழகான வியாக்கியானம் செய்திருக்கிறார். வெள்ளைக்காரர் என்பது நிறத்தை மாத்திரம் குறிப்பதல்லவென்றும், அது ஆரியரென்னும் ஆதி மரபைக் குறிப்பதென்றும், இந்தியாவிலுள்ள இந்தியர் சீதோஷ்ண ஸ்திதியால் நிறவேறுபாட்டைப் பெற்றிருந்தாலும் ஆரியராதலாலும், தேக அமைப்பினால் இருவகுப்பாரும் ஒற்றுமையுடையவராயிருத்தலாலும், இந்தியாவிலுள்ள இந்தியரும் "வெள்ளைக்காரர்" என்னும் சொல்லில் அடங்கியவர்களே என்றும் தீர்மானம் செய்து, மோகனசிங்கை அமெரிக்கா நகரவாசிகளிலொருவராய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்திரவு செய்துவிட்டார். மேற்படி நியாயாதிபதி தாம் வெள்ளைக்காரர் என்னும் செருக்கைக் கொண்டு கறுப்பு மனிதரை அவமதிக்காமல் இந்தியரைத் தம் சகோதரராய் மதித்தது பெரிதும் பாராட்டத்தக்கது. நம்மை ஆண்டுவரும் ஆங்கிலேயரும் [illegible]ந்தத் தீர்மானத்தைப் பின்பற்றி, [illegible]ல்லா விஷயங்களிலும் இந்தியரைத் தமக்குச் ச[illegible]னமானவரென்று மதித்து, தம்உரிமைகளை அவர் [illegible]தாம் இனி நிச்

பாம்பு கடிக்கு மருந்து.

ஒரு மனிதனைப் பாம்பு கடித்துவிட்டால், வைத்தியனோ மந்திரவாதியோ வந்து சிகிச்சை செய்யும் வரையில் பிணியாளியைக் கவனிக்காமல் வைத்திருப்பது பெருந்தவறு. அவ்வாறு வைத்திருந்தால் பிறகு அப்பிணியாளி பிழைப்பது அருமையாகிவிடுகின்றது. கடிபட்ட பாகத்திலுள்ள விஷம் இரத்தத்தோடு மேலேசென்று, உடம்புமுழுதிலும் பரவாமலிருக்கும் பொருட்டு, கடிபட்ட இடத்திற்குமேல் உடனே ஒரு கயிற்றால் வலுவாக இறுக்கிக் கட்டிவிடவேண்டும். பிறகு தயிரில் மிளகை அரைத்து உள்ளிற்குக் கொடுக்கவேண்டும். அல்லது தண்ணீரில் நவச்சார திராவகத்தில் முப்பது துளிகள் விட்டு, அதைப்பருகுவிக்கவேண்டும். வைத்தியர் வரும் வரையில் 15-நிமிஷத்திற்கொருமுறை இம்மருந்தை உட்செலுத்திக்கொண்டிருப்பதோடு, பிணியாளியைத் தூங்கவிடாமல் பார்த்துக் கொண்டிருத்தலும் வேண்டும். வேப்பிலையைமென்று தின்றுகொண்டே இருக்கச் செய்யவேண்டும்.

பொய்க் கை

'எடின்பரோ' என்னும் நகரிலுள்ள ஜேம்ஸ் ஸ்மித் என்னும் ஐரோப்பியர் ஒரு விந்தையான பொய்க் கை செய்யும்விதத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். ஒருவனுடைய கை வெட்டப்பட்டுப் போன பிறகு, அவரால் செய்யப்பட்ட பொய்க்கையை உபயோகப்படுத்தி, ஒருமனிதன் எந்த அலுவலையும் இயற்கைக்கையாற் செய்வதைப்போலவே செய்யலாமாம். அவன் தச்சுவேலைசெய்பவனாயினும், எழுத்துவேலை செய்பவனாயினும், வர்த்தகம் செய்பவனாயினும், பயிர்செய்பவனாயினும், இன்னும் எவ்விதக் காரியம் செய்பவனாயினும், இந்நூதனப்பொய்க்கை இயற்கைக் கையைப்போலப் பயன்படுகிறதாம். அலுமினியம் என்னும் உலோகத்தால் கை செய்யப்பட்டு, அதன்உட்புறத்தில் வலுவின்பொருட்டு எஃகுத்தகடு கொடுக்கப் பட்டிருக்கிறதாம். விரல்களின் மணிக்கட்டுகள் உட்புறம் இணைக்கப் பட்டிருக்கின்றன. கையின்உட்புறம் முழுதிலும் பல கம்பிகளும் சூழ்ச்சிகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளுக்கும் தோளுக்கும், பின்னாலிருந்தும் மார்புக்கும் சம்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மார்பு தோள் முதலியவற்றின் [illegible]

162065

[illegible]வன் விருப்பப்படி மெ[illegible]ாகவும், வலுவாகம் [illegible] கையைப்[illegible] மிக்க நன்றாய் வேலை செய[illegible].

க்ஷயரோகம்.

இந்த நோயை மனிதர் கர்மரோகமென்றும், தீராரோகமென்றும் கூறுகின்றனர். இதுதொத்து வியாதிகளிலொன்று. இதைப் பெற்றவர் பிழைப்பது மிக்க அருமை. இடாலி தேசத்திலுள்ள உரோமாபுரி யென்னும் ஊரிலுள்ள மொனாகோ என்னும் நிபுணர் இந்த நோயை ஒழிப்பதற்கு ஒரு நூதன முறை கண்டுபிடித்திருக்கிறார். ஈரல்குலையில் க்ஷயரோகக் கிருமிகளிருந்துகொண்டு அதை அரித்துத்தின்றும், கோழையை உண்டாக்கிக் கொண்டுமிருக்கிறதாம். வாயின் மூலமாய் உட்புறம் செலுத்தப்படும் எந்த மருந்தும், மேற்படிக் கிருமிகளை அடியோடு தொலைக்கக்கூடவில்லை. அதற்காகத் தோலின் வழியாகச் சருக்கரையை தேகத்திற்குள் நுழையவிட்டு, ஈரல்குலையிற் உதிரத்தின் வாயிலாகச்செலுத்தி வந்தால், அது மேற்படி கிருமிகளை அடியோடு அழித்து விடுகிறதாம். பிணியாளியின் இருமல், இரவில் உண்டாகும் வியர்வை, ஜுரம், முதலிய யாவும் அற்றுப்போகின்றனவாம். பிணியாளிகள் நன்றாய்க் குணமடைகின்றனராம்.

ரேஸ் என்னும் இயந்திரம்.

இந்த இயந்திரத்தை மனிதருடைய உடம்பில் வைத்துப் பார்த்தால், உடம்பில் புகுந்துள்ள துப்பாக்கி ரவை முதலிய இதர உலோகங்களிருப்பதை அது நன்றாய்க் காட்டிவிடும். இந்த இயந்திரம் சமீபகாலத்தில் ஒரு அற்புதமான திருட்டைக் கண்டுபிடிக்க உபயோகிக்கப்பட்டது. கல்கத்தாவில் ஒரு முகம்மதியச் சிறுவன், மெல்லியதும் ஒரு அடி நீள முள்ளதுமான ஒரு தங்கச்சங்கிலியைக் களவாடிய குற்றத்திற்காகச் சிறைபடுத்தப்பட்டான். தகப்பனாரின் கையிலிருந்த ஒரு குழந்தைமீதிருந்து அவன் மேற்படிச் [illegible]கிலியை கழற்றிக்கொண்டு ஓடியதைக் கண்டோர், அவனைத் துரத்திப் பிடித்[illegible] அப்போது அவனிடத்தில் சங்கிலி [illegible]கைளில [illegible] விட்ட தாக யாவரும் நினைத்து அவனைப் போலீசாரிடம் ஒப்புவித்தனர். அவன் சங்கிலியை விழுங்கி யிருப்பானோ வென்னும் ஐயம் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உதித்தது. உடனே அவனை ரேஸ் என்னும் இயந்திரத்தினால் சோதனை செய்ய, அவர் நினைத்தவாறு நகை அவன் வயிற்றிலிருந்தது. டாக்டரின் உதவியால் தங்கச்சங்கிலி வெளியில் எடுக்கப்பட்டதாம். முகம்மதியன் தண்டிக்கப்பட்டானாம்.

உபகாரச் சம்பளம்.

ஒரு குடும்பத்தின் தலைவன் அநாதைகளாகத் தன் மனைவி மக்களை விடுத்து இறந்துபோய் விட்டால், மேல் நாட்டில் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏழைச்சாலைகளில், மேற்படி அநாதைகள் போற்றப்படுகின்றனர். அவர்கள் அங்கு பலவிதமானதொழில்களைப் பயின்று உழைத்து வருகின்றனர். அவர்கள் மிக்கக்கொடுமையான சட்டங்களுக்கு உள்ளாகின்றனர். அவ்விடத்தை விடுத்து எப்போது வெளிப்படுவோமென்று அவர்கள் நினைக்கக்கூடியதாயிருக்கின்றது. ஆனால், இப்போது அமெரிக்காவில் நாகரிகமான ஒரு புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சம்பாத்தியமின்றி வருந்தும் அநாதைகளான விதவைகளுக்கும், குழந்தைகளுக்கும் துரைத்தனத்தார் உபகாரச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். குழந்தைகளைத் தாயிடத்திலிருந்து பிரித்து அவர்களைக் கெடுப்பதைக் காட்டிலும், அவர்களைத் தம் தாயிடத்திலேயே வைத்துக் காப்பாற்றப் படுகிறதாம். ஒரு குழந்தைக்கு இவ்வளவென்று, உபகாரச்சம்பளம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தாயின் வருமானத்திற்கும் அவளுடைய சாதாரணச் செலவிற்கு முள்ள வித்தியாசம் எவ்வளவோ, அதை அவளுக்கு உதவுகிறார்களாம். இவ்விதம் கொடுப்பது, தருமத்தின் பொருட்டுத் தயவாகக் கொடுக்கப்படுவதன்றி, சட்டப்படி [illegible]

சந்ததியை நாசமாக்கக்கூடிய வல்லமையுடையதாம்.